421

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

D
Y211,31 N91
N91.12.3
.16.1606

வெளியீடு 18-6-1992 Issued 18-6-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 1, 1991 - தொகுதி 12 - எண் 3
Tuesday the Ist October, 1991 - Volume 12 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

D
V211,31 (N91
N91.12-3
161606

# உள்ளடக்கம்.

**1—10—1991.**

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 323—370 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 371—404 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியில் 30—9—1991 அன்று நடந்த துப்பாக்கிச் சூடு பற்றியும் அதில் 3 பேர் இறந்தும், பலர் காயம் அடைந்தும் உள்ளதால் அப்பகுதியில் நிலவும் பதட்ட நிலை குறித்தும் | 405—412 |
| 3. ஆட்சியின் 100 நாள் சாதனைகளுக்குப் பாராட்டு தெரிவித்தல் | 413—414 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990 | 414—415 |
| (ஆ) மின்சார பயனீட்டின் மீதான வரி விதிப்பு திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ.) | 426 |
| (இ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1991-92, வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல் | 427—429 |

பக்கங்கள்

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பல்கலைக் கழகங்களின் ஆட்சி மன்ற/நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு 540—541

5. கவன ஈர்ப்பு—

(அ) திருவொற்றியூர் பகுதியில் உள்ள கே.சி.பி. தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்து 415—418

(ஆ) செங்கம் தொகுதியில் சில பகுதிகளில் நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ஜப்தி காரியந்தல் ஆற்றில் உள்ள கிணற்றை அகலப்படுத்துவது குறித்து 418—421

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 421—422

(ஆ) ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 422—423

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1991 423—424

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு, 1991 425—426

(உ) மின்சார (பயனீட்டின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 426—427



பக்கங்கள்

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஊ) வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 427—428

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1991-92 428

8. மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை, 1991—92 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1990-91 விவாதம் 432—540

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் 432, 520—540

திரு. ம. சுந்தரதாஸ் 433—441

திரு. செ. து. வரதராஜன் 442—446

திரு. எம். கோவிந்தராஜுலு 447—450

திரு. ப. ரங்கநாதன் 451—452

* திரு. வே. தம்புசாமி 453—456

* டாக்டர் ஜெ. பரந்தாமன் 456—459

திரு. வி. சுப்பிரமணியன் 460—462

திரு. எஸ். ஆண்டித்தேவர் 463—466

* திரு. ப. கலியபெருமாள் 466—469

* திரு. கே. கே. சின்னப்பன் 469—472

டாக்டர் பெ. வீரபாண்டியன் 473—476

திரு. கே. ஜனார்த்தனன் 477—480

திரு. நா. சா. பழனிசாமி 481—484

டாக்டர் தே. குமாரதாஸ் 485—489

திரு. எஸ். எஸ். ராமசுப்பு 490—493

8. மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை 1991-92 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1990-91 விவாதம்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| திருமதி ப. சரஸ்வதி | 493—495 |
| திரு. சி. இராமசுவாமி | 495—498 |
| திரு. ஜி. பழனிசாமி | 498—501 |
| திரு. வி. தண்டாயுதபாணி | 501—508 |
| திரு. வி. கே. சின்னசாமி | 509—512 |
| திரு. எஸ். டேனியல் ராஜ் | 513—519 |
| 9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 542—547 |


சென்னை-600 009.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**புரட்டாசி 15, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022,**

**1991, அக்டோபர் 1, செவ்வாய்க்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

“பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.”

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள் விடைகள். வினா எண் 118. திரு. சோ. இராசாராமன், திரு. கே. ஆர். முருகானந்தம், திரு. ச. காந்திராஜன், திரு. சி. இராமசுவாமி, திரு. கு. சிவசுப்பிரமணியன். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் . . . . .

118—

**சென்னையில் உச்சநீதிமன்றப் பிரிவு.**

* 1086 திரு. சோ. இராசாராமன் :

திரு. கே. ஆர். முருகானந்தம் :

திரு. ச. காந்திராஜன் :

திரு. சி. இராமசுவாமி :

திரு. கு. சிவசுப்பிரமணியன் :

டி.2 58-335—1

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் உச்சநீதிமன்றப் பிரிவு அமைக்க வேண்டி மாநில அரசு மைய அரசுக்கு கருத்துரு அனுப்ப முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : உச்ச நீதிமன்றத்தின், சுப்ரீம் கோர்ட்டின் பிரிவை சென்னையில் அமைப்பது பற்றி மாநில அரசு மைய அரசை கேட்டுக் கொண்டது. தற்போது கிடைத்துள்ள தகவலின்படி மைய அரசு இதற்கு இன்னும் இசைவு அளிக்கவில்லை.

**திரு. சோ. இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு மைய அரசை முன்பு ஒரு முறை கேட்டு, இங்கே இடவசதி, கட்டிட வசதி இல்லையென்ற காரணத்தால் அந்த உச்சநீதிமன்றப் பிரிவு வைக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறோம். ஹைகோர்ட் வளாகத்தில் இப்போது புதிய கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு இடத்தை கொடுத்து உச்சநீதிமன்றப் பிரிவை உடனடியாக நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் சுப்ரீம் கோர்ட்டினுடைய ஒரு பிரிவை வைப்பதற்கு கட்டிடங்களோ மற்ற பிரச்சினைகளோ ஒரு பிரச்சினை அல்ல. எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்த நாட்களிலேயே 1980 ஆம் ஆண்டே இந்த



முயற்சி மேற்கொள்ளப்பட்டது. டெல்லிக்கு எழுதினார்கள். டெல்லிக்கு எழுதி அவர்கள் சொன்னார்கள்—வேண்டிய கட்டிடங்கள், வசதிகள், மற்ற மற்ற, எந்தெந்த காரியங்களை நீங்கள் கேட்கிறீர்களோ, அவைகளை எல்லாம் சென்னையில் நான் உருவாக்கித் தருகிறேன் என்று சொன்னார்கள். குறிப்பாக கட்டிடப் பிரச்சினை எழுந்த நேரத்திலே இன்றைக்கு இருக்கிற லா காலேஜ்—சட்டக் கல்லூரியையே நான் தருகிறேன். சட்டக் கல்லூரி வேறொரு இடத்திற்கு மாற்றிக் கொள்கிறேன். ஏனென்றால் ஹைகோர்ட்டினுடைய வளாகத்திற்குள்ளாகவே 'மெட்ராஸ் லா காலேஜ்' இருப்பதன் காரணமாக, சுப்ரீம் கோர்ட்டினுடைய ஒரு பிரான்ச் உருவானால் அதற்கு சாதகமாக இருக்கும் என்பதை, 1980-லேயே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எழுதினார்கள். தொடர்ந்து எழுதிக்கொண்டு வந்தார்கள். அடுத்து அவர்கள் சொன்ன காரணமே, அப்படி சுப்ரீம் கோர்ட்டினுடைய உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரான்ச்சை சென்னையில் அமைத்தால் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒற்றுமை, உச்ச நீதிமன்றத்தினுடை individuality தனித்தன்மை, இவைகள் எல்லாம் கெடும் என்ற காரணத்தால் அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். என்றாலும் கூட இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்கள். decentralisation of justice dcentlisationofjustce எல்லா துறைகளிலும் எப்படி அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்ற தத்துவம் மேலோங்கி இருக்கிறதோ, அப்படி நீதியும் பரவலாக்கப்பட வேண்டுமென்ற தத்துவத்தினுடைய அடிப்படையில் நல்ல மாறுதல், ஆரோக்கியமான சிந்தனை உச்ச நீதிமன்றத்திற்கும் வரும், மத்திய சர்க்காருக்கும் வரும் என்று கருதுகிறேன். அதுகுறித்து நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அடியொற்றி இங்கே உச்சநீதிமன்றம், சுப்ரீம் கோர்ட்டினுடைய ஒரு பிரான்ச் சென்னையில் வருவதற்கு எல்லா வகையிலான முயற்சிகளையும் எடுப்பார்கள்.

**திரு. கே. ஆர். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உச்சநீதிமன்றப் பிரிவு வர வேண்டுமென்றால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130-வது

பிரிவின்படி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியினுடைய பரிந்துரை பெறப்பட வேண்டும். அப்படி பரிந்துரை பெறுவதில் ஏற்கனவே இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே எந்த அளவுக்கு வந்திருக்கிறது? மீண்டும் அந்தப் பரிந்துரையைப் பெற்று முழு முயற்சியோடு உச்சநீதி மன்றப் பிரிவு இங்கே வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை யெடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.35.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான், 1980-வது ஆண்டு நிலவரத்தைச் சொன்னேன், 11 ஆண்டுகளிலே, மத்திய அரசிலும், மாநில அரசிலும் எவ்வளவோ நல்ல மாற்றங்கள் எல்லாம் ஏற்பட்டு விட்டன. அதேபோல், உச்சநீதிமன்றத்தில், சுப்ரீம் கோர்ட்டினுடைய நீதிபதிகளும் பலர் மாறியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற ஜஸ்டிஸ் ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் 2 நாட்களுக்கு முன்புகூட, நம்முடைய செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கு 100-வது மக்கள் நீதிமன்றத்திற்கு வந்தார்கள். அவர்களிடத்திலே கூட நம்முடைய மாநிலத்திற்கு தேவைப்பட்ட பல பிரச்சினைகளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் சார்பாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அது பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் ஒரு முற்போக்கு எண்ணம் கொண்டவர். இங்கே நீதிமன்றங்கள் வரவேண்டும் ஏழைகளுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்ற தத்துவத்தில்தான் அவர்கள் புதியதாக நம்முடைய பிரதமர் நரசிம்மராவ் அவர்களிடத்திலே ஒரு நல்ல ஆலோசனையைச் சொன்னார்கள். நான், 2, 3 நாட்களுக்கு முன்பு டெல்லிக்குச் சென்ற நேரத்தில் அங்கே ஒரு பத்திரிகை க்ளிப்பிங்கைப் பார்த்தேன். அதை எடுத்து வந்து அவர்களிடத்திலே காட்டினேன். பிரதமரிடத்திலே சொல்லி



யிருக்கிறார், இதுவரையில், இது சர்வீஸ் டிபார்ட்மெண்டாக— இன்றைக்கு நீதித்துறை, போலீஸ் துறை எல்லாம் சர்வீஸ் டிபார்ட்மெண்டாக—இருக்கிற காரணத்தினால், வளர்ச்சித் திட்டங்களிலே இது வரவில்லை. பிளான் எக்ஸ்பெண்டிச்சரிலே வரவில்லை. நல்லவேளையாக நம்முடைய மாண்புமிகு நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா அவர்கள், நம்முடைய பிரதமர் நரசிம்மராவ் அவர்களிடத்திலே ஜூன் மாதம் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது, அதை பிளான் சப்ஜெக்டாக ஆக்குங்கள், அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ் அன்ட் லா, ஏன் என்றால் இன்றைக்கு மாநில உதவியோடுதான் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அதற்கு 40 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். இன்னும் நிரம்பச் செய்யலாம். நிதி ஒதுக்கீடு அங்கேயிருந்து வரலாம் என்ற அந்த ஆலோசனையைச் சொல்லி, மாண்புமிகு நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா அவர்களுடைய யோசனையை பிரதமர் நரசிம்மராவ் அவர்களும் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு, விரைவில் மத்திய அரசு அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ் அண்ட் லா, அந்த சப்ஜக்டை பிளான் சப்ஜெக்ட்டாக ஆக்க முயற்சி எடுக்கப்படும் என்று ஒரு நல்ல ஆரோக்கியமான இசைவை மத்திய அரசு கொடுத்து இருக்கிறது. அதன் மூலம் ஒரு புதிய காற்றே வீசும் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அந்தத் தொடரில், இன்றைக்கு எப்படி நிதியை அதிகம் கொடுக்கிறேன் என்று முன்வந்திருக்கிறார்களோ, அப்படி நீதி மன்றங்களையும் கொடுப்பார்கள், அதுவும் உச்ச நீதிமன்றப் பிரிவையும் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அரசுக்கு இருக்கிறது என்பதை கண்ணியமிக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமசுவாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களின் கோரிக்கையான, உச்ச நீதிமன்றத்தின் கிளையை, சென்னையில் நிறுவுவது நீண்ட நாட்களாக இருக்கிறது. இதில், ஸ்பெஷல் லீவ் பெட்டிஷன் போடவேண்டும்

[1991 அக்டோபர் 1

என்றால், ஆர்ட்டிகிள் 136-ன் கீழ் போடவேண்டும், அதற்காக வழக்கறிஞர்கள் 2 முறை உச்சநீதிமன்றத்திற்குச் செல்லவேண்டியதாக இருக்கிறது. இது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல. மத்திய அரசே, சிப் ஜஸ்டிஸ் ஆப் இந்தியாவினுடைய கன்சன்டை வாங்கி, சென்னை உயர்நீதிமன்றத்திலே, உச்சநீதிமன்றத்தின் கிளையைத் திறக்கலாம். ஒரு வழக்குக்காக, ஸ்பெஷல் லீவ் பெட்டிஷன் வாங்க, ஆர்ட்டிகிள் 136-ன் கீழ் 2 முறை செல்லவேண்டியதாக இருக்கிறது. மெயின் பெட்டிஷனுக்காக 2 முறை செல்லவேண்டியதாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தூரம் அதிகமாக இருக்கிறது. அங்கு language பிராப்ளம், எக்ஸ்பென்டிச்சர் அதிகமாக இருக்கிறது. எனவே சட்ட அமைச்சர் அவர்கள், ஒரு வழக்கில், அதாவது கொலை வழக்கில் கோர்ட்டில் விடுதலை அடைந்தவர்களை பொறுத்த வரையில் Higa Court -ல தண்டனை அடைந்தால் கொலைவழக்கில்—134 ஆர்ட்டிகளின்கீழ் உச்சநீதிமன்றத்தில் போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேளுங்கள். இதிலே 5 பேர்கள் கேட்டிருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் பேசிக் கொண்டிருந்தால், எப்படி முடியும்? கேள்வி, பதில், அப்படித் தான் இருக்கவேண்டும்.

**திரு. சி. இராமசுவாமி :** உயர்நீதிமன்றத்தில் ( High Court போடாமல், நேரடியாக ஆர்ட்டிகிள் 32-ன் கீழ், உச்சநீதிமன்றத்தில் போடவேண்டியதாக இருக்கிறது. இந்தக் காரணத்தை முன்னிட்டு, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களும், மத்திய அரசை வலியுறுத்தி, உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிடம் கன்சன்டை வாங்கி, உடனடியாகத் திறக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே காற்று நல்ல வகையிலே வீசிக் கொண்டிருக்கிறது என்று மிக மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நல்ல இனிய செய்திகளை டெல்லி நீதிமன்றமும் கொடுக்கும் என்று மனதாரக் கருதுகிறேன்.



1991 அக்டோபர் 1]

இணக்கமாக இருக்கிறது. மத்திய அரசில் இருக்கிற பிரதமர் நரசிம்மராவ் அவர்களும் இணக்கமாக இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும், இதிலே முனைப்பாக இருக்கிறார்கள் இதைக் கொண்டு வர, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. சிவசுப்பிரமணியன்.

**திரு. கு. சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல, Decentralsaion of justice என்கிற அளவில், மாவட்ட அளவில் உள்ள நீதிமன்றங்களை, இன்றைக்கு சார்பு நீதிமன்றங்கள், உரிமையியல் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் என்று பல்வேறு இடங்களுக்கு மாவட்ட அளவில் பிரித்து தந்திருக்கிறோம். அதேபோல் நம்முடைய உயர்நீதிமன்றத்தினுடைய கிளையைக் கூட மதுரையில் அமைத்துத் தர இருக்கிறோம் என்று இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் பார்க்கிறபோது, இன்றைக்கு லிட்டிகன்ட் பப்ளிக் என்று சொல்லப்படுகிறவர்கள், நம்முடைய லீகல் எய்ட் மூலமாக, மாவட்ட அளவில் இருந்தும், இன்றைக்கு நம்முடைய உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கிறோம். அப்படி உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றவர்கள், மேல் முறையீட்டுக்காக, உச்சநீதிமன்றத்திற்குச் செல்கின்ற வாய்ப்பு மிகமிகக் குறைவாக இருக்கிறது. இன்றைக்கு ஸ்கோப் ஆப் எம்ப்ளாய்மென்ட் என்ற முறையிலும், ஒர்க் லோட், அதாவது வேலை பளு குறையும் என்ற வகையிலும், Supreme Court is the supreme body of the High Court என்ற காரணத்தாலும், நம்முடைய உச்ச நீதிமன்றத்தின் கிளை இங்கே அமையுமானால் நம்முடைய functioning of the High Court முடுக்கிவிடுகின்ற வகையில் அமையும் என்பதை ஒருசேர மனதிலே கொண்டு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி இருக்கின்ற நேரத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஐந்தாவது ஆளாக வந்து கேள்வி கேட்கிறீர்கள். இவ்வளவு நேரம் பேசக் கூடாது. கேள்வி நேரங்களில் கேள்வி மட்டும்தான் கேட்க வேண்டும். அமைச்சர்கள் பதில் மட்டும்தான் சொல்லவேண்டும்,

திரு. கு. சிவசுப்பிரமணியன் : எனவே, சட்டத்துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இதை விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியின் 100-வது நாள் இது. நிச்சயமாக அது வரும் என்ற நல்ல செய்தியினை இந்த 100-வது நாளிலே சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 119. திரு தேனி பன்னீர்செல்வம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்.

119—

**உசிலம்பட்டி நீதிமன்றத்தை போடிநாயக்கனூருக்கு மாற்றுதல்.**

* 3354 திரு. தேனி பன்னீர்செல்வம் :

மாண்புமிகு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் காவல் சரகம், தேவாரம் காவல் சரகம் ஆகிய நிலையங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகள் உசிலம்பட்டியில் உள்ள நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படுவதால் பொதுமக்களும் அரசு அலுவலர்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதால் உசிலம்பட்டியில் உள்ள நீதிமன்றத்தை போடிநாயக்கனூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இது குறித்து அரசு சென்னை உயர்நீதிமன்றத்துடன் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.





திரு. தேனி. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் போடிநாயக்கனூர் காவல் சரகம், தேவாரம் காவல் சரகம் என்ற இரண்டும் உள்ளடக்கி, அது சப் டிவிஷன் என்று சொல்லக்கூடிய அளவில் டி.எஸ்.பி. அலுவலகம் அங்கே இயங்கி வருகிறது. எனவே அதிகமான வழக்குகள் அங்கேயிருந்து உசிலம்பட்டி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றன. எனவே உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை அங்கே அமைப்பதற்கு இனிமையான ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதேபோல் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய முன்னாள் தொகுதியான போடி தொகுதிக்கு இந்த 100 வது நாளில் இந்த நீதிமன்றம் உடனடியாக இந்த ஆண்டே கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடி நகரத்தில் விரைவில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைய இருக்கிறது. இது குறித்து மிகத் தெளிவாக உயர் நீதிமன்றத்திற்கு நாங்கள் எழுதியிருக்கிறோம். குறிப்பாக அங்கே இருக்கின்ற நீதிமன்றப் பதிவாளர் கடந்த 17 ஆம் தேதி என்னை சந்தித்தபோது போடி நகரத்தில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமையவேண்டிய அவசியத்தை காரண-காரியங்களோடு மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். அவர்களும் இசைவு அளித்திருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திலேயிருந்து விரைவில் பரிந்துரை வரும், பரிந்துரை வந்தபிறகு மாண்புமிகு நம்முடைய நிதியமைச்சர் அண்ணன் அவர்களிடத்திலே நீங்கள் வாதாட வேண்டும். பிறகு நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று போடி நகரத்திலே அந்த நீதிமன்றத்தைக் கொண்டு வருவேன் என்று இந்த 100-வது நாளில் உறுதி சொல்கிறேன்.

திரு. தேனி. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சரின் கனிவான பதிலுக்கு என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித்தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர், உசிலம்பட்டி . . . . . (குறுக்கீடு). மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய ஆட்சியின் 100-வது நாளில் வெற்றிகரமாக அடி எடுத்து வைத்துள்ளதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். அவர்களோடு இணைந்து அவையின் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நானும் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியின் 100-வது நாளை வாழ்த்துகின்ற வகையில் இந்த அவையிலே அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுமா என்று கேட்டுக்கொள்வதோடு . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடியட்டும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட போடிக்கு ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை உசிலம்பட்டியிலேயிருந்து மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்



பட்டிருக்கிறது. போடியிலிருந்து உசிலம்பட்டிக்கு வருவது என்று சொன்னால், 75 கிலோமீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது. நான் வழக்கறிஞராக 1963-லே சென்றதிலிருந்து இன்று வரையில் அந்த மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே பரிவோடு உடனடியாக போடித் தொகுதியிலே ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவ நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-45)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்விக்கு தெளிவாக விடையளித்திருக்கிறேன். உசிலம்பட்டியிலே இருக்கிற நீதிமன்றத்திற்கு எந்த ஆபத்தும் இல்லை. அது தக்க வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது அங்கே இருக்கும். அதை அடுத்துதான் புதியதாக போடியில் ஒரு நீதிமன்றம் வரும் என்ற இனிய செய்தியை நூறாவது நாளுக்காக சொன்னேனே தவிர உசிலம்பட்டியிலே இருக்கிற நீதிமன்றத்தை எடுத்து போடியிலே கொடுக்கவில்லை என்பதை எனது பாசத்திற்குரிய இனிய நண்பர் உறுப்பினர் மாண்புமிகு ஆண்டித்தேவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 120 திரு. ம. சின்னசாமி, திருமதி கே. மரியமுல் ஆசியா, டாக்டர் செல்வி ஜி. ஆர். மாலா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

120— திருச்சி மற்றும் கரூர் வட்டங்களைப் பிரித்தல்.

* 219 திரு. ம. சின்னசாமி :

திருமதி கே. மரியமுல் ஆசியா :

டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில், திருச்சி, கரூர் ஆகிய வருவாய் வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. ம. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே பெரிய வட்டமாக இருக்கிற கரூர் வட்டத்தையும் திருச்சி வட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ‘ ஆம் ’ என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அது எப்போது அமலுக்கு வரும் என்று கேட்க விரும்புவதோடு அந்த வட்டங்களுக்கு தலைமை இடமாக எந்தெந்த இடத்தை கொடுத்து பிரிக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங்கத்தை தலைநகராகவும், கரூரை இரண்டாகப் பிரித்து அரவக்குறிச்சியை தலைநகரமாகவும் கொண்டு வட்டங்களை அமைக்கலாம் என்று அதுவும் மாவட்டங்களை பிரிக்கின்றபோது இதையும் சேர்த்து ஒன்றாகச் செய்யலாம் என்று அரசு எண்ணியிருக்கிறது.

**திருமதி கே. மரியம்மூல் ஆசியா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து அரவக்குறிச்சியை தலைமை இடமாக வைத்து பிரிப்பதற்கு அரசு ஆவன செய்திருக்கிறது என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 249 சின்னங்கள் இருந்தபோதிலும்—அரவக்குறிச்சியை தலைமை இடமாகக் கொண்ட வருவாய் வட்டம் அமைக்க வேண்டும் என்ற நீண்ட நாள் மக்கள் கோரிக்கையை வரக்கூடிய ஆட்சியிலாவது நிறைவேற்ற



றலாம் என்ற நம்பிக்கையோடு நினைத்தால், 249 சின்னங்களிலே இரட்டை இலையைத் தேடிக் கண்டு பிடித்து மாண்புமிகு புரட்சித் தலைவியின் கரங்களை வலுப்படுத்த வேண்டும் என்று வாக்களித்து இருப்பதால், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அது எப்போது செயல்படும் என்பதை அறிவிப்பாரா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதி ஆண்டில் திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க ஆய்வில் இருக்கிறது. அப்போது இதுவும் செய்யப்படும்.

**டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சீர்திருத்த சட்டத்தை முனைப்போடு செயல்படுத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு திருச்சி வட்டத்தை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவித்திருப்பதற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பிரிக்கும்போது ஒவ்வொரு பிரிவிலும் எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்படும் என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங்கத்தை தலைமையிடமாகவும், கரூரை இரண்டாகப் பிரித்து அரவக்குறிச்சியை தலைமையிடமாகவும் கொண்டு வருவாய் வட்டம் அமைக்கப்படும். எந்தெந்த வருவாய் கிராமங்கள் எந்தெந்த வட்டத்தில் சேரும் என்பது ஆய்வில் உள்ளது.

[1991 அக்டோபர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 121. திரு. எஸ். எஸ். ராமசுப்பு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

121—

**ஆலங்குளத்தை தனித் தாலுக்காவாக்குதல்.**

*** 1194 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :**
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆலங் குளத்தை தனித் தாலுக்காவாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம், வி. கே. புதூர், தென்காசி ஆகிய இந்த மூன்றையும் தாலுக்காவாக அறிவித்து மாவட்ட ஆட்சித் தலைவரால் கெஜட்டில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பிரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. மூன்றும் தனி தாலுக்காக் இயங்கும் என்று சொல்லப்பட்டிருந்தபோதிலும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. சிறப்பாக ஆட்சி புரிந்து வரும் நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியில் 100 வது நாளான இன்று, மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். ஏனென்றால் இது முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. அதிகாரிகளுக்கும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதேபோல அங்குள்ள மக்களுக்கும் தென்காசி, வி. கே. புரம்



1991 அக்டோபர் 1]

செல்லக்கூடிய மக்களுக்கும் மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே அதை தனி தாலுக்காவாக செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் மக்கள் வெகுவாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மக்கள் வெகுவாக எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைத்தான் ஒன்றன் பின் ஒன்றாக தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அதே போல மக்கள் எதிர்பார்க்கும் நல்ல காரியங்களை எதை எதை செய்ய வேண்டும் என்பதை தருணம் வருகின்றபோது அவைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். எஸ்.ராமசுப்பு :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாலுக்காவைத் தனியாக பிரிக்கும்போது அம்பா சமுத்திரம் பகுதியைச் சேர்ந்த, அதாவது காந்தபுரம், புதுப் பட்டி, கண்டப்பட்டி இவை அருகில் இருக்கின்றன, அதேபோல கீழப்பாவூர் இந்த ஊர்களையும் சேர்த்து ஆலங்குளத்தோடு இந்த தாலுக்காவில் இணைத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய அறிக்கை வருவாய் சிறப்பு ஆணையரிடத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்தெந்த வருவாய் கிராமங்களை எந்தெந்த வட்டங்களில் சேர்ப்பது என்பது ஆய்வில் உள்ளது. சேர்க்கிறபோது, தலைமையகத் திற்கு அருகாமையில் இருக்கின்ற வருவாய் வட்ட கிராமங்கள் அந்தந்த வருவாய் வட்டத்தில் சேர்க்கப்படும்.

[1991 அக்டோபர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 122. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

122—

தஞ்சை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி.

*649 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அல்லது மற்றொரு நகரத்தில் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமைகளையும், கொடியவர்களையும் ஒழித்து வெற்றிநடை போடும் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இன்று 100 வது நாள் காணும் புரட்சித் தலைவி அவர்களை நான் மனமார, இதயமார பாராட்டுகிறேன். அதே நேரத்தில் (குறுக்கீடு) இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். தனி நபர் கல்லூரிகளில் மேனேஜ்மெண்ட் கோட்டாவில் எல்லாம் இன்று ரேட் மிகவும் அதிகரித்து விட்டது. ஆகவே தான் அரசு சார்பான இந்த என்ஜினியரிங் கல்லூரியைத் துவக்க வேண்டும் என்று நாம் நிறைய கோரிக்கைகள் கொடுத்திருக்கிறோம். ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து கும்பகோணம் நகரத்தில் ஒரு நல்ல என்ஜினியரிங் கல்லூரியைத் துவங்குவதற்கு அல்லது மற்ற ஏனைய இதுபோன்ற பெரிய நகரங்களிலாவது துவங்குவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் கல்வியைப் பொறுத்தவரை அல்லது மேல் நிலைக் கல்வியைப் பொறுத்தவரை நீண்டகாலமாக அரசாங்கத்தின் பொறுப்பிலே மிகக் குறைந்த கல்லூரிகளே நடைபெற்று



1991 அக்டோபர் 1]

வந்தன. சுமார் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கம் உதவி செய்கிற தனியார் பொறுப்பிலே கல்லூரிகளைத் தொடங்க அனுமதித்தது. அவைகளும் ஒன்று, இரண்டு என்ற அளவிலேதான் நீண்ட காலமாக இருந்தது. நம்முடைய நாட்டில் இளைஞர்களுக்குத் தேவைக்கேற்ப பொறியியல் கல்லூரிகள் துவங்கவில்லை என்கிற குறை நீண்ட காலமாக இருந்து வந்த சூழ்நிலையில் நம்முடைய மாணவர்கள் மற்ற மாநிலங்களிலே போய் பணம் கொடுத்து, கேப்பிடேஷன் ஃபீஸ் கொடுத்து படிக்கின்ற சூழ்நிலை உருவானபோதும், இங்கே அந்த பற்றாக்குறை தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. அதனாலே தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு இந்த பொறியியல் கல்லூரிகளை மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போன்று தமிழகத்திலேயும் மிகப் பெரிய அளவில் தனியாருக்கு அனுமதி வழங்கி தொடங்கலாம் என்று முடிவெடுத்தார்கள், அதன் விளைவாக நீண்டகாலமாக அரசு பொறுப்பிலே 5 கல்லூரிகளும், அரசு நிதியுதவி பெறுபவை 3 கல்லூரிகளும் இருந்த சூழ்நிலையில், 30 தனியார் தங்களுடைய சொந்த பொறுப்பிலே நடத்துகிற கல்லூரிகள் தோன்றி இன்றைக்கு 8,000 மாணவர்கள் ஆண்டு ஒன்றுக்கு பயிற்சி பெற்று வெளியேறுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கவேண்டுமானால் இன்றைக்குள்ள சூழ்நிலையில் அரசாங்கம் அவ்வளவு நிதிச் சுமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இருக்கின்றபோது, அரசு பொறுப்பிலே பொறியியல் கல்லூரிகள் தொடங்குவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தனியார் பொறுப்பிலே கல்லூரிகள் தொடங்குவதை அடுத்த நிதியாண்டில் பரிசீலிக்கலாம் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 123. டாக்டர் சு. சுந்தரராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் அவர்கள்.

[1991 அக்டோபர் 1

123—

**பரமக்குடியில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கிக் கிளை.**

* 545 டாக்டர் ச. சுந்தரராஜ் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கியின் இராமநாதபுரம் மாவட்டக் கிளை அலுவலகம் பரமக்குடியில் நிறுவுவதற்கு அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

'முற்பகல் 9.55

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவைகளை உணர்ந்து நிர்வாக திறமையுடன் உடனுக்குடன் பணியாற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சாதாரண மனிதனும் அரசை எளிதில் அடைய ஒரு அணுகுமுறையைக் கையாண்டு நடத்திக்கொண்டு வருகிற காரணத்தால் அரசு மறுபரிசீலனைச் செய்து மாவட்டத்தின் மத்தியில் அமைந்துள்ள பரமக்குடியில் குறிப்பாக கமுதி, முதுகுளத்தூர், கடலாடி போன்றப் பகுதிகளிலிருந்து வருவதற்கும், திருவாடனை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கும் மத்தியில் அமைந்துள்ள பரமக்குடிக்கு வருவதற்கும் ஏதுவாக இருப்பதால் அந்த வங்கியை அமைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1991 அக்டோபர் 1]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் வைக்கலாம் என்ற ஒரு சூழ்நிலையை எண்ணிப்பார்த்தபோது நிலவள வங்கியினுடைய எல்லைக்குள் இருக்கிற கமுதி, முதுகுளத்தூர், இராமநாதபுரம்— இங்குள்ளவர்கள் எல்லாம் இராமநாதபுரத்திற்குச் செல்வதற்கு தான் வழிவகை நன்கு இருக்கிறது. ஆகவே, அந்த நிலவள வங்கி இராமநாதபுரத்தில் இருக்கலாம் என்ற கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு கிட்டத்தட்ட 7 வருடங்கள் ஆகியும் இன்னும் மாவட்டத்தினுடைய பல்வேறு கூட்டுறவுத் துறை அலுவலகங்கள் குறிப்பாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி போன்ற அலுவலகங்கள் மாவட்டத்திற்கே வரவில்லை. இராமநாதபுரம் 2 கோட்டமாக உள்ளது. ஒரு கோட்டமாக இயங்குகின்ற இந்த பரமக்குடியில் துணைப் பதிவாளர் அலுவலகமே இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவ்வாறு இருக்கின்ற அந்த கூட்டுறவு நிர்வாகம் மாவட்டத் திற்குள் வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மூன்றாக பிரிக்கப்பட்டு இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தின் வங்கி மதுரையில் இருப்பதை அனைவரும் அறிவீர்கள். ஆனால் இப்போது ரிசர்வ் வங்கிக்கு தெரிவித்து 3 மாவட்டங்களுக்கும் 3 மத்திய கூட்டுறவு வங்கிகள் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதற்காக ரிசர்வ் வங்கியினுடைய அனுமதியைக் கோரிப் பெற முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். அது வந்த உடன் இராமநாத புரம் மாவட்டத்திற்கு பசும்பொன் மாவட்டத்திற்கு காமராஜர் மாவட்டத்திற்கு என்று 3 கூட்டுறவு வங்கிகள் உருவாக்கப்படும்

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இராமநாதபுரத்திற்கு ஒரு வங்கி இருப்பதன் காரணமாக மேலும் 2 வங்கிகள் புதிதாக உருவாக்கப்படும். அதோடு பல கிராமங்களில் கிளைகள் இல்லை. அப்படிப்பட்ட கிளைகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை தற்போது அரசு செய்து கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 124, திரு. வி. எம். சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**124—**

**போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்.**

** 1472.* **திரு. வ. மு. சுப்பிரமணியன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தணக்கன்குளம் கிராமத்திலும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இராமநாதபுரத்திலும் தொழிலாளர்களுக்காக வாங்கப்பட்ட வீட்டு மனைகளில் வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கண்ட பொருட்கள் குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வ. மு. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்து பல நாட்களாக கிடப்பில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலாவது அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் வரலாற்றில் முதன் முதலிலே தொழிலாளர்களுக்காக வீடு கட்ட இடம் பெறுவதற்கு, நிலத்தினை பெறுவதற்காக 3-ல் ஒரு பங்காக சுழல் நிதி ஒன்றினை உருவாக்கவேண்டும் என்று சொல்லி அறிவுரை வழங்கிய நம்முடைய தமிழகத்தின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதை நான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நூறாவது நாளில் வெற்றிகரமாக இந்த அரசு நடைபோட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் இப்பணிகளை விரைவாக செயற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வ. மு. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தணக்கன்குளம் கிராமத்திலும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இராமநாதபுரத்திலும் தொழிலாளர்களுக்காக வாங்கப்பட்ட இடத்தின் பரப்பளவு எவ்வளவு? எத்தனை தொழிலாளர்களுக்கு இது ஒதுக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 4.40 ஏக்கர் நிலத்தினை ஆர்ஜிதம் செய்து இருக்கிறோம். மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 1.72 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து பணிகள் துவங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. விரைந்து இப்பணிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித்தேவர்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு தணக்கன் குளத்தில் 4.1 ஏக்கர் நிலம் மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் எடுக்கப்பட்டது. இன்னும் அங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா அல்லது அந்தத் தொழிலாளர்களுக்கு கடனையாவது கொடுத்து உடனடியாக அவர்கள் வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் அது அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய நூறாவது நாள் ஆட்சிக்காலத்தில் இதற்கு உறுதியான ஒரு பதிலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இவர்களுக்கு கடனாக வழங்கி, வீடுகள் கட்டித் தருவதற்கு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 125 திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

வழுக்குப்பாறை மணியாச்சி அணைத் திட்டம்.

* 810 **திரு. வே. பெரியசாமி :**
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டத்தில் வழுக்குப்பாறை, மணியாச்சி அணைத் திட்டத்தினை 1991-92-ல் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், ஆரம்பப் பணிக்கு எவ்வளவு செலவு ஆகும்?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வழுக்குப்பாறை, மணியாச்சி அணைத் திட்டத்தினை எடுத்துக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழுக்குப்பாறை, மணியாச்சி திட்டம் காங்கிரஸ் காரர்கள் ஆட்சிக் காலத்திலேயிருந்து அது நிலுவையிலேயிருந்து, பரிசீலித்துக் கொண்டிருப்பதாக சொல்லிக் கொண்டு வந்தார்கள். இப்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பகுதி ஒரு வறட்சியான பகுதி என்பதை நாடு அறியும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்தப் பகுதியிலே 7 ஏரிகள் வறண்டு போய், 4, 5 ஆண்டுகளாக மழையில்லாது பொய்த்துப் போய் இருக்கின்ற காரணத்தினால் குடிதண்ணீர் கூட இல்லாதபடி மக்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். காருண்ய உள்ளம் கொண்ட, எங்கள் கருணை உள்ளம் கொண்ட தாய் அவர்கள் ஆட்சியில் இருக்கின்ற நேரத்தில் தயவுசெய்து இதை நீங்கள் மறு பரிசீலனை செய்வீர்களா என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணியாச்சிப் பள்ளம் என்பது பாலாற்றினுடைய ஒரு கிளை நதியாகும். அந்த நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்கெனவே அவர்கள் ஆராய்கின்ற நேரத்திலே, ரிசர்வ் ஃபாரஸ்ட் ஏரியா என்கின்ற பகுதிகளிலே வருகின்ற காரணத்தினாலே, சந்தன மரங்களையும் தேக்கு மரங்களையும் அழிக்க வேண்டியிருக்கிறது. அதற்கான ஒப்புதலையும் மத்திய அரசிடமிருந்து பெறவேண்டி

யிருக்கிறது. இதுகுறித்து பல்வேறு கணக்குகளை அவர்கள் எடுத்து, அவைகளெல்லாம் நடைமுறைக்கு சாத்தியமில்லை என்ற காரணத்தினாலும், மேட்டூருக்கு வருகின்ற தண்ணீரை இடையிலே மறித்து, வருகின்ற அளவு குறைந்துவிடும் என்கின்ற காரணத்தினாலும் பல்வேறு நடைமுறைகள் ஆராய்ந்த பின் திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன. அதைப்போல இந்த ஒழுக்குப்பாறையின் குறுக்கேயும் ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து 1990 ஆம் வருடம் மே மாதம் இத்திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றிய விவரங்களை மறுபடியும் இந்த அரசு ஆராயும். இந்தத் திட்டம் நடைமுறைக்கு சாத்தியமாக இருக்குமேயானால், இந்தத் திட்டத்தை கவனத்திலே எடுத்துக் கொண்டு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் வானிலே ஒரு விடிவெள்ளியாகவும் சமுதாயப் பாலைவனத்திலே ஒரு நீரூற்றாகவும் இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள், மறு பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அங்கு மரங்கள் வெட்டப்படவேண்டிய அவசியம் இல்லை. காடுகளை அழிக்கக்கூடிய அவசியமும் வராது. நீண்ட வறட்சி நிறைந்த காடுகளாக இருக்கின்ற அந்தப் பகுதிகளிலே, பசுமைப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் தயவுசெய்து மீண்டும் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, சிறப்பான முறையிலே பணியாற்றிக் கொண்டு வருகிற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 269 ஏக்கர் வனத்துறைப் பகுதிகளிலே இருக்கின்ற நிலங்களைக் கையகப்படுத்த வேண்டி இருக்கிறது. வனத்துறைப் பகுதிகளிலே இருக்கின்ற நிலங்களைக் கையகப்படுத்துகின்ற



நேரத்தில், மைய அரசிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களையெல்லாம் நான் ஏற்கெனவே இந்த மன்றத்திற்குச் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, இதுகுறித்து இந்த அரசு மிகுந்த கவனத்தோடு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 126. செல்வி கோ. மல்லிகா. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

**கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் வாய்க்காலுக்கு திருப்புதல்.**

* 1143 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் வாய்க்காலுக்கு திருப்பி விவசாயத்திற்கு பயன்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தத் திட்டத்திற்கான முதனிலை அறிக்கை தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அளவில் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-05)

**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகிலைக் கிழித்துக் கொண்டு வெளிவரும் முழு மதியைப் போல, இரண்டாண்டு காலமாக ஆட்சி செய்த இருள் வீணர்களை வீழ்த்தி, இங்கே தமிழகத்தின் விடிவெள்ளியாக விளங்கி, அவையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் எங்களுடைய அன்புத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி

நூறாவது நாளாக வெற்றி நடைபோட்டு, இன்று வைர விழாவாக நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், தலைமைப் பொறியாளரிடம் ஆய்வு அறிக்கை உள்ளது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். தலைமைப் பொறியாளரிடமிருந்து, அந்த ஆய்வறிக்கையை உடனடியாகப் பெற்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தைக் கொண்டு வருவதன்மூலம், ஏறத்தாழ ஐயாயிரம் ஏக்கர் நிலங்களில் இரண்டுபோக சாகுபடி செய்ய இயலும் என்ற காரணத்தினாலே, இதனால் 6,000 டன் கூடுதல் உணவு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலே, இந்தத் திட்டம் ஆய்விலே எடுத்துக் கொள்ளப் பட்டு, ஏறத்தாழ 97 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு செய்யப் பட்டு, (Chi f Engin er Plarnii g and Design) அவர்களிடம் இதற்கான ஒரு ஆய்வு இருக்கிறது. அந்த ஆய்வினை கவனத்தோடு அரசு அளவிலே பரிசீலித்து, நிதியாதாரங்களுக்கு ஏற்ப, செயற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வீணாகக் கடலில் கலக்கும் கொள்ளிடம் நீரைத் தேக்கி, கான்சாகிப் வாய்க்கால் வழியாக திருப்பி விடுவதன்மூலம், 20 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாறும் விந்தை யான வாய்ப்பு உள்ளதால், இத்திட்டத்தை இந்த ஆண்டே, எங்களது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களின் ஆட்சியில் நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குப் பயனளிக்கிற எந்தத் திட்டத் தையும், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, கிடப்பிலே போடுவதில்லை. ஆகவே, இதைப்போன்ற பல்வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஆய்விலே இருக்கின்றன. எந்தெந்தத் திட்டங்கள், அதிக அளவிலே தமிழ்நாட்டிற்குப் பயன்தரக்கூடிய





திட்டங்களாக இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் முன்னுரிமை கொடுத்து, இந்த அரசு செய்ய தயாராக இருக்கிறது. அப்படி ஆய்வு செய்கின்றபோது, இந்தத் திட்டத்தினால் அதிக பலன் இருக்கிறது என்று கருதினால், உடனடியாக இந்த ஆண்டிலேயே கூட, அது எடுத்துக் கொள்ளப்படும். எனவே, ஆய்வுக்குப் பிறகு தான் அதைப்பற்றி சொல்ல இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 127—திரு. கு. லாரன்ஸ் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

### இரணியல் பாலம் புதுப்பித்தல்

127—

* 1804 திரு. கு. **லாரன்ஸ் :**
மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்குளம் தாலுகா இரணியல் பாலம் மிகவும் பழுதடைந் திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாலம் கட்டிக்கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு இவ்வேலையை எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கு. லாரன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் இந்த நூறாவது நாளில், எங்களது இதயத்தின் அடித்தளத்திலிருந்து எல்லா,

[1991 அக்டோபர் 1

புகழும் புரட்சித் தலைவிக்கே என்று கூறி, இந்த இரணியல் பாலம் என்பது மிகுந்த போக்குவரத்து நெருக்கடி பொருந்திய ஒரு கிராமத்தில் அமைந்திருக்கிறது. நீண்ட நெடிய நாட்களுக்கு முன்னாலேயே, பல்வேறு அரசுகள் இந்த இரணியல் பாலம் உடனடியாக அமைக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அண்மையிலே ஏற்பட்ட மிகுந்த வெள்ளச் சேதத்தில்கூட, இந்தப் பாலம் பழுதுபடுகிற ஒரு சூழ்நிலை இருந்தது என்பதோடு, இப் பாலம் கட்டப்பட்டு 200 ஆண்டுகள் ஆகின்றன என்றுகூட சொல்கிறார்கள்; எனவே, உடனடியாக இந்தப் பாலத்தை மாற்றி, புதிய பாலம் கட்ட, அரசு ஆலோசிக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற பாலம், தேசிய நெடுஞ்சாலை எண் 47-லிருந்து பிரிந்து செல்லும் பரசேரி-குளச்சல் சாலையில் 13 கிலோ மீட்டரில் அமைந்திருக்கிறது. இது, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, போக்குவரத்து அதிகமாக உள்ள பாலம் என்பதையும் இங்கே அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். இதற்கான மதிப்பீடுகளை ஆய்வு செய்கின்ற நேரத்திலே, உடனடியாக மறு பாலம் கட்டவேண்டுமென்றால், ஏறத்தாழ ரூ. 40 இலட்சத்திற்கு மேல் தேவைப்படுகிறது எனத் தெரிய வருகிறது. அதை, ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்திலே 'ஷில்பா புராஜக்ட்' என்று சொல்லப்படுகிற அந்தத் திட்டத்திலே ஏழாவது இடத்திலே, பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள். ஆகவே, அரசின் செயற்குறிப்பிலே அந்தப் பாலம் சேர்க்கப்பட்டிருக்கிறது. நிதியாதாரங்களுக்கேற்ப, அந்தப் பாலத்தை எடுத்துச் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண் 128; திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



1991 அக்டோபர் 1]

128—

**அடுக்குமாடிக் கட்டிடங்கள் முறைப்படுத்த சட்டம்.**

* 110 திரு. டி. எம். ரங்கராஜன்:
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தமிழகத்தில் பெருகிவரும் அடுக்குமாடிக் கட்டிடங்களை ஒழுங்குபடுத்திட மகாராட்டிர மாநிலத்தில் உள்ளதுபோல Flats Regulation Act கொண்டுவர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை.**

(அ) தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பல குடியிருப்புகள் அடங்கிய அடுக்குமாடிக் கட்டிடங்கள் பெருகி வருகின்றன. இத்தகைய அடுக்குமாடிக் கட்டிடங்களின் கட்டுமானங்களை ஒழுங்குபடுத்தவும், மற்றும் அவைகளில் குடியிருப்பு தலங்களை வாங்கியுள்ளவர்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பு வழங்கவும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் கீழே கண்டுள்ள இரண்டு சட்டங்களை இயற்ற அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது:—

(1) தமிழ்நாடு தனிக்குடியிருப்பு பகுதி உடைமை உரிமைச் சட்டம். (Tamil Nadu Apartment Ownership Act)

(2) தமிழ்நாடு அடுக்குமாடி உரிமை (கட்டுமானங்கள், விற்பனை, நிர்வாகம், மற்றும் மாற்றங்கள், ஒழுங்குபடுத்தல்) சட்டம்.

(Tamil Nadu Ownership Flats (Regulation of Promotion of Construction, Sale, Management and Transfer) Act);

[1991 அக்டோபர் 1

(ஆ) மேலே (அ)-ல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அடுக்குமாடி கட்டிட உரிமைச் சட்டத்திற்கான சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு அதன் மீது மைய அரசின் உள்துறை அமைச்சகத்தின் இசைவைப் பெற அனுப்பப்பட்டது. அச்சட்ட முன்வடிவு மீதான மைய அரசின் உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனைகள்/குறிப்புகள் மீது சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கருத்து கோரப்பட்டுள்ளது. தமிழ்நாடு அடுக்குமாடி உரிமை (கட்டுமானங்கள், விற்பனை, நிர்வாகம் மற்றும் மாற்றங்கள், ஒழுங்குபடுத்துதல்) சட்டம் சம்பந்தமான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**திரு. டி. எம். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய தானைத் தலைவியாம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது மைலாப்பூர் காந்தி நகர் பகுதியில்தான் இன்று அடுக்குமாடிக் கட்டிடங்கள் அதிகமாக கட்டப்பட்டு வருகின்றன. அங்கே இப்போது ஒரு வீடு இருந்த இடத்திலே 30 ஃப்ளாட்டுகள் டிரெயினேஜ் மற்றும் குடிதண்ணீர் வசதி இவற்றைக் கருத்திற் கொள்ளாமல் கட்டப்படுகின்றன. இதனால் மக்கள் அவதிக் குள்ளாகின்றனர். இதுபோன்ற சிக்கல்களைக் களைய மேற்படி சட்டத்தில் வழிவகை செய்யப்படுமா என்பதனை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல், மகாராட்டிரா மாநிலத்தில் Flats regulation Actன்படி, அதை முன்வடிவமாக வைத்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இரண்டு சட்டங்களை இயற்ற அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. ஒன்று தமிழ்நாடு தனி குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டம்; மற்றொன்று, தமிழ்நாடு அடுக்குமாடி உரிமை (கட்டுமானங்கள், விற்பனை, நிர்வாகம், மற்றும் மாற்றங்கள் ஒழுங்குபடுத்தல்) சட்டம் என்றும் வழங்கப் பட்டிருக்கின்றது. இது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1991 அக்டோபர் 1]

**திரு. டி. எம். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடுக்குமாடிக் கட்டிடச் சொந்தக்காரர் களுடைய தொல்லைகளைக் களைய இச்சட்டத்தை விரைவிலே அறிமுகம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அரசு கவனமாகப் பரிசீலித்து வருகின்றது. கூடிய விரைவிலே இந்தச் சட்டம் இயற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடுக்கு மாடிக் கட்டிடங்களால் ஏற்படுகின்ற தொல்லைகளுக்கு Floor Area ratio தான் முக்கியக் காரணம். மற்ற மாநிலங்களிலே Floor space Area அதாவது Floor space Index என்பது 1:5 என்ற விகிதா சாரத்திற்குக் குறைவாக உள்ளது. ஆனால், சென்னையிலே இது 4:5 என்ற அளவுக்கு இருக்கிறது. எனவே, இதைக் குறைத்து, மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல் 1:5 என்ற விகிதாச்சாரத் திற்குக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4:5 Floor space Index என்பது சரியல்ல. ஒவ்வொரு வகைக் கட்டிடத் திற்கும் ஒவ்வொரு விகிதாச்சாரம் உள்ளது. 1, 5-லிருந்து 2.0 வரை உள்ள Floor space Index விகிதாச்சாரத்தை ஒரே சீரான 1.5 விகிதாச்சாரத்திற்கு மாற்றுவதற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்-செயலரின் பரிந் துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1991 அக்டோபர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ச. ஆரோக்கிய சாமி.

**டாக்டர் ச. ஆரோக்கியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய திட்டமாக நிறைய வீடுகள் ஏறத்தாழ, இரண்டு இலட்சம் வீடுகளை நாம் கட்ட வேண்டும் என்ற காரணத்தினாலே நம்முடைய நகரப்பகுதியிலே கட்டப் படுகின்ற வீடுகளுக்கு ஏகப்பட்ட சட்டங்கள் இருப்பதனால், வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட முடியாமல் இருக்கிறது. ஆகவே, அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இலகுவான விதிகளை அரசு நிர்ணயிக்குமா என்பதனைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இரண்டு இலட்சம் வீடுகள் என்று கூறினார். அதில் ஒரு திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினருக்கு கூறிக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வருகின்ற ஐந்து ஆண்டு காலத்தில் பத்து இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க உத்தேசித்துள்ளது. அது அறிவிக்கப் பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். அடுக்குமாடிக் கட்டட வீடுகள் சட்டத்தின்படி நிறைய வீடுகள் வருவதற்கு அடிக்கடி சட்டம் குறுக்கே வருகிறது என்று கூறினார். அது சம்பந்தமாக அரசு ஆவன செய்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 107 திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள்.



1991 அக்டோபர் 1]

129—

## வேலூரில் பாதாள சாக்கடைத் திட்டம்.

* 271 **திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூரில் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-15

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்பு மிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் ஆம் என்றே பதில் கொடுத்துள்ளார். நெப்போலியனுடைய அகராதியிலே 'இல்லை' என்ற சொல்லுக்கு இடமில்லை என்று சொல்லு வார்கள். Nohing is impossible ' இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவேகத்துடனும், வீரத்துடனும் ஆட்சி செய்துகொண்டிருக்கிற இந்தக் கால கட்டத்தில் இல்லை என்ற வார்த்தையைச் சற்று மாற்றி, வருகின்ற காலகட்டத்தில் நீங்கள் எங்களுக்குக் கொடுக்க வேண்டும். காரணம், வேலூர் மாநகரில் சிறிது மழை பெய்தாலும்கூட எங்களால் காலடி வைத்து ரோட்டிலே நடக்க முடியாது. ரோடிலே நடக்க ரோடைக் கண்டு பிடிக்க வேண்டும். சாக்கடைதான் அந்த இடத்தில் ஓடும். அங்கே கொசுக்களும், பன்றிகளும்தான் ஆனந்தமாகக் குடி யிருக்கும். மனிதர்கள் அந்த இடத்திலே நடமாட முடியாத நிலை

இருந்துகொண்டிருக்கிறது. நாடு விடுதலை அடைந்து 45 ஆண்டுகள் ஆனாலும்கூட கொசுக்களிடமிருந்தும் பன்றிகளிடமிருந்தும் நாங்கள் விடுதலை அடைய முடியவில்லை.

முற்பகல் 10.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே எங்களுக்கு இந்த சுகாதாரத்தை மேம்படுத்துகிற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சி நடந்து கொண்டிருக்கிற இந்த வேளையில் நீங்கள் எப்படியாவது திட்டத்தைத் தீட்டி எங்களைக் கொசுக்களிலிருந்தும், பன்றிகளிலிருந்தும் மீட்க ஆவன செய்வீர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று சொல்வது எங்களது வழக்கம் இல்லை. ஆனால் நிதியாதாரம் இல்லை என்ற காரணத்தால் தற்போது வேலூர் நகராட்சியிலே ஓப்பன் டிரெய்னேஜ் சிஸ்டம் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த லோ காஸ்ட் சேனிட்டேஷன் என்ற வகையில் அதாவது குறைந்த செலவு கழிவுநீர்த்திட்டத்தில் அந்த வேலூர் நகராட்சியில் டிரெய்னேஜ் சிஸ்டத்தை முறைப்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசின் கடன் மதிப்பீடு 1982-லேயே 805 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டோமேயானால் கிட்டத்தட்ட இது இரண்டு மடங்காக உயரும் என்பதோடு வேலூர் நகராட்சியின் வருமானத்தைக் கருதி அவர்களால் இதைத் திருப்பிச் செலுத்த இயலாது என்ற காரணத்தினாலும் ஓப்பன் டிரெய்னேஜ் சிஸ்டமே போதும் என்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட திட்டம் அரசின் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி இங்கே இந்த இடத்தில் 100-வது நாளைக் கொண்டாடிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நீங்கள் அந்த வேலூர் முனிசிபாலிட்டிக்கு வருமானம் இல்லை என்பதைச் சொல்லி இந்த மேம்பாட்டுத் திட்டத்தைக் கைவிடுவதைவிட வேறு எந்தத் தொகுப்பில் இருந்தாவது பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து வேலூர் மக்களை நீங்கள் சுகாதார நிலையில் மேம்படுத்துவதற்கும், பன்றிகளிடமிருந்து மீட்பதற்கும் முயற்சிப்பீர்களா அதைப் பரிசீலிப்பீர்களா என்பதை மீண்டும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தற்போது தேவையில்லை என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மேலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும் அளவுக்கு வேலூர் நகரில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் தண்ணீர் அளவு போதுமானதாக இல்லை என்றும் தற்போதுள்ள வடிகால்களை விரிவுபடுத்தலாம் என்றும் நகராட்சி நிர்வாகம் இயக்குநர் கருத்துத் தெரிவித்து உள்ளார். அவர் தெரிவித்த கருத்துக்களைப் பொறுத்தவரையில் சாலையோர வடிகால்கள் மழை நீர் மற்றும் வீட்டில் உபயோகப்படுத்தப்பட்ட கழிவுநீர் முதலியவற்றை எடுத்துச் செல்ல பயன்படுமே அன்றி சாக்கடைக் கழிவுகளை எடுத்துச் செல்லப் பயன்படாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இப்படிப்பட்ட சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டு காலமாக நகராட்சியின் நிர்வாகத்தில் இருந்த திமுக அந்த நகரத்தை சீரழித்துவிட்டது. இன்றைக்கு புதிதாக மலர்ந்திருக்கின்ற நம்முடைய புரட்சித்

தலைவியின் ஆட்சியில் அதை மாற்றி வேலூர் பெருநகருக்கு அழகு சேர்க்கும் விதத்தில் மட்டுமல்ல; வெள்ளத்திலே இருந்து எங்களைக் காப்பாற்றுகிற அளவுக்கும் அதாவது சிறு மழை பெய்தாலும் குறிப்பாக நான் வாழ்கிற பகுதியில் படகிலேதான் செல்லக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தால் உலக வங்கியின் உதவி பெற்றோ அல்லது வேறு வழியாகவோ இதை அருள் கூர்ந்து நம்முடைய அரசு பரிசீலனை செய்து புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதைக் கவனத்தோடு பரிசீலித்து முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 130 திரு. ஏ. டி. செல்லச்சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

130—

**ஒட்டன்சத்திரத்தில் இலவம்பஞ்சு தொழிற்சாலை.**

***161. திரு. ஏ. டி. செல்லச்சாமி :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒட்டன்சத்திரம் பகுதியில் ஏராளமாக உற்பத்தியாகும் இலவங்காயை மூலப்பொருளாகக் கொண்டு இலவம்பஞ்சு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று பெரிய அளவில் ஒட்டன்சத்தி ரத்தில் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. முகமது ஆசிப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

**திரு. ஏ. டி. செல்லச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதியில் வடகாடு பஞ்சாயத்து தனியார் நிலங்களிலும் விருப்பாத்தி வனத்திற்கு உட்பட்ட வனப்



பகுதிகளிலும், பாச்சலூர், பெரியூர் தேச்சிப்பட்டி, காமனூர், தாண்டிக்குடி, பண்ணைக்காடு போன்ற மலைப் பகுதிகளில் அமைந்துள்ள பஞ்சாயத்துக்களில் உற்பத்தியாகும் சுமார் 2 கோடி இலவங்காய்களை மூலப் பொருளாகக் கொண்டு ஒட்டன்சத்தி ரத்தில் இலவம்பஞ்சு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று பெரிய அளவில் அமைத்தால் அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு பேருதவியாக இருக்கும். ஆகவே ஒட்டன்சத்திரத்தில் இந்தத் தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-20

Hon. Thiru MOHAMED ASIF : Hon'ble Mr. Speaker, Sir, the request of the Honourable Member will be considered. But I would like to express some of the difficulties we have to face in that. i.e. we need a big land and also a big building apart from providing machinery and also in that area there seems to be some labour problem. So, all these things are being considered. As soon as they are solved the matter will be taken up for conside- ration.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செல்லசாமி. தற் போது இருக்கின்ற சூழ்நிலையில் இப்போதைக்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

வினா எண் 131. திரு. இரா. நடேசன் மற்றும் திரு. வே. பெரிய சாமி. மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்கள்.

**வனத்துறை அலுவலர்களுக்கு பாதுகாப்பு வசதிகள்.**

131—

***34. திரு. இரா. நடேசன் :**

**திரு. வே. பெரியசாமி :**

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வனத்துறை அலுவலர்களுக்கு மரத் திருடர்கள் மூலம் ஏற்படுகின்ற அபாயத்தை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் பாதுகாப்பிற்கும், வனம் பாதுகாக்கப்படவும் நவீன துப்பாக்கிகள் மற்றும் வாகனங்களை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை.**

(அ) ஆம்.

(ஆ) பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள வன அலுவலர்கட்கு தற்போது 12 போர் டி.பி.பி.எல். துப்பாக்கிகளும், 303 துப்பாக்கிகளும் வழங்கப்படுகின்றன. இவை தற்போது குறைந்த அளவில் இருப்பிலுள்ளது. எனவே 44 சக்தி வாய்ந்த 315 ஸ்போர்டிங் துப்பாக்கிகள் வழங்க கல்கத்தாவிலுள்ள மத்திய அரசின் படைக்கலன் தொழிற்சாலைக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இருப்பின் நிலைமை சாதகமாக இல்லாமையால், துப்பாக்கிகள் வழங்குவது குறித்து சில காலம் கடந்து பரிசீலிக்கப்படுமென படைக்கலன் தொழிற்சாலை தெரிவித்துள்ளது. கல்கத்தாவிலுள்ள படைக்கலன் தொழிற்சாலைக்கு 48 எண்ணிக்கையில் 12 போர் டி.பி.பி.எல். ரக துப்பாக்கிகள் வழங்கக் கோரி உத்திரவு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் 48 எண்ணிக்கை துப்பாக்கிகள் 4-தவணைகளில் வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி படைக்கலன்களின் விநியோகம் எதிர்பார்க்கப்படுகிறது.





**வாகனங்கள் வழங்குதல்**

தமிழக வனப்பாதுகாப்பு படைகள் அனைத்திற்கும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சந்தன மரங்கள் நிறைந்த பகுதிகளில் சரகர்களுக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சேதத்திற்கு உள்ளாகும் வனப்பகுதிகள், கள்ளவேட்டை மற்றும் கடத்தல்கள் இடம் பெறும் இடங்களில் பணியாற்றும் சரகர்களுக்கும், வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. வனப் பாதுகாப்பு பணிக்கும் வனச்செல்வங்களில் கடத்தலைத் தடுக்கவும் இன்னமும் வாகனங்கள் தேவைப்படுகின்றன.

இது குறித்து தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குற்ற நடவடிக்கை தடுக்க அவற்றின் பேரில் நடவடிக்கை எடுக்க நீலகிரி, கோவை, பெரியார், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு கம்பியில்லா தொடர்புக் கருவிகள் வழங்கப் பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் நிதி உதவியுடன் (ரூபாய் 40 லட்சம்) வாகன கருவி மற்றும் படைக்கலன்கள் வசதி செய்து தரப்படும். நிதிப்பற்றாக்குறையே பெரிய தடையாக உள்ளது. முழுமையாக அனைத்து வசதிகளும் செய்து தர மேலும் ரூபாய் 200 லட்சம் தேவைப்படுகிறது.

**திரு. இரா. நடேசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மலைகள் நிறைய இருப்பதாலே அங்குள்ள மரங்களை எல்லாம் கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டு செல்வதாலும், அங்கு குலசேகரத்தில் இங்கே வீரப்பன் எப்படி சந்தனக் கடத்தலில் ஈடுபட்டானோ அதுபோல் அங்கே மின்னல் தங்கமணி என்ற ஒரு ஆள் இது போன்ற காரியங்கள் செய்துகொண்டிருக்கின்றான். அவனைப் பிடிப்பதற்கு முயன்றபோது இரண்டு தடவைகள் அந்த ரேஞ்சரின் கையை வெட்டித் துண்டாக்க முயன்றார்கள். அப்படி சூழ்நிலை இருக்க, நிதிநிலைமை எப்படி இருந்தாலும்கூட அது போன்ற முக்கியமான இடங்களுக்காவது உடனடியாக நவீன ரக துப்பாக்கிகள் வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. நடேசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. கம்பி இல்லா தொலைபேசி மூலம் மற்ற மாவட்டங்களிலே எல்லாம் சிறப்பாக செயல்படுவதாக சொல்லி இருக்கின்றார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலே அது போன்று தொலைபேசிகள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியபடி புரட்சித் தலைவியின் அரசு உரிய நேரத்தில் ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. பெரியசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் பர்கூர் என்ற மலைப்பகுதி இருக்கிறது. இங்கே தான் சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றன. கடந்த தடவை வீரப்பன் கம்பெனியால் 3 பேர்கள் கொல்லப்பட்டு மணியாச்சி பள்ளத்திலே போடப்பட்டு சென்று விட்டார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு வனத் துறை காவலர்கள் செல்வதே இல்லை. ஓராண்டுக் காலமாக செல்லாத காரணத்தினால் ஆயிரம் கோடி ரூபாய்க்கு பெருமானம் உள்ள சந்தன மரங்களை லாரி மூலமாக கடத்திவிட்டார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலேயே நான் இதை சொன்னேன். ஆரம்பத்திலேயே இதை செய்து முடியுங்கள் என்று காவலர்களை வைத்துக்கொண்டும் மற்றும் அருகாமையிலே உள்ள கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த போலீஸ் மற்றும் வன காவலர்களை



சேர்த்துக்கொண்டும், தேவைப்பட்டால் மத்திய காவலர்களை அழைத்தும் நீங்கள் இதை உடனடியாக தடுக்கவேண்டும் என்று கேட்டேன். ஓராண்டுக்காலம் செய்யாமல் கடைசி ஓராண்டுக் காலத்திற்குப் பின்னாலே, அவைகளை எல்லாம் வெட்டி சென்றதற்குப் பின்னால் கடைசியாக காவலர்களை முடுக்கி செய்திருந்தால் ஆயிரம் கோடி ரூபாய்க்கு பெருமானம் உள்ள விலை உயர்ந்த சந்தன மரங்களையும் பிஞ்சு மரங்களையும் கூட வெட்டி இருக்கின்றது தவிர்க்கப்பட்டிருக்கும். அவைகள் பாது காக்கப்பட்டிருக்க முடியும். ஆகவே இப்போது வன காவலர்கள் சரியான முறையிலே போகமுடியாத நிலையில் இருக்கின்றார்கள். இன்றைக்கு அரசு பொருளாதார நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. பெரியசாமி, இது கேள்வி.

**திரு. வே. பெரியசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கின்ற நம்முடைய அரசு மேலும் ஏராளமான பணங்களையும் வாகனங்களையும் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை விரைவுபடுத்தி, வன காவலர்கள் வேலியே பயிரை மேய்வது போன்று அவர்களே உடந்தையாக இருந்து செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு நீங்கள் எல்லாம் ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சி அமைந்தவுடன் அவர் அளித்த உத்தரவின் பேரில் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக இன்றைக்கு திருப்பத்தூர் சரகத்திலும் வேலூர் சரகத்திலும் 6 பேர்கள் இதுவரையில் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் 80 விழுக்காடு அளவுக்கு சந்தனக் கட்டைத் திருடுகள் குறைக்கப்பட்டுள்ளன. அதேபோல, இன்றைக்கு வீரப்பன் கும்பலின் நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்பட்டு,

அவர்களையும் உரிய முறையில் பிடிப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல அவர் அரசின் கவனத்திற்கு அது குறித்து தெரிவித்தால் உரிய கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. கே. சின்னசாமி.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கடத்தலைத் தடுக்கும்போது நிறைய வண்டிகளோடு மரங்களையும் சீஸ் பண்ணுகிறார்கள் வனத் துறை அதிகாரிகள். அந்த வண்டிகளை திரும்பவும் கோர்ட் மூலம் பெற்று விடுகிறார்கள். ஆனால் கர்நாடகா போன்ற மற்ற மாநிலங்களில் சீஸ் பண்ணிய வண்டிகள் எல்லாம் அரசுடைமையாக்கப்படுகிறது. அந்த வண்டிகளை வனத் துறை அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகப்படுத்துவதற்காக தருவதாக தகவல் அறிகிறேன். இந்த நடவடிக்கைகளை, வனத் துறை அதிகாரிகள் சீஸ் பண்ணுகிற வண்டிகளை அரசாங்கமே எடுத்துக்கொள்கிற உரிமை இருந்தால் இத்தகைய குற்றங்களைத் தடுக்க உகந்ததாக இருக்கும். இதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு உரிய வகையில் பரிசீலனை செய்து தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 132—திருமதி ரமணி நல்லதம்பி மற்றும் திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு வனம் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர்.





132—

ராதாபுரம் தொகுதியில் பலநோக்குத் தொழிற்சாலை.

* 55 திருமதி ரமணி நல்லதம்பி :
திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு வனம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலிருந்து கால்நடைகள் கேரளாவிற்கு அதிக அளவில் கொண்டு செல்வதைத் தடுத்து, ராதாபுரம் தொகுதியில் இறைச்சி பதனிடுதல், தோல் பதனிடுதல், தோல் பொருட்கள் செய்தல் போன்ற பல்நோக்கு தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இது போன்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையில் குறிப்பிட்டுள்ளது போல ஏராளமான கால்நடைகள் ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு வாரமும் கேரளாவிற்கு நடத்தி செல்லப்படுகின்றன. என்னுடைய தொகுதி இன்டஸ்ட்ரியலி பேக்வர்ட் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தத் தொழிற்சாலையையும் ராதாபுரம் தொகுதியில் ஆரம்பிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கு வாருங்கள், கால்நடைகள் கேரளாவிற்கு கொண்டு செல்வதைப் பற்றிக் கேளுங்கள்.

**திருமதி ரமணி நல்லதம்பி :** இவைகளைக் கருத்தில் கொண்டு அந்நியச் செலாவணி ஈட்டித் தரவல்ல, இந்த பல்நோக்கு தொழிற்சாலை ஒன்றை ராதாபுரம் தொகுதியிலே ஏற்படுத்தி,

தருவதுடன் இன்னும் கூட சாத்தியமானால் மீன் வளத்தைப் பயன்படுத்தி மீனிலும் ஒரு பல்நோக்கு திட்டம் ரெடிமேட் புட் இப்படி எல்லாம் செய்யக்கூடிய வகையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கால்நடைகளைக் கொண்டு செல்வதைத் தடுப்பது பற்றியது தான் மெயின் கேள்வி. இதில் தொழிற்சாலை ஆரம்பிப்பது ஊரகத் தொழில் துறை அமைச்சருடைய கவனத்திற்கு வரும். இந்த அமைச்சரிடம் வராது. இதை மட்டும் கேளுங்கள்.

**திருமதி ரமணி நல்லதம்பி :** அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை, கால்நடைகளையும், மீனையும் பயன்படுத்தி, ஒரு பல்நோக்கு தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய விவசாய குழு 'நேஷனல் அக்ரி கல்சுரல் கமிஷன்' நிர்ணயித்தபடி, மாநிலங்களுக்கிடையே கால்நடை செல்வதை சிபாரிசு செய்வதுடன், அவைகள் செல்வதைத் தடுக்கக் கூடாது என்று தெரிவிக்கிறது. மத்திய அரசின் ஆலோசனையும் எல்லா மாநிலங்களுக்கிடையே தரமான கால்நடை விற்பனைக்காக பொதுச் சந்தை வேண்டும் எனவும், மாநில உணர்ச்சிகள் இந்த விஷயத்தில் தலையிடக் கூடாது என்றும் தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில்தான், தேவையில்லாத கால்நடைகள் தான் மாநிலங்களை விட்டு மாநிலங்கள் செல்கின்றன. அதேபோல நமக்கு செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து தமிழ் நாட்டுக்கு வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.





**திரு. ஆர். முருகையா பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயிருந்து அன்றாடம், கேரளாவிற்கு உணவுக்காக பல ஆயிரம் கால்நடைகள் நாகர் கோவில், கன்னியாகுமரி வழியாகவும், செங்கோட்டை வழியாகவும் அதிகமாக சென்று கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, கிழட்டு மாடுகள் போனால் கூட பரவாயில்லை. ஆனால் பெரும்பாலும் கன்றுகளும், பசு மாடுகளும் அங்கே செல்வதை நான் பார்க்கிறேன். இந்த நிலைமையைப் பார்க்கும் போது உண்மையிலேயே பரிதாபமாக இருக்கிறது. எனவே, இது போன்று மாடுகள் கேரளாவிற்கு சென்றால் தமிழ்நாட்டில் கால்நடைகளே இல்லாத நிலை ஏற்படும். அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்திலேயிருந்து மிக அதிகமாக இவ்வாறு சென்று கொண்டிருக்கின்றன. எனவே, இதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து இதற்கு முன்பே நான் விடை அளித்திருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் ஒரு முறை இதற்கு விடை அளிக்கின்றேன். தேவையில்லாத அல்லது உற்பத்தி திறன் குறைந்த கால்நடைகள் கேரளாவிற்கு செல்வதை ஒட்டு மொத்தமாக தடை செய்தால் தமிழ்நாட்டிலுள்ள உற்பத்தி திறன் உள்ள கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர்கள் கிடைப்பது பாதிக்கப்படும். தேசிய விவசாய குழு மாநிலங் களுக்கிடையே கால்நடைகள் செல்வதை சிபாரிசு செய்ததன் அடிப்படையில் கால்நடைகள் இங்கிருந்து செல்வதை நாம் தடுக்க முடியாது. அதேபோல செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட் டுக்கு வருகின்றன. மேற்கூறிய வெள்ளாடுகளும் செம்மறி ஆடு களும் இறைச்சிக்கு பயன்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுகிய கால வினா எண் 3, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

[1991 அக்டோபர் 1

## கோத்தகிரியில் நீதிமன்றம்.

3—

*4606 திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கோத்தகிரியில் அமையவிருக்கும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க உள்ளது. கோத்தகிரியில் உரிமையில் நீதிமன்றம் அமைப்பது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தோடு கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

முற்பகல் 10-30

**திரு. எச். எம் ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் 100-வது நாள் வெற்றிகரமான ஆட்சிக்கு இந்திய தேசியக் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் எங்களுடைய சார்பாகவும் எங்களுடைய நல்வாழ்த்துக் களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கோத்தகிரியில் அமையவிருக்கும் குற்றவியல் நீதிமன்றம் பற்றியும், உரிமையியல் நீதிமன்றம் பற்றியும் தெரிவித் தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1984-லே எங்கள் மாவட்டத்திற்கு செஷன்ஸ் கோர்ட் கொடுத்து, குற்றவியல் நீதி மன்றம் நடந்துவந்த குன்னூருக்கு உரிமையியல் நீதிமன்றத் தையும் கொடுத்தார்கள். தெங்குமராஹாடா என்ற பகுதியில் உள்ள மக்கள் உதகமண்டலத்திற்கு வர, குன்னூருக்கு வர பெரியார் மாவட்டத்தை தாண்டி, கோவை மாவட்டத்தை தாண்டி



வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களுக்கு வசதி யாக இருக்கும்படியாக உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்கள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அந்த நீதிமன்றங்களைக் கோத்தகிரி பகுதி மக்களுக்கு இந்த நிதி ஆண்டில் ஏற்படுத்த தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல கோத்தகிரியில் இந்த ஆண்டு நம்முடைய போற்றுதற்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பார்ட்-2 ஸ்கீமில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைய ஆணை யிட்டிருக்கிறார்கள். அது விரைவில் தொடங்கும். அதில் 14 பேர், நீதிபதி உட்பட, செயல்படுவார்கள். அதனுடைய தொடர் செலவு ரூ. 4,29,000. தொடராச் செலவு ரூ. 75,000. அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம், கூடலூர், குன்னூர், கோத்தகிரி ஆகிய இந்த நான்கு பகுதிகள்தான் கேந்திரமான பகுதிகள். இதில் கூடலூரில் ஏற்கெனவே நீதி மன்றம் இருக்கிறது, உதகமண்டலத்தில் ஏற்கெனவே நீதிமன்றம் இருக்கிறது, குன்னூரில் ஏற்கெனவே நீதிமன்றம் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இப்போது குற்றவியல் நீதிமன்றம் கோத்தகிரியில் தொடங்கப்படுகிறது. அடுத்த ஆண்டு உரிமையியல் நீதிமன்றம் தொடங்கி, முழுமையாக மலைராணி என்று கருதப்படும் நீலகிரியில் எல்லா நீதிமன்றங்களும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அமையும் என்பதை உறுதியுடன் சொல்கிறேன்.

**திரு. எச். எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நல்ல நேரத்திலே கோத்த கிரி வட்டத்திற்கு அருகில் இருக்கும் நடுஹட்டி ஊராட்சி மக்களுடைய நலன் கருதி அவர்களையும் இந்த கோர்ட் ஜூரிஸ் டிக்ஷனில் எடுத்துக் கொள்வீர்களா என்று அறிய விரும்பு கிறேன்.

[1991 அக்டோபர் 1

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை கவனத்தில் வைத்துக்கொண்டு, அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, ஆவன செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம். கருப்புசாமி.

**டாக்டர் எம். கருப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 100-வது நாளைக் கொண்டாடும் இந்த வேளையில், அதனால் மலர்ந்திருக்கும் மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய 9150-வது ஆட்சி நாளையும் கொண்டாட வேண்டுமென்ற ஆவலுடன் இருக்கும் மக்களுக்குப் பால் வார்த்ததுபோன்று, கோத்தகிரியில் உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களை அமைப்பதற்கு நிதி ஒதுக்கியதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் நேரத்தில், இதே ஆண்டில் அவற்றைக் கொடுத்தால் மலைவாழ் மக்களையும், ஏழை எளியவர்களையும், பிற்பட்ட மக்களையும் தன்னுடைய தொகுதியில் கொண்டிருக்கும் கோத்தகிரி மக்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-35)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். இந்த ஆண்டே பார்ட்-2 ஸ்கீமில் நடைபெற்ற விவாதத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசு ஆணை ஒன்றிரண்டு நாட்களில் நிச்சயமாக அறிவிக்கப்படும். இந்த ஆண்டே குற்றவியல் ஜுடிசியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் வந்துவிடும். அடுத்த ஆண்டு டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் வருவதற்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



1991 அக்டோபர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

### திருவட்டாறு தொகுதி பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்தல்.

**வினா எண் 13—திரு. இரா. நடேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி பாசனக் கால்வாய்களில் தூர் வாராததால் தண்ணீர் வரத்து தடைப்பட்டு தண்ணீர் வீணாகிக் கொண்டு விவசாயத்திற்கு இடையூறு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) மற்றும் (ஆ): திருவட்டாறு தொகுதியில் உள்ள திற்பரப்பு இடது மற்றும் வலது கரை கால்வாய்களில் ஜுன், ஜுலை மாதங்களில் பெய்த கன மழையினால் மழைநீருடன் மணல் சேர்ந்து விழுந்து கால்வாயில் நீர்ப்போக்கிற்குத் தடங்கல் ஏற்பட்டுள்ளது. தடங்கலை அகற்றி கால்வாயில் மூடிக்கிடக்கும் மணலை எடுக்கும் பணி விரைவில் முடிக்கப்படும்.

### காற்றாலை மூலம் மின்உற்பத்தி

**வினா எண் 53—திருமதி ரமணி நல்லதம்பி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

2—

ராதாபுரம் தொகுதியில் உள்ள காவல்கிணறு விளக்கில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலைமூலம் மின்உற்பத்தி செய்யும் திட்டத்தின் விவரம் என்ன ?

விடை—

ராதாபுரம் தொகுதியில் உள்ள காவல்கிணறு விளக்கிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் முப்பந்தல் அமைந்துள்ளது. 1990-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிறுவப்பட்ட இக் காற்றாலைப் பண்ணையில் 20 பெரிய காற்றாலைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் 200 கிலோ வாட் சக்தி கொண்டவையாகும். இக் காற்றாலைப் பண்ணையின் மொத்த சக்தி 4 மெகா வாட் ஆகும். இது மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி வளர்ச்சித் துறையினரால் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட 10 மெகா வாட் காற்றாலைப் பண்ணைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

முப்பந்தலில் அமைக்கப்பட்ட காற்றாலைப் பண்ணையின் மொத்த செலவு ரூ. 8 கோடியாகும். முப்பந்தல் காற்றாலைகள் 31—3—1990 அன்று நிறுவப்பட்டு மின்சார உற்பத்தியை துவங்கின. 30—6—1991 வரை அதாவது சென்ற 15 மாதங்களில் இக் காற்றாலைப் பண்ணை தமிழ்நாடு மின்சார வாரிய மின் தொடருக்கு ஒரு கோடியே முப்பத்தொரு லட்சம் யூனிட் (13.12 மில்லியன் யூனிட்) மின்சாரம் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

3—

**மணிமுத்தாறு அணை—குளங்களுக்கான தனிக்கால் திட்டம்.**

**வினா எண் 63—திருமதி ரமணி நல்லதம்பி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மணிமுத்தாறு அணையின் 4-வது ரீச் 10-வது ரீச் குளங்களுக்கான தனிக்கால் திட்டம் அரசிடம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

4—

**குளங்கள் ஆழப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 64—திருமதி ரமணி நல்லதம்பி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் குளங்கள் அனைத்தையும் உலக வங்கி நிதியின் மூலமாக ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ராதாபுரம் தொகுதியில் உள்ள குளங்கள் அனைத்தும் உலக வங்கி நிதியின் மூலமாக ஆழப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

5—

**பொய்கையாறு அணைத் திட்டம்**

**வினா எண் 72—திருமதி ரமணி நல்லதம்பி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி பொய்கையாறு அணைத் திட்டத்தின் வடக்கன்குளம் பகுதி மக்கள் நீர்பெறும் உரிமையினை பெற அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பொய்கையாறு அணைத் திட்டத்தில் ராதாபுரம் தொகுதியைச் சார்ந்த ஆவரைக்குளம் மற்றும் பழவூர் கிராமங்களின் அருகில் உள்ள 5 மானாவாரி குளங்கள் சேர்க்கப்பட்டு, திட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. சாலை புதூர் குளம், தெற்கு சிவகங்கை குளம், மேல் பாலார் குளம், கீழ பாலார் குளம் மற்றும் பழவூர் பெரிய குளம் ஆகிய 5 மானாவாரி குளங்கள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

6—

## மானூரான் கால்வாயில் பாலம்

**வினா எண் 80—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, துத்திகுளம் கிராமத்திற்கும் சிவலிங்க குடியிருப்பு கிராமத்திற்கும் குறுக்கே மானூரான் கால் வாயில் பாலம் இல்லாமல் பொதுமக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் முத்து கிருஷ்ணாசாரி சத்திக்குளம் சாலையில் கி.மீ. 4/4-ல் மானூரான் கால்வாய் குறுக்கே கட்டப்பட வேண்டும். இச் சாலை நெடுஞ் சாலைத் துறையின்மூலம் பராமரிக்கப்படும் இதர மாவட்ட சாலை



யாகும். இந்த தார்ச் சாலையின் மொத்த நீளம் 5.00 கி.மீ. ஆகும். இச்சாலையில் கி.மீ. 4/0-ல் துத்திகுளம் கிராமமும் மற்றும் கி.மீ. 5/0-ல் சிவலிங்கபுரம் கிராமமும் உள்ளன. இச்சாலையில் 4/4-ல் மானூரான் கால்வாய் குறுக்கிடுகிறது. இதன் நீர்வழிப்பாதையின் அகலம் 40.00 மீட்டர் ஆகும். இவ்விடத்தில் ஓர் மூழ்கு பாலம் கட்ட ( Submergible Bridge ) சுமார் ரூ. 25.00 லட்சம் தேவைப் படுகிறது. இப்பணி அரசு ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பணிகளில் இடம் பெறவில்லை.

7—

## கட்டாரன்குளம் பாதையைப் பழுது பார்த்தல்

**வினா எண் 83—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கட்டாரன்குளம் கிராமத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் பாதை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாரன் குளம் கிராமம் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள அழகிய பாண்டியபுரம் செழிய நல்லூர் (இதர மாவட்ட) சாலை கி.மீ. 0/0—7/2-ல் கி.மீ. 5|8-10-ல் அமைந்துள்ளது. இங்கிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் சாலையானது திருநெல்வேலி-கட்ட பொம்மன் மாவட்டத்தில் கீழ்க்காணும் மூன்று சாலைகளாக உள்ளன. அவை—

| வ. எண் | சாலையின் பெயர் | சாலையின் மொத்த நீளம் (கி.மீ.) |
|---|---|---|
| 1. | அழகிய பாண்டியபுரம்—செழியநல்லூர் சாலை கி. மீ. 0/0-7/2 (இதர மாவட்ட சாலை) | 7.2 |
| 2. | செழியநல்லூர் மேட்டுப்பச்சேரி சாலை கி. மீ. 7/2-12/6 (இதர மாவட்ட சாலை) | 5.4 |
| 3. | இராஜா புதுக்குடி—மேட்டுப்பச்சேரி சாலை கி. மீ. 0/4-2/0 (இதர மாவட்ட சாலை) | 1.6 |

மேற்காணும் மூன்று அரசு இதர மாவட்ட தார்ச் சாலைகளும் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறின்றி பராமரிப்பு நிதியை பயன்படுத்தி உடனுக்குடன் பழுது பார்க்கப்பட்டு பராமரிக்கப் பட்டு வருகின்றது.

8—

## மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்

**வினா எண் 108—திரு. டி. எம். ரங்கராஜன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெரினா கடற்கரையை அழகுபடுத்துவதற்கு 1989 மற்றும் 1990 ஆம் வருடங்களில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) தற்போது மெரினா கடற்கரையை மேலும் அழகு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

(அ) மெரினா கடற்கரையை அழகுபடுத்துவதற்கு 1989-90 மற்றும் 1990-91 ஆம் ஆண்டுகளில் பராமரிப்பு தொகையிலிருந்து ரூ. 1,94,500-ம், ரூ. 41,000-ம் முறையே செலவிடப்பட்டுள்ளது.



(ஆ) மெரினா கடற்கரையை அழகுபடுத்துவது தொடர் பாகவும் அதிலுள்ள பராமரிப்பு இடர்பாடுகளை களைவது தொடர்பாகவும் அரசு தலைமைச் செயலாளரின் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குழுவின் கூட்டம் 10—12—1990-ல் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை மெரினா கடற்கரை மணற் பரப்பில் போதிய வெளிச்சம் கிடைக்க அண்ணா சமாதியிலிருந்து கலங்கரை விளக்கம் வரையுள்ள பகுதியில் புல்வெளியை ஒட்டி உட்புற சாலையில் அதிக ஒளி உமிழும் (ஹாலஜன்) விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப்பட்டது. இதற்கான மதிப்பீடு ரூ. 12.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு இச்செயற்குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளது.

மேலும், மெரினா புல்வெளியில் உள்ள கிணறுகளில் குளிப்ப தாலும், துணிகளை துவைப்பதாலும் அப்பகுதியிலுள்ள புற்கள் அனைத்தும் காய்ந்துவிடுகின்றன. இச்செயல்களை தடுக்கவும் அதேபோன்று உட்புற சாலையிலுள்ள மின்விளக்குகள் திருடு போவதைத் தடுக்கவும் அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

மேலும், காமராசர் சாலையில் அண்ணா சமாதியிலிருந்து கலங்கரை விளக்கம் வரையிலான பகுதியில் இருபுறமும் மரக் கன்று நடுதல் தொடர்பாக மாநகராட்சி நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

9—

## குடமுருட்டி ஆற்றில் தலைப்பு ஏற்படுத்தி வாய்க்கால் அமைத்தல்.

**வினா எண் 112—திரு. சோ. இராசாராமன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தாலுகா, வழுத்தூர் கிராமத்தின் அருகில் குடமுருட்டி ஆற்றில் புதிதாக தலைப்பு ஏற்படுத்தி வாய்க்கால் வைக்கக் கோரி வழுத்தூர் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம். வந்துள்ளது.

(ஆ) வழுத்தூர் சரபோஜிராஜபுரம் பாசன நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க புதிய தலைப்பு மதகு கட்டவும், வாய்க்கால் அமைக்கவும் ரூ. 1.40 இலட்சத்திற்கு மதிப்பீடு ஒன்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

10—

**சுவாமிமலை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடம் அமைத்தல்.**

வினா எண் 132—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுவாமிமலை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஓர் அறிவியல் ஆய்வுக்கூடம், அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) அவ்வாறாயின், அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

**சைதாப்பேட்டை வட்டத்தைப் பிரித்தல்.**

வினா எண் 234—திரு. ம. தனபால்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், சைதாப்பேட்டை வட்டம் ஐந்து சட்டமன்றத் தொகுதிகளை உடையதாக இருப்பதால், அதை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பிரிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

12—

**பணிபுரியும் பெண்களுக்கு அரசு விடுதிகள்.**

வினா எண் 295—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு மாவட்டங்கள் தோறும் அரசு விடுதிகள் கட்டப்படுமா?

விடை—

அத்தகைய செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

13—

**வெள்ளாற்று முகத்துவாரத்தை ஆழப்படுத்துதல்**

வினா எண் 345—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதியில் முடசல் ஓடை கிராமத்தின் அருகில் உள்ள மணல் மேட்டை அகற்றி முகத்துவாரத்தை ஆழப்படுத்தி வெள்ளாற்றை கடலுடன் இணைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.
(ஆ) கேள்விக்கு இடமில்லை.

14—

### வேலூர் அரசு மருத்துவமனை

**வினா எண் 352—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேலூரில் அரசு மருத்துவமனையில் நியூராலஜி, கார்டியாலஜி பிரிவுகள் ஆரம்பிக்கவும், படுக்கைகள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

வேலூர் அரசு மருத்துவமனையில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு (ஐ.சி.சி. யூனிட்) ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டு இது குறித்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நியூராலஜி பிரிவு துவக்குவதற்கு தற்பொழுது செயற்குறிப்பு ஏதும் இல்லை. படுக்கைகள் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பும் இல்லை.

15—

### மரியதாய்புரம்—வாடியூர் சாலைப் பராமரிப்பு

**வினா எண் 391—திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆலங்குளம் ஒன்றியம், மரியதாய்புரத்திலிருந்து வாடியூர் செல்லும் சாலையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மரியதாய்புரத்திலிருந்து வாடியூர் செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்ட சாலையான வாடியூர் பிரிவுச் சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம்



1.4 கி.மீ. (கி.மீ. 0/0—1/4). இச்சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகள் ஜல்லிகள் போட்டு சீர் செய்து தற்போது வாகன போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

16—

### செல்லியம்மன் கோவில் குளம் ஆக்கிரமிப்பு

**வினா எண் 508—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் அதிராம்பட்டினம் செல்லியம்மன் கோவில் குளத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தகுந்த நேரத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

17—

### ஆலங்குளம்—மருக்காலம் குளம் 5-சி பேருந்தை மீண்டும் இயக்குதல்.

**வினா எண் 567—திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆலங்குளம் தொகுதி, மருக்காலம் குளத்திற்கு ஆலங்குளத்திலிருந்து சென்று வந்த 5-சி பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கட்டாய எரிபொருள் கட்டுப்பாடு காரணமாக தடம் எண் 5-சி ஆலங்குளம்-மருக்காலம் குளம் என்ற நகரப் பேருந்து நிறுத்தப்பட்டு அதில் இயக்கப்பட்ட ஆலங்குளம்-மருக்காலம் குளம் 6 சுற்றுக்களுக்குப் பதிலாக, தடம் எண். [illegible]

பேருந்து (ஆலங்குளம்-ஊத்துமலை) மூலமாக 4 சுற்றுகள் ஆலங்குளத்திலிருந்து மருக்காலங்குளம் வரை இயக்கப்பட்டு வந்தது. மருக்காலங்குளம் செல்லும் சாலை (6.0 கி.மீ.) மிகவும் பழுதடைந்ததின் காரணமாக இப்பேருந்து அண்ணாமலைப் புதூர வரை இயக்கப்பட்டது.

தற்போது அண்ணாமலைப் புதூரிலிருந்து தங்கம்மாள்புரம் வரை உள்ள சாலை (4.0 கி.மீ.) சுமாராக சரிசெய்யப்பட்டிருப்பதால் இந்தப் பேருந்து (தடம் எண் 5-ஏ) தங்கம்மாள்புரம் வரை இயக்கப்பட்டு வருகிறது. ஆனால் தங்கம்மாள்புரத்திலிருந்து மருக்காலங்குளம் வரை சுமார் 2.0 கி.மீ. தூரத்திற்கு சாலையும், இரு தாம்போகிகளும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இச்சாலை பேருந்து செல்லத்தக்க அளவில் செப்பனிடப்பட்ட பிறகு மருக்காலங்குளம் வரையிலும் இப்பேருந்து மீண்டும் இயக்கப்படும். மருக்காலங்குளம் கிராமம் திருநெல்வேலி-சங்கரன்கோவில் பிரதான சாலையிலிருந்து பிரிந்து 0.6 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளது. இந்த பிரதான சாலையில் ஏராளமான வெளியூர் மற்றும் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

18—

மானூர்—பிள்ளையார்குளம் சாலை பழுதுபார்த்தல்

**வினா எண் 573—திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மானூர் ஒன்றியத்தில் மானூரிலிருந்து பிள்ளையார்குளம் செல்லும் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை பழுதுபார்க்கப்படுமா?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மானூர்-பிள்ளையார்குளம் சாலை என்பது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள கீழ்க்காணும் இரண்டு [illegible] மாவட்ட [illegible] ணின் தொகுப்பாகும்.



1. பிள்ளையார்குளம் சாலை கி.மீ. 0/0—2/4.

2. மேலப்பிள்ளையார்குளம்-கீழப்பிள்ளையார்குளம் சாலை கி.மீ. 0/0—3/6.

இந்த இரண்டு சாலைகளும் தார் சாலைகள் ஆகும். இந்த சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய தக்க நொடிகள் போடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மேலப்பிள்ளையார்குளம்-கீழப்பிள்ளையார்குளம் சாலையில் கி.மீ. 1/0—3/0 வரையுள்ள பகுதியை மேம்படுத்துவதற்கு 1991-92 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியின் கீழ் ரூ. 2.60 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கீடு 6/91-ல் செய்யப்பட்டுள்ளது. இப்பணி இந்த நிதியாண்டில் செய்து முடிக்கப்படும்.

19—

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டிடம்.**

**வினா எண். 609—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார்:

பட்டுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை உளூர் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

இல்லை.

20—

**[illegible] பேருந்துகளை நிறுத்த நடவடிக்கை.**

**வினா எண் 637—திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார்:

20

மேட்டூர், அந்தியூர், ஈரோடு செல்லும் அரசுப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள், பெரியார் மாவட்டம் அம்மா பேட்டை ஒன்றியம் உமாரெட்டியூர் பிரிவில் நிற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

மேற்கண்ட நிறுத்தத்தில், ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நின்று செல்கின்றன. தனியார் பேருந்துகளைப் பொறுத்தமட்டில் அரசால் நடவடிக்கை எடுக்க இயலாது.

21—

**கோபிசெட்டிபாளையம்-அத்தாணி காலனிக்கு புதிய பேருந்து.**

**வினா எண் 638—திரு. வே. பெரியசாமி** : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் அத்தாணி காலனி வரை ரோடு நன்றாகப் போடப்பட்டுள்ளதால் நிறுத்தப்பட்ட பி6 வி என்ற பேருந்தினை தொடர்ந்து விடவும், கோபிசெட்டிபாளையத்திலிருந்து அத்தாணி காலனி வரை புதிய பேருந்து விடவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து விடப்படும்?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) கோபியிலிருந்து பேருந்து வசதி செய்து தருவது தொடர்பாக வழித்தடம் ஆய்வு செய்யப்பட்டது. அத்தாணி வரை தார் சாலையாகவும், அத்தாணியில் இருந்து செம்புளிச்சாம்பாளையம் வரை 3.0 கி.மீ. தூரம் மண் பாதையாகவும், செம்புளிச்சாம்பாளையம் முதல் அத்தாணி காலனி வரை [illegible]





கி.மீ.க்கு பாதை செப்பனிடாமல் உள்ளது. இதில் செம்புளிச்சாம் பாளையத்தை அடுத்து 0.1 கி.மீட்டரில் இருந்து 0.4 கி.மீ வரை தொரப்பு வாய்க்கால் மேல் பாதை அமைந்துள்ளது. இப்பாதை மிகவும் குறுகலாக உள்ளது. மேலும் பிள்ளையார் கோவில் தோட்டத்தை கடந்து 0.1 கி.மீட்டரில் ஒரு பேருந்து மட்டுமே செல்லதக்க அளவில் சிறிய பாலம் ஒன்று உள்ளது. எனவே, தற்போது செம்புளிச்சாம்பாளையம் வரை நகரப் பேருந்து எண் பி.6வி இயக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட பழுதான பாதைகள் செப்பனிடப்பட்ட பிறகுதான் அத்தாணி காலனி வரை பேருந்து இயக்க இயலும்.

22—

**பூம்புகார் போக்குவரத்துக் கழகம்**

**வினா எண் 640—திரு. வே. பெரியசாமி** : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு 1989-90, 1990-91-ல் கிடைக்கப்பெற்ற இலாபம் எவ்வளவு?

(ஆ) இதில் வேலை செய்கின்றவர்களின் எண்ணிக்கை இனவாரியாக எவ்வளவு?

**விடை—**

(அ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 1989-90 நிதியாண்டில் ரூ. 305.12 இலட்சம் இலாபம் ஈட்டியது. 1990-91 நிதியாண்டில் ரூ. 500 இலட்சம் இலாபம் ஈட்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

(ஆ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் பற்றிய விவரம் கீழ் வருமாறு:—

| | அலுவலர்கள் | பணியாளர்கள் | தொழிலாளர்கள் |
|---|---|---|---|
| 1. சென்னை தலைமை அலுவலகம் | 13 | 33 | |
| 2. தூத்துக்குடி கிளை அலுவலகம் | 16 | 12 | |
| 3. கன்னியாகுமரி படகு போக்குவரத்து | 2 | 43 | |

23—

## நகரப் பேருந்து விடுதல்

**வினா எண் 725—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து பைங்கால் கிராமங்கலம் வழியாக கொத்தமங்கலம் வரை மேலும் ஒரு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் பேராவூரணி நகரத் தடம் எண் 7 மூலம் கோரியுள்ள வழித்தடத்தில் தினசரி 14 நடைகள் இயக்கப்படுகின்றன. கூடுதல் நகரப் பேருந்து ஒன்று இயக்கும் அளவிற்கு கொள்திறன் விகிதாசாரம் Occupancy Ratio இத்தடத்தில் இல்லை. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானது என்று கருதப்படுகிறது. எனவே கோரிக்கை வழித் தடத்தில் மேலும் ஒரு நகரப் பேருந்து இயக்குவது தேவையில்லை என்று கருதப்படுகிறது.

24—

**வினா எண் 726—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து காலகம்—ஓமவயல் பாலச்சேரிக்காடு வழியாக பட்டுக்கோட்டை செல்லும் நகரப் பேருந்தை 8 சிங்கிளாக விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம், கோரியுள்ள வழித்தடத்தில் பல்முனை வழித்தட நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 2 நடைகள் இயக்கப்படுகின்றன. கூடுதல் நடைகள் இயக்கினால் பிற ஊர்களுக்கு பேராவூரணியிலிருந்து இயக்கும் நடையைக் குறைக்க நேரிடும். மேலும் கூடுதல் நடைகள் இயக்கினால் அதற்கான பயன்பாடு இருக்காது என்றும் தற்போதுள்ள நடைகளே போதுமானது என்றும் கருதப்படுகிறது. எனவே கூடுதல் நடைகள் இயக்குவது தேவையில்லை.



25—

**வினா எண் 727—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து வலப்பிரமன்காடு, மணக்காடு வழியாக ரெட்டவயல் வரை செல்லும் நகரப் பேருந்தை 8 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம், கோரியுள்ள வழித்தடத்தில் இரண்டு நடைகள் தடம் எண் 6-ன் மூலம் இயக்கப்படுகின்றன. மேலும் 4 நடைகள் தடம் எண் 3-ன் மூலம் நெல்லியடிக்காடு வரை இயக்கப்படுகின்றன. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே கோரிக்கை வழித்தடத்தில் இயங்கும் நகரப் பேருந்தின் நடைகளை அதிகரித்து இயக்குவது தேவையில்லை.

26—

**வினா எண் 728—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து குருவிக்கரம்பை, வாத்தவங்காடு, நாடாகாடு வழியாகச் செல்லும் நகரப் பேருந்தை 8 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்சமயம் கோரியுள்ள வழித்தடத்தில் நகரப் பேருந்து 8-ன் மூலம்; நான்கு நடைகள் Four Singles இயக்கப்படுகின்றன. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே கூடுதல் நடைகள் தேவையில்லை.

[1991 அக்டோபர் 1

27—

**வினா எண் 729—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டையிலிருந்து பள்ளத்தூர்-பூவானம்-ஒட்டங்காடு வழியாக பேராவூரணி செல்லும் நகரப் பேருந்தை 8 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

கோரியுள்ள வழித்தடத்தில் தற்சமயம் தடம் எண் 4-ன் மூலம், தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே கோரிக்கை வழித்தடத்தில் இயங்கும் நகரப் பேருந்தின் நடைகளை அதிகரிப்பது தேவையில்லை.

28—

**வினா எண் 738—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து தென்னங்குடி, திருச்சிற்றம்பலம், வாட்டாத்திக்கோட்டை, இடையாத்தி வழியாக கரம்பக்குடிக்கு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

கோரிக்கை தடத்தின் தட நீளம் 30 கி.மீ. ஆகும். இத்தடத்தில் வாட்டாத்திக்கோட்டையில் இருந்து இடையாத்தி வரையிலான 2 கி.மீ. பகுதி குறுகலான மண் சாலையாக அமைந்துள்ளது. மேலும் பேருந்து விட தகுதியற்றதாக உள்ளது. எனவே இத்தடத்தில் பேருந்து விடுவது தற்போது இயலாது.



1991 அக்டோபர் 1]

29—

**சின்னசேலம், கள்ளக்குறிச்சி பேரூராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

**வினா எண் 747—திரு. ஆர். பி. பரமசிவம் :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம், கள்ளக்குறிச்சி பேரூராட்சிகளில் உள்ள குடிநீர் பஞ்சத்தைப் போக்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

சின்னசேலம், தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி பேரூராட்சிகள் மற்றும் 40 வழியோரம் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று ரூ. 621 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

30—

**மீனவர்களுக்கு வீடுகள்**

**வினா எண் 943—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், அதிராம் பட்டினம் வீடற்ற மீனவர்கட்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

இல்லை.

31—

**வினா எண் 944—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராசாமடம், கீழத்தோட்டம் வீடற்ற மீனவர்கட்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

இல்லை.

32—

வினா எண் 949—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கம்பைப் பட்டினம் வீடற்ற மீனவர்கட்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

இல்லை.

33—

வினா எண் 950—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் அம்மணிசத்திரம் வீடற்ற மீனவர்கட்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

இல்லை.





34—

வினா எண் 951—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கத்தேவன் வீடற்ற மீனவர்கட்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

இல்லை.

35—

வினா எண் 952—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செந்தலைப்பட்டினம் வீடற்ற மீனவர்கட்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

இல்லை.

36—

**கீழப்பாவூருக்கு தடம் எண் 123 பேருந்து வருதல்.**

வினா எண் 1147—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூருக்கு தடம் எண் 123 தென்காசியிலிருந்து திருநெல்வேலி செல்லும் பேருந்து மீண்டும் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா ?

விடை—

ஆலங்குளம் தொகுதி கீழப்பாவூருக்கு தடம் எண் 123 தென்காசியிலிருந்து திருநெல்வேலி வெளியூர் பேருந்து மீண்டும் வந்து செல்ல அரசு செயற்குறிப்பு எதும் இல்லை. கீழப்பாவூர் கிராமம் திருநெல்வேலி-தென்காசி சாலையில் உள்ள பாவூர் சத்திரம் கிராமத்திலிருந்து பிரிந்து சுரண்டை செல்லும் சாலையில் 2.8 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருநெல்வேலியிலிருந்து தென்காசிக்கு கீழப்பாவூர் வழியாக இயக்கப்பட்ட தடம் எண் 123 புறநகர் பேருந்து போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் 15 ஆண்டுகளுக்கு முன்பே மாற்றியமைக்கப்பட்டு விட்டது. இப்பேருந்து மாற்றியமைக்கப்பட்ட பின், கடந்த 15 ஆண்டுகளில் கீழப்பாவூருக்கு 9 நகரப் பேருந்துகளால் 94 சுற்றுக்களும் 7 வெளியூர் பேருந்துகளால் 30 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் கீழப்பாவூருக்கு தற்சமயம் 16 பேருந்துகள் மூலம் 124 சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. எனவே தடம் எண் 123-ல் இயங்கும் பேருந்தை கீழப்பாவூர் வழியாக மீண்டும் இயக்கத் தேவையில்லை.

37—

## ஐஸ் உற்பத்தி நிலையம்.

**வினா எண் 1178—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வனம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையிலுள்ள ஐஸ் உற்பத்தி நிலையத்தைப் பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

துறையில் லாபகரமின்றி இயங்கி வந்த பனிப்பொறி நிலையங்களில் பட்டுக்கோட்டை ஒன்றியம் (அதிராம்பட்டினம்) ஏரிப்புறக்கரையிலுள்ள பனிப்பொறி நிலையமும் ஒன்றாக விளங்கியமையால் அரசாணையின்படி 1985-ல் இந்நிலையம் மூடப்பட்டது.



இந்நிலைய இயந்திர பாகங்களும் ஒப்பந்தப்புள்ளி கோரி விற்கப்பட்டுவிட்டன. எனவே, இந்த ஐஸ் உற்பத்தி நிலையத்தை பழுது பார்க்க எந்த திட்டமும் அரசிடம் இல்லை.

38—

## விருத்தாசலம்-முகுந்தநல்லூர் பேருந்து.

**வினா எண் 1277—திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் விருத்தாசலத்திலிருந்து முகுந்தநல்லூர் என்ற கிராமம் வரை பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

விருத்தாசலத்திலிருந்து தொரவளூர் வழியாக முகுந்தநல்லூர் வரையிலான தட நீளம் 11.1 கி.மீ. ஆகும். இதில் தொரவளூர் சாலை முதல் முகுந்தநல்லூர் வரையிலான 3.3 கி.மீ. தூரப் பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இதில் அடங்கியுள்ள சாலை குறுகலானதுடன் பேருந்து இயக்குவதற்கு ஏற்றதாகவும் இல்லை. சாலை தொரவளூர் கிராமத்தில் வீதி வழியாகவே செல்கிறது. இவ்விடத்தில் சாலை 8 அடி அகலம் மட்டுமே உள்ளது. இதுபோலவே, முகுந்தநல்லூர் கிராமத்திற்கு அருகே 0.7 கி.மீ. தூரத்திற்கு ஏரிக் கரையின்மீது செல்லும் சாலையின் அகலமும் 8 அடி மட்டுமே. இதனால் இப்பகுதியில் பேருந்தை இயக்கினால் பாதசாரிகூட ஒதுங்க முடியாத இக்கட்டான நிலை உள்ளது. மேலே கூறப்பட்ட காரணங்களால் தற்பொழுதைய நிலையில், விருத்தாசலம்-முகுந்தநல்லூர் தடத்தில் பேருந்து இயக்கிட இயலவில்லை.

## விருத்தாசலம்—கீழப்பெரம்பலூர் பேருந்து.

**வினா எண் 1278—திரு. ச. புரட்சிமணி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் விருத்தாசலத்திலிருந்து கீழப்பெரம்பலூர் வரை பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**விடை—**

விருத்தாசலத்திலிருந்து கொடுக்கூர் வழியாக கீழப்பெரம்பலூர் வரையிலான தட நீளம் 12.4 கி.மீ. ஆகும். இதில் கொடுக்கூர் சாலையிலிருந்து கீழப்பெரம்பலூர் வரையிலான 3.7 கி.மீ. தூரப் பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இதில் அடங்கியுள்ள கொடுக்கூர் சாலையிலிருந்து 2 கி.மீ. தூரமுடைய பராமரிக்கப்படாத கப்பிச்சாலையும் அதனை அடுத்துள்ள 1.7 கி.மீ. தூரமுடைய சரளை மண் சாலையும் பேருந்து இயக்குதலுக்கு முற்றிலும் ஏற்ற நிலையில் இல்லை. அத்துடன் கொடுக்கூர் சாலையிலிருந்து கொடுக்கூர் கிராமத்தை நோக்கிய 1.5 கி. மீட்டரில் சாலையின் நடுவே மரம் ஒன்று உள்ளது. அவ்விடத்தில் சாலையின் அகலம் 8 அடி மட்டுமே. இதனால் எதிர் திசையிலிருந்து வருகிற பிற வாகனங்களுக்கோ அல்லது மாட்டு வண்டிகளுக்கோ இடமளித்து பேருந்தை செலுத்த இயலாத நிலை உள்ளது. மேலே கூறப்பட்ட காரணங்களால் விருத்தாசலத்திலிருந்து கீழப்பெரம்பலூருக்கு தற்பொழுதைய நிலையில் பேருந்து வசதி அளித்திட இயலாது.



40—

## விருத்தாசலம்—நரசிங்கமங்கலம் பேருந்து

**வினா எண் 1279.—திரு. ச. புரட்சிமணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியில் விருத்தாசலத்திலிருந்து நரசிங்கமங்கலம் என்ற கிராமம் வரை பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**விடை—**

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தடங்களில் பல்வழித்தட இயக்கத் திட்டத்தின்கீழ் இயக்கப்பட்டு வருகிறது.

1. விருத்தாசலம்—தாழநல்லூர் — 6 நடைகள்
2. விருத்தாசலம்—எரப்பாவூர் — 6 நடைகள்

தாழநல்லூரிலிருந்து நரசிங்கமங்கலம் வரையிலான பகுதியின் தூரம் 3.7 கி.மீ. ஆகும். இப்பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். தாழநல்லூரிலிருந்து 0.9 கி.மீ. தூரமுடைய சரளை மண் சாலை பேருந்து இயக்குதலுக்கு ஏற்றதல்ல. அடுத்துள்ள 2.8 கி.மீ. தூரப்பகுதி முறையாக சாலை அமைக்கப்படாமல், 8 அடி அகலமுடைய வண்டிப்பாதையாக உள்ளது. அத்துடன், தாழநல்லூருக்கு அருகே உள்ள புகைவண்டி பாதை கேட்டில் ஆள் இல்லையாதலால், சுமார் 1 கி.மீ. தூரத்தில் உள்ள புகைவண்டி நிலையத்திற்கு சென்றுதான் திறவுகோல் வாங்கிவர வேண்டும். மேற்கூறப்பட்ட காரணத்தால் விருத்தாசலம்—தாழநல்லூர் வழித்தடத்தை நரசிங்கமங்கலம் வரை நீட்டித்து பேருந்து வசதி அளித்திட இயலாது.

எரப்பாவூரிலிருந்து நரசிங்கமங்கலம் வரையிலான பகுதியின் தூரம் 3.3 கி.மீ. ஆகும். இதுவும், இதுவரை வசதி பெறாத சரளை மண் சாலையை உடைய பகுதியாகும். இப்பகுதி

அடங்கும் சாலையின் அகலமும் 8 அடியே. எனவே, எரப்பாவூர் வழியாகவும் நரசிங்கமங்கலத்திற்கு பேருந்து வசதி அளித்திட இயலாது.

41—

## திட்டக்குடி—ஓரங்கூர் பேருந்து.

வினா எண் 1281.—திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் திட்டக்குடியிலிருந்து எழுத்தூர், தச்சூர் வழியாக ஓரங்கூர் என்ற ஊருக்கு பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

திட்டக்குடியிலிருந்து இராமநத்தம், எழுத்தர், தச்சூர், புலிகரம்பலூர், கண்டமத்தான் வழியாக ஓரங்கூர் வரையிலான தடநீளம் 29.4 கி.மீ. ஆகும். இதில் எழுத்தூர் சாலைக்கும் கண்டமத்தான் கிராமத்திற்கும் இடைப்பட்ட 9.3 கி.மீ. தூரப்பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இப்பகுதியில் தச்சூர் சாலையிலிருந்து புலிகரம்பலூர் வரையிலான 7.7 கி.மீ. தூரப்பகுதியிலடங்கும் சாலை மட்டுமே பேருந்து இயக்குதலுக்கு ஏற்ற நிலையில் உள்ளது. புலிகரம்பலூருக்கும் கண்டமத்தானுக்கும் இடைப்பட்ட பகுதியின் சாலையில் குறுக்கிடும் வடிகாலில் மதகு இல்லை. இப்பகுதியில் மிகத் தாழ்வான நிலையில் மின் கம்பிகள் செல்கின்றன. இக்காரணங்களால் புளிக்கரம்பலூர்-கண்டமத்தான் பகுதி (1.6 கி.மீ.) பேருந்து இயக்குதலுக்கு ஏற்றதாக இல்லை. இருப்பினும், இதுவரை பேருந்து வசதி பெற்றிராத பகுதியாகவும், பேருந்து இயக்குதலுக்கு ஏற்ற நிலையிலும் உள்ள எழுத்தூர் சாலை முதல் புலிகரம்பலூர் வரையிலான பகுதியின் சாலைத்தன்மை பேருந்து இயக்குதலுக்கு தகுதியுடையதென சான்றளிக்கப்பட்ட பிறகு பேருந்து வசதி அளித்திட இ



42—

## சேரன் போக்குவரத்துக் கழக நகரப்பேருந்து

வினா எண் 1306.—டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அன்னூர் வட்டாரத்தில் டீசல் தட்டுப்பாட்டினால் நிறுத்தப்பட்ட சேரன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தான் ஏ. ஆர். 1 என்ற பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) அன்னூர் நகர வழித்தட எண் ஏ. ஆர். 1 அன்னூர்—புளியம்பட்டி (வழி) லக்கேபாளையம், ஆம்போதி, கணவிக்கரை வழித்தடத்தில் ஒரு பேருந்து தினசரி 4 நடைகள் இயங்கி வந்தன. டீசல் தட்டுப்பாடு காரணமாக மேற்கண்ட நகரப் பேருந்து நிறுத்தப்பட்டது. பொதுமக்கள் வேண்டுகோளுக்கிணங்க, இந்த இடத்தில் அக்டோபர் மாதம் முதல் வாரம் முதல் ஒரு பேருந்தின் சில நடைகள் இவ்வழித்தடத்தில் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

43—

வினா எண் 1307.—(திருமதி) மு. சீனியம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவிநாசியிலிருந்து அன்னூர் வட்டம் காட்டம்பட்டி கிராமத்திற்கு விடப்பட்டு வந்த சேரன் போக்குவரத்து நகரப் பேருந்து எண் 8 நிறுத்தப்பட்டுள்ளதால், அப்பகுதி மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப் பேருந்தை மீண்டும் விட அரசு முன் வருமா?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) அவிநாசி நகர வழித்தட எண் ஏ-8 அவிநாசி—காட்டம்பட்டி என இயங்கி வந்தது. அவிநாசி—அன்னூர் வழித்தடத்தில் 37 பேருந்துகள் 164 நடைகள் இயங்கி வருகின்றன. அன்னூர் முதல் காட்டம்பட்டி பிரிவு வரை 31 பேருந்துகள் 252 நடைகள் இயங்கி வருகின்றன. காட்டம்பட்டி பிரிவு முதல் காட்டம்பட்டி வரையில் 2 பேருந்துகள் 30 நடைகள் இயங்கி வருகின்றன. அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், டீசல் தட்டுப்பாடு காரணமாகவும் மேற்கண்ட பேருந்து நிறுத்தப்பட்டது.

பள்ளி செல்லும் மாணவ மாணவிகளுக்கு வசதியாக அந்த நேரங்களில் ஒரு பேருந்தின் சில நடைகள் அக்டோபர் முதல் வாரத்தில் இருந்து இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

44—

## ஆத்தூரிலிருந்து நகரப் பேருந்துகள் விடுதல்

**வினா எண் 1363.—திரு. வெ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆத்தூர்—பேளூர் (வழி) கோட்டை—அய்யங்காடு கல்பகனூர் ராமநாய்க்கன்பாளையம், ஆத்தூர்—தம்மம்பட்டி (வழி) கீரிப்பட்டி—மேல்தொம்பை, ஆத்தூர்—தலைவாசல் (வழி) முல்லைவாடி—சந்தகிரி விதைப்பண்ணை மூட்டல்—கல்லாநத்தம் அம்மன்பாளையம், வாழப்பாடி, வாழப்பாடி (வழி) புத்திர கவுண்டம்பாளையம்—ஆரியபாளையம் கலரம்பட்டி—கோபாலபுரம் திம்மநாயக்கன்பட்டி—சோமம்பட்டி—வாழப்பாடி ஆகிய வழித்தடங்களில் நகரப் பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

ஆத்தூர்—பேளூர் தடத்தில் அமைந்துள்ள கிராமங்கள் ஏற்கனவே பேருந்து வசதி பெற்றுள்ளன. ஆத்தூர் முதல் பேளூர் வரை கோட்டை, அய்யங்காடு, கல்பகனூர், ராமநாய்க்கன் பாளையம் வழியாக தட நீளம் 41.6 கி.மீ. வருகின்றது, எனவே விதிப்படி இத்தடத்தில் நேரடி நகரப் பேருந்து வசதி அளிக்க முடியாது. மேற்படி தடம் ஆத்தூர்—அய்யங்காடு வரை தடம் எண் 16-ம், அய்யங்காடு முதல் செல்லிபாளையம்வரை தடம் எண் 33-ம் மற்றும் செல்லிபாளையம் முதல் பேளூர் வரை தடம் எண் 19 என்ற நகரப் பேருந்துகள் மூலமும் ஏற்கனவே பேருந்து வசதி பெற்றுள்ளது.

ஆத்தூர் முதல் தம்மம்பட்டி தடத்தில் அமைந்துள்ள கிராமங்கள் ஏற்கனவே பேருந்து வசதி பெற்றுள்ளன. ஆத்தூர் முதல் தம்மம்பட்டிவரை கீரிப்பட்டி, மேல்தொம்பை வழியாக தட நீளம் 32.2 கி.மீ. வருகின்றது. மேலும், மேற்படி தடம் ஆத்தூர்—கீரிப்பட்டி (தம்மம்பட்டி செல்லும் வண்டிகள்) வரை தடம் எண் 28 மற்றும் 17 என்ற நகரப் பேருந்துகள் மூலமும், கீரிப்பட்டி முதல் மேல்தொம்பை வரை தடம் வி-4 என்ற நகரப் பேருந்து மூலமும், கீரிப்பட்டி முதல் தம்மம்பட்டி வரை தடம் எண். 11, 3, 17 மற்றும் 28 ஆகிய பேருந்துகள் மூலமும் பேருந்து வசதி பெற்றுள்ளது. இத்தடத்தில் மேல்தொம்பை முதல் மேல் தொம்பை பிரிவு வரை பேருந்து வசதி இல்லை என்றாலும் அப் பகுதியில் கிராமங்கள் எதுவும் கிடையாது. மேலும் மோட்டார் வாகன விதிப்படி 32.2 கி.மீ. தட நீளத்திற்கு ஏற்கனவே பேருந்து பெற்றுள்ள தடத்தினை நீட்டித்து இயக்கவோ, புதிய வழித்தடம் அமைக்கவோ வகையில்லை.

ஆத்தூர்—தலைவாசல் தடத்தில் அமைந்துள்ள ஊர்கள் அனைத்தும் பேருந்து வசதி பெற்றவையாகும். ஆத்தூரிலிருந்து விதைப் பண்ணை வரை தடம் எண். வி-7 என்ற நகரப் பேருந்தும் ஆத்தூரிலிருந்து மூட்டல் வரை தடம் எண் 30/11 என்ற நகரப்

பேருந்தும், ஆத்தூரிலிருந்து தலைவாசல் வரை கல்லாநத்தம், அம்மாபாளையம் வழித்தடத்தில் தடம் எண் 10 என்ற நகரப் பேருந்தும் இயக்கப்படுகின்றன. கோரிக்கையில் கேட்கப்பட்ட படியே பேருந்து வழித்தடம் அமைக்கும்போது கி.மீ. அதிகமாவதால், பயணிகளுக்கு அசௌகரியமும், கூடுதல் கட்டணமும் செலுத்த வேண்டியிருப்பது மட்டுமன்றி பேருந்துக்கும் சரியான படி வசூல் இருக்காது. பயணிகளும் இத்தடப் பேருந்தில் பயணம் செய்வது குறைவானதாகவே இருக்கும் என்பதால் நகரப் பேருந்து விட சாத்தியமில்லை.

வாழப்பாடி-வாழப்பாடி தடத்தில் ஏற்கனவே பேருந்து வசதிகள் உள்ளன. வாழப்பாடி—வாழப்பாடி (வழி) புத்திர கவுண்டம்பாளையம், ஆரியபாளையம், கலரம்பட்டி, கோபாலபுரம், திம்மநாய்க்கன்பட்டி, சோமம்பட்டி தடத்தின் நீளம் 34.6 கி.மீ. உள்ளது. இத்தடத்தில் வாழப்பாடி முதல் புத்திர கவுண்டம்பாளையம் வரையிலான தடம் சேலம்-ஆத்தூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. இத்தடத்தில் தடம் எண். 1-ஏ, 1-பி, 15, 26 மற்றும் வி.சி. சீரிஸ் பேருந்துகள் மூலமும், புத்திர கவுண்டம்பாளையம் முதல் ஆரியபாளையம் வரை தடம் எண் 8 மூலமும், ஆரியபாளையம் முதல் கோபாலபுரம் வரை தடம் எண். 33 என்ற நகரப் பேருந்தும், கோபாலபுரம் முதல் வாழப்பாடி வரை தடம் எண் 13 மற்றும் வி-4 என்ற நகரப் பேருந்துகள் மூலமும் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மோட்டார் வாகன விதிப்படி 34.6 கி.மீ. தட்டத்தின் நீளத்திற்கு ஏற்கனவே பேருந்து வசதி பெற்றுள்ள வழித்தடங்களில், நகரப் பேருந்து விட சாத்தியமில்லை.

45—

### தமிழக அரசுப் பணியாளர்களுக்கு இலவசப் பேருந்து.

வினா எண். 1400—டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:



161606
V211,31'91
N91.12-3

தமிழக அரசு அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் தங்கள் இருப்பிடங்களிலிருந்து அலுவலகங்கள் சென்று வர பஸ் பாஸ் அளிக்கப்படுமா?

**விடை—**

அரசு அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய சலுகை அடிப்படையில் பஸ் பாஸ்கள் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு ஏற்க இயலாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

46—

### போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்கும் குடும்ப நலநிதி.

வினா எண் 1409—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் ரூபாய் அறுபது ஆயிரம் (ரூ. 60,000) குடும்ப நல நிதியாக வழங்குவது போல், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் அறுபதாயிரம் ரூபாய் (ரூ. 60,000) குடும்ப நல நிதியாக வழங்குவது போல் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் ரூ. 60,000 (ரூபாய் அறுபதாயிரம்) கருணைத் தொகையாக 1—8—1991 முதல் வழங்க அரசு முடிவெடுத்து, அதற்கான ஆணையை வெளியிட்டுள்ளது. அதன்படி பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 40,000 கருணைத் தொகையாக தொழிலாளர் [illegible] காப்பீட்டுத் திட்டத்தின் [illegible]

படும் குறைந்தபட்ச தொகையான ரூபாய் 20,000 உடன் கூடுதலாக சேர்த்து வழங்கப்படும். மேலும் பணிக்காலத்தில் 1—9—1989 முதல் 31—7—1991 வரை இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ. 20,000 ஏற்கனவே தொழிலாளர் வைப்புத்தொகை காப்பீட்டுத் திட்டத்தில் அளிக்கப்படும் தொகையுடன் கூடுதலாக வழங்கப்படும்.

47—

**சமூகநலக் காடுகள் உற்பத்திப் பொருள்கள் மூலம் வருவாய்.**

வினா எண் 1635—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்ட சமூகநலக் காடுகளின் உற்பத்திப் பொருள்களை 1989-90-ல் கோட்ட அலுவலகத்தால் ஏலம் விட்டதில் கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம் சமூகநலக் காடுகள் உற்பத்திப் பொருள்களை 1989—90-ல் ஏலம் விட்டதில் ரூ. 8,48,929 (ரூபாய் எட்டு லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்பது மட்டும்) வருவாய் கிடைத்துள்ளது.

48—

**கிராமிய நூற்பு நிலையங்கள்.**

வினா எண். 1667—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராமிய நூற்பு நிலையங்கள் எத்தனை?

(ஆ) ஒன்றியத்திற்கு ஒரு கிராமிய நூற்பு நிலையம் அமைக்கப்படுமா?



விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 17 கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்குகின்றன.

(ஆ) ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கிராமிய நூற்பு நிலையம் ஏற்படுத்தத் தேவையான மும்முனை இணைப்பு மின் வசதியுடன் கட்டிட வசதியும் நூற்பதற்கு குறைந்தபட்சம் 30 பெண்களும் தேவை. இச்சாத்தியக் கூறுகள் இருந்தால் கிராமிய நூற்புக் கூடங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

**பரமக்குடி—நயினார்கோவிலுக்குப் பேருந்து.**

வினா எண். 1710—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி நயினார்கோவிலுக்கு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

பரமக்குடியிலிருந்து நயினார்கோவில் வழியாக நகரப் பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 54 நடைகள் சென்று வருகின்றன. புறநகர் பேருந்துகள் பரமக்குடியிலிருந்து நயினார்கோவில் வழியாக இராமநாதபுரம், தொண்டி ஆகிய ஊர்களுக்கு 18 நடைகள் சென்று வருகின்றன. மேற்கூறிய பேருந்துகளே தற்போது போதுமானதாகக் கருதப்படுகிறது.

50—

**உரிமையியல் நடுவர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டோர் விவரம்.**

வினா எண். 1818—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அண்மையில் உரிமையியல் நடுவர் பதவிகளுக்கு எத்தனை பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்?

[1991 அக்டோபர் 1

(ஆ) எத்தனை பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்?

(இ) தேர்வு செய்யப்பட்டவர்களில் Reserve List-ல் எத்தனை பேர் உள்ளனர்?

**விடை—**

(அ) 100 பேர்.

(ஆ) 79 பேர்.

(இ) 21 பேர்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** உடுக்குறியிடாத வினாக்கள்-முடிவுற்றன.

[**குறிப்பு:**—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் பகுதியில் 30—9—1991 அன்று நடந்த துப்பாக்கிச் சூடுபற்றியும் அதில் 3 பேர் இறந்தும், பலர் காயம் அடைந்தும் உள்ளதால் அப்பகுதியில் நிலவும் பதட்ட நிலை குறித்தும்.**

(பிற்பகல் 10-35)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் இதர அலுவல்களை ஒத்திவைப்பது பற்றிய பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. ஆ. பாலையா, திரு. மா. சுந்தரதாஸ், திரு. ஆர். நடேசன், திரு. ப. ரங்கநாதன், வி. தண்டாயுதபாணி, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. என். எஸ். ராமசுப்பு, திரு. பி. பொன்னுசாமி, திரு. கே. செல்வராஜ், டாக்டர் தே. குமாரதாஸ் திரு. ஜி. பழனிசாமி, திரு. எஸ். ஆண்டித்தேவர், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர், கன்னியாகுமரி மாவட்டத்தில்





குளச்சல் பகுதியில் 30—9—1991 அன்று நடந்துள்ள துப்பாக்கிச் சூடு பற்றியும், அதில் 3 பேர் இறந்தும், பலர் காயமடைந்தும், உள்ளதால் அப் பகுதியில் நிலவும் பதட்டநிலை குறித்தும், அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரி அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு இது எவ்வாறு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், சம்பந்தப்பட்ட. தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால் திரு. ஆ. பாலையா அவர்களை.

* **திரு. ஆ. பாலையா :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த ஆட்சி தமிழகத்திலே அமைந்ததற்குப் பின்னாலே நம்மையெல்லாம் வேதனைக்கும் சங்கடத்திற்கும் ஆளாக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி செப்டம்பர் மாதம் 30-ம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்திலே குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குளச்சல் நகரத்திலே நடந்துள்ளது. காவல் துறையினரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு 3 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் 9 பேர் அபாயகரமான நிலையிலே துப்பாக்கிச் சூட்டின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் இருக்கின்றார்கள். இந்தக் கொடுமையான நிகழ்ச்சிகளுக்குக் காரணம் தான் என்ன என்பதை இந்த சபை அறியவேண்டும்.

நேசமணி போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும், அங்கே இருக்கின்ற பேருந்து பயணிகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள்தான் காரணம் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பஸ் பயணிகள் தாங்கள் இறங்க வேண்டிய இடத்திலே பேருந்தை நிறுத்தவேண்டுமென்று கோரினார்கள். ஆனால் பேருந்து ஊழியர்கள் அந்த இடத்திலே பேருந்தை நிறுத்துவதற்குத் தயாராக இல்லாத காரணத்தினாலே அங்கே வாக்குவாதங்கள், கைகலப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவம் செப்டம்பர் மாதம் 28-ந் தேதி நடைபெற்றது. இந்தச் சம்பவத்தை மிகப் பெரிய அளவிலே மக்களுடைய உயிரைப் பறிக்கக்கூடிய அளவிலே ஒரு பதட்டமான சூழ்நிலையை அந்த மாவட்டத்திலே ஏற்படுத்துகின்ற அளவிலே வளர்த்திருக்கவேண்டிய அவசியம் இல்லை, காவல் துறை

அதிகாரிகளும் போக்குவரத்துக் கழக நிறுவனமும் நினைத்திருந்தால் இப்படிப்பட்ட சூழ்நிலையை தவிர்த்திருக்கலாம். 28-ந் தேதி முதல் இன்றுவரை குளச்சல் நகரத்திற்கு பேருந்துகள் விடப்படவில்லை. இதனால் பள்ளிக்கும் கல்லூரிக்கும் செல்கின்ற மாணவர்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகச் சொன்னால் நல்லது. ஏன் துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.

முற்பகல் 10-40

**திரு. ஆ. பாலையா :** அலுவலகத்திற்குச் செல்லுகிற அரசு ஊழியர்கள், பொதுமக்கள் மிகவும் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சில சமூக விரோதச் சக்திகள் இதிலே தலையிட்டுக் கடைகளை உடைத்திருக்கிறார்கள். பலவந்தமாக கடைகளை அடைத்திருக்கிறார்கள். குளச்சலிலே இயங்கிக் கொண்டிருக்கிற செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி தாக்கப்பட்டு உடைக்கப்பட்டு, அங்கே இருக்கின்ற 'ரிக்கார்ட்ஸ்' அனைத்தும் எடுத்து கிழிக்கப்பட்டு, அழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் கன்னியாகுமரி மாவட்டத்திலே நேசமணி போக்குவரத்தினுடைய நிர்வாகம்தான் என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. பேருந்துகள் நிறுத்தும் இடங்களிலே போக்குவரத்துத் தொழிலாளர்கள் பேருந்துகளை நிறுத்த தயாராக இல்லாத காரணத்தாலே, அனுமதிக்கப்பட்ட இடங்களில்கூட நிறுத்தவில்லை அவர்கள்; அதனாலே வேதனைப்பட்ட மக்களின் உள்ளங்களிலே ஆவேசம் வருவது இயற்கை. இப்படிப்பட்டச் சம்பவங்கள், மோதல்கள், பயணிகளுக்கும், நேசமணி போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நிலைமை எதனாலே ஏற்படுகிறது? நேசமணி போக்குவரத்துக் கழக ஊழியர்களை அந்த நிர்வாகம் தங்களுடைய கட்டுப்பாட்டிலே வைத்துக்கொள்ள முடியாத நிலைமை இருந்து கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம் என்பதை நான் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். கட்டுப்பாடற்ற முறையில்



நேசமணி போக்குவரத்துக் கழக நிர்வாக ஊழியர்கள் செயல்பட்ட காரணத்தாலேதான் இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக, இன்று கடலோரப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்கள் தாங்கள் பிடிக்கிற மீன்களை வெளியே கொண்டு போய் விற்க முடியாத சூழ்நிலையில் பல நாட்களாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் வெளியே வர முடியாத, நடமாட முடியாத நிலைமையிலே காவல் துறையினுடைய அத்துமீறிய நடவடிக்கைகள் இருக்கின்றன. மக்கள் வெளியே வந்து பொருள்கள் வாங்குவதற்குக்கூட வசதி இல்லாத நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே கடைகள் திறக்கப்படவில்லை, பஸ்கள் ஓட்டப்படவில்லை. ஒரு பதட்டமான நிலைமை இன்றையதினம் அங்கே ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டிலே மரணம் அடைந்தவர்களின் குடும்பத்திற்கு இந்த அரசு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அதிலே படுகாயம் அடைந்து, உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிற நபர்களின் குடும்பத்திற்கு ரூ. 50,000 நிதியுதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்தைப்பற்றி விசாரிக்கவும் நீதி விசாரணையை நடத்தவும் அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இந்த பதட்டமான சூழ்நிலை தொடர்ந்து ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே அதைப்பற்றி விரிவாக விவாதிக்க வேண்டும் என்பதால் இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ' ' ...க்கீடு) ஒருவர்தான் அவர் பேசிவிட்டார்.

முற்பகல் 10-45

* **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று 14 மாண்புமிகு உறுப்பினர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள். 28—9—1991 அன்று பிற்பகல் சுமார் 1-15 மணிக்கு குளச்சல் பஸ் நிலையத்தில் நேசமணி போக்குவரத்துக் கழக கண்டக்டர் திரு. ஜார்ஜ் என்பவரை, பஸ் நிறுத்தும் இடத்திலே பஸ்ஸை நிறுத்தாத காரணத்திற்காக குளச்சல் மீனவ சமூதாயத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஜஸ்டஸ், பாபு மற்றும் சிலர் கைளால் அடித்துத் தாக்கினார்கள். பஸ்ஸின் நடத்துனரும், ஓட்டுநரும் திரு. ஜஸ்டசைப் பிடித்து குளச்சல் காவல் நிலையத்தில் ஒப்படைத்து புகார் கொடுத்தார்கள். அந்தப் புகாரின் பேரில் குற்ற எண் 277/91 இந்திய தண்டனை சட்டப் பிரிவு 147, 332-ன்படி அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. திரு. ஜஸ்டஸ், தன்னை பஸ்ஸின் ஓட்டுனர், நடத்துனர் மற்றும் ஒரு முஸ்லிம் டாக்ஸி ஓட்டுனர் திரு. ஜாகீர் மூவரும் சேர்த்து அடித்து காயப்படுத்திவிட்டார்கள் என்று கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 278/91, இந்திய தண்டனை சட்டப் பிரிவு 147, 323-ன்படி எதிர் வழக்கும் பதிவு செய்யப்பட்டது. இரு வழக்குகளிலும் காயமடைந்தவர்கள் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். இந்த இரு வழக்குகளும் தொடர் நிகழ்ச்சியாக 28—9—1991 அன்று இரவு 8.30 மணிக்கு குளச்சல் பங்குதந்தை மற்றும் சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல் சட்டவிரோதமாகக்கூடி குளச்சல் சுலைமான என்பவரின் டீ கடைக்குள் அத்துமீறி நுழைந்து சுமார் 10 ஆயிரம் ரூபாய் பெருமானமுள்ள பொருட்களை சேதப்படுத்தி உள்ளனர். இது சம்பந்தமாக குற்ற எண் 280/91 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 148, 446, 427-ன்படி வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

மீண்டும் இரவு 8.45 மணிக்கு மீனவருக்குச் சொந்தமான புனித மேரி உயர்நிலைப் பள்ளியை குளச்சல் ஜாகீர் மற்றும் சுமார் 500 பேர்கள் சேர்ந்து சட்டவிரோதமாகக்கூடித் தாக்கினார்கள். சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை சேதப்படுத்தி உள்ளனர். இது சம்பந்தமாக குற்ற எண் 281/91 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 148, 448, 427, 435



மற்றும் 379-ன்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. மேலும், இரவு 10-00 மணிக்கு குளச்சல் அருகில் உள்ள உடையார்விளையில் மணி மற்றும் 25 பேர்கள் சேர்ந்து அங்கு இருந்த மீனவர்களுக்குச் சொந்தமான மீன்வலை தொழிற்சாலைக்குள் அத்துமீறி புகுந்து தீ வைத்து சுமார் ரூபாய் 86 ஆயிரத்து 700 மதிப்புள்ள நைலான் வலைகளுக்குச் சேதம் உண்டாக்கி உள்ளனர். இது தொடர்பாக குற்ற எண் 282/91 இந்திய தண்டனை சட்டப் பிரிவு 147, 148, 448, 435-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவு செய்த வழக்குகளில் குற்ற எண் 281/91 வழக்கில் 19 பேர்கள் 29—9—1991 அன்று கைது செய்யப்பட்டு சிறைக் காப்பிற்கு அனுப்பப்பட்டார்கள். குளச்சலில் இந்தக் கலவரம் மேலும் தொடராமல் தடுக்க 2 துணைக் கண்காணிப்பாளர்களும், 3 ஆய்வாளர்களும், 5 உதவி ஆய்வாளர்களும் மற்றும் 200 காவலர்களும் பாதுகாப்புப் பணியில் வெவ்வேறு இடங்களில் அமர்த்தப்பட்டார்கள். காவல் துறை கண்காணிப்பாளரும் 29—9—1991 அன்று இரவு குளச்சலில் முகாமிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணித்தார்.

30—9—1991 ஆம் தேதி காலையில் மீனவர்களின் செயலைக் கண்டித்தும், முஸ்லீம் மற்றும் இதர சமுதாயத்தினர் சுமார் 75 கடைகளை குளச்சல் பகுதிகளில் மூடிவிட்டனர். இதை அறிந்த சுமார் 2 ஆயிரம் மீனவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் காலை சுமார் 11-00 மணிக்கு திரண்டு வந்து குளச்சல் கடற்கரை அருகில் உள்ள 2 முஸ்லீம் மசூதிகளை உடைத்துச் சேதப்படுத்தினார்கள். மேலும் அருகில் உள்ள சுமார் 10 முஸ்லீம் வீடுகளுக்கு தீ வைத்தும், வீட்டில் புகுந்து கொள்ளை அடிக்கவும் எத்தனித்தார்கள். இந்தச் சம்பவங்களின்போது அங்கே முகாமிலிருந்த மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. ரவிகுமாரும் கூட்டத்தினரை எச்சரித்தும் அதனைக் கேட்காமல் அவர்கள் குளச்சல் நகரை நோக்கி முன்னேறி வந்தார்கள். அதைத் தடுத்த காவல் துறையினர் மீது சரமாரியாக கற்களை எறிந்தும் தூண்டில்களை வீசி இழுத்தும், காவலர்களுக்கு காயம் ஏற்படுத்தினார்கள். இதனால் ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 14 காவல் துறையினர் காயம் அடைந்தார்கள். வன்முறையில் ஈடுபட்ட கும்பல் கட்டுக்கு அடங்காமல் தாக்குதலைத் தீவிரப்படுத்தவே, காவல் துறை [illegible]

கண்காணிப்பாளர் திரு. ரவிகுமார் கூட்டத்தினரைக் கலைந்து போகும்படியும், அவ்வாறு கலைந்து போகாவிட்டால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்தார். காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பலமுறை எச்சரித்தும் வன்முறைக் கும்பல் கலையாததால் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி உத்தரவின்படி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. ரவிக்குமார் மேற்படி கூட்டத்தினரை நோக்கி பாயிண்ட் 303 துப்பாக்கியால் சுட்டார். கூட்டத்தினர் மேலும் கலைந்து செல்லாமல் மீண்டும் கற்கள், செங்கற்கள் போன்றவற்றால் காவல் துறையினரைக் கடுமையாகத் தாக்கினார்கள். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே காவல் துறையினர் பல முறை கூட்டத்தினரைப் பார்த்து சுட்டனர். மொத்தம் 19 ரவை தோட்டாக்கள் சுட்ட பின்னரே மேற்படி கும்பல் தாக்குதலைக் குறைத்து பின்வாங்கத் தொடங்கியது.

முற்பகல் 10-50

துப்பாக்கிச் சூடு நடந்த இடத்திலேயே திரு. காலீப் என்பவர் இறந்துவிட்டார். இவருக்கு வயது 38. மேலும் குண்டு காயமடைந்த அலெக்சாண்டர் வயது 25, லோபஸ் வயது 60, டோரிப் வயது 38, அந்தோணி வயது 38, ஜேம்ஸ் வயது 45, ஆண்டோ வயது 25, மரிய ஜான் வயது 22, ஜஸ்டின் வயது 23, ஜஸ்டின் வயது 21, ஆண்டோ வயது 14 ஆகியோர்களை நாகர்கோவில் தலைமை மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக உடன் அனுப்பிவைத்தனர். குண்டு காயமடைந்து இறந்த இயேசு அடிமை என்பவரை வன்முறைக் கூட்டத்தினர் தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். சிகிச்சையிலிருந்த குளச்சல் இருதயதாஸ் மகன் ஜஸ்டின் வயது 23, 30—9—1991 அன்று பிற்பகல் 3.45 மணிக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டார். இயேசு அடிமை உட்பட இந்தச் சம்பவத்தில் மொத்தம் மூன்று மீனவர்கள் இறந்துள்ளார்கள். மேலும் ஒன்பது மீனவர்கள் காயமடைந்துள்ளார்கள். இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. ரவிக்குமார் அவர்கள் கொடுத்த புகாரின்மீது குளச்சல் காவல் நிலைய குற்ற எண் 284/91 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 148, 436, 448, 427, 332, 336, 307 மற்றும் 120 (பி)-படி வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறந்து போன இயேசு அடிமை தந்தை பெயர் விசுவாசம், டலீப்பின் தகப்பனார் பெயர் ஜேம்ஸ், ஜஸ்டின் தகப்பனார் பெயர்



இருதயதாஸ் ஆகியோரின் சடலங்கள் நாகர்கோவில் அரசு மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டு இன்று முற்பகலில் பிரேத பரிசோதனை நடக்கவுள்ளது. பிரேத பரிசோதனைக்கு பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மதச் சம்பிரதாயங்களின்படி நல்லடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருநெல்வேலி சரக காவல் துறை துணைத் தலைவர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர், கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்தில் தற்போது பாதுகாப்புப் பணிகளைக் கவனித்து வருகிறார்கள். தற்சமயம் அந்தப் பகுதியில் கலவரம் மூளும் முக்கிய இடங்களில் போலீஸ் பாதுகாப்பு மற்றும் போலீஸ் ரோந்து ஏற்பாடு செய்யப்பட்டு தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நிலைமை தற்சமயம் கட்டுக்கடங்கி உள்ளது. இது போன்ற வருந்தத்தக்க துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் ஒரு சிலர் சட்டத்தை தங்களின் கைகளில் எடுத்துக்கொண்டு செயல்படுவதாலேயே நிகழ்கின்றன. ஒரு பிரச்சினை என்று வந்தவுடன் அதைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு பல வழிகள் இருக்கும்பொழுதும் அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு தங்களின் பலத்தைக் கொண்டு எந்தப் பிரச்சினையிலும் வெற்றி கொள்ளலாம் என்ற எண்ணம், குறிப்பாக கூட்டமாகக் கூடும் மக்களின் மனதில் தோன்றுவதன் காரணமாக, அவர்கள் கூட்டத்தின் தலைமைக்கும் கட்டுப்படாமல், தன்னிச்சையாக சில வன்முறைகளில் ஈடுபட்டு இதுபோன்ற நிலைமையை ஏற்படுத்தி விடுகின்றனர். நாட்டிலே சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த காவல் துறையும், அரசும் உள்ளன என்பதை முற்றிலும் மறந்து செயல்படுகின்றனர். இதை இனி தவிர்க்க வேண்டுமென்று தமிழக மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையினரையும் இதுபோன்ற சம்பவங்களில் மிகவும் ஆபத்தான நிலையில், முற்றிலும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கடைசி முயற்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்பொழுது, கூட்டத்தினரை இடுப்பிற்குக் கீழ் அவர்களின் உயிருக்கு அபாயம் விளைவிக்காத வண்ணம்தான் சுட வேண்டுமென்றும் அறிவுறுத்தி உள்ளேன். இந்தத் துப்பாக்கிச் சூட்டால் இறந்த மூவரின் குடும்

பத்தினருக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் பத்தாயிரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, காயம் அடைந்த 9 நபர்களுக்குத் தலா ரூபாய் 2 ஆயிரம் வழங்கப் பட்டுள்ளது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். வருந்தத்தக்க இச்சம்பவம் தொடர்பாக, காவல் துறையினரும், வருவாய்த் துறை யினரும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத் துள்ளனர். மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலையா அவர்கள் தெரிவித்ததைப்போல, நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாகம் தவறு செய்ததுதான் இத்தகைய வன் முறைக்குக் காரணமாக இருக்குமேயானால், அதை உடனடியாகப் பரிசீலித்து, அந்த நிர்வாகத்தை மாற்றுவதற்கான தக்க ஏற்பாடு களை அரசு உடனடியாகச் செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இது குறித்து இப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10.55)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல மைச்சரின் விளக்கத்திற்குப் பின், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்கத் தேவையில்லை என்ப தால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னை மீறி இந்தமாதிரி நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு). உட்காருங்கள். தயவுசெய்து, இந்தப் பிரச்சினையில் பேசவேண்டாம். உட் காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அடுத்த பிரச்சினை . . . . .

**டாக்டர் தே. குமாரதாஸ்:** *

**(உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் வெளிநடப்புச் செய்தார்)**

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இன் றைக்கு 100-வது நாள் என்று எல்லோரும் வெற்றிகரமாகச் சொல்லிக்கொண்டிருக்கிற காரணத்தால், இதை அவர், அரசியல் ரீதியாக நேற்றைக்கு அடிபட்ட காரணத்தால், இன்றைக்கு பேசி விட்டுப் போகிறார் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட செயலை இனிமேல், இந்த மன்றத்திலே அனுமதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை. முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின், நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு இசைவை மறுத்ததற்குப் பிறகு, அவையில் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசுவதற்கு அனுமதி யில்லை. அவர் பேசிய பேச்சுக்கள் அவைக் குறிப்பில் இடம் பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. எஸ். ஆண்டித்தேவர்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி யினுடைய 100-வது நாள் நடந்துகொண்டிருக்கிறது. இது குறித்து முன்னாள் முதல்வர் அவர்கள், 100-வது நாளிலே இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்ற குறைபாடுகளை நான் எழுதப் போகிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு முன்னதாக, இந்த அவையிலே இந்த 100-வது நாளில், இந்த அரசு சாதனைகளை எல்லோரும் எடுத்துக் கூறி ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பின்னால், அவர் என்ன குறையைச் சொல்கிறார் என்பதை, இந்த அவை அறியவேண்டும், என்று நான் கேட்டுக்கொண்டு, இதைப்பற்றி விவாதிப்பதற்கு தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைப்பற்றி விவாதிப்ப தில்லை. இதுபற்றி உங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். அவ்வளவுதான்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்** : இது சம்பந்தமாக, 100-வது நாள் சாதனையைப்பற்றி எங்களைப் போன்றவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 வது நாள் சாதனை பற்றி விளக்கமாக விவரமாக இன்றையதினம் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் படிக்கலாம். இதைப்பற்றி சொல்லியிருக்கிற, முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இதைப் படித்து, நன்கு புரிந்துகொள்ளலாம்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட, 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 33/1990) குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :



### MESSAGE FROM THE GOVERNOR

The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1990, was passed by the State Legislative Assembly and was reserved by me under Article 200 of the Constitution of India read with clause (2) of Article 254 and Article 31-A of the Constitution for the consideration of the President. The President has, in pursuance of the proviso to Article 201 of the Constitution, directed that the Bill be returned to the State Legislative Assembly with a message requesting that the House will reconsider the provisions contained in sub-section



(5) of section 23-A proposed in the Bill, seeking to enhance the ceiling limit retrospectively from 15 standard acres to 30 standard acres

In accordance with the above direction, I, Bhisma Narain Singh, Governor of Tamil Nadu, hereby return the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1990, to the State Legislative Assembly for reconsidering the provisions contained in sub-section (5) of the said section 23-A seeking to enhance the ceiling limit retrospectively from 15 standard acres to 30 standard acres, and to make such amendments in the Bill as may be considered necessary."

## 5. கவன ஈர்ப்பு.

### (அ) திருவொற்றியூர் பகுதியில் உள்ள கே.சி.பி. தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்து.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. கே. குப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. குப்பன்.

**திரு. கே. குப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் பகுதியிலுள்ள கே. சி. பி. தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு விவர அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை.

சென்னையை அடுத்த திருவொற்றியூரிலுள்ள கே. சி. பி. நிறுவனத்தில் 509 தொழிலாளர்களும், 285 பணியாளர்களும் உள்ளனர். கே. சி. பி. எம்ப்ளாயீஸ் யூனியன் என்னும் தொழிற் சங்கம் இந்நிறுவனத்தில் செயல்படுகிறது.

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1991 அக்டோபர் 1

இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகள் குறித்து இரு தரப்பினரிடையே பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபோதே 1989-90 ஆம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சினையும் எழுந்தது. இந்த பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை அடுத்து தொழிலாளர்கள் நிர்வாகத்துடன் ஒத்துழையாமையை கடைபிடிப்பதாகக் கூறி, நிர்வாகம் 31 தொழிலாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. இத் தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் ( Suspension ) செய்யப்பட்டு அவர்கள் மீது நிர்வாகம் விசாரணைகள் நடத்தியது. தொழிலாளர் துறை அலுவலர்கள் இரு தரப்பினருடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டனர். ஆனால் எந்த ஒரு உடன்பாடும் ஏற்படாத நிலையில் தொழிலாளர்கள் 26—10—1990 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதை அடுத்து நிர்வாகம் 30—10—1990 முதல் கதவடைப்பு ( Lock out ) செய்தது.

இதன் பிறகு தொழிலாளர் இணை ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்ட போதிலும் வேலை நிறுத்தமும் கதவடைப்பும் தொடர்ந்தது. இணை ஆணையர், தாவா சம்பந்தப்பட்ட அனைத்துக் கோரிக்கைகள் குறித்து தொழில் தகராறு சட்டத்தின் கீழ் சமரச முறிவறிக்கை ஒன்றை அரசுக்கு சமர்ப்பித்தார். சமரச முறிவறிக்கையில் அடங்கிய கோரிக்கைகளில் 21 கோரிக்கைகளை அரசு சென்னை தொழில் தீர்ப்பாயத்தின் Idustrial Tribunal தீர்ப்புக்கு அனுப்பி ஆணை பிறப்பித்தது. பிற கோரிக்கைகளை நீதிமன்றத் தீர்ப்புக்கு விடத்தகுதியில்லை எனவும், அரசு ஆணை பிறப்பித்தது. இவை தவிர ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 29 தொழிலாளர்கள் தவிர ஏனைய தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், நிர்வாகம் கதவடைப்பை நீக்க வேண்டும் எனவும், 29 தொழிலாளர்கள் மீது எடுக்கப்பட்டு வரும் ஒழுங்கு நடவடிக்கையை விரைவில் எடுத்து முடிக்க வேண்டும் எனவும் பணிந்து தொழிற் தகராறு சட்டப்பிரிவு 10-பி-ன்கீழ் ஆணை ஒன்றையும் அரசு பிறப்பித்தது.

இத்தாவா குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடந்தபோது, சில தொழிலாளர்கள் ஒழுங்கு மீறி நடந்து கொண்டதாக 29 தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது



1991 அக்டோபர் 1] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. இத்தொழிலாளர்கள் மீது நிர்வாகம் விசாரணை நடத்தி வந்தமையால், இப்பிரச்சினை குறித்து அரசு ஆணை ஏதும் பிறப்பிக்கவில்லை. தவிர, நிர்வாகம் கதவடைப்பை நீக்க வேண்டும் என அரசு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 10பி-ல் இட்ட ஆணையில் மேற்குறிப்பிட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட 29 தொழிலாளர்களைத் தவிர பிற தொழிலாளர்கள் அனைவரையும் நிர்வாகம் வேலைக்கு அனுமதிக்க வேண்டும் என அரசு பணித்தது. அரசு பிறப்பித்த இந்த உத்தரவுப்படி நிர்வாகம் கதவடைப்பை 13—5—1991 முதல் நீக்கியது.

ஆயினும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் 29 தொழிலாளர்களையும் வேலைக்கு அனுமதிக்க வேண்டும் என வற்புறுத்தி தொழிற் சங்கம் வேலை நிறுத்தத்தை இன்றும் தொடர்ந்து வருகிறது.

இத்தாவா குறித்து இரு தரப்பினருடனும் தொழிலாளர் ஆணையர் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார். தற்போது சட்ட அமைதிப் பிரச்சினை எதுவும் இல்லை.

**திரு. கே. குப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற விவர அறிக்கையை நான் படித்துள்ளேன். எந்நாளும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தொழிலாளர்களுடைய நலத்திலே அக்கறையுள்ள இந்த அரசு, அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிகின்ற 520 தொழிலாளர்களுக்காக, கே.சி.பி. நிறுவனத்தோடு பேசி அனைவரும் வேலைக்குச் செல்ல மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து இரு தரப்பினருடனும் தொழிலாளர் நல ஆணையர் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார். அது வெற்றிகரமாக முடியுமென்று நான் நம்புகிறேன்.

[1991 அக்டோபர் 1

**திரு. கே. குப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வெற்றிகரமாக முடியுமென்று சொன்ன சொல்லை நான் ஏற்று இந்தப் பிரச்சினையை மிக விரைவிலே முடித்து, 11 மாத காலமாக வாடிக் கொண்டிருக்கிற 520 குடும்பங்களுக்கும் நல்லதொரு செய்தியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு 100-வது நாளைக் கொண்டாடுகின்ற இந்த நன்னாளில் நல்ல செய்தியை அறிவித்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

(ஆ) செங்கம் தொகுதியில் சில பகுதிகளில் நிலவிவரும் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ஜப்தி காரியந்தல் ஆற்றில் உள்ள கிணற்றை அகலப்படுத்துவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் பெ. வீரபாண்டியன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் பெ. வீரபாண்டியன்.

**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இந்த மின் விளக்குகளைவிட பளிச்சென்று அமர்ந்திருக்கும் நம்முடைய இதய தெய்வம், 100-வது நாள் காண்கிறது. 100 நாள் என்ன, நிச்சயமாக 100 ஆண்டுகள் வாழத்தான் போகிறீர்கள், ஆளத்தான் போகிறீர்கள். நம்முடைய இதய தெய்வத்தின் நல்லாட்சியில் மக்களின் . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் வீரபாண்டியன் அதிலே இருக்கிறதை அப்படியே படியுங்கள்.

**டாக்டர் பெ. வீரபாண்டியன் :** படிக்கிறேன் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை நிகழ்ச்சி நிரலில் இருக்கிறதைப் படியுங்கள்.



1991 அக்டோபர் 1]

**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** தாகத்தைத் தீர்க்கும் தெய்வீக சேவையை வேண்டி தெய்வத்தின் முன் நின்று, செங்கம் தொகுதியில் சில பகுதிகளில் நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ஜப்திகாரியந்தல் ஆற்றில் உள்ள கிணற்றை அகலப்படுத்துவது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை.**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜப்திகாரியந்தல் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் பயன்பெறும் ஊராட்சிகள் மேல்படூர், சி. கெங்கம்பட்டு ஜப்திகாரியந்தல் ஆகிவையாகும். இத்திட்டத்தினால் பயனடையும் மக்கள் தொகை 5,387 என்றும் திட்ட மதிப்பீடு ரூ. 18.50 லட்சம் ஆகும். இத்திட்டம் 1985-ல் செயல்படுத்தப்பட்டு 1986-ல் குடிநீர் வடிகால் வாரியத்தால் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான குடிநீர் ஆதாரம் செய்யாறு ஆற்றிலுள்ள 4.5 மீட்டர் ஆழமும் 3.5 மீட்டர் விட்டமுள்ள உரை கிணறாகும். இக்கிணற்றில் மின் மோட்டார் மூலம் நீரேற்றம் செய்யப்படுகிறது. 1989 ஆம் ஆண்டு முதல் பருவமழை பொய்த்ததன் காரணமாகவும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிட்ட காரணத்தாலும் உறை கிணற்றில் நீர் வரத்து இல்லாமல் போய்விட்டது. இதனால் குடிநீர்த் திட்டம் செயல்படாமல் உள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் சிறப்பு கிராமக்குடிநீர் திட்டத்தின்கீழ் மேற்படி உறை கிணற்றை, புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உறை கிணற்றை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இக்கிணறு உறை கிணறாகையால் அகலப்படுத்த வழியில்லை.

மேற்படி ஜப்திகாரியந்தல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அடங்கியுள்ள குடியிருப்புகளுக்கு நீர்வழங்க கீழ்க்கண்ட மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன :—

(அ) 1990-91-ம் ஆண்டு சிறப்பு கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ் மேல்படூர் கிராமத்தில் ஒரு ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டது. இவ்வாழ்த்துளை கிணற்றில் வறட்சி நிவாரணத்திட்டத்

கின்கீழ் ஒரு மின் மோட்டார் வாங்கி பொருத்தப்பட்டு அங்கேயே உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியில் இணைக்கப்பட்டு மேல்படுர், மேல்படுர் ஆதிதிராவிடர் காலனி, மேல்படுர் ஜோதியர் காலனி மற்றும் கீழ்படுர் ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1991ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில் பெரிய குளம் குடியிருப்பில் ஒரு ஆழ்த்துளை கிணறு அமைக்கப்பட்டு நல்ல குடிநீர் வளம் உள்ளதாக அமைந்துள்ளது. இவ்வாழ்த்துளை கிணறு பெரியகுளம் குடியிருப்பிற்கு போதுமானதாக உள்ளது.

(இ) ஜப்திகாரியந்தல் ஆற்றில் உள்ள உறை கிணற்றை ஒரு மீட்டர் ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஒரு மீட்டருக்குப் பின் பாறையாக உள்ளதால் ஆழப்படுத்தும் பணி நிறுத்தப்பட்டு விட்டது.

(ஈ) சி. கெங்கம்பட்டு மேநீர் தேக்கத் தொட்டி கிணறு ரூ. 8,300 மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

(உ) ஜப்திகாரியந்தல் கிராமத்தில் இரண்டு கிணறுகள் ரூ. 2,500 மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் ஆழப்படுத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஜப்தி காரியந்தல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் பயன் பெறும் அனைத்து குடியிருப்புகளுக்கும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் அமைந்துள்ள ஜப்தி காரியந்தல் ஆற்றில் உள்ள கிணறுகள் கூட்டு குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக்கிராமம் கிட்டத் தட்ட 5 பஞ்சாயத்துக்களைக் கொண்டு இதனால் பயனடைகிறது. ஜப்திகாரிந்தல், செங்கம்பட்டு, கீழ்படுர், மேல்படுர் மற்றும் பெரிய குளம் கிராமங்கள் 4.5 அடி ஆழத்திற்குத் தோண்டிய பிறகு அந்த கிணற்றில் பல நாட்களுக்கு முன் புதைந்திருந்த ஒரு மரம் இருக்கிறது. அந்த மரம் இருக்கும் காரணத்தினால் மேலே இருந்து உறைகளைச் செலுத்தும்போது 'ரிம்ஸ்' பொருத்தும் பொழுது ஸ்லேன்டிங் பொசிஷனில் இருக்கின்ற காரணத்தினால்



அங்கே அரிப்பு ஏற்பட்டு தூர்ந்துவிடும் நிலையில் இருக்கிறது. எனவே அந்த மரத்தை வெட்டி எடுப்பதை விட ஆழப் படுத்திவிட்டால், அந்த மரம் சுலபமாக வெளியே வந்து அங்கே குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்கும். எனவே அரசு அதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறு உறைகிணறு என்பதனாலே அதை அகலப்படுத்த முடியாது. அதை ஆழப்படுத்த வேண்டும் என்று பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படும் நிலையில் அதிலே மிகப் பெரிய பாறாங்கல் ஒன்று இருக்கிற காரணத்தாலே அதை ஆழப்படுத்தவும் இயலவில்லை. அப்படி ஆழப்படுத்த முடியாத நிலையிலும்கூட, அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு, நல்லமுறையிலே குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் பெ. வீரபாண்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை தொட்டிகள் கட்டியிருக்கும் அந்த நிலையில் அந்த மேல்நிலை தொட்டியின் மத்தியில் ஒரு பார்ட்டிஷனைப் போட்டு ஆல்டர்நேட்டிவ்வாக தண்ணீர் விட்டால் சுகாதார ரீதியாக மக்களுக்கு தண்ணீர் வழங்க இயலும். அதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரது கோரிக்கையை அந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல். 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1991 அக்டோபர் 1]

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக்காட்சிப்பெட்டித் திரையில் திரைப் படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக்காட்சிப்பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக் காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.



1991 அக்டோபர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்கள் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am seeking a clarification

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே கிளாரிபிகேஷன் வராது. இன்டிரொடக்ஷன் ஸ்டேஜிலே அப்ஜெக்ட் பண்ணலாம். கிளாரிபிகேஷன் வராது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சொல்லாமல் ஆப்ஜெக்ட் பண்ண முடியாது. அது தவறாகப் பொருளாகும். ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்டிலே என்ன சொல்லுகிறீர்கள் என்றால்

We want to take away laws a the same time அதற்குத்தான் கொண்டுவரப்படுவதாக சொல்லுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தை அறிமுகம் செய்யும்பொழுது பேரவையின் விதிப்படி அதை மறுத்துதான் சொல்ல வேண்டுமே தவிர கிளாரிபிகேஷன் கேட்பதற்கு விதியில் இடம் உண்டா என்று பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்ஜெக்ஷன் சொல்வதற்கு இடம் உண்டு. கிளாரிபிகேஷன் கேட்பதற்கு இன்டோரடக்ஷன் ஸ்டேஜிலே விதியிலே இடம் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : Snce it is a self contradictory I am objecting.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆய்வு செய்கிற போது அதைப்பற்றியெல்லாம் அரசு எடுத்துக்கொள்ளும். அதை அரசு இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

முற்பகல் 11-10

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.



முற்பகல் 11.10.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேர்வை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்)

சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு: இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

எற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ.).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவினை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

6. சட்டமுன்வடிவுகள் —(அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

**(2) மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்த சட்டமுடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்பரோரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**(இ) வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, இதனை பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

*** மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11.15

**7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1991-92.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 1991-92 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991-92 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப் பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 31.58 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 25.11 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 6.47 கோடி முதலின், கடன் கணக்குகளிலும் அடங்கும்.

1991-92 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு, சட்டமன்றப் பேரவையில் அண்மையில்தான் தாக்கல் செய்யப் பட்டுள்ளது; நிதியொதுக்கச் சட்ட முன் வடிவு அண்மையில் தாக்கல் செய்யப்பட்டு, இம் மாமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு விட்டபடியால், உடனடிச் செலவிற்கான சில இனங்களுக்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தொகை அனுமதிக்கப்பட





வேண்டியிருந்தது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று எதிர்பாராச் செலவு நிதியில் ஈடு செய்வதற்கே முக்கியமாக இத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டங்கள், திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாக கூற விழைகிறேன்.

மகளிர் காவலர் பிரிவிற்கு 400 பதவிகளை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்தது. இரண்டு புறக்காவல் நிலையங்கள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 9 புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இது குறித்து ரூபாய் 69.24 இலட்சம் செலவு ஏற்படும். இத்தொகை முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில், "மானியக் கோரிக்கை 15—காவல் துறை" என்பதன் கீழ் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

ஜப்பானிலிருந்து நவீன தீயணைப்புச் சாதனங்களை வாங்குவதற்கு மொத்தம் ரூபாய் 3.41 கோடிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை துணை மதிப்பீட்டில் "மானியக் கோரிக்கை 16—தீயணைப்புப் பணிகள்" என்ற தலைப்பின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு நிலை-1-ன் கீழ் ரூபாய் 1.67 கோடி செலவில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சம் முன் பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீட்டில் "மானியக் கோரிக்கை 17—கல்வி" என்ற என்ற தலைப்பின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

அகமதாபாத், குஜராத் வித்யா பீடத்தில் "தமிழ் இருக்கை" Time Chair ஏற்படுத்துவது தொடர்பாக, 1991-92-ல் ரூபாய் 5 இலட்சத்தை அறக்கட்டளை மானியமாக அரசு அனுமதித் துள்ளது. இத்தொகை துணை மதிப்பீட்டில், "மானியக் கோரிக்கை 17—கல்வி" என்ற தலைப்பின் கீழ்ச் சேர்க்கப் பட்டுள்ளது.

சேலம் மாவட்டக் கட்புலன் இழப்பைக் கட்டுப்படுத்தும் பணிச் சங்கத்திற்கு ரூபாய் 16 இலட்சத்தை மானியமாக வழங்க

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 அக்டோபர் 1

அரசு அனுமதி அளித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீட்டில் "மானியக் கோரிக்கை 18—மருத்துவம்" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் பயன் பெறும் பொருட்டு எந்திரம் பொருத்தப்பட்ட மீன் பிடி படகுகளுக்காக வாங்கப்படும் அதிவேக டீசல் எண்ணெய் குறித்த் மத்திய ஆயத்தீர்வையைத் திருப்பி கொடுப்பதற்கும் டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை ஏற்படுத்துவதற்கும், அரசு ரூபாய் 20 இலட்சம் அனுமதித்துள்ளது எதிர்பாராச் செலவு நிதியிலிருநது முன்பணமாக வழங்குவதன் மூலம் இது ஈடு செய்யப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் "மானியக் கோரிக்கை 21—மீனளம்" என்கின்ற தலைப்பின் கீழ் இத்தொகை சேர்க்கப் பட்டுள்ளது.

காந்திகிராமம் ஊரகக் கல்வி பயிற்சி நிறுவனத்தில் மகாத்மா காந்தியின் வாழ்க்கை குறித்து நிரந்தரக் கண்காட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு ரூபாய் 10 இலட்சம் அனுமதித்துள்ளது. துணை மதிப்பீட்டில் "மானியக் கோரிக்கை 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்" என்ற தலைப்பின் கீழ் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

கூடுதலாக 11,945 பேருக்கு முதியோர் ஓய்வூதியம் கொடுப்பதற்காக ரூபாய் 1.23 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 82.6 இலட்சம் முன் பணமாக வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் "மானியக் கோரிக்கை 30—சமூக நலம்" என்ற தலைப்பின் கீழ் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

1990-91-ல் ஏழைகளுக்கான விரிவுபடுத்தப்பட்ட நகர்ப்பகுதி அடிப்படைப் பணி வசதிகள் அளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அரசு ரூபாய் 1.47 கோடி அனுமதித்துள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இத்தொகை வழங்கப் பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் "மானியக் கோரிக்கை 34—நகர்ப் பகுதி வளர்ச்சி" என்ற தலைப்பின்கீழ் அதற்குரிய நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.



1991 அக்டோபர் 1]

கும்பகோணத்தில் 1992 பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் மகாமகம் திருவிழாவையொட்டி, சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் 40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 50—நகராட்சி நிருவாகம்" மற்றும் "மானியக்கோரிக்கை 62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பனவற்றின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

நலிந்த 6 கூட்டுறவு நூற்பாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் உட்பட, 12 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்துவதற்காக அரசு ரூபாய் 7 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக்கோரிக்கை 54.—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு" என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து, நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்களைக் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடு களை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி).

வணக்கம்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1991-92, வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்.

முற்பகல் 11.20.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991-92 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது

[பேரவைத் தலைவர்] 1991 அக்டோபர் 1]

வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவை களை பேரவையின் 190 ஆவது விதிக்கிணங்க 3—10—1991, வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1991-92 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை 4—10—1991 அன்று பேரவையில் விவாதத்திற்கும் வாக்கெடுப் பிற்கும் எடுத்துக் கொள்ளப்படும்.

8. மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை, 1991-92 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1990-91 (விவாதம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1991-92 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மற்றும் 1990-91 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ஆகியவற்றை இம் மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென முன்மொழிகின்றேன். நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக நூல் வடிவமாகவே மன்றத்தில் வைத்திருக்கின்றேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை சபைக் குறிப்பில் ஏற்றிட அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள் கிறேன். *வாரியத்தின் செயல்முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் மின்சார வாரியமும் கருத்தில் கொள்ளும். மின்சார வாரியத்தின் பணியினை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது கருத்தினை கூறி விடுமாறு நான் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர் களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்கின்றேன் என்பதையும் இம்மாமன்றத் திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

---

*558–570 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



[1991 அக்டோபர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏறத்தாழ 18 உறுப்பினர் கள் பேசுவதற்கு பெயர் கொடுத்து இருக்கிறார்கள். எனவே நேரத்தின் அருமை கருதி ஒவ்வொருவரும் சுருக்கமாகப் பேசி முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆம் நாள் ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக பாராட்டைச் சொல்லிக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக் களைச் சொல்ல முன்வந்துள்ளேன். ஏறத்தாழ 459 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கிற ஒரு முக்கியமான இலாகாதான் நம்முடைய மின்சார இலாகா. இந்த இலாகாவி னுடைய நஷ்டத்தை எப்படி சரிகட்டுவது என்பதைப்பற்றி ஆக்க பூர்வமான கருத்துக்களைச் சொல்ல நான் முன்வந்துள்ளேன். 18.45 சதவீதம் லைன் லாஸாக ஏற்பட்டுக்கொண்டிருக் கிறது. ஏறத்தாழ 30 கோடி ரூபாய், இலவச மின்சாரம் கொடுப்பதன் மூலமாக நஷ்டம் வருகிறது. அதேபோல் ஹட் சர்வீஸ்களுக்கு கொடுப்பதில் நஷ்டம் வருகிறது. இவ்வளவு நஷ்டம் வருகின்ற இந்த இலாகாவில் 24 சீஃப் என்ஜினியர்கள் இயங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அளவிற்கு இழப்பு இருக்கின்ற இந்த இலாகாவுக்கு இத்தனை சூப்பர்வைசிங் ஸ்டாப் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு சீஃப் என்ஜினியரும் ஒரு சேர்மனும் இருந்த இலாகாவிற்கு 24 சீஃப் என்ஜினியர்களும் மேலும் இப்போது 3 சீஃப் என்ஜினியர்கள் போடப்படுவதாகக்கூட சொல்கிறார்கள். இந்த அளவிற்கு நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கிற இலாகாவை மேம்படுத்துவதற்காக, பல ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். லைன் லாஸ் ஏன் ஏற்படுகிறது என்று சொன்னால் முன்பு காப்பர் வயர்களைப் போட்டு இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே யிருந்து அலுமினியம் வயர்கள் போடப்படுகின்றன. அதுதான் அந்த லைன்லாஸுக்கு முக்கியமான காரணம் என்று சொல்லப் படுகிறது. அதேபோன்று, எங்கே பார்த்தாலும், எங்கள் பகுதி யிலே பார்த்தாலும் சரி, வேறு எந்தப் பகுதிகளிலே பார்த்தாலும் சரி, மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே மெட்டீரியல்ஸ் இல்லை என்று சொல்கிற குறை இருக்கிறது. உண்மையிலேயே மெட்டீரியல்ஸ் இல்லையா என்று கேட்டால் மெட்டீரியல்ஸ் இருக்

[திரு. மா. சுந்தரதாஸ்] 1991 அக்டோபர் 1]

கிறது. ஆனால் ஏறத்தாழ மெட்டீரியல்ஸ் இல்லையென்று சொல்லிக்கொண்டுதான் எங்களுடைய பகுதிகளைப் பார்த்தாலும் சரி, எல்லாப் பகுதிகளிலும் இப்படித்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு வெரைட்டி மெட்டீரியல் ஒரு சூப்பரின் டென்டிங் என்ஜினியர் ஆபீஸிலே இருந்தால் அடுத்த ஜில்லாவில் அது இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களிடமிருந்து வாங்கிப் போட யாரும் தயாராக இல்லை. ஒரு ஸ்டோரிலே இருக்கின்ற மெட்டீரியல்லை அடுத்த சூப்பர்ரின்டென்டிங் என்ஜினியருடைய அலுவலகத்துக்கோ அல்லது ஸ்டோருக்கோ எடுத்துச் செல்வதற்கு யாரும் தயாராக இல்லை. அதற்கு பதிலாக ஒவ்வொரு சூப்பரின் டென்டிங் என்ஜினியரும் அவர்களுக்குத் தகுந்த அளவிற்கு வாங்கிக் கொள்கிறார்கள். எப்போது கேட்டாலும் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே . . . (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பல்வேறு நேரங்களிலே நான் தெரிவித்து இருக்கிறேன். உறுப்பினர்கள் உரையாற்றுகின்றபோது, மற்ற உறுப்பினர்கள் வெளியிலே சத்தம் வருகிற அளவுக்கு பேசுவது, ஒருவருக்கொருவர் எழுந்து நடந்து கொண்டிருப்பது ; இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று, எனவே, உறுப்பினர்கள் பேசுவதற்கு வசதியாக எவ்வளவுஅமைதி காக்க வேண்டுமோ அந்த அளவிற்கு அமைதி காக்க வேண்டும் என்று திரும்பவும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அளவிற்கு மெட்டீரியல்லை வாங்குவதிலே நம்முடைய சூப்பரின்டென்டிங் என்ஜினியர்கள் மிக முனைப்புடன் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஜில்லாவிலே ஒரு மெட்டீரியல் இல்லையென்று சொன்னால் அடுத்து இருக்கிற ஜில்லாவிலேயிருந்து வாங்கினால் நிச்சயமாக அந்த நஷ்டத்தை நாம் சரிக்கட்ட முடியும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.25

அதேபோன்று 'ஹட் சர்வீஸ்' அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்ல எண்ணத்திலே அரசு கொடுக்கின்ற 'ஹட் சர்வீஸ்' இல் ஒரு லைட் போட்டுக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள்



[1991 அக்டோபர் 1 [திரு. மா. சுந்தரதாஸ்]

அதை இண்டஸ்ட்ரீகளுக்குக் கூட உபயோகிக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற தோட்டத்திலே இருக்கிற கல்யாண மண்டபங்கள் மற்றும் இதுபோன்ற தன்னுடைய வீட்டிலே இருக்கிற பல வசதியான, ஆடம்பரமான தேவைகளுக்கு உபயோகப்படுத்துகிற காரணத்தினாலேதான், 'ஹட் சர்வீஸ்' மூலமாகவும் பல கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. மேலும், 30 கோடி ரூபாய் இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு கொடுப்பதிலே நஷ்டம் வருகிறது. நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 30 கோடி ரூபாய் எதற்காகச் செலவழிக்க வேண்டும் ? 5 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தால் பரவாயில்லை. 500 ஏக்கர், ஆயிரம் ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு—10, 15 மின்சார பம்பு செட்டுகள் வைத்திருப்பவர்களுக்கு இலவசமாகக் கொடுத்து, 30 கோடி ரூபாயை வீணடிக்கக் கூடாது என்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய அரசு செய்ததினால் வந்த இலாபம் என்ன ? இரண்டு சீட்டுதான். எனவே இதற்காக மக்கள் வாக்களிக்கத் தயாராக இல்லை. இலவச மின்சாரம் கொடுத்த உடனேயே மக்கள் அந்தப் பக்கத்திற்குப் போவதற்குத் தயாராக இல்லை. அந்த மக்களுக்கு தேவை, மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, 'இண்டஸ்ட்ரியலைசேஷன்'—அதாவது 'இண்டஸ்ட்ரீஸ்' கட்ட வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், பணம் செலவழித்து, 'இண்டஸ்ட்ரீஸ்' கட்டிவிட்டால், இரண்டாண்டு, மூன்றாண்டு காலங்கள் நாம் மின்சாரத்திற்குக் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. 5 இலட்சம், 10 இலட்சம் ரூபாயை, தன்னுடைய கையிலிருந்து செலவழித்துவிட்டு—'டிக்', வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து கடனை வாங்கிவிட்டு, 'இண்டஸ்ட்ரீஸ்' கட்டிவிட்டால், 2 வருடம், 3 வருடங்கள் என ஒருவன் காத்திருந்தால், நிச்சயமாக தொழில் முன்னேற முடியாது. ஆனால், இந்த இலாகா இன்று நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினால், நான் கேட்டுக்கொள்கிறேன். 30 கோடி ரூபாய் நிச்சயமாகத் தேவையில்லை ; ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய்தான் வரும் ; ஏழை விவசாயிகளுக்கு, ஒரு 5 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் இலவச மின்சாரம் கொடுத்துக் கொள்ளுங்கள் ; பணக்காரர்களுக்கு நிச்சயமாக இந்த இலவச

மின்சாரம் தேவையில்லை. அந்த 30 கோடி ரூபாயிலிருந்து, 28 கோடி ரூபாய் வேறு நல்ல காரியங்களுக்கு செலவழிக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'ஃபாரி கனெக்ஷன்—எலக்ட்ரிசிடி' என்று சொல்லும்போது, என்ன செய்கிறார்கள், 3 எச்.பி. என்று ஒரு மோட்டாருக்குக் கொடுத்தால், அவர்கள் 7 எச்.பி. க்கு அதை வைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் கண்டு கொள்வதேயில்லை இதனால் 'டிரான்ஸ்பார்மர்'. வெடித்து விடுகிறது. அதிலே 'கெபாசிடி' அதிகம் வருகிற காரணத்தினால், அந்த 'டிரான்ஸ்பார்மர்கள்' வெடித்து விடுகின்றன. மேலும், அதனால் இழப்பு நம்முடைய அரசுக்கு ஏற்படுகிறது. அந்த அதிகாரிகள், எஞ்சினியர்கள், 3 எச்.பி. தான் வைத்திருக்கிறார்களா; 7 எச்.பி. வைத்திருக்கிறார்களா என்பதை 'இன்ஸ்பெக்ட்' செய்து அதை விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, 'டிரான்ஸ்பார்மர்கள்' வெடித்து விட்டது என்று சொன்னால், அவற்றை அங்கேயே 'லோகலாக' செய்ய அவர்கள் தயாராக இல்லை. உடனடியாக, நாகர்கோவிலிருந்து, ஒரு லாரியைப் பிடித்து, மெட்ராசுக்கு கொண்டு வருகிறார்கள். வரும்போது லாரி வாடகை வேறு; இங்கே வரும்போது, அதை தனியாரிடத்திலே கொடுத்து சரி செய்கிறார்கள். தனியார் நிறுவனம் எப்படி செய்கிறது என்றால், ரிடையர்டு ஆன அதிகாரிகள் 'எலக்ட்ரிசிடி போர்டிலே'லே இருந்தவர்கள்தான், இங்கே அதை நடத்துவதாக பல்வேறு புகார்கள் என்னிடம் இருக்கின்றன. பல்வேறு அதிகாரிகள், ரிடையர்டு ஆனவர்கள் இங்கே வந்து, தொழிற்சாலையில்—தனியார் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். இதைத் தனியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் அதைக் கொடுக்கும்போது, அதிலே அதிக கமிஷன் இவர்களுக்குக் கிடைக்கிறது. நஷ்டம் யாருக்கு? நம்முடைய மின்சார இலாகாவுக்கு. இதுபோல, பல்வேறு வகைகளிலேயிருந்து நஷ்டங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மேட்டூரிலே இருக்கின்ற தெர்மல் 'பிளாண்ட்'; அது ஏறத்தாழ 50 ஆண்டுகாலம் ஆகிறது; அதை நவீனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், தெர்மல் எண்ணூரிலே இருக்கிறது. நம்முடைய தூத்துக்குடியிலே இருக்கிறது. மேட்டூரிலேயும் இருக்கிறது. ஒரு இடத்திலே பொருள் இல்லையென்று சொன்னால், அந்த இடத்திலிருந்து எண்ணூரிலிருந்து வாங்க மாட்டார்கள். திருப்பி ஒரு புதிய 'பர்சேஸ்' நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கேயோ ஸ்டோரிலே அலைந்து, பல கோடி ரூபாய் நஷ்டம் அடைந்து மிகவும் மோசமான சூழ்நிலையிலே அவை இருக்கின்றன. கேட்டால், எங்களுக்கு சாமான் வரவில்லை; புது சாமான்கள் இல்லையென்ற காரணத்தினால், அவை இயங்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்த பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோன்று 'தெப்ட் ஆப் எனர்ஜி'—இதனால், மிகவும் மோசமான நிலை இருக்கிறது. 'ஓபன்'—ஆகவே, கம்பெனியில் இருக்கிற பெரிய முதலாளிகள், மெயின் லைனிலிருந்து கொக்கிப் போட்டு, மின்சாரத்தை இழுத்துக் கொள்கிறார்கள். அதே போன்று, வீட்டிலே இருக்கிற இணைப்பிலேகூட, அதிகமான மின்சாரத்தை இணைப்பு செய்து கொள்வதை, அதிகாரிகள் கண்டு கொள்ளத் தயாராக இல்லை. ஏன்? ஒரு ரோட்டிலே—மெயின் ரோட்டிலே, 3 ஃபேஸ் லைனிலிருந்து கொக்கி போட்டு எடுத்தால், அவர்களை பிடிக்க முடியாதா என்று கேட்கிறேன். முனைப்புடன கவனித்தால், நிச்சயமாக பிடிக்க முடியும். அந்த கம்பெனி ஓனர்களுக்கும், அதிகாரிகளுக்கும தொடர்பு இருப்பதாக பலபேர் சொல்கிறார்கள். எனவே, அத்தகைய அதிகாரிகளை முனைப்புடன் கவனித்தால்தான், நிச்சயமாக இந்தத் திருட்டை ஒழிக்க முடியுமே தவிர, வேறெந்த வழியும் இல்லை.

அதேபோன்று, 'போல்' செய்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலேகூட, செய்து கொண்டிருக்கிறார்கள். அதை தனியார் பலபேர் தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 'போல்' செய்கின்ற நிறுவனங்கள் நம்மிடத்திலே இருக்கின்றன. தேவையான தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்காமல், தனியார்களிடம் அவற்றை வாங்குவதால், இலாபம் அரசுக்கு அல்ல. அதை தனியார்ருக்குக் கொடுக்கிற அதிகாரிகளுக்குத்தான் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இந்தக் குறைகளை நான் சொல்லியாக வேண்டும்; அரசை குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. நம்முடைய நாடு என்பதல்ல. இது நாளைய அரசுதான் இதற்கு பொறுப்பு

[திரு. மா. சுந்தரதாஸ்] 1991 அக்டோபர் 1]

பாரம்பரியமாக நடந்து கொண்டிருக்கிற சங்கதியைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேனே தவிர, நம்முடைய அரசை குறை சொல்கிற ஒரு பொறுப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.30

அதேபோன்று, 'எமர்ஜென்சி எக்ஸ்பென்டிச்சர்' என்று சொல்லி, ஜெ.ஈ., ஏ.ஈ. ஆகியோரிடம் பணம் கொடுத்து விடுகிறார்கள். 500-லிருந்து இரண்டாயிரம் ரூபாய் வரை கொடுத்து விடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையிலே, நிச்சயமாக அந்தப் பணத்தை அவர்கள் செலவழிப்பதே இல்லை. அந்த 'ஃபண்டை' உண்மையான முறையில் செலவழித்தால் நன்றாக இருக்கும். அவர்களுக்குள்ளே கணக்குப்போட்டு, எடுத்துக் கொள்வதாகத்தான் எங்களுக்குத் தகவல் வருகிறது. அதே போன்று Contract Labourersஎன்று வைத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 30,000 Contract Labourers தமிழகத்திலே மின்சார இலாகாவிலே இருக்கிறார்கள். அதிலேஒரு கேஸ் Justice Mr.Ghclot என்று சொல்லுகின்ற ரிடையர்டு நீதிபதி ஒரு ரிப்போர்ட்டு கொடுத்திருக்கிறார். அந்த ரிப்போர்ட்டைப் பார்த்தால், ஏறத்தாழ மூன்று சங்கங்கள் தான் உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்ய வந்தது. ஆனால் நம்முடைய ஐ.என்.டி.யு.சி.-யோ, நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கமோ அதில் அப்பீல் செய்ய வரவில்லை. இப்போது அந்த இலாகா என்ன சொல்கிறது என்று சொன்னால், மின்சார இலாகா அந்தக் கமிஷனுடைய பரிந்துரையின்படி, தேவையான அளவுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். A.I.T.U.C., C.I.T.U., I.T.U.C., I.N.T.U.C. சங்கங்கள் இருந்தபோதிலும், சேலத்திலே இருக்கின்ற ஒரு சங்கம்தான் அதிலே கலந்து இருக்கிறது. ஆகவே, எல்லா சங்கத்தை சார்ந்தவர்களுக்கும் உண்மையிலேயே ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு நீங்கள் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கமிஷனுடைய பரிந்துரையின் மேல் உண்மையிலேயே ஒப்பந்த



[1991 அக்டோபர் 1 [திரு. மா. சுந்தரதாஸ்]

அடிப்படையிலே வேலை செய்தவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தனியார்களுக்கு விடுவதாகக் குறிப்புகளிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியாருக்கு விடுவதில் தவறில்லை; ஆனால், தனிநபருக்குக் கொடுத்து விட்டால் ஆதிக்கம் வளர்ந்து விடும். to the private sector கொடுத்து, பலபேர் சேர்ந்து, பொதுமக்கள் சேர்ந்து, ஷேர் வாங்குகின்ற அளவிலே ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பெனிக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். தனிநபருக்குக் கொடுத்துவிட்டால் கொத்தடிமையாகத்தான் நடத்துவார்கள். அவர்களுடைய தனிப்பட்ட ஆதிக்கம்தான் அங்கு இருக்குமே தவிர, மக்களுக்கு, நல்லமுறையிலே செயல்படுகின்ற அளவில் அது இருக்காது. ஆகவே, அதை ஒரு பப்ளிக் செக்டாருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஹெட் ஆபீசிலே நம்முடைய என்ஜினியர்கள் அவர்களைப் பொறுத்த வரையிலே எமர்ஜென்சிக்காகச் செயல்பட வேண்டுமே தவிர, ஹெட் ஆபீசிலே உட்கார்ந்து கொண்டு எழுத்தராக வேலை செய்து கொண்டிருக்கக் கூடாது. அவர்கள், லைன் பால்ட் என்று சொன்னால், மக்களுக்கு மின்சாரம் கிடைக்கின்ற பணியிலே ஈடுபட வேண்டுமே தவிர, ஹெட் ஆபிசிலே உட்கார்ந்து கொண்டு பணிபுரியக் கூடிய நிலையில் இருக்கக் கூடாது. ஏறத்தாழ 10 சதவிகிதம் அதிகாரிகளை அந்த மாதிரி வகையில் குறைக்கலாம். அதிகாரிகளைக் கூட்டுவதினால் நம்முடைய தரம் உயர்ந்து விடாது. இங்கே லோகலிலே எடுத்துப் பார்த்தால் ஒரு லைனிலே ஏறுவதற்கு 40 வயதுக்குக் கீழே உள்ளவர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஒரு லைனிலே பால்ட் வந்தால் அதைச் சரி பார்ப்பதற்கு ஆளில்லை. ஆகவே, தயவு செய்து உடனடியாக இளைஞர்களை, லைன் பால்ட் பார்ப்பதற்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இப்போது நடப்பது என்னவென்று சொன்னால் அதிகாரிகளைக் கூட்டியிருக்கிறார்கள். அதிகாரிகளைக் கூட்டுவதால் நிச்சயமாக இந்த இலாகா செம்மையாகப் போவதில்லை. அதிகாரிகளைக் குறைத்து விட்டு கீழ் மட்டத்தில் இருக்கின்ற வேலை செய்கின்ற ஊழியர்களை அதிகப்படுத்த வேண்டும். காண்ட்ராக்ட் இல்லாமல், நேரிடையாக, நல்ல ஆக்க பூர்வமான நல்ல தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

[திரு. மா. சுந்தரதாஸ்] 1991 அக்டோபர் 1]

என்னுடைய மாவட்டத்திலே பார்த்தால், சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர் என்ன சொல்லுகிறார் என்றால், 40 வயதிற்கு மேல் உள்ளவர்கள் தான் இருக்கிறார்கள். குறைந்த வயது உடையவர்கள் போலில் ஏறத் தெரிந்தவர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, என்னுடைய மாவட்டத்திலே உடனே தேவையான அளவுக்கு மின்சார இலாகாவிலே இளைஞர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில், கேரளா பார்டர் அருகிலே இருக்கிறது. கேரளாவிலே மின்வாரியம் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அங்கே மின் அழுத்தம் இருக்காது. இரவு 9 மணிக்கு மேல்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலே பெரும்பாலான பகுதிகளிலே மின் அழுத்தத்தைப் பார்க்க முடியும். மக்களை மாலை 6 மணிக்குச் சந்திப்போம் என்று சொன்னால், போடா என்று சொல்லி அடித்து உதைத்து விடுவார்கள். அத்தகைய பகுதிகளுக்கு அதிகாரிகள் செல்வது இல்லை. பலமுறை நான் டி.டி.சி. யிலே கேட்டு இருக்கிறேன். கேட்டால் இரண்டரைக் கோடிக்குச் சாமான்கள் வழங்கக் கேட்டிருக்கிறோம் என்கிறார்கள் நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இரண்டரைக் கோடி இல்லையென்றாலும், ஒரு கோடி ரூபாய்க்கு பொருள்கள் கொடுங்கள். இல்லையென்று சொன்னால் வேலை செய்பவர்களுக்கு வேலை கொடுக்கமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். மேலும் இலவசமாக விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கின்றீர்கள். ஒரு தனியார் வீடு வைத்து மின்சாரம் கொடுப்பதற்கு அதற்கு 900 ரூபாய் மீட்டர் சார்ஜ் என்று சொல்கிறார்கள். ரூபாய் சரியாகத் தெரியவில்லை. 125 ரூபாயிலிருந்து 900 ஆக ஆக்கியதாகச் சொல்லுகிறார்கள். அந்த மீட்டர் சார்ஜ் குறைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இலவச மின்சாரம் ஏழை விவசாயிக்குக் கொடுக்க வேண்டுமே தவிர, பணக்கார விவசாயிக்குக் கொடுப்பதை ரத்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை மக்களுக்கு வீட்டு கனெக்ஷன் கொடுக்கும்போது அதனுடைய தொகையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய பகுதியிலே, அருகில் உள்ள



[1991 அக்டோபர் 1 [திரு. மா. சுந்தரதாஸ்]

கேரளாவிலே மின்வாரியம் நல்ல முறையில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், என்னுடைய தொகுதி விளவன்கோடைப் பொறுத்த வரையில் மின் அழுத்தமே இல்லாமல் இருக்கிறது. அதற்காக மீஞ்சரை என்ற பகுதியில் ஒரு சப்-ஸ்டேஷன் ஒன்று நிறுவுவதற்கு ஆர்டர் ஆகியிருப்பதாக சொல்லுகிறார்கள். அதை உடனடியாக கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல கன்னியாகுமரி மாவட்டத்தில் சொல்லுகிற பிரச்சினைகளைச் சரிக்கட்ட 1 கோடியோ அல்லது இரண்டு கோடியோ கொடுத்து பிரச்சினையைத் தீர்க்க உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11.35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செ. து. வரதராஜன்.

**திரு. செ. து. வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 100-வது நாள் நல்லாட்சி நடத்திவரும் தங்கத் தலைவி வாழ்நாள் முழுவதும் இன்றுபோல் என்றும் வாழ வேண்டுமென்று இந்தச் சபையின் வாயிலாகவும், என்னுடைய தொகுதியினுடைய மக்களின் வாயிலாகவும் வாழ்த்தி எங்கள் தங்கத்தலைவி, எங்களது இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய, இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அவர்களுடைய சிரத்தில் புகழ் பூக்களைப் போடும் போது அந்தப் பூக்கள் எங்கள் தலைவியினுடைய பாதமிதியாக இருக்கின்ற எங்களுடைய பேரில் விழுகிறபோது மட்டமற்ற மகிழ்ச்சி அடைகிறோம். தாங்களே பாராட்டுக்குரியவர் என்பதும், போற்றுவதற்கு உரியவர் என்பதும் வாழ்த்துக்குரியவர் என்பதும் பிறரை வாழவைப்பவர் என்பதும், வணக்கத்திற்குரியவர் என்பதும் தர்மதேவதை என்பதும் எங்களுக்கு 1984-ம் வருடம் முதலே, உங்களோடு நாங்கள் இருந்தபோதே இதைத் தெரிந்துகொண்டோம். உங்களை நம்பியவர்களைச் சிறப்பித்தீர்கள். உங்களை நம்பாதவர்கள்மீது நடவடிக்கை எடுத்தீர்கள். அவர்கள் பர்மா அகதிகளைப் போல, இலங்கைப் போராளிகளைப் போல அரசியல் அனாதைகளாக விலாசம் தெரியாமல் அலைந்துகொண்டிருக்கிறார்கள். தங்கள் நினைவில் இருக்கிற ஒரே பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது

[திரு. செ. து. வரதராஜன்] 1991 அக்டோபர் 1]

ஒன்றே போதும் என்று இந்த 100-வது நாளில் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த பாசபையில் மின்சார சம்பந்தமான மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்காக நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மின் ஒப்பந்தக்காரர்கள் சங்கம் என்று ஒரு சங்கம் தமிழ்நாட்டில் நீண்ட நாட்களாகச் செயலாற்றிக் கொண்டிருப்பது இந்த அரசுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். இ.பி. லைசன்ஸ் என்றும் பீ லைசன்ஸ் என்றும் சி லைசன்ஸ் என்றும் டிப்ளமோ ஹோல்டர்ஸ் லைசன்ஸ் பெற்றவர்கள் சுமார் 2 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக சுமார் 3½ இலட்சம் பேர் உயிருக்கு ஆபத்தான முறையில் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அந்த 3½ இலட்சம் பேருக்கு எந்த ஒரு விதமான உத்தரவாதத்தை எந்த அரசும் தரவில்லை என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த லைசன்ஸ் பெறுகிற வகையில் அவர்கள் அத்தனைபேரும் லைசன்ஸ் கட்டணமாக 16,30,250 ரூபாய் இந்த வாரியத்திற்குக் கட்டுகிறார்கள். அவர்கள் கட்டியுள்ள டெப்பாசிட் தொகைக்கு 1,19,50,000 ரூபாயை வட்டியாக இந்த வாரியம் பெறுகிறது. ஆனால் இதுநாள் வரை அரசு அந்தப் பணியாளர்களுக்கு எந்த ஒரு உதவியும் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே தாய் உள்ளம் கொண்ட எங்களுடைய தலைவியின் அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நான் கேட்கிறேன். மின்சார ஊழியர்கள் டிப்ளமோ படித்துவிட்டு அதாவது இ.பி. லைசன்ஸ் என்றும், பீ லைசன்ஸ் என்றும் பெற்று ஹை வோல்டேஜ் 11 கே.வி. லோ வோல்டேஜ் 440 என்று உள்ள மின்சாரத்தில் அதாவது மிகவும் ஆபத்தான தொழிலிலே பல்லாயிரக் கணக்கான பேர் வேலை செய்கிறார்கள். அவ்வாறு வேலை செய்கிறபோது ஆபத்துகள் ஏற்படுகின்றன. பல நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நஷ்ட ஈடும், சலுகைகளும் இதுவரையில் வழங்கப்படவில்லை. எனவே மற்ற தொழிலாளர்களுக்கும் வழங்குவது போல் ஆபத்தான தொழிலைச் செய்யும் இவர்களுக்கும் இவர்கள் தொழில் செய்யும் [illegible]



1991 அக்டோபர் 1] [திரு. செ. து. வரதராஜன்]

குடும்பத்திற்குப் பாதுகாப்புத் தொகையாக நிதி அளிக்க வேண்டுமாய் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

60 வயதுக்கு மேற்பட்ட மின்சார வாரிய ஊழியர்களுக்கு ஓய்வூதியம் தரவேண்டும் என்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு பள்ளிகளில் தொழில் கல்விகளில் இடம் ஒதுக்கித் தர வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மின்சார போர்ட் அதிகாரிகள் முதலாளிகளாகவும் டிப்ளமோ படித்து சி லைசன்ஸ் இ.பி. லைசன்ஸ், டி லைசன்ஸ் பெற்று உள்ளவர்கள் கூலிக்காரர்களாகவும் பாவிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்த வகையிலும் மரியாதை தரப்படவில்லை. இது குறித்து நமது அரசு கருணை உள்ளத்தோடு பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் மின்சார வாரியத்திலே உள்ள சில ஊழியர்களால்தான் அரசுக்குக் கெட்ட பெயர் வருகிறது என்பதை உறுதியாகக் கூறுகிறேன். காரணம் இவர்களுடைய அலுவலகத்திலே இருந்து எந்த பொறுப்பான பதிலும் வருவதில்லை. இவர்கள் எந்த வேலையும் செய்வதில்லை. எம்.எல்.ஏ. ஆக இருக்கிற நாங்கள் எல்லாம் கேட்டால் கூட சரியான பொறுப்பான பதில் கிடைப்பதில்லை. இவர்கள் என்னவோ முதலாளிகள் போலவும் கன்ஸ்யூமர்களாகிய பொதுமக்கள் தொழிலாளர்களைப் போலவும் கருதி இப்படித்தான் செய்வோம் என்று சொல்கிறார்கள். உங்களுக்கு மின்சாரம் தேவையில்லை என்றால் கேன்சல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி பொதுமக்கள் மத்தியில் எந்த அளவுக்கு பணத்தை வசூல் செய்யவேண்டுமோ அப்படி வசூல் செய்துகொண்டு அலுவலகத்தில் ஒருநாள் பில்லைக் கட்டவில்லை என்றால் கூட உடனே வந்து மின்சாரத்தை கட் செய்து விடுகிறார்கள். ஆனால் விளக்குகள் பல நாட்களாக எரியவில்லை என்றாலும் கூட அதுபற்றி எந்தவிதமான புகாரையும் அவர்கள் [illegible]

என்னுடைய தொகுதியிலே நிலாட்டூர் கிராமத்தில் டிரான்ஸ்பார்மர் பழுதடைந்துவிட்டது. 20 நாட்களாக அந்தப் பகுதியிலே விளக்குகள் எரியவில்லை விவசாய பம்ப் செட்டுகள் வேலை செய்யவில்லை தெரு விளக்குகள் எரியவில்லை. விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடிக்கொண்டிருக்கின்றன. உடனே இந்த வேலை செய்யவேண்டும் என்று கேட்டால் பம்ப் செட்டுக்கு என்ன பணமா கட்டுகிறீர்கள் என்று ஏழை மக்களைப் பார்த்து ஏளனமாக பேசி, இப்போது அதைச் செய்ய முடியாது, நீங்கள் யாரிடம் போய் எதை சொல்கிறீர்களோ சொல்லுங்கள் என்று தரக்குறைவாக பொதுமக்களிடம் பேசுகிறார்கள். (மணியடிக்கப் பெற்றது).

முற்பகல் 11.40

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஐந்து நிமிடம் ஆகியிருக்கிறது.

**திரு. செ. து. வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு மின்சார போர்டு ரிப்பேர் செய்ய வேண்டும் என்றால், அலுவலகங்கள் இருக்கின்ற, தொழிற்சாலைகள், பஜார் போன்ற முக்கியமான இடங்களில் முன் அறிவிப்பு தந்துவிட்டு கையெழுத்து வாங்கிவிட்டு மின்சாரத்தை நிறுத்துவார்கள். ஆனால் அதில் நேரம் ஆகும்போது பேக் பீடர் என்று ஒன்று வைத்துக்கொண்டிருப்பார்கள். அதன் மூலமாக அந்த பகுதிக்கு மின்சாரத்தைத் தருவார்கள். ஆனால் இப்போது பெரும் நகரங்களிலே இருள் இருந்தாலும் அந்த பகுதியிலே மின்சாரம் வருவதில்லை. மழை இடித் தாக்குதல் ஆரம்பித்து விட்டால் அவர்களே மின்சாரத்தை நிறுத்திவிடுவார்கள். இதனால் முக்கிய பகுதிகளில் மருத்துவமனை, வியாபார ஸ்தலங்கள், திருக்கோயில்கள் மற்றும் பொது இடங்களிலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனால் பல அசம்பாவிதங்கள், பல வன்முறைகள், பல கொள்ளைகள் அடிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மின்சாரம் மக்களுடைய அத்தியாவசியமான தேவைகளில் ஒன்றாகிவிட்டது. இதனை மிகவும் கவனமாக கவனிக்க வேண்டும்.





இப்போதும் சரி, முன்பும் சரி, அந்த மின்சார வாரியத்திலே தி.மு.க. யூனியன்தான் அதிகமாக இருக்கிறது. அந்த இலாகாவிலே இருப்பவர்கள் 100-க்கு 90 பேர் தி.மு.க. காரர்களாக இருப்பதால் தான், யார் எதைக் கேட்டாலும், நீங்கள் முதலமைச்சர் அவர்களிடம் போய் கேளுங்கள் என்று விமர்சனம் செய்கிறார்கள். அலுவலக நேரங்களில் எங்கள் எதிரிலேயே முரசொலி படித்துக் கொண்டு ஏளனம் செய்கிறார்கள். இவர்கள் இந்த அரசின் மேல் களங்கம் ஏற்படவேண்டும் என்று குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் டி.வி.யில் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கின்றபோது, குறிப்பாக நல்ல நல்ல நிகழ்ச்சிகள் நடக்கின்றபோதுதான் மின்சாரத் தடை செய்கின்றார்கள். ஏனென்று கேட்டால் சப்-ஸ்டேஷனிலே ரிப்பேர் செய்கிறோம் என்று கூறுகிறார்கள். இதனால் மக்கள் மத்தியிலே அரசின் மீது வெறுப்புகள் ஏற்படுகின்றன.

இதற்கு முன்பு கிராமங்களிலே மின்சார ஊழியர்கள் என்ன பணி செய்கிறார்கள் என்று குறிப்பு புத்தகம் வைத்து இருந்தார்கள். ஆனால் இந்த குறிப்புப் புத்தகம் வைக்கப்படுவதில்லை. இதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

பஞ்சாயத்து மின்சார விளக்குகளுக்கு டியூப் லைட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் மின்சாரம் அதிகமாக வருவதாலும், குறைவாக வருவதாலும், தரக்குறைவான பொருள்களை பயன்படுத்துவதாலும் அந்த பகுதியிலே டியூப் லைட்டுகள் எரிவதில்லை. பஞ்சாயத்து யூனியனிலே ஒரு ஆண்டுக்கு ஒரு முறை தான் மாற்றுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் கிராமத்திலே 100 க்கு 80 இடங்களிலே லைட்டுகள் எரிவதில்லை. ஒரு பத்து அல்லது 20 சதவிகிதம்தான் விளக்குகள் எரிகின்றன. ...தி விளக்குகள் எரியாத இடத்திலே மக்கள் குறைபடுகிறார்களே, அரசைக் குறை சொல்கின்றார்களே என்பதற்காக, குண்டு பல்புகளை வாங்கி போடுவோமானால், அந்த குண்டு பல்புகளை போட அவர்கள் மறுக்கிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால், இந்த டியூப் லைட்டுகள் 40 வாட்ஸ் என்றும் குண்டு பல்புகள் 60 வாட்ஸ் என்றும் சொல்கின்றார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் கேட்கிறேன். இந்த மின்சார வாரியம் ஒவ்வொரு கிராமத்திற்கு மீட்டர் பொருத்தி ... அந்த

அளவுக்கு அங்கு கன்சூம் ஆகிறதோ, கணக்கு ஆகிறதோ அது கணக்கில் வசூல செய்யவேண்டும். ஆனால் 200 போஸ்ட்டுகள் இருக்கின்றது என்றால், அந்த 200 போஸ்ட்டுகளுக்கும் ஆவரேஜ் கரண்ட் கணக்குப் போட்டு வசூல் பண்ணுகிறார்கள். ஒரு கிராமத்தில்கூட 200 போஸ்ட்களில் லைட்டுகள் எரிவதில்லை. சுமார் 50, 60 விளக்குகள் தான் எரிகின்றன. அப்படி எரியாது இருக்கின்ற காரணத்தினாலே அங்கே குண்டு பல்புகள் போட்டு அந்த ஏழைகளுக்கு, கண் தெரியாதவர்களுக்கு வசதியாக, அங்கே பூச்சி பொட்டுகள், புழுக்களைத் தடுப்பதற்கு ஒரு குண்டு பல்பு போடுகிறோம் என்றால் அது மக்களுக்கு நல்லது. என்னமோ மின்சார வாரியம் லாபம் சம்பாதிப்பதுபோலவும், பொதுமக்களுக்கு நன்மை செய்யவேண்டியவர்கள், அவர்கள் 40 வாட்ஸ் 60 வாட்ஸ் என்று இப்படி ஒப்பிட்டுச் சொல்கிறார்களே தவிர, அந்த கிராமங்களிலே ஒரு இடத்திலே கூட லைட்டுகள் எரிவதற்கு ஆவன செய்யப்படவில்லை. இதைப் பற்றி அங்கே இருக்கின்ற அதிகாரிகளிடம் கேட்டால், இன்ஜினியர்கள் இல்லை என்று சொல்கின்றார்கள். நாம் மீறி கேட்டால், இதற்கு என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றிக் கொடுங்கள். நீங்கள் 60 வாட்ஸ் பல்ப் போடுவதற்கு என்று நிறைவேற்றுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படி பார்க்கின்ற போது மக்களுடைய குறைகளைத் தீர்க்கவேண்டும். இது ஒரு அத்தியாவசியமான பொருளாகிவிட்டது என்பதனை கருத்திலே கொள்ள வேண்டுமே தவிர, இப்படி செய்கிறார்கள் என்றால் ஒரு மணி நேரம் அல்லது ஒரு 5 நிமிடம் இரவிலே கரண்ட் நின்று விட்டது என்றால், நம்மால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. அதற்கு முன்பு எல்லாம் கரண்ட் நின்றுவிடுகிறது என்றால், பேக்டரியிலே கோர்டு செய்து கொண்டிருந்தார்கள். இப்போது இரவிலே கரண்ட் நின்று விட்டால், மின்சார வாரியத்திலே கேட்டால் லைன்மேன் இல்லை, ஓயர்மேன் இல்லை, யாரும் இல்லை, காலையிலே தான் வருவார்கள் என்று சொல்கின்றார்கள். என் நாட்டிலே ஓயர்மேன், லைன் மேன், ஃபோர் மேன் யாராவது ஒருவரை நகரங்களிலே டியூட்டிப் போடக்

முற்பகல் 11.45

கூடாதா? அப்படி போட்டால் [illegible] சொன்னால், [illegible] [illegible]றார்கள், அலைக்கழிக்கிறார்கள் [illegible].





இதனால் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படுகிறது. ஆகவே, இதை எல்லாம் மின்சார துறை கவனிக்க வேண்டும். முந்திய ஆட்சியிலே இருந்து கொண்டிருக்கின்ற இத்தகைய குறைபாடுகளை எல்லாம் சரி செய்வீர்களானால் அரசுக்கு ஒரு நற்பெயரை உண்டாக்கும் என்று சொல்லி, இந்த அளவிற்கு பேசுகின்ற வாய்ப்பினை தந்த என்னுடைய மாண்புமிகு அருமை பேரவைத் தலைவருக்கு நன்றியினைச் சொல்லி, மின்சாரத் துறை ஊழியர்கள் மத்தியிலே இருக்கின்ற நீண்ட நாள் சாதாரண கோரிக்கைகளை எல்லாம் தாய் உள்ளமும், கருணை உள்ளமும் கொண்ட தங்கத் தலைவி நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன், நன்றி வணக்கம்.

முற்பகல் 11.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். கோவிந்தராஜலு. ஐந்தே நிமிடம். 6வது நிமிடம் உட்கார்ந்து விட வேண்டும்.

திரு. எம். கோவிந்தராஜலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நமது இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நூறாவது நாள் வெற்றி விழாவை இங்கே கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதேபோல 100 வது நாள் வெற்றி விழா, வெள்ளி விழாவாகவும், தங்க விழாவாகவும் வைர விழாவாகவும், பவழ விழாவாகவும், நவரத்தினங்கள் என்று சொல்லுவார்கள், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் 9 எண் அதிருஷ்ட எண் என்று சொல்லுவார்கள், அதே போல இந்த நவரத்தினங்கள் அடங்கிய இந்த விழாவினை அவர்கள் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுவதற்கு எங்களுடைய வேண்டுகோளை இங்கே வைக்கின்றேன்.

100 வது நாளான இன்று, மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையை இங்கே வைத்திருக்கின்றார்கள். இதன்மீது இங்கே விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதது இந்த மின்சாரம். இதையே தான், அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் முக்கியமானது சம்சாரம். (சிரிப்பு). அதேபோல மிகவும் இன்றியமையாதது மின்சாரம். இதுவே இன்றைய உலகின் சம்சாரம்.

இந்த மின்சாரம், எல்லா நிதி நிலை அறிக்கையும் முடிந்து, இன்று கடைசியாக இந்த மின்சார நிதி நிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், ஒரு கூட்டம் நடந்தால் அல்லது ஒரு மாநாடு நடந்தால் எல்லோரும் பேசிவிட்டு, கடைசியாகதான் தலைவர்கள் பேசுகிறார்கள். அதுபோல எல்லா நிதி நிலை அறிக்கையும் முடிந்து, இது இங்கே மிகவும் முக்கியம் என்பதைக் காட்டுவதற்காக மின் சார நிதிநிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

அதாவது,

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதைப்போல இப்பொழுது சொல்ல வேண்டுமென்றால், 'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, அறியும் ஐம்புலனும் மின் விசை கண்ணே உள' என்று கூறும் அளவுக்கு இன்று மின்சாரம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் முக்கியமாக இடம் பெற்றிருக்கிறது.

எங்கள் மாவட்டத்திலுள்ள நெய்வேலி முதல் சுரங்கத்தை விரிவுபடுத்தும் பணிக்காகவும், இதன்மூலம் 420 மெகாவாட் மின் உற்பத்தி கூடுதல் பெறுவதற்காகவும் 2,600 கோடி ரூபாய் செலவில் திட்டம் தொடங்குவதற்கு இருந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த ஆண்டு மின் வெட்டு இல்லாத ஆண்டாக இருக்கும் என்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜெயங்கொண்டம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த சுரங்கப் பணியும், மின் உற்பத்தித் திட்டமும் விரைவில் தொடங்க இருப்பதற்கு நான் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்ள, பயன் படுத்த, மின் உற்பத்திக் கழகம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளதையும் நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.



நடப்பாண்டில் 40 ஆயிரம் மின் இணைப்புகளும், 40 ஆயிரம் குடிசைகளுக்கு இலவச மின் இணைப்புகளும் அளிக்கப்பட்டுள்ளதற்கும் பெரு மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் வீட்டு சர்வீஸ் ஒவ்வொன்றுக்கும் 850 ரூபாய் வாங்குகிறார்கள். இந்த நிலையை மாற்றி முன்பு இருந்ததை போலவே குறைத்து வாங்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.50

மோட்டார் சர்வீஸ் சீனியாரிட்டி அடிப்படையில் எங்களுடைய மாவட்டத்தில் ஏறத்தாழ 10 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை சீனியாரிட்டியில் உள்ள ஒவ்வொருவருக்கும் இந்த மோட்டார் இணைப்பு ஏற்படுவதற்கு வழி கிடைக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும் எனவும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு லைட் சர்வீஸ் வழங்குவதில் இப்பொழுது மிகவும் கடினமான நிலை இருக்கிறது. எனவே, அந்த ஒரு லைட் சர்வீஸ் அந்த ஏழைகளுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன் டெக்னிகல், நான்-டெக்னிகல் லேபர்ஸ் என்று மின் வாரியத்தில் பணிக்கு எடுக்கிறார்கள். அதாவது ஐ.டி.ஐ. படித்தவர்களையும், சர்வீஸ் அடிப்படையிலே மின் வாரியத்திலே பணியாற்றியவர்களையும் எடுக்கும்போது, இவர்கள் இரண்டு பேருக்கும் சம அளவில் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மோட்டார் சர்வீசைப் பொறுத்தவரையில் இரண்டுக்கு மேல் இருந்தால் மோட்டார் கட்டணம் வசூல் செய்யலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிகளில் வயரிங் செய்து, ரெடியாக இருக்கிறது. ஆனால் சர்வீஸ் கனக்ஷன் கொடுக்கவில்லை. ரேடியோ, டெலிவிஷன் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மின்சார இணைப்பு தரவில்லை. பல பள்ளிகளில் வயரிங் செய்திருக்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தை யார் கட்டுவது என்ற போட்டியிலே மின்சார இணைப்பு தராமல் இருக்கிறது. எனவே அனைத்துப் பள்ளிகளுக்கும் மின்சார இணைப்பு தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில், பல்புகளை ஒரு இடத்தில் வாங்க வேண்டும், ஸ்விச்சுகளை ஒரு இடத்தில் வாங்க

[திரு. எம். கோவிந்தராஜுலு] [1991 அக்டோபர் 1

வேண்டும், சோக்கை ஒரு இடத்தில் வாங்க வேண்டும், ஸ்டார்ட்டர்களை ஒரு இடத்தில் வாங்க வேண்டும். இவற்றை எல்லாம் ஒரே இடத்தில் வாங்க வழி வகை செய்தால் நலமாக இருக்கும். (மணி அடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

* **திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்திலே கலந்து கொண்டு உரையாற்றுகிற நேரத்தில் மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் இங்கே, அவையிலே அனைத்து உறுப்பினர்களும் அமர்ந்து, அந்தந்த மானியங்களில் உள்ள பிரச்சினைகள் பற்றித் தெரிந்து கொண்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது மாதிரி ஒன்றும் சொல்ல வேண்டாம்.

**திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் தரப்பிலேதான் குறைவாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கு திரு. ப. ரங்கநாதன் பேசிய அந்தச் சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவர்கள் தொடர்ந்து மின்சார வாரியத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தவறாகக் குறிப்பிடவில்லை. காரணம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு பொருள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டபின்பு அது பற்றி விவாதத்தைத் தொடர்வது அவை மரபுக்கு முரணானது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1991 அக்டோபர் 1]

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையிலே, குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியம் பல ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதைப் போக்குகின்ற வகையிலே பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அந்த நஷ்டத்திலிருந்து மின்சார வாரியத்தை மீட்க பல நிபுணர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியும், இதுநாள் வரையில் அந்த நஷ்டத்தை, அந்த இழப்பைக் சரிக் கட்ட முடியவில்லை. இன்றைக்குத் தமிழகத்தினுடைய ஆட்சியை ஆளுகின்ற பொறுப்பினை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திலே ஒரு புது வேகத்தினை உருவாக்க வேண்டுமென்ற காரணத்தால், நல்ல திறமையான அமைச்சரை இந்த இலாக்காவிற்கு வழங்கி இருக்கிறார்கள். நான் இதை ஏன், எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், மின்சார வாரியம் மிகப் பெரிய ஒரு நிறுவனம். ஏறத்தாழ 1,600 கோடி ரூபாய் இந்த வாரியத்திலே செலவு செய்யப்படுகின்றது. இது அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனம்.

முற்பகல் 11.55

அந்த நிறுவனத்தில் அதிகாரிகள், குறிப்பாக பொறியியல் படித்து பட்டம் பெற்ற அதிகாரிகள் குமாஸ்தாக்களைப் போல வாரிய அலுவலகத்திலே அமர்ந்து, குளுகுளு வசதி கொண்ட அறைகளில் உட்கார்ந்துகொண்டு ஃபைல்களைப் புரட்டுகிறார்களே தவிர, பகுதிகளுக்கும் கிராமங்களுக்கும் சென்று அங்கே இருக்கின்ற குறைபாடுகளை நேரடியாகத் தெரிந்து கொள்வதே கிடையாது. அதுமட்டுமல்லாமல், அதிகாரிகள் அதிகமாகத்தான் இருக்கின்றார்கள். ஆனால் அந்தத் துறையில் தொழிலாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். சென்னை நகர், செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் பல்வேறு குறைபாடுகளைக் குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன். காரணம், சென்னையை ஒட்டியுள்ள தாம்பரம், பொரூர், வளசரவாக்கம், அண்ணா நகர் மேற்குப் பகுதிகள், அசோக் நகர், ஆலந்தூர், ரெட்ஹில்ஸ், அம்பத்தூர், மாதவரம் திருவொற்றியூர், பூந்தமல்லி போன்ற அனைத்துப் பகுதிகளும், தொழிற்சாலைகளும், புதிய புதிய குடியிருப்புகளும் நிறைந்திருக்கிற பகுதிகள். இந்தக் காலக்கட்டத்தில் குறிப்பாக சென்னை

[திரு. ப. ரங்கநாதன்] [1991 அக்டோபர் 1

எம்.ஜி.ஆர். மாவட்டத்திலும், வடசென்னை பகுதியிலும் இருக்கிற இந்த பகுதிகளுக்கு கடந்த 2 மாத காலங்களில் மின்சாரம் குறிப்பாக காலையிலும் மாலையிலும் இரவு நேரங்களிலும் தொடர்ந்து தட்டுப்பாடாகத்தான் இருக்கிறது. மின் வெட்டு அவர்கள் வேண்டுமென்றே செய்கிறார்களா அல்லது ஸ்ரீபெரும்புதூரில் இருக்கிற அந்த துணை மின் நிலையத்தில் ஏதாவது கோளாறா என்பது பற்றி அந்த அதிகாரிகளுக்கே தெரியவில்லை.

நாங்கள் தலைமைப் பொறியாளரிடமும், உதவிக் கோட்டப் பொறியாளரிடமும், பகுதிப் பொறியாளரிடமும் இதைப் பற்றி கேட்கிறபோது எங்களுக்கு முறையாக பொருட்கள் வழங்குவதில்லை, எங்களிடம் தொழிலாளர்கள் இல்லை என்று பல்வேறு குறைபாடுகளைச் சொல்கிறார்கள். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பகுதிகளுக்கு எல்லாம் முதலிடம் கொடுத்து மின்சாரம் சீராக வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

அதோடு, சென்னை நகரம், தமிழகத்தின் மற்ற நகரம், மற்றும் கிராமப் பகுதிகளில் இருக்கிற குடிசைகளுக்கு இந்த ஆண்டு 40 ஆயிரத்திற்கு மேல் மின் இணைப்பு வழங்கப்படும் என்று இங்கே அமைச்சர் அவர்கள் அளித்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு நகரப் பகுதிகளில் உள்ள ஏழை மக்கள், தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் ஆகிய மக்கள் வாழும் குடிசைகளுக்கும் உடனடியாக மின்சார இணைப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், குடிசைகளுக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்றால், மின்சார இலாக்காவில் பல்வேறு கட்டுப்பாடுகள் போட்டிருக்கிறார்கள். அதைப் போக்குகிற வகையில் மின்துறை அமைச்சர் அவர்கள், குடும்ப அட்டையோ, வாக்காளர் ஜாபிதாவோ அல்லது சட்டமன்ற உறுப்பினருடைய அனுமதிச் சீட்டையோ பெற்றுக்கொண்டு மின்சாரம் வழங்கும் உத்தரவை போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று சென்னையில் அமைந்திருக்கிற ...



1991 அக்டோபர் 1]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** போதும் உட்காருங்கள். 8 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். திரு. தம்புசாமி.

*** திரு. வே. தம்புசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிற மின்சார வாரிய மானியத்தின் மீது பேச அனுமதித்த தங்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். பொதுவாக மின்சாரத் துறையின் கொள்கை குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிற எதிர்காலத் திட்டங்களைப் பற்றி, பல விஷயங்கள் பற்றி வரவேற்றாலும் கூட, இந்தத் துறை இன்னும் வேகமாகச் செயல்படுவதற்கு அரசு முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12.00

பொதுவாக அந்தத் துறையிலே 1990-வது ஆண்டிலே 1,800 ஒப்பந்த தொழிலாளர்களை மின் வாரியத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோர்ட்டிலே தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த 1,800 ஒப்பந்த தொழிலாளர்களை இதுவரையில் அரசு எடுத்துக்கொள்ளாமல் காலம் தாழ்த்தப்படுகிறது. இப்போது அமைச்சர் அவர்கள் அந்த 1,800 தொழிலாளர்களை எப்படி எடுத்துக்கொள்வார்கள் என்பதை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது போன்று மின் வாரியத் துறையிலே தொடர்ந்து ஒப்பந்தப் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்களே தவிர நேரிடையாக மின் வாரியத்திலே பணியாற்றுவதற்காக ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. இப்படி ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் இயக்குவது என்பது மனித உரிமைக்கு மாறாக அமைந்திருக்கிறது. ஆகவே அரசு இனிமேல், எதிர்காலத்திலே ஒப்பந்த பணியாளர்களை எடுக்காமல் இந்தத் துறைக்கு நேரிடையாகப் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று திருவாரூரில் இருக்கின்ற துணை மின் கோட்ட நிலையத்திற்கு உரிய அலுவலகம் தஞ்சாவூரில் இருந்து செயல்படுவதால் அங்கே வருகின்ற பிரச்சினைகளில் பல்வேறுவிதமான சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு திருவாரூரில் ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்

அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மின் கோட்டத்திலே மின் துறை பணியாளர்கள் தொடர்ந்து இருக்க வேண்டுமானால் இதற்கு ஏறத்தாழ 300 பணியாளர்களை இந்தக் கோட்டத்திலே நியமிக்க வேண்டியிருக்கிறது. அந்த 300 பணியாளர்களை நியமித்து அந்தக் கோட்டத்திலே ஏற்படுகிற பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோட்டத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளும் கூடுமான வரையில் நஞ்சைப் பகுதிகளாகவே இருக்கின்றன. அந்த நஞ்சைப் பகுதியிலே தெருவிளக்கு முழுவதும் நடப்பட்டிருக்கிற மின் கம்பங்கள் சாய்ந்த நிலையிலே இருக்கின்றன. அப்படி சாய்ந்த நிலையில் உள்ள கம்பங்களை விரைவாக நிமிர்த்தி ஒழுங்குப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த சாய்ந்த கம்பங்களால் பல வேறு ஆபத்துக்கள் விளைந்து கொண்டிருக்கின்றன. அது போன்று மின் கம்பங்கள், திருவாரூர் தொகுதியில் மோந்தனூர பகுதியில் அறுந்து விழுந்ததால் 4 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அதேபோன்று கடந்த மாதத்திற்கு முன்பு திருவாரூக்கு அருகாமையில் இருக்கக் கூடிய வேலங்குடியில் இந்த மாதிர். விளைவுகள் ஏற்பட்டு ஏறத்தாழ 20 அரிசனக் குடிசைகள் எரிந்து விட்டன. அதேபோன்று புதுப்பத்தூர் என்ற கிராமத்தில், மின் கம்பத்தால் ஏற்பட்ட விளைவால் ஏறத்தாழ 22 வீடுகள் எரிந்து சாம்பல் ஆகிவிட்டன. அந்தக் கோட்டம் முழுவதும் இருக்கக் கூடிய பழமையான மின் கம்பங்களை மாற்றி புதியவற்றைப் போட வேண்டும். சில பகுதிகளில் முழுமையான மின்சாரம் செல்வதில் தடை இருக்கிறது. உதாரணத்திற்கு கீவளூர் ஒன்றியத்தில் சரியாக மின்சாரம் வருவது கிடையாது. அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு அதுபற்றி கேட்டால், பழமையான மின் மாற்றிகள் இருப்பதால் மின் விநியோகத்திலே தேக்கம், தடை ஏற்படுகிறது. ஆகவே அதை மாற்ற வேண்டும், நாங்களும் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம், பழமையான மின்மாற்றிகளை மாற்ற நடவடிக்கை எடுக்கும்போது எல்லாம் சரியாகிவிடும், என்று தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட பழைய மின்மாற்றிகளையெல்லாம் மாற்ற வேண்டும்.





சாதாரண, ஏழையெளிய மக்களுடைய குடிசைகளுக்கு வழங்கக்கூடிய மின்சாரம் இன்னும் பல்வேறு கிராமங்களில வழங்கப்படாமல் இருக்கின்றது. அந்த ஏழை மக்களுக்கு ஒரு வீட்டுக்கு ஒரு மின் விளக்கு என்ற அடிப்படையிலே வேகமாக விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.05

அதுபோன்று இன்னமும் சில ஊராட்சிகளிலே மின்விளக்குகள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதற்காக பணம் கட்டி 4 ஆண்டு, 5 ஆண்டு, 6 ஆண்டுகளாக ஆகியும்கூட இன்னமும் அந்த தெருவிளக்குகள் போடப்படாமல் இருக்கிறது. அது போன்ற இடங்களில் அரசு ஆய்வு செய்து, அந்த முன் பணம் கட்டி இன்றையதினம் நிலுவையிலே இருக்கின்ற அந்த ஊராட்சிகளுக்கு விஸ்தரிப்பு வேகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

அதுமாதிரி மின்விளக்குகள் எரிவதிலே குறைபாடு இருக்கிறது என்று தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி அந்த மின்விளக்குகளை எரிய விட வேண்டும் என்று சொன்னால் நமது மின்துறையிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு சில நபர்களை ஒதுக்கிக் கொடுத்து அவர்கள் அந்த ஊராட்சி ஒன்றியத்திலே மின்விளக்குகளை முழுமையாக எரியவிடுவதற்காக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்த அடிப்படையில், இருக்கக்கூடிய அந்தக் குறைபாடுகளைச் செய்வதோடு இன்றையதினம் புதிய மின் திட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. திருவாரூர் கோட்டத்திலே அந்த மின்திட்டம் உருவாக்கப்பட்டு பணி நடந்து கொண்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி வேகமாக மின்சாரம் கொடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று திருவாரூர் மின்கோட்டத்திலே ஏறத்தாழ 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாய பம்ப் செட்டுகளுக்கு இன்னமும் மின் இணைப்புக் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது

டிருக்கிறது. ஆகவே அரசு அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அப்படி அந்த மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதன் மூலம், தஞ்சைப் பகுதியிலே சாதாரணமாக உற்பத்தி பெருகுவதற்கு மிகமிக உதவிகரமாக இருக்கும்; அந்த வகையிலே, அந்த உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவி செய்யும் அப்படி உற்பத்தி பெருகிறபோது அந்த உற்பத்தி நிச்சயமாக தமிழ்நாட்டினுடைய ஒரு குறைந்த பட்ச உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு பிரதானத் தொழில்; அந்தத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுக்கிற வகையில், தேங்கி இருக்கிற அந்த மின் மோட்டார்களுக்கு இணைப்புக் கொடுப்பதற்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் பரந்தாமன்.

* **டாக்டர் ஜெ. பரந்தாமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நூறாவது நாள் ஆட்சியின் சிறப்பான இந்நாளில் தமிழக முதல்வர் அவர்கள் நூறாண்டுக்காலம் வாழ்ந்து இந்த தமிழக மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று என்னுடைய பிரார்த்தனையை வைத்து, அன்பாலும் பண்பாலும் ஆளும் திறமையினாலும் தமிழக முதல்வராக உள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு வணக்கமும் நன்றியும் சொல்லி, நிர்வாகத் திறமையிலே மிகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பல்கலைக் கழகங்கள் 'நிர்வாகத் துறை' யிலே டாக்டர் பட்டம் தர வேண்டும் என்ற மக்களுடைய வேண்டுகோளை வைத்து இன்றைக்கு மின்சாரத் துறையைப்பற்றி பேச ஆரம்பிக்கிறேன்.

இன்றைக்கு அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக இருப்பது மின்சாரமாகும். 2 ஆண்டுக்காலம் இருட்டாக இருந்த தமிழ் நாட்டை ஒளியேற்றியதாக மாற்றிய பெருமை மாண்புமிகு





இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களுக்கு உண்டு. இந்தக் காலத்தில்தான் மின்சார [illegible] எதிர்காலம் இருக்கப் போகிறது. அந்த வகையிலே விவசாய வளர்ச்சி, தொழில் வளர்ச்சி இரண்டும் சேர்ந்துள்ள பொருளாதார வளர்ச்சி—இவை அனைத்திற்கும் மிக அவசியம் தேவைப்படுகின்ற மின்சாரம் பற்றி சொல்ல ஆரம்பிக்கிறேன். மக்களின் அன்றாட செயல்களுக்கு மின்சாரம் தேவைப்படுவதை உணர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள புரட்சிகர மான பாராட்டுக்குரிய எதிர்காலத்தில் தமிழகத்தை சிறப்போடு வழிநடத்திச் செல்கிற அவர்கள் சிறந்த திட்டங்களை அறிவித்து இருக்கின்றார்கள். தேர்தல் அறிக்கையிலேயே சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வது குறித்து தெளிவாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருப்பது எதிர்காலத்தில் தமிழகத்தை தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் முதன்மையான ஒரு மாநிலமாக மாற்றுவதற்கு ஒரு தொலைநோக்குப் பார்வைகொண்ட சீரிய திட்டமாகும். வீட்டு உபயோகத்திற்குத் தேவைப்படுகின்ற மின்சாரத்தை சூரிய ஒளி மூலம் பெற்று பயன்படுத்துவோமேயானால் மற்ற வகையில் உற்பத்தியாகும் மின்சாரத்தை விவசாயத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்துவது நலமாக இருக்கும். சூரிய ஒளி மூலம் உபரியாக மின்சாரம் உற்பத்தி செய்யும்போது அதை விவசாயத்திற்குக்கூட பயன்படுத்த முடியும். மழை பொய்த்துவிட்ட காரணத்தால் நீர்மின்சாரமும் நிலக்கரி பற்றாக் குறையால் அனல் மின்சாரமும் நாம் எதிர்பார்க்கும் அளவு உற்பத்தி செய்ய இயலவில்லை என்பதை உணர்ந்து பேரணாம் பட்டு போன்ற பெரிய தொழில் வளர்ச்சி பெற்றுள்ள இடங்களில் பல தொழில் அதிபர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாக அவர்களுடைய தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மின்சாரத்தை அவர் களே உற்பத்தி செய்ய அனுமதி அளிப்பதன் மூலம் அப்பகுதி களில் விவசாயத்துக்கோ கிராமப்புறங்களுக்கோ மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாத நிலை உண்டாகும் எனக் கருதுகிறேன். அப்படிக் கிடைக்கின்ற கூடுதல் மின்சாரம் விவசாயத்திற்கு பயன் படும். மேலும் நவீன முறையில் மின்சாரம் உற்பத்தி செய் வதற்கு ஆராய்ச்சியில் ஈடுபட அறிவியல் அறிஞர்களை தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் ஜெ. பரந்தாமன்] [1991 அக்டோபர் 1

மின்சாரப் பற்றாக்குறையைப் போக்கும்பொருட்டு மின்சாரத்தை சிக்கனப்படுத்தவும் மின்சாரம் வீணாவதைத் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மின்சாரம் எடுத்துச் செல்வதன் மூலம் வீணாவதைத் தடுக்க முயற்சிக்க வேண்டும்.

மின்சாரப் பயன்பாட்டிற்காக வாங்கப்படும் கட்டணம் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை என்று மாற்றி தொலைபேசிக்கு செலுத்துவதைப்போல ஒரு தொகையினை ஆரம்பத்திலேயே பெற்றுக் கொண்டு அதிலே இருந்து மின்கட்டணம் கழித்து வரும் முறையினை முறைப்படுத்தினால் மின்சாரத் துறைக்கு கணிசமான அளவில் முதலீடு கிடைக்கும். இப்படி கிடைக்கிற மிகப்பெரிய முதலீட்டை இந்த மின்சாரத் துறையினுடைய வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம்.

பிற்பகல் 12.10

மின் தொழிலாளர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கவும், அவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் தடுக்கும் பொருட்டும், மின் துறை பணியாளர்கள் மின் கம்பங்களில் ஏறும் போது விபத்து தடுப்பு நடவடிக்கைகளை முன்னெச்சரிக்கையாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று மின்துறை வலியுறுத்த வேண்டும். மின்சார ஊழியர்கள் கட்டாய இன்சூரன்ஸ் வசதித் திட்டத்தில் சேர வேண்டுமென்று வலியுறுத்தப்பட வேண்டும். பணி புரியும் காலத்தில் ஊழியர்கள் இறந்தால் அவர்கள் குடும்பங்களுக்கு நிதியுதவியும் வேலை வாய்ப்பும் உடனடியாக வழங்க வேண்டும்.

பேரணாம்பட்டு தொகுதியில் இருக்கிற சாத்திப்பட்டில் ஆற்று ஓரங்களில் வீடு கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு மின் இணைப்பு தராமல் தாமதப்படுத்துகிறார்கள். அந்தப் பகுதியில் தண்ணீரே வருவதில்லை. அது ஆற்றுப் புறம்போக்கு என்று சொல்லி இன்று வரையில் மின் இணைப்பு தராமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் உடனடியாக அவர்களுக்கு மின் இணைப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1991 அக்டோபர் 1] [டாக்டர் ஜெ. பரந்தாமன்]

பல ஆண்டுக்காலமாக நிரந்தரப்படுத்தப் படாமல் இருக்கிற மின்துறை ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதற்கு இந்த மின்சாரத் துறை முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல ஆண்டுகளாக மின் பாக்கி வசூலாகாமல் தொடர்ந்து இருப்பதாகத் தெரிகிறது. இதை வசூலிக்க அரசு முயற்சிக்க வேண்டும். மிகப் பெரிய தொழிற்சாலைகள் தொடர்ந்து மின் பாக்கிச் செலுத்தாமல் இருப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கு சாதாரன ஏழையெளிய, நடுத்தர மக்கள் மின் கட்டணம் கட்டாமல் விட்டால் உடனடியாக மின் இணைப்பு துண்டிக்கிற மின்துறை, இப்படிப்பட்ட பெரிய பண முதலாளிகளை எப்படி அனுமதிக்கிறது என்பது எனக்கு புரியவில்லை. மிகப்பெரிய அளவுக்கு மின்பாக்கி தொடர்ந்து இருப்பதாகத் தெரிகிறது. இதனை வசூலிப்பதற்கு உடனடியாக முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிலங்கள் மீதும், வீடுகள் முன்பும் மின்கம்பங்கள் சில சமயங்களில் சிரமங்களை உண்டுபண்ணுகின்றன. இவற்றை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டால் அதற்கு மிகப்பெரிய தொகையை கட்டணமாகச் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் பெரும் காலதாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிரச்சினை இல்லாத இடங்களில் உடனடியாக அவற்றை மாற்றித்தர முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போணாம்பட்டு தொகுதியில் சில இடங்களில் மின் அழுத்தம் சரியாக வருவதில்லை. பல்புகள் சரியாக எரிவதில்லை. ட்யூப் லைட்டுகள் அடிக்கடி பியூஸ் ஆகிவிடுகின்றன. அடிக்கடி இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எலக்ட்ரிக் மோட்டார் மின் அழுத்தம் சீராக வராத காரணத்தால் அடிக்கடி எரிந்து விடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு பொருளாதார நெருக்கடியும், பொருளாதாரச் சிக்கலும் ஏற்படுகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படுகிற நிலைமையும் இருக்கிறது. இதை உடனடியாக நிவர்த்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

[டாக்டர் ஜெ. பாந்தாமன்] [1991 அக்டோபர் 1

இன்றைய சூழ்நிலையில் தொழிலும், விவசாயத்திலும், **வாழ்க்கைத்** தரத்திலும் முன்னேற மாண்புமிகு தமிழக **முதல்வர் புரட்சித்** தலைவி அவர்கள் பொற்காலத்தில் நிச்சயமாக இயலும் என்று சொல்லி, வாய்ப்பளித்த துணைத்தலைவர் **அவர்களுக்கு** நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** திரு. **வீ. சுப்பிரமணியன்.**

* **திரு. வீ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் **துணைத்** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும், மூதறிஞர் இராஜாஜியும், இதயதெய்வம் **அமராகி** விட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் அமர்ந்திருந்த இந்த மாமன்றத்தில் என்னையும் ஒரு உறுப்பினராக்கிய, நான் வணங்கும் தெய்வம் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் பாதங்களைத் தொட்டு வணங்கி, எனக்கு வாக்களித்த கண்டமங்கலம் தொகுதி வாக்காள பெருமக்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலமாக நன்றி தெரிவித்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மின்வாரிய அறிக்கை மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தனது தேர்தல் அறிக்**கையில் கூட** கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றி, **அந்த** கால்வாய்க்கு மகாத்மா காந்தி அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று தெரிவித்து, தேச ஒற்றுமையிலும், மக்கள் நலனிலும் அக்கறை கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் ஒரு தேசிய தலைவர் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் வேளாண்மையும் வளம் பெறும், வரும் தண்ணீரைக் கொண்டு புனல்மின்சாரம் தயாரிக்கவும் எதுவாக இருக்கும் என்ற புரட்சித் தலைவி அவர்கள் நோக்கத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும் 1990-91 ஆம் ஆண்டில் மூலதனீட்டு திட்டத்திற்கு **ஒதுக்கப்பட்ட** ரூபாய் 498.80 கோடிக்கு பதிலாக இந்த **ஆண்டு 1991—92 ஆம் நிதியாண்டில் 577.79 கோடியாக தொகையை**



1991 அக்டோபர் 1] [திரு. வீ. சுப்பிரமணியன்]

உயர்த்திய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசை நான் வரவேற்று பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.15

மேலும் இந்த ஆண்டு 40 ஆயிரம் வேளாண்மை பம்ப்செட்டுகளுக்கு புதிதாக மின் இணைப்பு வழங்க இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அனுமதித்து உள்ளார்கள். அதற்காகவும், புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை பாராட்டி வரவேற்கிறேன்.

காலத்தினுடைய அருமை கருதி, எனது 'தொகுதியினுடைய பிரச்சினைக்கு வருகிறேன். எனது தொகுதியில் உள்ள கண்டமங்கலம், சிறுவந்தாடு மற்றும் விழுப்புரம் தொகுதியில் உள்ள வளவனூர், கோலியனூர் ஆகிய கிராமங்களில் இருந்து டி.ஈ. அலுவலகத்திற்குச் செல்லவேண்டும் என்று சொன்னால், 45 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மையப் பகுதியாக அமைந்துள்ள, கண்டமங்கலத்திலோ, அல்லது வளவனூரிலோ டி.ஈ. அலுவலகத்தை மாற்றித் தரவேண்டும் என்று இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களை, மிக்க பணிவன்போடு வேண்டுகிறேன்.

மேலும், தென் ஆற்காடு மாவட்டத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே 630 மெகாவாட் திறனுடன் கடலூர் அனல் மின் நிலையம் அமைக்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டதை விரைவுபடுத்தி, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் மிக்கப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மின் இணைப்பை உடனடியாக வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம் என்று ஒரு திட்டத்தை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்து, ஏழை

களினுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றிவைத்தார்கள். இடையிலே வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அதை நிறுத்திவிட்டது. மீண்டும், இந்தத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்ததற்காக இந்த மாமன்றத்தின் மூலம் எனது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்டமங்கலம் ஒன்றியத்தில் உள்ள, பாக்கம், சொர்ணாவூர் கிராமங்களில், துணை மின் நிலையங்கள் வேண்டும் என்று அரசுக்கு முன்மொழிவு வந்துள்ளது. அவற்றை நிறைவேற்றித் தரவேண்டும் என்று, தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களை மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், விக்கிரவாண்டி ஒன்றியத்தில் உள்ள மதுராப் பாக்கம் என்ற கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் வேண்டும் என்று ஒரு அறிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அதையும் நிறைவேற்றித்தரவேண்டும் என்று இந்த நேரத்தில் மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் கண்டமங்கலம் பகுதியில் உள்ள விவசாயிகள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். என்ன காரணமோ தெரியவில்லை. அதாவது எங்கள் பகுதியில், மின் சப்ளை என்பது ஒரு சில இடங்களில் ஒன்றுவிட்டு ஒருநாள்தான் விவசாயத்திற்குக் கொடுப்பதால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் குறைகளை தீர்க்கின்ற வகையில், கண்டமங்கலம் ஏ.டி.ஈ. கன்ட்ரோலில் இருக்கிற மின்துறை அலுவலகங்களுக்கு 100, அல்லது 63 கே.வி. திறனுடைய 25 டிரான்ஸ்பார்மர்களையும் உடனடியாக வழங்கவேண்டும் என்று, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களை மிக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்** : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் தலைவர் அவர்களை விட மிகக் கடுமையாக நேரத்தில் இருக்கிறீர்கள். அவர்கள் மணி



அடிக்கின்ற அந்த நிலையை கொஞ்சம் தளர்த்துவார் என்று நினைத்தேன். அவர்கள் தளர்த்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைக் கவனிக்கவேண்டும். அவரவர்கள் பணியை அவரவர்கள் செய்யவேண்டும் என்பது மரபு. நீங்கள் தயவுசெய்து, 6 நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர்** : ஆறு என்ன, 5 நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இந்த மின் வாரிய மானியத்திலே நான், 4, 5 முறைகள் பேசுகின்ற சந்தர்ப்பத்தைப் பெற்றவன். மின் வாரியம் தொடர்ந்து நட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக காலத்தில், எங்களது பகுதியில் இருக்கிற சமயநல்லூர் மின் நிலையத்தைக்கூட தனியாருக்கு விற்றார்கள். இன்னும், இந்தத் துறை, டிரான்ஸ்பார்மர்களை குஜராத்திலிருந்து பெறுகின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப் பெறுகிற இந்த டிரான்ஸ்பார்மர்கள், பல்வேறு பகுதிகளில் இல்லை என்பதற்காக, மின் இணைப்பு கொடுக்க முடியவில்லை. இன்னும் நட்டத்திலே ஏன் ஓடுகின்றது என்பதற்கு, பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த மன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். ஓவர்-ஹெட் சார்ஜஸ் என்று திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் என்.எம்.ஆர். என்ற பெயரால், கட்சிக்காரர்களை அதிகமான பேர்களை எடுத்து வைத்திருந்தார்கள். அவர்கள் உண்மையிலேயே என்.எம்.ஆர். களாகப் பயன்படவில்லை. ஒவ்வொரு இன்சினியர் வீட்டிலும் 3 பேர், 4 பேரை வேலைக்காரர்களாக வைத்துக்கொண்டிருக்கின்ற அளவிற்கு தொடர்ந்து இருந்து வருகிறது. அந்த ஓவர்-ஹெட் சார்ஜஸ் என்கின்ற நிலையை மாற்றி அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக்கிக்கூட, அவர்கள் பகுதிக்குச் சென்று வேலை செய்கின்ற அளவிற்கு இந்த அரசு முயற்சி செய்யுமேயானால், அந்த நிதிநிலை நல்ல முறையில் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12.20

தனியார் போல்கள் செய்வதற்குக் கொடுத்ததிலே பல தவறுகள் நடக்கிறது. இதை அரசே நடத்தவேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்த அரசு இன்றைக்குக் கொடுத்திருப்பதிலே 2000-வது ஆண்டு 4,300 மெகாவாட் உற்பத்தி செய்கின்ற

அளவிற்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு 1972-லே மின் தன்னிறைவு என்ற விழாவைக் கொண்டாடினார்கள். இன்றைக்கும் பெரிய தொழிற்சாலைகளுக்கு 20 சதவீதம் மின் வெட்டு இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அங்கே தன்னிறைவு பெற வேண்டுமென்று சொன்னால், பல்வேறு திட்டங்களைத் தீட்டியும்கூட 2000 ஆண்டிற்குப் பின்னும் நமக்கு மின் நிறைவு பெறாது என்ற நிலையைத்தான் இன்றைக்கு இந்த அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆறு நிமிடத்திலே முடிக்க வேண்டுமென்று சொன்னால், இன்னொரு கருத்தினை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி விதிக்காத ஒன்றை இந்த ஆட்சிக் காலத்திலே அறிவித்திருக்கிறார்கள். கவர்னர் ஆட்சிக் காலத்திலே புதியதாக மின் இணைப்பு பெறுவதற்கு இரண்டு மடங்கு டெபாசிட் கட்டவேண்டுமென்று விதித்ததை, இந்த ஆட்சிக் காலத்திலே விதித்தது போன்று அறிவித்திருக்கிறார்கள். இந்த அரசு முன்னர் இருந்ததைப் போல், புதியதாக மின் இணைப்பு பெறுபவர்களுக்கு பழைய தொகையையே வசூலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி—மாநகராட்சியின் ஒரு பகுதியிலே என்னுடைய தொகுதியும் இருக்கிறது. மாநகராட்சியிலே நமது அரசிடமிருந்து மின் இணைப்பைப் பெற்றுக்கொண்டு, 'கிரேக் சார்ஜ்' என்று முதலிலே பெற்றுக்கொண்டிருந்தவர்கள் இப்போது அதிகமாக அரசு 85 காசு என்று கொடுத்தால் அவர்கள் அதை ரூ. 1.10 என்கின்ற அளவிற்கு விற்பனை செய்து, அதைத் தொழில்போல் செய்துகொண்டிருக்கிறார்கள். அரசு கொடுக்கின்ற இந்தத் தொகையோடு பணியாளர்களுக்குரிய சம்பளத்தை சேர்த்து வேண்டுமானாலும், 1 காசு, 2 காசு அதிகமாக வாங்கலாம். இன்றைக்கு பத்திரிகையிலே அறிவித்திருப்பதை நான் படிக்க விரும்புகிறேன். 'குறைந்த அழுத்தம் வீட்டு உபயோகத்திற்கு அல்லது மின் விளக்குகள், விசிறிகளுக்கு, யூனிட்டிற்கு ரூ. 2.50. குறைந்தபட்ச கட்டணம் மாதம் ரூ. 15. பவர் சார் தொழில்களை விட்டுவிடுங்கள். வீட்டு உபயோகத்திற்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சக் கட்டணம் ரூ. 15. 25 யூனிட்டுவரை 65 காசு,



மாதம் 25-லிருந்து 50 யூனிட்டு வரை 80 காசுகள். 51 முதல் 300 வரை உபயோகிக்கின்ற வீடுகளுக்கு ரூ. 1.10 காசுகள் என்று அதிகமான வரியை கார்ப்பொரேஷனுக்கு உயர்த்திக் கொடுக்கின்றது. அதை அரசே எடுத்து, மறுபடியும் மின்சாரத் துறையே கொடுத்தால்கூட நகர் வாழ் மக்களுக்கு நன்றாக இருக்கும். இதை கார்ப்பொரேஷனில் இருப்பவர்கள் தொழிலாக பிசினசாக செய்வது போல் எனக்குத் தோன்றுகிறது. சில பகுதிகளில் விளக்கு எரிவதில்லை. ஃபியூஸ் ஆகிவிடுகிறது என்று சொன்னால், இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட இடத்திலே அந்த பல்புகளை வாங்கவேண்டுமென்று சொன்னதன் காரணமாக, போட்ட உடனே ஃபியூஸ் போய்விடுகிறது. நானே சென்று, அதிகாரிகளை அழைத்துச் சென்று போட்டுவிட்டு ஒரு வாரம் கழித்துச் செல்லும்போது சோக் ஃபியூஸ் ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள். காரணம் தரக் குறைவான ஒரு இடத்திலே அதிக விலை கொடுத்து வாங்குவதற்காகச் செய்திருக்கிறார்கள். இதற்கிடையில் என்ன நடந்தது என்று தெரியாது. தரமான பல்புகளை வாங்குவதற்கு இந்த அரசு பழைய அரசு போட்டிருந்த உத்தரவை மாற்றி, தரமான பல்புகளை வாங்குவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கினால் தான், இந்த திடீர் திடீர் என்று ஃபியூஸ் போகிறது என்ற நிலை மாறும் என்று கருதுகிறேன். நேரில் பார்த்த காரணத்தினால் குறிப்பிட்ட கம்பெனிக்கு அவர்கள் கொடுத்த உத்தரவின் காரணமாக தரம் குறைந்த பல்புகளை வாங்கிப் போடுகிறார்கள்.

பிற்பகல் 12-25

அதேபோன்று மாநகராட்சிப் பகுதிகளிலே ஒரு பகுதி மின் வாரியம் மின்சாரம் வழங்குகிறது. இன்னொரு பகுதியில் அவர்கள் வழங்குகிறார்கள். மின் வாரியம் வழங்குகின்ற பகுதிகளில் பல்புகள் ஃபியூஸ் ஆனால் கார்ப்பொரேஷனை கேட்டால் நாங்கள் அங்கே எழுதியிருக்கிறோம். அவர்கள்தான் தரவில்லை என்கிறார்கள். அவர்களைக் கேட்டால் எங்களுக்குத் தகவலே இல்லை என்று சொல்கிறார்கள். இதைச் சீராக்க, ஒன்று மின் வாரியம் அதை எடுத்து நடத்தவேண்டும். 8 வார்டுகள் மின் வாரியம் நடத்துகிறது. பாக்கி பகுதியிலுள்ள 60 வார்டுகளுக்கு கார்ப்பொ

ரேஷன் எடுத்து மின் இணைப்பு கொடுக்கிறார்கள். ஆகவே அந்த குறைபாடுகளை நீக்கி ஒன்று கார்ப்பரேஷன் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் அல்லது மின் வாரியம் எடுத்து நடத்த வேண்டும், என்று கேட்டுக் கொண்டு, அந்த காண்டிராக்ட் சிஸ்டத்திலே பல்புகளை ஒரு குறிப்பிட்ட கம்பெனியிடமிருந்துதான் வாங்க வேண்டும் என்று தி.மு.க. அரசு போட்ட உத்திரவை மறு பரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அனாமலியை, அந்த வித்தியாசத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். **நன்றி,** வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ப. கலிய பெருமாள்.

* **திரு. ப. கலியபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு ஒரு கூட்டத்திலே பேசினார்கள். பட்டியலிலே இடம் பெறாதவர்கள் என்பால் வருத்தப்படாதீர்கள். என் பையிலே ஒரு ரூபாயும் 4 அணாவும் இருக்கிறது. முதலிலே செலவு செய்ய நான்கணாவை எடுத்துள்ளேன். தேவைப்படும் போது 1 ரூபாயை எடுத்து செலவு செய்வேன். அதேபோல பட்டியலில் இடம் பெற்றவர்கள் நான்கணாவிற்கு சமம். இடம் பெறாதவர்கள் ஒரு ரூபாய்க்கு சமம் ஆனவர்கள் என்று கூறினார்கள். அதேபோல எனக்கு நான்கணாவிற்கு உரிய மரியாதையை அளித்து இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பு அளித்த, தமிழகத்தின் இருள் அகற்றிட வந்த ஒளி விளக்காய், கோடானு கோடி மக்களின் உள்ளங்களில் நீக்கமற நிலைத்து இருக்கும், கேட்ட வரம் தரும் தெய்வமாம், புரட்சித் தலைவியை வணங்கி என் உரையை தொடங்குகின்றேன். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவியை இம் மாமன்றத்தில் தங்கள்மீது வான் அளாவிய புகழ் உரைகளும் வாழ்த்துரைகளும் வழங்கினார்கள். உள்ளம் மகிழ்கிறது. வஞ்சப் புகழ்ச்சி என்று இலக்கியத்திலே வருகிறது. அதேபோல உண்மையாக உள்ளத்தால் வாழ்த்துபவர்களையும், உதட்டளவில் வாழ்த்துபவர்களையும் தாங்கள் அடையாளம் காணவேண்டும் என்று வேண்டுகிறேன். [illegible] ஆட்சியில் கருணாநிதியை எப்படி எல்லாம்



வாழ்த்தினார்கள், யார் யார் வாழ்த்தினார்கள் என்பது சபைக் குறிப்பேட்டில் இடம் பெற்றுள்ளது. தாங்கள் எல்லாம் அறியும் ஆற்றல் பெற்றவர்கள். கூர்ந்த மதிநுட்பம் உடையவர்கள் என்பதை நாடு அறியும். இதற்கு மேல் சொல்ல நான் விரும்பவில்லை.

இன்றைய நிலையில் மனித வாழ்க்கைக்கு மின்சாரம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. சம்சாரம் இல்லாமல் வாழ்ந்து விடலாம் ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது, என்ற நிலை உருவாகிவிட்டது. மின்சாரத் துறை மிகவும் நஷ்டத்திலே இயங்குகிறது. காரணம் அத் துறையின் மெத்தனப் போக்கும், தரமான மின்சார கருவிகளை அமைக்காததனாலும், மின்சார கட்டணத்தை சரிவர வசூலிக்காமல் இருப்பதாலும், பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்த பணியாளர்களை நியமிக்காததாலும் நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் இந்தத் துறையில் ஏழைகள் மின்சார கட்டணத்தை காலாகாலத்தில் கட்டணத்தை செலுத்த வில்லை என்றால் மின்சார இணைப்பைத் துண்டித்து விடுகிறார்கள். அதேநேரத்தில் பெரும் பணக்காரர்கள், ஆலை அதிபர்கள், மேட்டுக் குடியினர்கள் கட்டவேண்டிய மின்சாரக் கட்டணத்தை வசூலிக்காமல் இருக்கிறது மின்சார வாரியம். அப்படிப் பட்டவர்களிடத்திலே இருந்து உடனடியாக கட்டணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் புரட்சித் தலைவியைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்தகால தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. கோரிக்கை பெறுவதற்கும் குறைகளை போக்குவதற்கும் மற்றவர்கள் போராடுவது போல ஆழ்குழாய் அமைத்துள்ள அந்த விவசாயிகள் போராடவில்லை. ஆகவே புரட்சித் தலைவி அவர்கள் மேற்குறிப்பிட்ட குறைகளை பரிசீலித்து சிறு விவசாயிகள், பெரும் விவசாயிகள் என்று பிரித்து சிறு விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளித்து பெரும் விவசாயிகளுக்கு கட்டணம் வசூலிக்கலாம். இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் ஏழை எளியவர்கள் ஆதிதிராவிடர்கள் வாழும் குடிசைகளுக்கு ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு என்று போட்டுத் தந்த திட்டத்தை, புரட்சித் தலைவியின் வாரிசாக இருந்

கின்ற என்னைப் போன்ற சாமானியர்களை எல்லாம் சட்டசபைக்கு கொண்டு வந்து அண்ணா வழியில் ஆட்சியினை நடத்திச் செல்லும் அன்னையே, இந்த திட்டத்தை தொய்வில்லாமல் நடத்தித் தர வேண்டுகிறேன்.

மின்சாரத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு, பணியாளர்கள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டித் தந்தும், நிரந்தர மற்றவர்களை நிரந்தரமாக நியமிக்க வேண்டும். அவர்களுக்கு ஊதிய உயர்வு தந்தும் காப்பாற்ற வேண்டுமாய். காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-30

1986 ஆம் ஆண்டிலிருந்து பல விவசாயிகள் ஆழ் குழாய் அமைக்க நில வள வங்கியிலிருந்து கடன் பெற்று மோட்டார் வாங்கியும் கட்டிடம் கட்டியும் மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கிறது. வாங்கிய கடனுக்கு வட்டி கூடுதல் ஆவதாலும் வாங்கிய மோட்டார் பம்புகள் கெட்டுவிடும் நிலையில் இருப்பதாலும் விவசாயிகள் மிகவும் கவலையோடு இருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கி அனைவருக்கும் மின்சாரம் வழங்கிட ஆணை பிறப்பிக்க வேண்டுமாய் தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவியைக் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு ஊராட்சிகளில் ஆதித்திராவிட குடியிருப்புகளில் என் தொகுதியில் பல பகுதிகளில் மின்சாரம் இல்லாத நிலை இருக்கிறது. அப்பகுதிகளில் மின்சாரம் வழங்க வேண்டுகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னால் நடப்பட்ட மின்சாரக் கம்பங்கள் கெட்டு கீழே விழுந்துவிடும் அபாய நிலையில் இருப்பதால் அவைகளை மாற்றவும், தரமான மின் அழுத்த கருவிகளை அமைக்கவும் வேண்டுகிறேன். என் தொகுதியில் 82 ஊராட்சிகள், 3 பேரூராட்சிகள், 195 கிராமங்கள் உள்ளன. என் தொகுதியில் பல கிராமங்களுக்கு மின்சாரம் அளிக்கப்படாத நிலை இருக்கிறது. ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் குறைந்த அளவு மின்சார சக்தி இருப்பதால் மோட்டார் இயங்காததால் தண்ணீர் வழங்குவதில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி இங்கே ஒரு பவர் டிஸ்ட்ரிபியூஷன் நிலையம் அமைத்து குறைவாக உள்ள மின் அழுத்தத்தை அதிகப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.





மின் அழுத்த கருவிகள் உறுதியாக இல்லாததால் முதல் நாள் போடப்பட்ட பல்புகள் அடுத்த நாள் எரிவதில்லை. மின் ஒளியும் குறைந்த நிலையில் இருக்கிறது. தேர்தலுக்கு முன்னால் திடீரென்று வீடுகளுக்கு சாவீஸ் கொடுக்க மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. முன்பு 200, 400 ரூபாய் இருந்தது. இப்பொழுது சிறிய வீடு என்றும் பாராமல், பெரிய வீடு என்றும் பாராமல் 810 ரூபாய் சர்வீஸ் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அதே போல கடைகளுக்கும் 900 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அவைகளை குறைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு தங்கத் தலைவியைத் தாள் பணிந்து கேட்டுக்கொள்வதோடு, பேச வாய்ப்புத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அவர்களுக்கும் என் நன்றியைக் கூறி புரட்சித் தலைவி வாழ்க என்று வாழ்த்தி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. கே. சின்னப்பன்.

*** திரு. கே. கே. சின்னப்பன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1991-92 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நூறாவது நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடிக்கொண்டு இருக்கின்ற நமது மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசானது இந்த நிதி நிலை அறிக்கையில் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தியைப் பெருக்குகின்ற திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளதை நான் மனமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜெயங்கொண்டம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை கொண்டு 1,500 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தினை 10 ஆண்டுகளில் துவங்கவுள்ளதை அப்பகுதி மக்களின் சார்பாக பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் 1,500 கோடி செலவில் 500 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் இயங்கவிருப்பதாக அறிவித்துள்ளீர்கள். அதுவும் கூட்டுறவு முறையின் மூலம் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு

டுள்ளது. கூட்டுத் துறையில் தயாரிக்க முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் இங்கே தெரிவிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தனிக் கவனம் செலுத்தி மத்திய அரசிடம் அனுமதியைப் பெற்று ஜெயங்கொண்டம் பகுதியில் இதுவரையில் எந்த ஒரு தொழிற்சாலையும் அமைக்கப்படாத நிலை உள்ள காரணத்தினாலே அப்பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு ஒளி விளக்கினை ஏற்றி வைக்கின்ற அளவில் செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே துவங்க இருக்கின்ற அந்த மின் உற்பத்தி நிலையத்திற்கு நம்முடைய 20 ஆம் நூற்றாண்டின் ஒப்பற்றத் தலைவராக விளங்கிய பாரத ரத்னா இராஜீவ் காந்தியினுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் மின் உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் விநியோகம் செய்யும் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். புதிதாக வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க கடந்த காலங்களில் 300 ரூபாய்க்கு குறைவான கட்டணம் இருந்தது. ஆனால் தற்போது அது ரூ. 900-க்கு மேல் அதிகப்படுத்தப்பட்ட நிலை உள்ளது. இதனால் கிராமப்புறத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகி இன்றைய தினம் மின் இணைப்பை பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே கிராமப் பகுதி மக்கள் நலனைக் கருதி அந்த மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள இந்த அரசானது அந்தக் கட்டணத்தை உடனடியாக குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வழங்கப்படும் ஒரு லைட் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். அந்தத் திட்டத்தின் மூலமாக பல தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெறுகின்ற வகையில் அதிகமான மின் இணைப்புகள் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.35

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகின்றது இதனால் மின் வாரியத்திற்கு சுமார் 550 கோடி இழப்பு ஏற்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை அரசு பரி





சீலனை செய்ய வேண்டும். சிறிய விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு ஒரு சில சலுகைக் கட்டணம் கொடுப்பதன் மூலமாகவும் இதனால் ஏற்படும் இழப்பை ஓரளவுக்கு சரி செய்து மின் வாரியத்தை நஷ்டத்திலிருந்து மீட்டுக்கொள்ள இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயினுடைய நலனைக் கருதியும், விவசாய விளை பொருட்கள் பெருக்கத்தை கருத்தில் கொண்டும் மின் இணைப்புக் கேட்டு பல ஆண்டு காலம் காத்துக் கொண்டிருக்கின்ற விவசாய பெருங்குடி மக்களுக்கு அவர்கள் தாங்களாகவே அந்த மின் இணைப்புக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்கின்றபோது அவர்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து மின் இணைப்பினை அந்த விவசாயிகளுக்கு வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் இவ்வரசை கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற புள்ளம்பாடி வாய்க்காலில் பாசன வசதி பெறுகின்ற விவசாயிகளுக்கு காவிரி டெல்டாப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு அங்கே மின் இணைப்புக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படுகிறது. ஆனால் என்னுடைய தொகுதியிலுள்ள தா. பழூர் பகுதியில் பொன்னாற்றுப் பாசனம் பெறுகின்ற விவசாயிகளுக்கு, இதுவரையில் அங்கே மின் இணைப்பு வழங்கப்படாமல் அங்கே இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்கள் கடந்த 4, 5 ஆண்டு காலமாக போராடி வருகிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு, எப்படி புள்ளம்பாடி வாய்க்காலில் பாசனம் பெறுகின்ற விவசாயிகளுக்கு அதாவது காவிரி டெல்டா பகுதி என்று அறிவித்து முன்னுரிமைக் கொடுத்து அவர்களுக்கு எப்படி மின் இணைப்பு வழங்குகிறார்களோ அதேபோல் தா. பழூர் பகுதியில் இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்களுக்கும் காவிரி டெல்டாப் பகுதி என்று அறிவித்து அவர்களுக்கும் முன்னுரிமைக் கொடுத்து விவசாய பெருங்குடி மக்களுடைய குறையினைப் போக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் இவ்வரசை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அடுத்து, தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் எரிகின்ற விளக்குகள் இப்போது யூனியனில் பராமரிப்பில் இருக்கிறது.

[திரு. கே. கே. சின்னப்பன்] [1991 அக்டோபர் 1

முன்பு மின்சார வாரியத்திடம் இருந்தபோது ஏதோ கோளாறு இருந்ததாக கூறி அதை மாற்றினார்கள். இருந்தாலும் கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மின் விளக்கு எரியவில்லை என்றால் மின்சார வாரியத்தை இன்றையதினம தவறுதலாகப் புரிந்துகொள்கிறார்கள். அதைப் போக்குகின்ற வகையில் மின்சார வாரியத்திடம் மீண்டும் அதை ஒப்படைத்து தெரு விளக்குகள் நல்லமுறையில் எரிவதற்கு ஆவண செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள ஜெயங்கொண்டம் பகுதியில் அதாவது தா. பழூர், மீன் சுருட்டி, ஆண்டிமடம், செந்துறை, உடையார்பாளையம், ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் துணை அலுவலகங்கள் இருந்தாலும் அங்கே கோட்டப் பொறியாளர் அலுவலகம் இல்லாத காரணத்தால் மிகவும் சிரமமான சூழ்நிலையில் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, மெத்த பணிவன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுவது ஜெயங்கொண்டம் பகுதியில் ஒரு மின்சார வாரியத்தினுடைய கோட்டப் பொறியாளர் அலுவலகத்தினை கட்டித் திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1986 ஆம் ஆண்டு முதல் அதாவது 'ஒன் போல் போஸ்டுக்கு' முன்னுரிமைக் கொடுத்து மின் இணைப்பு வழங்கினார்கள். அதை இந்த அரசு 1991 ஆம் ஆண்டு அதாவது இந்த ஆண்டு வரையில் அந்த 'ஒன் போல் போஸ்டுக்கு' முன்னுரிமை கொடுத்து மின்சாரம் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : டாக்டர் பெ. வீர பாண்டியன்.

**டாக்டர் பெ. வீரபாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5½ கோடி மக்களை உள்ளடக்கிய இந்த மாமன்றத்திலே மீண்டும் ஒரு முறை என் கருத்துக்களை அதுவும் மின்சார நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், இந்த மன்றத்திற்கு என்னை அழைத்து, என் கருத்துக்களைச் சொல்லக் காரணமாக இருந்த நம்முடைய



1991 அக்டோபர் 1] [டாக்டர் பெ. வீரபாண்டியன்]

இதய தெய்வம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் நம்முடைய இதய தெய்வத்தைப் பறிக்க வந்த [illegible] நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவித்த பிறகுதான் சட்டமன்ற உறுப் பினராக எங்களை இங்கே அழைத்து வந்து இருக்கிறார்கள். இங்கே அமர வைத்து எங்கள் கருத்துக்களை மக்களின் சார்பாக எடுத்துரைத்து அதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்தில் இங்கே வரவைத்த இதய தெய்வம் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றியைச் சொல்லும்போது நான் எவ்வாறு என் நன்றியைக் காட்டுவது என் இதய தெய்வத்திற்கு என்று நினைக்கும்போது எனக்குத் தெரிந்தது :

"நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலான்"

ஒரு சிறிய தென்னை மரத்தை எஜமானன் வளர்க்கிறார்; தென்னை மரம் சொல்கிறதாம், என்னை சிறு வயது முதல் வளர்த்து ஆளாக்கி, எனக்குத் தண்ணீர் பாய்ச்சி இப்போது வளர்ந்து ஆளாகிவிட்டேன். இந்த தென்னை மரத்திலே இள நீரைச் சுமந்து கொண்டிருக்கிறேன்; இதை அறுத்து, இதை வெட்டி, உன் வாய் ருசிக்க, மனம் குளிர, நெஞ்சு குளிர, நீ குடி, அப்போதுதான் என் நன்றியை நான் தீர்த்துவிட்டதாக அர்த்தம் என்று அந்த தென்னை மரம் சொன்னதாம்.

பிற்பகல் 12.40

ஆனால் நானோ கற்றுணர்ந்தவன். ஒரு மருத்துவன். நான் எந்த வகையில் நன்றியைத் தெரிவிக்கலாம் நம் இதய தெய்வத் திற்கு என்று நான் நினைக்கும்போது [illegible]

[டாக்டர் பெ. வீரபாண்டியன்] [1991 அக்டோபர் 1

இங்கே என்னை அழைத்து வந்து அமர வைத்து, என் பணியைச் செய்ய கட்டளை இட்டார்களோ, அந்தப் பணியை நான் சீராகச் செய்வதும், இதய தெய்வத்திற்கு விசுவாசமாக இருக்கின்றேன் என்ற நோக்கத்தில் என் கருத்துக்களை மின்சார வாரியத்தின்கீழ் சொல்ல முற்படுகிறேன்.

மின்சாரத்தைப் பயன்படுத்தும் அளவுதான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு அளவுகோலாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மற்ற மாநிலங்களைவிட மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்தும் நிலை உள்ளது. மின்சாரம் பல வகைகளிலே நமக்குக் கிடைக்கிறது. ஒன்று, புனல் மின்சாரம். அடுத்தது, அனல் மின்சாரம். மற்றொன்று, அணு மின்சாரம். அதோடு, காற்றாலை மூலமாகக் கிடைக்கும் மின்சாரம், புனல் மின்சாரம் இப்போது போதிய நிலையில் இல்லை. ஆனால் அனல் மின்சாரம், அவசியம் 4, 5 மாவட்டத்திற்கு ஒன்றாகச் சேர்ந்து, ஓர் அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்தினால் தொழில் துறையில் இந்நாடு முன்னேற மிகவும் ஏதுவாக இருக்கும். அவ்வாறு 4, 5 மாவட்டங்களை இணைத்து அனல் மின்சார நிலையத்தைத் துவக்குகின்ற நேரத்தில் என்னுடைய ஏழ்மைத் தொகுதியான செங்கம் தொகுதியில் ஒரு அனல் மின் நிலையத்தை ஏற்படுத்தினால் மனதிற்கு, மிகவும் நிம்மதியாக இருக்கும். ஏழை மக்கள் நன்மை அடைவார்கள். அதுமட்டுமல்ல, இதுவரை கிட்டத்தட்ட 4,75,000 பேர் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, 1977-லிருந்து பதிவு செய்தவர்கள்கூட இன்னும் உள்ளனர். எனவே தேவைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் உற்பத்தி குறைச்சலாக இருக்கிறது. சிறந்த ஒரு பொருளாதார நிபுணர் Multiciplicity of wants and the scarcity of means are thetwo foundation stones.

என்று சொல்லும்போது தேவைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் வரவு குறைச்சலாக இருக்கிறது. இந்நிலை நம்முடைய இதய தெய்வத்தினுடைய ஆட்சியில், Multiplicity of wants and the multiplicity of means என்ற நிலை உருவாக மின்சாரத் துறையைச் செழுமையாக்க நம் அரசு மிகவும் பாடுபட வேண்டும். அதுமட்டுமல்ல, மின்சார வாரியத்திற்கு ஒரு வருடத்



1991 அக்டோபர் 1 [டாக்டர் பெ. வீரபாண்டியன்]

திற்கு கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிற ஒரு நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று நாம் ஆழமாகப் பார்க்கும்போது, No. 1 free electricity, No. 2 theft and No. 3. line loss இந்த மூன்று வகைகளிலேதான் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, இதை நம் முடைய அரசு தீர ஆவன செய்து இந்த மூன்று குறைபாடு களையும் நீக்கினால் நஷ்டம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

அதுமட்டுமல்ல, பாசனத்திற்கு நாம் முன்னுரிமை கொடுப்பது நம்முடைய தலையாய கடமையாகும். கோதாவரி, காவிரி இணைப்பை நாம் ஏற்படுத்தினால் ஒருவாறாக இந்த மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும். அதுமட்டுமல்ல, இந்த மின்சாரத் துறையில் நம்முடைய இதய தெய்வம் ஒரு சிறந்த கொள்கையைக் கடைபிடித்தால் மிக நன்றாக இருக்கும். காரணம் என்னவென்றால், ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சிகளுக்கும் பல்புகள், டியூப்லைட்டுகள் தேவைப்படுவதாக இருந்தால், ஃபியூஸாகிவிட்டால் மெட்ராஸிலிருந்துதான் அந்தந்த ஊராட்சி களுக்கும் நகராட்சிகளுக்கும் வரவேண்டி இருக்கிறது. அது வரையில் நாம் காத்துக்கொண்டிருக்கிற நிலையில்தான் இருக்கின் றோம். எனவே, ஊராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் அதிகாரத்தை வழங்கி உடனுக்குடன் அவர்கள் அதை மாற்று வதற்கு ஏற்பாடு செய்தால் கிராமங்களிலும் நகரங்களிலும் இருள் சூழ்வதைத் தடுக்கலாம்.

அதோடு, ஜவ்வாது மலையில் அமைந்துள்ள என்னுடைய தொகுதியில், அத்திப்பட்டு, புலியூர், மேல்சிலம்படி, பலாமருதூர் ஆகிய கிராமங்களில் மின்சாரம் ஒரு கம்பியின் மூலமாக, அதாவது ஒன் ஃபேஸ் மூலமாக செல்கிறது. இதுதான் அங்கே லைன் லாஸ் ஏற்படுவதற்கு மிகவும் முக்கியமான காரணமாக அமைந் திருக்கிறது. எனவே, இந்த 4 கிராமங்களிலும் கிட்டத்தட்ட இந்த 10 ஆண்டுகள் தெருவிளக்கோ மற்ற எந்த விளக்குகளும் எரியாத நிலை இருக்கிறது. எனவே, நம்முடைய அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தி மலைவாழ் மக்களுக்கு சிறந்த ஒரு சேவை செய்தால் அவர்கள் மனம் குளிரும்.

அதுமட்டுமல்ல, இந்த புலியூர்பள்ளி, கிளையூர் என்ற இரண்டு இடங்கள் ஜவ்வாது மலையில் இருக்கின்றன. அங்கே இரவுப் பள்ளிகளில் பாடம் சொல்லிக் கொடுக்கின்றார்கள். ஆனால் கரண்ட் வசதியில்லாத காரணத்தினால் மாணவர்கள் படிப்பதில் தொல்லைகள் ஏற்படுகிற நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல என்னுடைய தொகுதியிலுள்ள ஜவ்வாது மலையில் தொழிற் சாலைகளை ஏற்படுத்தும் நிலை இருக்கும்பட்சத்தில், திரி ஃபேஸ் (மூன்று பேஸ்) கரண்ட் வசதியை ஏற்படுத்தினால் அங்கே கடுக்காய் மற்றும் டோக்ரா திட்டத்தின் மூலமும் மற்றும் உள்ள திட்டங்களின் மூலம் கிட்டத்தட்ட ஆயிரம் பெண்கள் அங்கே சிறந்த முறையில் பயனடைய ஏதுவாக இருக்கும். எனவே, நம்முடைய இதய தெய்வம் . . . . . . . (மணியடிக்கப் பெற்றது).

பிற்பகல் 12-45.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் பெ. வீரபாண்டியன் :** ஒரு நிமிடம். புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆட்சியில், பேப்பர் தொழிற்சாலை, குப்புனத்தாம் டேம், சந்தனத் தொழிற்சாலை, நூற்பாலை, ரப்பர் தொழிற்சாலை ஆகிய எல்லா திட்டங்களையும் செயல் படுத்த வேண்டும்.

இறுதியாக, நம்முடைய செக்ரடரி ஐ.ஏ.எஸ். ஆபீசரும், சேர்மன் ஐ.ஏ.எஸ். ஆபிசரும் அங்கே இருக்கிறார்கள். சேர்மன் 'டெக்னிகல் பர்சன்' உள்ள ஒருவராக நியமித்து, அதற்கான ஆவன செய்ய வேண்டுமென்று கோரி எனக்கு வாய்ப்பளித்த மைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தே. ஜனார்த்தனன்.

**திரு. தே. ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை சட்டமன்ற உறுப்பினராக உருவாக்கிய இதய தெய்வம், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கங்கள்.



தமிழ்நாடு மின்சார வாரியத்தின், 1990-91 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு குறித்து, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். 31—8—1991 முடிய, விவசாயிகளுக்கு 13.3 லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருப்பதை அறிந்து மகிழ்கிறேன். இந்த ஆண்டு, 40 ஆயிரம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்ப தாக நம்முடைய மதிப்பீட்டிலே அறிவித்திருக்கிறீர்கள். இன்னும் 4.93 லட்சம் நபர்கள் மின் இணைப்புக் கோரி காத்துக் கொண்டிருப்பதாக நம்முடைய புத்தகத்திலே இருக்கிறது. ஏறத் தாழ 40,000 என்று மின்சார இணைப்பு ஒவ்வோராண்டும் கொடுப் பதாக முடிவு செய்தால்கூட, இன்றையதினத்திலே வரை பதிவு செய்திருப்பவர்களுக்கு நிறைவுபெற, கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் ஆகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. விவசாயத்திற்கு மிகவும் முன்னுரிமை கொடுக்கிற நம்முடைய அரசு, இதை மனதிலே கொண்டு, இந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து, குறைந்தபட்சம் ஓராண்டுக்கு ஒரு லட்சம் மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், நம் முடைய அரசாங்கம் 9 லட்சத்து 32 ஆயிரம் குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுத்திருப்பதாக அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். இந்த ஆண்டு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, 40,000 நபர்களுக்கு அப்படிப்பட்ட மின் இணைப்பு கொடுப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் நாட்டில், இதுவரை இன்னும் 7 கிராமங்களுக்கு மின்சாரம் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை இருப்பதாகவும், அந்த 7 கிராமங்களுக்கும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கம், இந்த ஆண்டிலேயே மின்சார வசதி செய்து கொடுத்து, தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, நூற்றுக்கு நூறு கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுப்போம் என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குகிற நம்முடைய அரசாங்கத்தை இந்த தருணத்திலே பாராட்டு கிறேன். சேலம், என்னுடைய மாவட்டத்திலே, நிலத்தடி நீரை நம்பித்தான் விவசாயம் இருக்கிறது. தற்போது ஏற்பட்டி ருக்கக்கூடிய பலவித சூழ்நிலைகளின் காரணமாகவும் மற்றும் அங்கே இருக்கிற என்.எல்.சி -யினுடைய காரணமாகவும், நிலத்தடி,

[திரு. தே. ஜனார்த்தனன்]

நீர் குறைந்து, தற்போது அங்கே நிலத்தடி நீரே இல்லை. அதன் காரணமாக அங்கே இருக்கிற விவசாயிகள் எல்லாம், மோட்டார்களினுடைய எச்.பி.-யை அதிகரித்துக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி, அப்படி செய்கின்ற நேரத்திலே அவர்கள் மின்சார இலகாவிலேயிருந்து அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே இருந்த மோட்டார்களை மாற்றி, அதிக திறன் வாய்ந்த, சக்தி வாய்ந்த மோட்டார்களை இணைப்பதற்கு, மின்சார இலாகாவிலே இருந்து பெறக்கூடிய அனுமதியைப் பெற காலதாமதம் ஏற்படுகிறது. அந்தத் தருணத் திலே அங்கே இருக்கிற பயிர்களை எல்லாம் வெட்டக்கூடிய சூழ் நிலை உருவாகியுள்ளது. தற்சமயம் கடந்த வாரத்திலேகூட, என் னுடைய மாவட்டத்திலே 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறிய வள்ளலாருடைய மாவட்டத் திலே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அதை நம் முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கொண்டுவந்த நோத்திலே, அவர்கள் சரியான நேரத்திலே தலை யிட்டு, அங்கே இருக்கிற கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் விவசாயப் பெருங்குடி மக்களுடைய நிலங்கள் காய்ந்து போகக்கூடிய நிலை மையைத் தவிர்த்து, நல்ல ஒரு செயலைச் செய்து எங்களை மகிழ் வித்தார்கள். அதற்காக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் பகுதியிலே நெய்வேலியில் இருக்கிற சுரங்கம் வெட்டுகிற இடத்திலே அதிக தண்ணீர் வெளியேற்றிக் கொண்டிருக் கிறார்கள். அங்கே நிலத்தடி நீரை வெளியேற்றி அதன் பிறகுதான் அந்த நிலக்கரி எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி அதிக நிலத்தடி நீரை வெளியேற்றுவதன் காரணமாக, நெய்வேலிக்கு அருகிலே இருக்கிற உளுந்தூர்பேட்டை, கடலூர் மற்றும் பண்ருட்டி தாலுக்காக்களிலே இருக்கிற விவசாயிகளி னுடைய, விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அந்தப் பகுதி களிலே இருக்கக்கூடிய நிலத்தடி நீரின் மட்டம் குறைகிற காரணத் தினால், அங்கே இருக்கிற விவசாயிகள் எல்லாம், அதிக திறன்



[திரு. தே. ஜனார்த்தனன்]

வாய்ந்த மோட்டார்களை பொருத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக் கிறது. ஆக, அதிக திறன் வாய்ந்த மோட்டார்களைப் பொருத்து கிற நேரத்திலே அங்கே இருக்கிற 'டிரான்ஸ்பார்மர்கள்' அந்த சக்திக்குத் தாங்காமல், வெடித்து—ஏறத்தாழ இந்த இடத்திலே 75 'டிரான்ஸ்பார்மர்கள்' வெடித்து, இன்றையதினம் பழுதடைந்து இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த 75 டிரான்ஸ்பார்மர் களைப் பயன்படுத்துகிற, சுற்றுப்புறத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் இன்றையதினம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால், நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய புரட்சித் தலைவி அவர் களுடைய அரசும் தீவிர கவனம் செலுத்தி, போர்க்கால அடிப் படையிலே அந்த 75 டிரான்ஸ்பார்மர்களையும் உடனடியாக செப்பனிட்டுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.50

மேலும், நெய்வேலியிலே தற்போது சுரங்கம் வெட்டி அதனால் வெளியேற்றப்படுகிற தண்ணீரின் காரணமாக அங்கே இருக்கிற விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகிறார்கள். அதனால் நம்முடைய வனம்தான் காரணம் என்பதால், அதிக ஆழத்தில் ஆழ்குழாய்க் பதற்கு செலவு அதிகமாகிறது. அந்தச் செலவுகளை நெய்வேலி நிலக்கரி சுரங்க நிறுவனத்திடமிருந்து 'காம்பன்சேஷன்' என்ற முறையில் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நெய் வேலி நிலக்கரி நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக் கிறார்கள். அந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அப் போது ஒரு முடிவு ஏற்பட்டது. அந்த முடிவின்படி நெய்வேலியைச் சுற்றியிருக்கிற கடலூர், உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி தாலுகா வில் இருக்கிற விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விடுகிற காரணத்தால்—அதற்கு அந்த நெய்வேலி நிலக்கரி நிறு வனம்தான் காரணம் என்பதால், அதிக ஆழத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து சக்தி வாய்ந்த மோட்டார்களைப் பயன்

[1991 அக்டோபர் 1

[திரு. தே. ஜனார்த்தனன்]

படுத்த வேண்டியிருப்பதால் அப்படிப்பட்ட செலவுகளை நெய்வேலி நிலக்கரி நிறுவனமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த முடிவு தற்போது எந்த நிலையில் இருக்கிறது? அது ஏன் செயல்படவில்லை என்று தெரியவில்லை. அருள்கூர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி அந்தப்பகுதி விவசாயிகளுக்கு நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து காம்பன்சேஷன் வாங்கிக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே பழுதுபட்டுப்போன 75 டிரான்ஸ்மிட்டர்களைச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும் அல்லது அந்த விவசாயிகள் மேற்கொண்டு நீர் மோட்டார்களை வாங்குவதற்கு உதவி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. சா. பழனிசாமி அவர்கள்.

**திரு. நா. சா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவியின் 100-வது நாள் பொற்கால ஆட்சியிலே இந்த மின்சார வாரியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாட்டினுடைய விடுதலைக்காகப் பிறந்த காங்கிரஸ் பேரியக்கம் போல, தமிழரின் சுயமரியாதைக்காகப் பிறந்த திராவிட இயக்கம் போல, விவசாயிகளை மின்சாரக் கட்டணத்திலிருந்தும் கடனிலிருந்தும் காப்பாற்றப் பிறந்ததுதான் தமிழக விவசாயிகள் சங்கம். 1970 ஆம் ஆண்டிலே அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைஞர் தலைமையிலான அரசு, யூனிட்டுக்கு 6 பைசாவாக இருந்த மின் கட்டணத்தை 8 பைசாவாக உயர்த்தியது. அன்றைக்கே கோவை மாவட்டத்தில் 100 அடிக்கும் கீழே ஆழமாகக் கிணறுகள் இருந்தன. அப்போது மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியதை எதிர்த்து விவசாயிகள் நடத்தியப் போராட்டத்திலே 19—6—1970-ல் 3 விவசாயிகள் பெருமா



1991 அக்டோபர் 1]

[திரு. நா. சா. பழனிசாமி]

நல்லூரிலே ஆயிக் கவுண்டர், இராமசாமிக் கவுண்டர், மாரப்ப கவுண்டர் என்ற விவசாயிகள் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகிறார்கள். அதற்குப் பிறகு கூட மின்சாரக் கட்டணம் குறைக்கப்படவில்லை.

மீண்டும் 1972-ல் மின் கட்டணம் யூனிட்டுக்கு 8 பைசாவிலிருந்து 12 பைசாவாக உயர்த்தப்படுகிறது. அதை எதிர்த்து தமிழகம் தழுவிய போராட்டத்தை விவசாயிகள் நடத்துகிறார்கள். கோவை மாநகரிலே மாட்டு வண்டி முற்றுகை போராட்டம் நடக்கிறது. அந்த மாட்டு வண்டி முற்றுகைப் போராட்டத்தோடு 40,000 விவசாயிகள் தமிழகத்தினுடைய பல்வேறு சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள். அதற்குப் பிறகு கலைஞர் கருணாநிதியினுடைய அரசு விவசாயச் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களை சிறையிலிருந்து விடுவித்து சென்னைக்கு பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறது. அந்த மாட்டுவண்டி முற்றுகைப் போராட்டம் வாபஸ் பெறப்படுகிறது. சென்னைக்கு வந்த விவசாயச் சங்கத் தலைவர்களை—நான் பேச்சுவார்த்தைக்கு உங்களை அழைக்கவில்லை, என்று சொல்லி அவமானப்படுத்தி அனுப்புகிறார் கருணாநிதி.

அதற்குப் பிறகு 1972 ஜூலை 5-ந் தேதி நடந்த முழு அடைப்புப் போராட்டத்திலே 17 விவசாயிகள் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகிறார்கள். இத்தனைக்கும் பிறகுதான் 12 பைசாவாக இருந்த மின் கட்டணம் 11 பைசாவாகக் குறைக்கப்படுகிறது. 'ஒரு பைசாவுக்கு நடந்த போராட்டம் இது' என்று அந்தப் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எள்ளி நகையாடினர்.

அதற்குப் பிறகு 1976-லே நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டபோது 11 பைசாவாக இருந்த மின் கட்டணம் 16 பைசாவாக மீண்டும் உயர்த்தப்படுகிறது. அதை எதிர்த்துதான் மின் கட்டணத்தைக் கட்டுவதில்லை என்று வரிகொடா இயக்கப் போராட்டத்தை விவசாயிகள் சங்கம் நடத்துகிறது. அந்தப் போராட்டத்தின்போது சென்னையிலே நாராயணசாமி நாயுடு அவர்கள் போராட்டம் நடத்த வந்த நேரத்திலே புரட்சித் தலைவர் அவர்களை, அவர்கள் 'சிரித்து வாழ வேண்டும்' படத் தயாரிப்பில்

[1991 அக்டோபர் 1

[திரு. நா. சா. பழனிசாமி]

இருந்த நேரத்தில், சென்று சந்திக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு சட்டத் துறை அமைச்சராக இருக்கிற கே. ஏ. கே. அவர்களை அனுப்பி அந்த மின்சாரப் போராட்டத்தை வாழ்த்துகிறார்கள்.

பிற்பகல் 12-55

அதற்குப் பிறகு 1977-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி தமிழ்நாட்டிலே வந்தபோது அந்த மின்சாரக் கட்டணம் 16 பைசா யூனிட்டுக்கு என்று இருந்தது. 14 பைசா பெரிய விவசாயிகளுக்கும் 12 பைசா சிறிய விவசாயிகளுக்கும் என்று குறைக்கப்படுகிறது. 1980 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலே புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக விவசாயிகள் சங்கத்தினுடைய தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களிடம் ஆதரவு கேட்டு வந்த நேரத்திலே, மின்சாரக் கட்டணக் குறைப்புக்கும், கடன் தள்ளுபடிக்கும் வாக்குறுதி கேட்கிறார். மீண்டும் 1984-லே புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டபோது, 1984-ல் சுதந்திர தினக் கொடியை கோட்டையிலே ஏற்றிவைத்துப் பேசுகின்றபோது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரமும், பெரிய விவசாயிகளுக்கு ஒரு குதிரைத் திறன் சக்திக்கு ( One horse power -க்கு) 75 ரூபாய் கட்டண முறையையும் கொண்டு வருகிறார்கள். மீட்டர் என்ற முறையிலே விவசாயிகள் பட்ட பல்வேறு தொல்லைகளை ஒழித்து ( Flat Rate ) என்ற கட்டண முறையைக் கொண்டு வருகிறார்கள். மீட்டர் பழுது பட்டால் அந்த மீட்டருக்கும் சேர்த்துக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை விவசாயிகளுக்கு இருந்தது. அந்த அளவிலே அவர்கள் (One hourse power -க்கு) 75 ரூபாய் என்ற முறையைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் ஒரு Horse power -க்கு 50 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று விவசாயிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்தது. ஏனென்றால், அரசினுடைய நிதி ஆதாரத்திலே இருந்து நீரைப் பாய்ச்சுகின்ற விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய்தான் நீர் வரியாகக் கொடுக்கின்றார்கள். ஆனால் விவசாயிகள் தாங்களே கிணறு வெட்டி மின்சார மோட்டாரைப் பொருத்தி நீரைப் பாய்ச்சுகின்றபோது ஒரு ஏக்கருக்கு 1,000 ரூபாய் செலவு பிடிக்கிறது. எனவே, ஒரு குதிரைத் திறன் கொண்ட மோட்டாருக்கு ஒரு ஆண்டுக்கு, ஐந்து ஏக்கருக்கு நீர்



1991 அக்டோபர் 1] [திரு. நா. சா. பழனிசாமி]

பாய்ச்சக்கூடிய திறன்படைத்த மோட்டாருக்கு ஐந்து ரூபாய் கட்டணம் விதிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் இலவசமாகவே மின்சாரம் வழங்குகின்ற திட்டத்தை அறிவித்திருந்தார்கள். ஆனால் அவர்களுடைய உடல்நிலையின் காரணமாக, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு 1989 ஆம் ஆண்டு பதவி ஏற்ற நேரத்திலே ஒரு குதிரைத் திறன் கொண்ட மோட்டாருக்கு 75 ரூபாய் என்று இருந்ததை 50 ரூபாய் என்று குறைத்தார்கள். அப்போது விவசாயிகள் சங்கத் தலைவர்கள், கலைஞர் கருணாநிதி அவர்களைச் சந்தித்து நீங்கள் இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, அவர்கள் கஜானாவும் காலி ; களஞ்சியமும் காலியாக உள்ளது. ஆகவே, உங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொன்ன கருணாநிதி அவர்கள் மத்தியிலே வி. பி. சிங் ஆட்சியினுடைய வீழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் அரசியல் ஆதாயம் கருதி விவசாயிகளினுடைய ஓட்டுக்களைப் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவித்தார்கள். இருந்தாலும் கூட, விவசாயப் பெருமக்கள் புரட்சித் தலைவி அவர்கள் பக்கம் நின்று, புரட்சித் தலைவியினுடைய இந்த அரசு சிறப்பான ஆட்சியைத் தமிழகத்திலே கொண்டு வந்து இருக்கிறார்கள் (மணியடிக்கப் பெற்றது). இப்போது புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி தமிழகத்திலே வந்திருக்கின்ற நேரத்திலே இந்த போராட்ட வரலாற்றை... நான் எதற்காக சொன்னேன் என்றால், இந்த மின்சாரக் கட்டணம் பல்வேறு காலகட்டத்திலே, விவசாய இயக்கங்கள் போராடியதன் மூலம் பெற்ற அந்தச் சலுகைகளைத் தயவுசெய்து புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து, அதன் மூலமாக 'வெறும் வாயை மென்று கொண்டிருந்த கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு அவல் கிடைத்ததைப்போல்' விவசாயிகளைத் தூண்டிவிட சந்தர்ப்பம் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். கீழ்க்கண்ட கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வைக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

புதிய மின் இணைப்புகள் விரைவாகக் கொடுக்கப்பட வேண்டும். கூடுதல் திறன் கொண்ட

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 அக்டோபர் 1

விரைவாகக் கொடுத்தால்தான் ஆழமாக கிணறுகள் செல்கின்ற நேரத்தில் அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீரைப் பாய்ச்ச முடியும். அப்படி Additional load கொடுக்காத நேரத்திலே அதை பாய்ச்சுகின்றபோது மின்சாரத் திருட்டாக அதைக் கருதி, மின்சார வாரிய அதிகாரிகள் அதற்கு அபராதம் விதிக்கிறார்கள். விவசாயக் காரியங்களுக்கு, கதிர் அடிக்கின்ற காரியங்களுக்கு, கரும்பு அடிக்கின்ற காரியங்களுக்கு RFC இல்லாமல் அனுமதி வழங்க வேண்டும். பகலிலே அதிக நேரம் மின்சாரம் வழங்க வேண்டும். கூடுதல் மின் திறனை அதைத் திருட்டாக கருதுவதைத் தவிர்க்க வேண்டும். விவசாயிகள் கிணற்றிலிருந்து பாய்ச்சுகிற நீருக்கும் ஒரு அபராதக் கட்டணம் விதிக்கிறார்கள். அதை நீக்க வேண்டும். அத்தோடு விவசாயப் போராட்டக் காலத்திலே பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த போராட்டத்திற்குப் போடப்பட்ட வழக்குகள் இன்னும் அரசிடம் உள்ளன. விவசாயிகள் அதற்காக நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அருமையான வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.**

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற மின்சார வாரிய அறிக்கையின் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்கு முதலாவது என்னுடைய நன்றியைக் கூறிக் கொண்டு, உங்கள் முன்னாலே சில கருத்துக்களையும், சில வேண்டுகோளையும் வைக்கலாம் என்று விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

இன்றைய தினம் நீங்கள் தந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையின் மீது ஓர் ஆண்டுக்கு கிட்டத்தட்ட 269.34 கோடி ரூபாய் அதிகமாகப் பணம் கிடைக்கின்ற விதத்தில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இங்கே எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் திரு. பழனிச்சாமி அவர்கள் குறிப்பிட்டபோது கூட 1970-ல் 2 காசு மின்சாரக்



1991 அக்டோபர் 1] [டாக்டர் தே. குமாரதாஸ்]

கட்டணம் கூட்டியதற்காக நடைபெற்ற போராட்டங்களில்
துப்பாக்கிச் சூடு நடந்ததாகக்கூட நினைவுப்படுத்தினார்கள். நாம்
ஒரே நேரத்தில் கூட்டுகிறோம். அதாவது 100 யூனிட் வரை உப
யோகிப்பவர்களுக்கு 70 காசாகவும், அதற்கு மேல் 300 யூனிட் வரை
உள்ளவர்களுக்கு 90 காசாகவும், 300-க்கு மேலே உள்ளவர்களுக்கு
ஒரு ரூபாய் 40 காசாகவும் உயர்த்துகின்ற ஒரு சூழ்நிலை இருப்
பதைக் குறிப்பிட்டிருக்கிறபோது, ஏற்கெனவே இருந்ததைவிட
அது ஒரு மடங்கு அதாவது கிட்டத்தட்ட ஒன்றரை மடங்கு
என்று கூட சொல்லலாம், இவ்வளவு தூரத்திற்கு நீங்கள் மின்
கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். மின்சாரத்தைப் பொறுத்த
வரையில் எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் மின்சாரத்
திற்கு அதிகமாகப் பணம் பெறாமலும் நிர்வாகம் நடத்த முடியாது
என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் இதைத் தாங்குகிற
சக்தி இல்லை என்கிற சூழ்நிலையில் நாங்கள் இந்த மின் கட்டண
உயர்வைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இன்னும் ஒன்றை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு
கிறேன். சென்னையில் வாழ்கிற ஒரு சில நண்பர்கள் என்னைச்
சந்தித்து ஒரு சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.
பொதுவாக ஒரு வீட்டிலே 5 குடித்தனங்கள் இருக்கின்றன என்று
சொன்னால் அங்கே ஐந்து சப் மீட்டர்களை வைத்திருக்கிறார்கள்.
அங்கே குடியிருப்பவர்கள். அந்த சப் மீட்டரிலே என்ன ரீடிங்
என்று பார்க்கிறபோது மாதத்திற்கு அவர்களுக்குக் குறைந்த
பட்சம் 70, 80, 90 யூனிட் என்ற அளவுக்குத்தான் வருகிறது.
ஆனால் சப் மீட்டர் ரீடிங் என்பதை யாரும் பார்க்காமல் பொது
வாக இருக்கின்ற மெய்ன் மீட்டரை மட்டும் பார்த்து அதிலே உள்ள
கணக்குகளை குறிப்பிடுகிறார்கள். 5 குடித்தனங்களுக்கும் தனித்
தனியாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிற சூழ்நிலையில் மொத்த
மாகச் சேர்த்து 300 யூனிட்டுக்கு மேல் ஆகிவிடுகிறது. அப்படி
மொத்தத்தில் 300 யூனிட்டைத் தாண்டிவிட்டது என்று வைத்துக்
கொண்டால் அதற்கும் ஒரு ரூபாய் 40 காசு வீதம்தான் பணம்
செலுத்தவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக உங்களுடைய
நிர்ணயப்படி 70 காசுக்கும் குறைவாகக் கட்ட வேண்டியவர்கள்
300 யூனிட்டைத் தாண்டுகிற காரணத்தால் ஒரு ரூபாய் 40 காசு
வீதம் பணம் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே,

அதை கவனத்தில் கொண்டு அப்படிப்பட்ட பாதிப்பு வராத விதத்தில் அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரலியாறு ஸ்கீம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதுகுறித்த எல்லா வேலைகளைப் பொறுத்தவரையிலும் மத்திய அரசிடமிருந்து கூட க்ளியரன்ஸ் எல்லாம் வந்துவிட்டது. ஆனால் நம்முடைய வன இலாக்கா அந்த இடத்தை கொடுக்க முன்வராத காரணத்தால் இரண்டு, மூன்று ஆண்டுகளாக அந்த பரலியாறு திட்டம் செயல் படுத்தப்படாமல் இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து நம்முடைய தமிழக அரசின் வனத்துறை அதற்குக் கிளியரன்ஸ் கொடுத்தால் அந்தத் திட்டம் வெகு விரைவில் நிறை வேற்றப்பட முடியும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1991-92-க்கான திட்டத்தில் நீங்கள் 40,000 புதிய மின்னி ணைப்புகள் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் கடந்த ஆகஸ்ட் மாதம் வரை கொடுத்து இருப்பது என்னவென்று சொன்னால் 11,853 தான். இப்படி உங்களுடைய விளக்கத்தில் சொல்லியிருக்கிறீர்கள். ஆகஸ்டுக்குப் பிறகு உள்ள 4 மாதத்திற்குள் மீதம் உள்ள கிட்டத் தட்ட 30,000 மின்னிணைப்புகளையும் கொடுக்க முடியுமா? எனவே, உங்களுடைய திட்டம் எப்படி நிறைவேறும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல மைச்சராக இருந்த நேரத்தில் உடன்குடி, சாத்தான்குளம், ராதா புரம் போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் இல்லை என்ற சூழ் நிலையில் அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வேண்டும் என்று கேட்ட நேரத்தில் மின்னிணைப்பு தூண்கள் இல்லாததால் எங்களால் மின்னிணைப்பு கொடுக்க முடியவில்லை என்று சொன் னார்கள். அப்போது ஊருக்கு ஒரு பனைமரம் இருக்கிறதா என்று பெருந்தலைவர் அவர்கள் கேட்டார்கள். அப்படி இருக்கிறது என்று சொன்னால் போஸ்ட் வருவது வரைக்கும் நீங்கள் காத்து இருக்க வேண்டாம் உண்மையிலேயே மக்களுக்கு தொண்டாற்ற வேண்டுமென்று சொன்னால் பனைமரத்திற்கு பனை மரம் கனெக்ஷன் கொடுத்து அந்த ஊர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டுங்கள் என்று சொன்னார்கள். அப்படி எல்லாம் மின்சாரம் கொடுத்த காலகட்டங்கள் உண்டு. எனவே, வெகுவாகக்



காலத்தைத் தள்ளிப்போடாமல், உபகரணங்கள் இல்லை என்று சொல்லாமல் விரைவாகப் பணியாற்ற வேண்டும். நீங்களே நிர் வகித்து வரக்கூடிய இலாக்காவிலே உபகரணங்கள் இல்லை என்று சொல்கிற குறை இருக்கக்கூடாது. ஏனென்றால் பொது மக்கள் வாங்கித்தர முடியாது. நீங்கள் அதற்குத் தகுந்த உபகரணங்களை உற்பத்தி செய்து மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல் இன்னும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இலாக்காவினுடைய கணக்கைச் சொல்கிறேன். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் 222 இடங்களில் மின் அழுத்தக் குறைவு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு சிறிய மாவட்டம். அங்கே 222 இடங்களில் மின் அழுத்தக் குறைவு இருக்கிறது என்று சொன்னால் அந்த பகுதி எப்படி இருக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

விவசாயத்திற்கு என்று சொன்னால், மோட்டாரை 'ஆன்' பண்ணிய உடனேயே, வோல்டேஜ் டிராப் அவுட் காரணமாக காயில் எரிந்துவிடக்கூடிய சூழ்நிலை, இதனால் விவசாயிகள் பெருவாரியாகப் பாதிக்கப்படுகிறார்கள். 10 ஆயிரம் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்று சொல்லி பல ஆண்டு களாகப் பெண்டிங்-ல் இருக்கின்றது. இந்த ஆண்டு தருகிறோம், அடுத்த ஆண்டு தருகிறோம் என்று சொல்லி இன்றுவரை 6 ஆண்டு காலமாக 10 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் கொடுப்பதிலே பெண்டிங்-ல் இருக்கின்றவைகளை உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கே இரண்டு சப்ஸ்டேஷன்கள். அதில் 100 ஒன்றிலே இடங்கள் எல்லாம் அக்கொயர் செய்த பிறகும் கிலோ வாட்ஸ்க்கான மஞ்சேரி பகுதியில், அந்த ஒரு சப்ஸ்டேஷன் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை எல்லாம் வைத்து நாளைய மறுதினம் மறியல் போராட்டம் நடத்துவதாக நாங்கள் முடிவெடுத்திருந்தோம். அதை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்ட நேரத்திலே இதற்கான வேண்டிய நட

வடிக்கைகளை மேற்கொள்கிறோம். தற்சமயம் இந்த போராட்டம் வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதன் காரணமாக இந்த போராட்டத்தைத் தள்ளி வைத்திருக்கிறோம். இருந்தாலும் இத்தனைக்கும் சேர்ந்து 4 கோடி ரூபாய் கேட்கிறார்கள். பல ஆண்டுகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். கொடுக்கப் படாமல் இருக்கிறது. எனவே, முடிந்த அளவுக்கு அந்த டிரான்ஸ் பார்மர்கள் மின்சாரத் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற விதத்திலே புதிதாக மின் இணைப்புகளை கொடுக்கின்ற விதத் திலே இந்த சப்-ஸ்டேஷனை அமைத்துத் தருகின்ற விதத்திலே நீங்கள் மிக முக்கியமாக இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இலவசமாக மின்சாரம் வழங்குவது பாராட்டக் கூடிய விஷயம். (மணியடிக்கப் பெற்றது.) இதிலே பொள்ளாட்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 142 விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படவில்லை என்ற தகவலை எனக்குத் தந்திருக்கிறார்கள். எனவே, அந்த பொள்ளாட்சி நகராட்சிக்குட் பட்ட பகுதியில் உள்ள அந்த 142 விவசாயிகளை மாத்திரம் ஏன் விட்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, நீங்கள் அதிலே நேரடியாக கவனம் செலுத்தி அந்த பகுதியில் உள்ள அந்த 142 விவசாயிகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல, இந்த மின்சார வாரியத்தில் பொறியாளர்கள் வேலைக்கு நியமிக்கப்படுகின்றபோது, 60 சதவிகிதம் மதிப் பெண்கள் பெற்ற இளம் பொறியாளர்கள் எடுக்கப்படவேண்டும் என்று நிபந்தனை வைத்திருந்தாலும், 72-க்குக் குறைவாக அங்கே மதிப்பெண்கள் பெற்று வந்தவர்களுக்குக்கூட பிற்படுத்தப் பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்களுக்கு பெருவாரியாக வேலை வாய்ப்பு மின்சார வாரியத்தில் இளம் பொறியாளர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. எனவே, படித்துப் பட்டம் பெற்று வந்தவர்களுக்கெல்லாம் நீங்கள் அதற்குப் பிறகு தேர்வு வைப்பதுபோல வைத்து அவர்களை நீங்கள் களைந்து விடுவீர்கள் என்று சொன்னால் அவர்களுடைய வாழ்க்கை வறண்டுவிடும். எனவே, அந்த மெரிட் என்பதை



மாற்றி படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்து தர வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையின் இந்த மசோதாவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரத்தை தமிழகத்திலே உற்பத்தி செய்வதற்கு அனல், புனல், காற்றலை, கதிரொலி, கடல் அலை போன்றவற்றின் மூல மாக இன்றைக்கு நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்து, உலகத் தினையே இயக்கும் ஒரு பெரும் சக்தியான மின்சாரத்தை நம் நாட்டிலே உற்பத்தி செய்கிறோம். ஆனாலும்கூட இந்த துறை யிலே நாம் முழுவதுமாக பூரணமான திருப்தி அடைந்திருக் கிறோமா என்றால் இல்லை. சுமார் 4,500 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு இந்தியாவிலேயே இருக்கின்ற இந்த மின் வாரியத் திலே நமக்கு நஷ்டம் என்று சொல்லக்கூடிய அளவிலே இருக் கின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் சுமார் 500 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு நஷ்டத்தைக் கணக்குக் காட்டக்கூடிய ஒரு துறையாக இன்றைக்கு மின்சார வாரியத் துறை இருக் கின்றது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 600 மெகா வாட், இப் போது இருக்கின்ற மின்சாரத்தை விட இன்னும் 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும். நம்முடைய தமிழகத் தினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கக்கூடிய நிலையில் இருந்து கொண்டு இருக்கிறோம்.

அனல் மின் நிலையத்திற்கு வரும், அதாவது இந்த மின் சாரத்தை நாம் உற்பத்தி செய்வதற்கு, நாம் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு என்னென்ன வழிவகைகள் தேடலாம் என்பதை நாம் இப்போது முக்கியமாக ஆராயவேண்டிய சூழ்நிலையில் நம் தமிழகம் இன்றைக்கு இருக்கிறது. அனல் மின் நிலையத்திற்கு

வேண்டிய நிலக்கரியானது இன்றைக்கு விலை அதிகமாக இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல, இங்கே தமிழகத்திற்கு வரக்கூடிய நிலக்கரியானது மிகவும் தரம் குறைந்த தாக இருக்கின்றது என்று கூட சொல்லப்படுகின்றது. தூத்துக்குடி தெர்மல் பிளான்ட்-க்கு வரக்கூடிய நிலக்கரி, நம்முடைய அனல் மின் நிலையங்களுக்கு வரக்கூடிய நிலக்கரி, தரமானதாக உள்ளதை நாம் வாங்குவதற்கு அரசு முனையவேண்டும் என்பதை நான் இங்கே கோரிக்கையாக வைத்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதுபோலவே, நெய்வேலி, கல்பாக்கம் அனல் நிலையத்தில் மற்றும் மத்திய மின் தொகுப்பிலே உள்ள அந்த மின்சாரத்தையும் நம் தமிழ்நாட்டுக்குத் தேவையான அளவுக்கு மின்சாரத்தையும் வாங்குவதற்கு, அரசு ஆவன செய்யவேண்டும் என்பதையும் நான் இங்கே கோரிக்கையாக வைத்துக்கொள்கிறேன். புனல் மின்சாரம், மிகவும் செலவு குறைந்த மின்சாரமாக இந்த மின்சாரம் இருக்கிறது. புனல் மின்சாரத்தை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதுபோல சூரிய வெப்பத்திலிருந்து, சோலார் எனர்ஜி என்று சொல்லக்கூடிய அதிலிருந்தும், கடல் அலையிலிருந்தும், எரி வாயுவில் இருந்தும், மின்சாரம் உற்பத்தி செய்தோம் என்றால் தமிழகத்தின் மின் உற்பத்தி செலவு குறைந்தும், அதிகமான மின் உற்பத்தி ஏற்பட்டும் மக்களுடைய தேவையினை பூர்த்தி செய்ய வாய்ப்பாக இருக்கும் என்பதை இங்கே உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு செயல்பாட்டு திறன் என்பது எண்ணூர் மின் நிலையத்தை எடுத்துக் கொண்டால் 58.2 சதவிகிதம் என்று இருக்கிறது. ஆனால் தூத்துக்குடி தெர்மல் பிளான்டை எடுத்துக் கொண்டோம் என்றால் செயல் திறன் 72.62 சதவிகிதத்திலே இருக்கிறது. இந்த செயல் திறன் எண்ணூரில் உள்ள மின் நிலை யத்தில் மட்டும் குறைவாக இருக்கிறது என்பதை கணித்து இந்த செயல் திறனைக் கூட்டினால்தான் மின்சார உற்பத்தியில் நாம் பூரண நிலையை அடைய முடியும். இன்றைக்கு தூத்துக்குடி யிலுள்ள அனல் மின் நிலையம் மிகவும் சிறப்பாக பணியாற்றிக்



கொண்டிருக்கிறது. தூத்துக்குடியில் அதை விரிவுபடுத்தி இன்னொரு யூனிட்டை உருவாக்குவதற்கு அரசு மிக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்கள் மத்தியில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, மின்சார திருட்டு சர்வ சாதாரணமாக நடை பெறுகிறது. அதுவும் பெரிய தொழில் அதிபர்கள், தொழிற்சாலை அதிபர்கள் இந்த மின்சாரத்தை சாதாரணமாக திருடிக் கொண்டு, ஏழையெளிய மக்களுக்குக்கூட வரக்கூடிய மின்சாரம் கூட திருடப்படுவதால் அரசுக்கு பேரிழப்பு ஏற்படுகிறது. இந்தத் திருட்டுகளை அடியோடு ஒழிப்பதற்கு இந்த அரசும் இந்தத் துறை அதிகாரிகளும் முனைப்பாக இருந்து நடவடிக்கை எடுத்து முற்றிலுமாக இதை தடை செய்ய வேண்டும்.

அதேபோல மின்சார கம்பங்களும், மின்சார ஒயர்களும் அதிக மாக 10 ஆண்டுகளாக ஓரிடத்தில், ஓர் மாவட்டத்தில் குவிக்கப்பட் டிருக்கின்றன. இவற்றை எல்லாம் அடுத்த மாவட்டங்களுக்கும் அனுப்பி வைத்தோம் என்றால் செலவை குறைக்க முடியும். அது போல இன்றைக்கு காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் கூட, சில சங்கங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் இது கொடுக்கப்படுகிறது. இதில் பாரபட்சம் இருக்கிறது, இதைப்போன்று பாரபட்சம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து புரடக்டிவிட்டி லிங்க் என்கிற போனஸ் முறையை மின்சார இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல என்னுடைய தொகுதியில் குறிஞ்சிகுளத்தில் ஒரு சப் ஸ்டேசன் இருக்கிறது. அதை இயங்கச் செய்ய வேண்டும். அதுபோல ஊத்துமலையில் இருக்கிற சப் ஸ்டேசனையும் இயங்கச் செய்ய வேண்டும். அப்படி இயங்கச் செய்து விவசாயி களுக்கு நல்ல ஹை பவர் என்று சொல்லக்கூடிய மின்சாரத்தை, லோ வோல்டேஜ் இல்லாமல் கரண்ட் கொடுத்தால் தான் அங்குள்ள பம்ப் செட்டுகள் எல்லாம் இயங்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, கூடங்குளத்தில் வர இருக்கின்ற அணு மின் நிலையம் மிகவும் முக்கியமானது. இதுகுறித்து மக்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டது. பலர் இதை எதிர்த்திருந்தாலும், ஆபத்து விளைவிக்கக் கூடியது என்று சொன்னாலும் கூட இன்றைக்கு இதை கூடங்குளத்தில் நிறுவ இருக்கிறோம். ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய கூடங்குளம் அணு மின் நிலையத்திலிருந்து வரக்கூடிய மின்சாரத்தில் 75 சதவிகிதத்தையாவது நம்முடைய தமிழகத்திற்கு வாங்க வேண்டியது நம்முடைய அரசின் கடமையாகும். ஆகவே, இந்த 75 சதவிகித உற்பத்தியை தமிழகத்திற்கு வாங்க வேண்டும் என்பதை உங்கள் மத்தியில் சொல்லிக்கொண்டு, கூடங்குளத்திலுள்ள மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையிலே, நல்லமுறையில் இதனை செயல்படுத்த வேண்டும் என்பதையும் உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் ஒன்றை சொன்னார்கள். ஒரு ரூபாய் 40 பைசாவுக்கு என்று மொத்தமாக வீடுகளுக்கு என்று வரும்போது, 300 யூனிட்டுக்கு மேல் வருகிறது என்று சொன்னார்கள். அதில் வீட்டிலே வாடகைக்கு இருப்பவர்கள் மிகவும் துன்பப்படுவார்கள். வாடகைக்கு இருப்பவர்களுக்கு துன்பம் வராமல் இருக்க புதிதாக தனித் தனியாக மீட்டர் வைக்க வேண்டுமென்றால் அது மிகவும் செலவினமாகும். நம்முடைய மின்சார இலாகாவிற்கும் அது ரொம்ப கஷ்டமாக இருக்கும் என்பதால் அதற்கு கன்சசன் ரேட் கொடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் பல கிராமங்களில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த விளக்குகள் எரிவதோடு மட்டுமல்லாமல், தரமான விளக்குகளாக போட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, சிறப்பான அமைச்சரை இந்தத் துறைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நியமித்திருக்கிறார்கள் என்பதால் தமிழகம் வருங்காலத்தில் ஒளிமயமாக விளங்கி, இந்தத் துறையிலே இனிமேல் நஷ்டம் வரக்கூடாது, வராமல் [illegible] செய்ய வேண்டும் என்ற என்னுடைய கருத்தை கோரிக்கையாக வைத்து, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு





பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 11-15.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.**

*** திருமதி ப. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வள்ளல்களுக்கெல்லாம் வள்ளல் பாரி வள்ளல் பிறந்த இம் மண்ணிலே, தமிழ்த் தாய் ஈன்றெடுத்த தவப்புதல்வி, நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், கனிவான தோற்றமும், கள்ளமில்லா புன்சிரிப்பும் தன்னகத்தே கொண்ட தனிப் பெரும் தலைவியின் 100-வது வெற்றி நாளில் எனக்கு இங்கே பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தவர்களிடம் எந்தக் கோரிக்கையும் வைக்காமல் இருந்த, எதிரிலே வந்திருக்கிற ஒரு சிலர், இன்றைக்கு எதற்கெடுத்தாலும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் குறை சொல்வதைத் தங்களுடைய பணியாகத் தேர்ந்தெடுத்திருப்பதை நாம் இங்கே கண்டு கொண்டிருக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 11 ஆண்டுக் காலம் தமிழகத்தில் ஆட்சி பீடத்தில் இருந்தபோது ஏழை மக்களுக்காகவும், ஏழை விவசாயிகளுக்காகவும், 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக இருந்தால்தான் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுமென்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் கோபாலபுரத்துக் கோமான் தமிழகத்திலே பணக்காரர்களுக்காக திட்டம் தீட்டி, சதித் திட்டம் தீட்டி, ஆயிரம் ஏக்கர் இருந்தாலும் சரி, அவர்களும் மின்சாரத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும், இரட்டை இலைச் சின்னத்திற்கு வாக்களித்த ஏழைகளுக்கு மட்டும் நாம் ஏன் சலுகை அளிக்க வேண்டுமென்ற உள் நோக்கத்தோடு கொண்டுவந்ததுதான் இந்த இலவசத் திட்டமே தவிர, அவர்களுடைய கொடைத் தன்மைத் திட்டமல்ல என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின் இணைப்பு தமிழகத்திலே பல கிராமங்களிலே தேங்கிய நிலையில் கிடக்கிறது. ஏழை விவசாயிகள் ஆழ் குழாய்

கிணறுகளைப் போட்டுவிட்டு மின் இணைப்பு இல்லாமல தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைத் துரிதப்படுத்தி, ஏழை விவசாயிகளுக்காக உருவாக்கப் பட்ட தமிழகத்தின் ஆட்சியிலே மின் இணைப்புகளை விரைவிலே அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு பல கிராமங்களில் பணக்காரர்கள் தங்களுடைய வயல்களுக்கு அருகிலே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகள் மின் இணைப்பு பெறுகின்ற நேரத்தில், தங்கள் வயல்களில் கம்பங் களை ஊன்றக்கூடாது என்று கோர்ட்டுக்குச் சென்று விடுகிறார் கள். மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில், ஏழை மக்கள் மின் இணைப்பு பெறுகின்றபோது, எங்களுடைய வயலில் கம்பங் களை ஊன்றக் கூடாது என்று கோர்ட்டுக்குச் செல்வதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தடுத்து, எப்படி அரசாங்கத்தில் லைன் கொண்டு போகும்போது எந்த வயலில் வேண்டுமானாலும் மின் கம்பத்தை ஊன்றுகிறோமோ அதேபோன்று ஏழை விவசாயி களுக்கும் மின் இணைப்பு தர எந்த நிலத்திலும் மின் கம்பத்தை ஊன்றி, மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வலிவு மிக்கவன் கோர்ட்டுக்குச் சென்றுவிடு கிறான், வலிவு இல்லாதவன் தடுமாறிக் கொண்டிருக்கிறான். ஏழைகளுக்காக உருவாக்கப்பட்ட அரசு இதற்காக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிக வேண்டி விரும்பி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடியிலிருந்து கபிலர்மலைத் தொகுதிக்கு வரக்கூடிய லைனில் சிறிதுகூட மின்சக்தி இல்லாததால் மின் விளக்குகள்கூட எரியாமல் கபிலர்மலைத் தொகுதியில் இருக்கக்கூடிய விவசாயக் குடிமக்கள் மிகவும் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் புதிதாக டிரான்ஸ்பார்மர் அமைத்து, ஏழை விவசாயி களுடைய வீடுகளுக்கு மின்சாரம் இல்லாத நிலையை மாற்றி விவசாயிகளுடைய, பம்புசெட்டுகள் நல்ல முறையில் இயங்கு வதற்கும், அடிக்கடி காயில் போகாமல் பார்த்துக்கொள்வதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஒரு விளக்கு மின் திட்டம் கொண்டு வந்து கூரை வீடுகளுக்கு இலவச



மாக மின்சாரம் கொடுத்ததுபோல, தொகுப்பு வீடுகளுக்கும்; அதாவது அரசாங்கத்தால் கட்டப்படும் 10 இலட்சம் வீடுகளுக்கும் உடனே குடி போகும் நிலையில் மின்சாரம் கொடுத்து, அவர்கள் வீட்டிலே ஒளி விளக்கு ஏற்படுத்தி, தமிழகத்தின் ஒளி . விளக்கு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி இங்கே இருக்கிறதென்று ஏழை மக்களுக்கு நிரூபித்துக் காட்டி, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நாம் மக்களுக்காகப் பணி யாற்றுகிறோம் என்பதை உணர்த்த வேண்டுகிறேன்.

மத்திய அரசிடமிருந்து தேவையான அளவுக்கு மின்சாரத்தைப் பெற வேண்டுமென்று இங்கே கோரிக்கையாக வைத்த மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் இந்த நேரத்தில் ஒன்றைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்தியிலே இருக்கக்கூடிய அவர்களின் ஆட்சியை வற்புறுத்தி, தேவையான மின்சாரத்தைப் பெற்றுத்தர அவர்கள் வலியுறுத்த வேண்டு மென்று கேட்டு, கொடுத்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன் நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-20.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. இராமசாமி.

*** திரு. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்கண்ட தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், இந்தியத் துணைக்கண்டத்தை ஆளக்கூடிய தகுதி படைத்த ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களில் விழுந்து வணங்கி மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது பேச விழைகிறேன். இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 100-வது நாளான பொன்னான நாள் இது. Today is the golden day of Tamil Nadu இந்த நாளில் பேச வாய்ப்புக் கிடைத்ததற்கு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த ஆண்டு மின்வெட்டு இல்லாத ஆண்டாக இருக்கும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் கூறி யிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். மின்சாரம் என்பது முக்கியமான ஒன்றாகும். ஏழைத் தொழிலாளர் முதல் பெரிய பணக்காரர்கள் வரை மிகவும் பயன்படுத்துகின்ற ஒரு துறை இது. பெரிய பணக்காரர்கள் கள்ளத்தனமாக எனர்ஜி திருட்டு செய் கிறார்கள். தமிழ்நாட்டில் இது அதிகமாக இருக்கிறது. அப்படி

[திரு. பி. இராமசாமி] [1991 அக்டோபர் 1

மின்சாரத்தை திருடி உபயோகப்படுத்துபவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெய்வேலியில் முதல் சுரங்கத்தை விரிவுபடுத்தும் பணியும், அதன்மூலம் 420 மெகாவாட் மின் உற்பத்தி கூடுதலாகப் பெறுவதற்கான பணியும் அதற்காக ரூ. 2,500 கோடி செலவில் தொடங்கப் படும், மத்திய அரசு செலவில் அது தொடங்கப்படும் என்பதையும் இங்கே குறிப்பிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். நமது மாநிலத்தில் கிடைக்கக்கூடிய பழுப்பு நிலக்கரி எரி பொருளாக இருப்பதால் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய எரிசக்தி முழுவதையும் தமிழ் நாட்டிற்கே ஒதுக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துகிறது என்று கூறியிருப்பதையும் பாராட்டுகிறேன்.

புதிய மின் உற்பத்தி திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்ள புதிய மின் உற்பத்திக் கழகம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளதை பாராட்டுகிறேன். அதே நேரத்தில் கூடங்குளம் அணு மின் உற்பத்தித் திட்டப் பணியை விரைவு படுத்துமாறு மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துவதையும் பாராட்டு கிறேன். விவசாயத்திற்கு மின் இணைப்புகள் கோரி 20,222 மனுக்கள் சங்கராபுரம், கள்ளக்குறிச்சி ஒன்றியங்களில் நிலுவையில் உள்ளன. அவைகளில் 1991-92-ல் 1,000 மின் இணைப்புகள் மட்டுமே கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. மீதமுள்ள 19,222 மின் இணைப்புகள் கோரும் மனுக்கள் கொடுக்க முடியாத சூழ்நிலையில் நிலுவையில் உள்ளது. ஆண்டுக்கு 2,500 மின் இணைப்புகள் கொடுப்பதன் மூலம் விவசாயத்திற்கு பெரும் உதவியைச் செய்யுமாறு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு பேருதவி யாக அது இருக்கும் என்று கருதுகிறேன்.

இலவச மின்சாரம் கொடுக்கப்படும்போது பொதுவாக மின் இணைப்பு கொடுக்க காப்பர் வயர் போடாமல் அலுமினிய வயர் போடுகிறார்கள். காப்பர் ஒயர் போடும்படி கேட்டுக்கொள் கிறேன். சங்கராபுரம் கல்வராயன் மலைப் பகுதியில் முந்தைய தி.மு.க அரசால் போடப்பட்ட சோலார் பல்புகள் அனைத்தும் எரியவில்லை. பேட்டரிகள் பொங்கிவிட்டதால் மேற்படி சோலார் விளக்குகள் எரியவில்லை. குண்டியாநத்தம் பகுதியில் உள்ள 30



1991 அக்டோபர் 1] [திரு. பி. இராமசாமி]

கிராமங்கள் முழுவதும் வீட்டு விளக்குகளும் தெரு மின் விளக்கு களும் எரியவில்லை. அதை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கவனித்து, நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன். மலைவாழ் மக்கள் அச்சமின்றி வெளியே இரவு நேரங்களில் வர முடியவில்லை.

கடந்த தி.மு.க. ஆட்சியில் விவசாய பம்ப் செட்டுகளுக்கு கொடுக்கப்பட்ட மின்சாரத்திற்கு பணம் கட்டாமல் இருந்தவர் களுக்கு மின் இணைப்பைத் துண்டித்து விட்டார்கள். ஆனால் விவசாயிகள் தற்போது பணம் கட்ட முன்வந்துள்ளார்கள். அவர் களிடம் பணம் வாங்கிக் கொண்டு தொடர்ந்து மின் இணைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் பணி புரியும் லைன்மேன், லைன் இன்ஸ் பெக்டர்கள் மற்றும் இதர பணிகளில் இருப்பவர்கள் மிகவும் ஆபத்தான வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் பணியில் ஈடுபடும்போது துரதிருஷ்டவசமாக இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு தகுந்த உதவிகளும், அவர்களுடைய பிள்ளைகள் படிக்க வாய்ப்பு வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக சங்கராபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி களில் இரவு 8 மணிக்கு மேல் தொடர்ந்து மின்தடை ஏற்படுகிறது. அந்த நேரங்களில் வியாபாரிகளும் பொதுமக்களும் மிகவும் கஷ்டப் படுகின்ற நிலை ஏற்படுகிறது. படிக்கிற பிள்ளைகள் விளக்கு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அந்த மின்தடையை அவசியம் போக்கித் தருமாறும் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இரவு நேரங்களில் மின்விளக்குகள் நின்றுவிடும்போது, மின்சார வாரிய அலுவலகத்திற்குச் சென்று எழுதிக் கொடுத்தாலும், இரவு நேரங் களில் அதுவும் மாலை 6 மணிக்கு மேல் வரமுடியாது என்கிறார் கள். அந்தப் பகுதியில் திருட்டுகள் அதிகமாக நடப்பதால் அதிக மான பணியாளர்களை நியமித்து, இரவில் விளக்குகள் அணை யாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். லக்கிநாய்க்கன்பட்டி, ராவுத்தநல்லூர் காலனிகள், ரங்கப்பனூர் காலனிகள், பிரம்மகுண்டம் காலனிகள்,

[திரு. பி. இராமசாமி] [1991 அக்டோபர் 1

பஞ்சிப்பட்டு காலனிகள் ஆகிய பகுதிகளில் தெருக்களில் மின் விளக்குகள் எரியவில்லை. அதை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கவனித்து, விளக்குகள் எரிய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

பிற்பகல் 1-25.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கிற தங்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மின்சாரத் துறையில் ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய நஷ்டத்தைப் பார்த்தால், தமிழகத்தில் இந்த மின்சாரப் பற்றாக்குறையின் மூலமாக, பல்வேறு துறைகளில், பல்வேறு தொழிற்சாலைகளில் உற்பத்தி குறைவு ஏற்பட்டிருப்பதோடு தொழிலாளர்களுடைய வேலை வாய்ப்பிலும் குறையக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இலவச மின்சாரம் வழங்குவதன் மூலமாக, விவசாயிகளுக்கு வழங்கக் கூடிய இலவச மின்சாரத்தின் மூலமாக ரூ. 550 கோடிக்கு மேலாக நஷ்டம் வருவதாக மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக விவசாயிகளுக்கு மட்டும் வழங்குகிற மின்சாரத்தின் மூலமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று ஒட்டு மொத்தமாகச் சொல்ல முடியாது. மின்சாரத் துறையில் பல்வேறு வழிகளில் ஏற்படக்கூடிய மின்சாரத் திருட்டுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைய தினம் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக மின்சாரத் துறையில் தரமான மின் கம்பங்கள், கம்பிகள் பொருத்தாத காரணத்தால் இன்றைக்கு பல நூற்றுக்கணக்கான யூனிட் மின்சாரம் 'வேஸ்ட்' ஆகப் போய்க் கொண்டிருக்கிறது. அதையெல்லாம் அரசின் மூலமாக முறையாகச் செப்பனிட அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் தொடர்ந்து ஒரு தரமான மின்சார லைன், கம்பங்கள் இல்லை.

அதே போன்று மின்சாரத் துறையின் மூலமாக கிராமங்களுக்கு வழங்கப்படுகிற மின்சாரக் கம்பங்கள் அனேகமாக கான்ட்ராக்ட் மூலமாகத் தயார் செய்து நடக்கூடிய சிமெண்ட் கம்பங்கள் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு நிலைத்து இருக்க வேண்டிய



991 அக்டோபர் 1] [திரு. ஜி. பழனிசாமி]

கம்பங்கள் மூன்றாண்டுக்குள், லைன் ஓடிக்கொண்டிருக்கும் போதே, சிமெண்ட் காரைகள் உடைந்து, கொட்டி, அதன் அடிப்பாகங்கள் முறிந்து சாய்வதை நம்மாலே காண முடிகிறது. இது போன்று ஓரிரு இடங்களில் மட்டுமல்ல. பல்வேறு இடங்களில் சிமெண்ட் கம்பங்க்ள் பாழாகிய நிலையிலே இருக்கின்றன. ஆனால் இதே மின்சாரத் துறை தனியாரிடத்திலே இருந்தபோது அன்றைக்கு நடப்பட்ட இரும்புக் கம்பங்கள் இன்றும் பல இடங்களில் பலமாக இருப்பதைக் காண முடிகிறது. ஆனால் இரண்டாண்டுகளுக்கு முன்பு நடப்பட்ட கம்பங்கள் இன்றைய தினம் பழுதடைந்திருக்கின்றன. இந்தக் கம்பங்கள் எல்லாம் காண்ட்ராக்ட் மூலம் தயாரிக்கப்படுகின்றன என்று நினைக்கிறேன். ஒப்பந்தம் மூலமாக விடப்படுகிறது என்று நினைக்கிறேன். ஆகவே, அரசாங்கமே நேரிடையாக மின்சாரத் துறையின் மேற்பார்வையில் மின் கம்பங்களைத் தயார் செய்ய வேண்டும். அப்படி தயார் செய்தால்தான் இந்தத் துறையில் ஏற்படக்கூடிய பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்திலிருந்து நாம் காபந்து பண்ண முடியும். பல்வேறு இடங்களில் மின் கம்பங்கள் இடிந்து விழுந்து, பள்ளி மாணவர்கள் உட்பட பலபேர் இறந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே, மழைக் காலங்களில் இப்படிப்பட்ட மின் கம்பங்கள், பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் மீது சாய்ந்து விழுந்ததால் பல மாணவர்கள் இறந்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு மாணவர்கள் தஞ்சை மாவட்டத்திலே இறந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டே சட்டமன்றத்திலே இதைப் பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, தரமான மின் கம்பங்களை தயார் செய்ய நமது அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்றுதான் மின்சாரத் திருட்டுகள் நடைபெறுகின்றன. ஆலைகளில் மின்சாரத் திருட்டுகள் இன்றைக்கு நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய அரசாங்கம் அதைக் கண்டுபிடிக்க ஒரு குழுவை அமைத்து, இந்த மின்சார திருட்டுகளைக் கண்டுபிடிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு இடங்களில் தனியார்கள் தங்களுடைய கிணற்றிலிருந்து தண்ணீரை இறைக்க மோட்டார் வைத்து இரண்டு கம்பிகளை மேலே மாட்டிவிட்டு திருட்டுத்தனமாக நூற்றுக்கணக்கான ஏக்கர் வைத்திருக்கி

கூடிய நபர்கள் தண்ணீர் இறைக்கக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும். விவசாயிகளுக்கு மட்டும் இலவச மின்சாரம் கொடுப்பதன் மூலமாக இப்படிப்பட்ட நஷ்டங்கள் ஏற்படுவதில்லை. ஆகவே, இதையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மோட்டார் வாங்க நிலவள வங்கியில் கடன் கேட்கும்போது மின்சார வாரியத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மூலம், ஃபார்மில் கையெழுத்து வாங்கி அனுப்பினால்தான் அந்த நிலவள வங்கியில் மோட்டாருக்குக் கடன் இன்றைய தினம் வழங்குகிறார்கள். ஆனால் அப்படி அந்த ஃபார்ம் கொடுத்த பின்னர், மோட்டார் வாங்கிய பின்னர் (மணி அடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1.30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. அப்படியே முடித்து விடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அந்த மோட்டார்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்படுவது இல்லை. மின்சார வாரியத்தின் அனுமதியோடுதான் மோட்டார் லோன் பெற்று, வாங்கி, பல ஆண்டுக் காலமாக மின் இணைப்பு இல்லாமல் இன்றைய தினம் வட்டிகூட அதற்கு கூடிக்கொண்டு இருக்கிறது. ஆக அந்த மின் இணைப்புகளை நீங்கள் கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று இன்றைக்கு அநேகமாக குடிசைகளுக்கு 40 ஆயிரம் பேர்களுக்கு மின்இணைப்புகள் வழங்குவதாக அரசினுடைய குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. குடிசைகளுக்கு மின்சாரம் வழங்குவதோடு—இன்றையதினம் தொகுப்பு வீடுகளுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு சகோதரி அவர்கள் குறிப்பிட்டார்கள்—தொகுப்பு வீடுகளுக்கும் அந்த மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பல்வேறு இடங்களிலே தொகுப்பு வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதன் மூலமாக கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய அரிசன விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புறத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்த மக்களுக்கு



161606



நீங்கள் மின்சாரம் வழங்கி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

அதே போன்று மின்சாரத் தொழிலாளர்கள் இன்றைக்கு தொகுப்பு ஊதியங்களைப் பெற்றுக்கொண்டு நூற்றுக் கணக்கான பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். காண்ட்ராக்ட் முறையில் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வயது வரம்பு எல்லாம் முடிந்துவிட்டது. அவர்களை அரசு ஊழியர்களாக்கி, அவர்களை நிரந்தர ஊழியர்களாகவும் ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். அங்கு நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

மின்சாரம் இலவசம் என்ற பேரில் இருந்தாலும் இலவசமாக மின்சாரம் வழங்குவதன் மூலம், இன்றைக்கு இங்கே வழங்கக்கூடிய மின்சாரம் (குறுக்கீடு)—இலவசமாக மின்சாரம் வேண்டாம் என்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படி மின்சாரம் வழங்குவதன் மூலம் அநேகமாக அந்த டிரான்ஸ்பார்மர்களை கிராமப்புறத்தில் பார்த்தால், அங்கு இருக்கிற வீடுகளில் எல்லாம் மண்ணெண்ணை சிம்னி மாதிரி விளக்குகள் எரிகின்றன. மீட்டர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு டிரான்ஸ்பார்மர்களை நீங்கள் மாற்ற வேண்டும். அநேகமாக ஏழை எளிய மக்கள் வாழ்கிற இடங்களிலே உடனடியாக டிரான்ஸ்பார்மர்களை வழங்குவது இல்லை. ஆனால் யாராவது ஒரு நபர் சினிமா தியேட்டருக்கு வேண்டுமென்று சொன்னால் உடனடியாக டிரான்ஸ்பார்மர் மாற்றப்படுகிறது; உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு ஆலையைத் துவக்க வேண்டுமென்று சொன்னால் உடனடியாக டிரான்ஸ்பார்மர்களை மாற்றுகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களுக்கோ, பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து யூனியனுக்கோ தெரு விளக்குகளுக்கு மனுக் கொடுத்து கோரிக்கை கொடுத்தால் மாதும் அதுசம்பந்தமாக கேட்பாரற்றுக் கிடக்கிற நிலைமைதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** அதை உங்கள் தோழமைக் கட்சியின் கடந்த கால ஆட்சியில் கேட்டு இருக்கலாமே?

**திரு. ஜி. பழனிசாமி:** எந்த ஆட்சியில் நடந்தால் என்ன? இந்த ஆட்சியில் நடவடிக்கை எடுங்கள் என்று நான் சொல்கிறேன். நான் இன்னொரு விவரத்தை மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நடந்ததைப்பற்றி சொல்கிறேன். 1983 ஆம் ஆண்டு, அநேகமாக டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி தஞ்சாவூரிலே புயல் அடித்தது. அன்றையதினம் தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கிற முத்துப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பாண்டி என்கிற ஒத்தை தெருவில் விழுந்த கம்பங்கள் அநேகமாக 60. அப்போது (அ.தி.மு.க. ஆட்சி இருந்த காலம். நானும் பல தடவை தொடர்ந்து சட்டமன்றத்தில் பேசி இருக்கிறேன். இப்பவும் சொல்கிறேன். அந்தக் கம்பங்களை எடுத்து நடுங்கள்; அந்தத் தெரு விளக்குகளுக்கு இணைப்பு கொடுங்கள். அது சாதாரண விவசாயத் தொழிலாளர்கள் வாழக்கூடிய பகுதி (குறுக்கீடு) இன்னும் மின் விளக்குகள் செயல்படவில்லை என்று நான் சொல்கிறேன். அதைச் செய்யுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஒரு இரண்டு ஆண்டுக்காலம் அவர்களுடைய நண்பர்களின் சிறந்த ஆட்சி நடந்ததாக எல்லாம் இங்கே சொல்லிக்கொண்டு இருந்தார்களே, அப்போது அந்தக் கம்பங்களை எல்லாம் எடுத்து நட்டு இருக்கலாமே? ஏன் அவைகளை நடவில்லை? பழனிசாமி அவர்கள் இன்றைக்கு நட வேண்டுமென்று ஏன் கேட்டுக்கொண்டு இருக்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் அந்த ஆட்சியிலேயும் சொன்னேன். நிச்சயமாகச் செய்யுங்கள், தைரியமாகச் செய்யுங்கள்



என்று சொன்னேன். ஆனால் அவர்கள் தவறி இருக்கிறார்கள். இப்போது நீங்கள் அதைச் செய்யுங்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அந்த ஆட்சிக்கு அந்தக் கம்பங்களை நடுவதற்குக் கூட தைரியம் இல்லாமல், திரு. பழனிசாமி அவர்கள் தைரியம் கொடுத்தும்கூட அதை அவர்கள் நட முடியவில்லை என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** இருந்தாலும் அது உங்களுடைய ஆட்சிக் காலத்திலே விழுந்தது. அவர்கள் இரண்டு ஆண்டுக் காலம் செய்யவில்லை. குற்றம் சொல்லக்கூடிய நீங்கள் அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாக நான் இங்கே வைக்கிறேன். அதைச் செய்து கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே விழுந்த காரணத்தாலே, அதை நாங்களேதான் செய்ய வேண்டுமென்று விட்டுவிட்டுப் போய் விட்டார்களோ என்பது தெரியவில்லை. ஆனால் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே கட்டிய பெரிய பெரிய கட்டிடங்களை அவர்கள் போய் திறந்து வைத்து பெயரை மட்டும் வைத்துக் கொள்வதற்கு எல்லோரும் சந்தோஷமாக இருந்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. தண்டாயுதபாணி.

**திரு. வி. தண்டாயுதபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார மானியத்திலே பேசுகின்ற அரிய வாய்ப்பை நல்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு ஓரிரு வார்த்தைகள் மட்டும் சொல்லி முடித்துக்கொள்கின்றேன். அனல் மின்சாரம், புனல் மின்சாரம், அணு மின்சாரம் என்று பல்வேறு விதங்களிலே பிரித்து இந்த மின்சாரத் துறையிலே தமிழகத்தினுடைய மக்கள் எல்லோருக்கும் மின்சாரம் கிடைக்கின்ற வகையிலே இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கம் திட்டங்களைத் தீட்டி அதை செயல்படுத்துகின்றமுகத்தான் எவ்வளவுதான் நட்டம் ஏற்பட்டாலும் அதைச் சரிக்

[திரு. வி. தண்டாயுதபாணி] [1991 அக்டோபர் 1

கட்டி நல்ல முறையிலே எல்லோருக்கும் மின்சாரம் வழங்குவதற்கு மின்சாரத் துறை ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பாராட்டுவதோடு ஒருசில கருத்துக்களை மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1.35

நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் 1977-78 ஆம் ஆண்டு வந்தது. அது வருகிறபோது பல தடங்கல்கள் இருந்தன. அன்றையதினம் மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதமராக இருந்த போது, அவருடைய மாநிலத்திற்கு 800 கோடி ரூபாயில்
IPCL (Indian Petro Chinical Industries Limited)
எடுத்துக்கொண்டு போய்விட்டார். அப்போது எனர்ஜி அமைச்சராக இருந்த திரு. பி. இராமச்சந்திரன் அவர்களிடம் கேட்டோம். இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை நாம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டபோது குஜராத் மாநிலத்திற்கு 800 கோடி ரூபாய் தொழிற்சாலையைக் கொண்டு சென்று விட்டார். தமிழ்நாட்டினுடைய அந்தக் கோரிக்கையை அவர்கள் ஏற்கவில்லையே என்று கேட்டபோது, இரண்டாவது நடைபெற்ற மத்திய மந்திரி சபை கூட்டத்தில், ஒன்று அவர்கள் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்திற்கு அனுமதி கொடுக்கட்டும். அந்த நிலக்கரிச் சுரங்கத்தின் மதிப்பு 600 கோடி ரூபாய். அப்படி இல்லையென்று சொன்னால் நீங்கள் ராஜினாமா செய்துவிட்டு வந்து விடுங்கள் . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மொரார்ஜி தேசாய் என்று பேசி குமாரதாஸ் அவர்களை எழுப்பி விட்டீர்களே? (சிரிப்பு)

**டாக்டர் கே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரார்ஜி தேசாய் அவர்கள் குஜராத்தில் பிறந்தார் என்ற காரணத்திற்காக அங்கே தொழிற்சாலையோ, அனல்மின் சார நிலையமோ வைக்கக்கூடாதா? எங்களுக்குப் புரியவில்லை. அவர்கள் பிரதமராக இருந்த காரணத்தால் 800 கோடி ரூபாய் திட்டத்தைக் கொண்டு போய்விட்டார் என்ற கருத்து தவறானது. அவரும் தனது மாநிலத்திற்கு கொண்டு வந்திருக்கிறார். அந்த விதத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர வேறல்ல. அந்த மாதிரி நாங்களும் சொல்ல வேண்டுமென்றால் சொல்லிக்கொண்டிருக்கலாம். அது நன்றாக இருக்காது.



[1991 அக்டோபர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கே போய்விட்டது என்றுதான் சொல்கிறார். அது உங்களை ஒன்றும் பாதிக்காது.

**திரு. வி. தண்டாயுதபாணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் அவரைக் குறைத்து மதிப்பிடவில்லை. இப்படி அடிக்கடி குழம்பிப் போயிருக்கிற குமாரதாஸ் அவர்கள் இனி மேலாவது தெளிவு பெறவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

**டாக்டர் கே. குமாரதாஸ்:** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். He is not at all yielding அவர் ஏற்றுக்கொண்டால்தான் நீங்கள் பேசலாம்.

**திருமதி ரமணி நல்லதம்பி:** தலைவர் அவர்களே, அவர் என்ன சட்டசபையின் செல்லப்பிள்ளையா? அடிக்கடி எழுந்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உட்கார்ந்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வி. தண்டாயுதபாணி:** தலைவர் அவர்களே, அவர் அந்த மாநிலத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்திற்காக மட்டுமல்ல, ஒரு பிரதமராக இருந்தும்கூட அவருடைய மாநிலத்திற்கு கொண்டு சென்று, அந்த மாநிலத்தை செழிப்படையச் செய்ய வேண்டுமென்ற உணர்வு அவருக்கு இருக்கிறபோது, பி. இராமச்சந்திரன் அவர்கள் இந்த மாநிலத்தில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்படி மந்திரிசபை முடிவு செய்யவில்லை என்றால் மந்திரி சபையிலிருந்து நீங்கள் ராஜினாமா செய்துவிட்டு வந்துவிட வேண்டுமென்று முதல் மந்திரிசபைக் கூட்டத்தில் சொன்னோம்.

இப்போது திரு. குமாரதாஸ் அவர்கள் இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கிறாரா, இல்லையா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் சார். எப்போதும் குழப்புகிற வேலை தான். அதனாலே, இந்த மாநிலத்தில் அக்கறைகொண்டு 600 கோடி

ரூபாய்க்கு அந்த நிலக்கரிச் சுரங்கம் கொண்டுவர வேண்டு மென்று சொல்லி, இரண்டாவது மந்திரி சபைக் கூட்டத்தில் அதைக் கொண்டு வந்தார்கள்.

நான் இதை எதற்கு சொல்கிறேன் என்றால் தமிழ்நாட்டில் பிறந்தவர்களாக இருந்தாலும் சரி, இந்த மந்திரி பதவி இருக்கிறது என்ற காரணத்திற்காக உண்மைகளைச் சொல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக இதைச் சொல்ல வருகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் உள்ள பல்வேறு திட்டங்களுக்கு எந்தெந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்தினுடைய நிதியைப் பெற வேண்டுமோ, அந்த நிதியை இங்கேயிருந்து சென் திருக்கிற அமைச்சர்கள் பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக தான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு காரண மில்லை. அதற்காகத்தான் சொல்ல வந்தேன். பாவம் இதைப் புரிந்து கொள்ளாமல் அவர் பேசி விட்டார். அடிக்கடி எழுந்து கொள்ள வேண்டும். வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடு) கோபித்துக் கொள்ள வேண்டாம். . . (குறுக்கீடு).

பிற்பகல் 1.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களை பாராட்டித்தான் பேசுகிறார். ஆதரித்துத்தான் பேசுகிறார்.

திரு. வி. தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, அன்றைய தினம் மூன்று இராமச்சந்திரன்கள்—இப்போது இல்லை. எம். ஜி. இராமச்சந்திரன், பி. பண்ருட்டியார் சா. இராமச்சந்திரன் ஆகிய மூன்று பேரும் இராமச்சந்திரன், தினம் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் இருந்து அன்றைய மாக இன்றைக்கு நான் சொல்வது வந்தது. அதன்மூல இன்றையதினம் மத்திய அரசை நோக்கி பல்வேறு திட்டங்கள் யிருக்கிற நாம் தேசிய உணர்வோடு, தமிழகத்தினுடைய இருக்கிறபோது, இங்கே பெற்றிருக்க வேண்டும் என்பதற்காக அதைச் சொல்ல உணர்வைப் அடுத்தபடியாக விவசாயிகளைப்பற்றி எல்லாம் வந்தேன். னார்கள். அதுகுறித்து இரண்டொரு கருத்துக்களை இங்கே சொன் சொல்லி முடித்துவிடுகிறேன். ஒருவர், நான் மட்டும் விட்டேன், நான்கு ஏக்கரா, அதற்கு பட்டா நிலம் வாங்கி வேண்டும் என்று சொன்னால், சர்வீஸ் மாற்றிக் கொடுக்க போய் கேட்டவுடனே,





அவர்கள் உடனே மாற்றித் தருவதில்லை. உடனே அந்த டெத் சர்ட்டிபிகேட்டைக் கொண்டு வாருங்கள், நிலம் வாங்கி 4 வருடம் ஆனாலும்கூட, டெத் சர்ட்டிபிகேட்டைக் கொண்டு வருவதற்குள், அவர்கள் வெளிநாடு போய், அங்கேயே செத்துப்போய்விடுகி றார்கள். அங்கே போய் டெத் சர்ட்டிபிகேட் வாங்க முடியாது. எனவே, வி.ஏ.ஓ. சர்ட்டிபிகேட் வாங்கினாலே, இதை மாற்றிக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வட்டிக்குக் கடன் வாங்கி, அட்டிகை பண்ணி, அட்டிகையை விற்று வட்டி கட்டிய கதையாக, விவசாயி களுடைய கடன் நிலைமை இன்று இருக்கிறது. அவர்கள் கடன் வாங்கி கிணறுகள் வெட்டுகிறார்கள். பம்ப்செட்டு போடுகிறார்கள். ஆனால் பத்து வருடம் கழித்துக்கூட மின் இணைப்புக் கிடைக்கவில்லை என்று சொன்னால், உடனே ஜப்தி செய்ய வந்துவிடுகிறார்கள். பம்ப்செட்டுகள், கிணறுகள் அமைப்பதற்கு கடன் வாங்கியதற்காக ஜப்தி செய்ய வந்தால், மின்சாரம் இல்லாததால் விவசாயம் செய்யாத அந்த விவசாயி, எப்படிக் கொண்டு போய் தன்னுடைய கடனைத் திருப்பிக் கட்ட முடியும்? ஆகவே, இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். அந்த பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்ததற்குப் பின்னாலே, அவர்கள் விவசாயம் செய்தும், அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வில்லை என்று சொன்னால், கடனை வசூலிப்பதற்கு நியாயம் இருக்கிறது. ஆனால் மின்சாரக் கனக்சனே கொடுக்காமல் ஜப்தி செய்வது என்பது சரியாக வராது. எனவே, இதை நீங்கள் ஆலோசித்து இதற்கு வேண்டிய முறையை வகுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாம் வீடு வாங்குகிறோம். வீட்டிலே ஃபிரிட்ஜோ அல்லது டி.வி.-யோ புதிதாக வாங்கினால் வரி போடுவதில்லை. அதே மாதிரி சொந்த விவசாயத்திற்கு மின் இணைப்பு கொடுத்தால், கரும்பு அரைப்பதற்கோ அல்லது அங்கே நெல்லைக் கொட்டி, கதிர் அடிப்பதற்கோ புதியதாக அவர்கள் கட்டணம் செலுத்த வேண்டும் இதற்கு தனியாக அனுமதி பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். இதைமாற்றி, அறவே ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. தண்டாயுதபாணி] [1991 அக்டோபர் 1

இன்னொன்று, வீட்டுக்கு மின்சாரம் கொடுக்கிறபோது எதிரிலே 100 அடி இருக்கிறது என்று சொன்னால், வேறு யாருடைய நிலமாவது இருந்தால், அவர்களுக்கு அந்த மின் இணைப்புக் கிடைப்பதில்லை. எப்பேர்ப்பட்டவர்களுடைய நிலமாக இருந்தாலும் சரி, சொந்தமாக இருந்தாலும் சரி, அதையும் மீறி, யார் யார் அங்கே சர்வீஸ் செய்து வைத்து இருக்கிறார்களோ, வீடுகள், அந்த வீடுகள் உள்ள அத்தனை பேர்களுக்கும் நீங்கள் மின் இணைப்புக் கொடுக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, பணம் கட்டாயல், மின் இணைப்பைத் துண்டித்து விட்டு இருந்தால், டிஸ்கனக்சன், டிஸ்மான்டில் என்று சொல்வார்கள்—இந்த இரண்டும் செய்திருந்தாலும்கூட, இரண்டு மாதத்திற்குள்ளாக பணம் கட்டாமல், 65-வது நாள் போய், பணம் கட்டப்போனால், நாளாகி விட்டது என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டு மாத கால அளவை ஒரு வருடமாக உயர்த்தித் தரவேண்டும் என்று மின்சாரத்துறை அமைச்சர் அவர்களை நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஹெல்ப்பர் வேண்டும். ஒரு லைன்மேன் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கவேண்டும். மின் சாரத்திலே பியூஸ் போய்விட்டது, காயில் போய்விட்டது என்று போன் செய்தால், அவர்கள் ஹெட்குவார்ட்டர்சில் இருப்பதில்லை ஆகவே மின்சாரத்துறையிலே பணியாற்றுகிற சிறு அதிகாரிகள், ஹெல்ப்பர் போன்றவர்கள் எல்லாம், அந்தந்த கிராமங்களிலே இருப்பதற்கு வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

நமது மின்சாரத்துறை, சிறப்பான முறையிலே புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே பணியாற்றவேண்டும். தமிழகத்தில் அவர்கள், இன்றைக்கு 100-வது நாள் விழா கொண்டாடுவதைப் போல, மின்சாரத்துறை நிறைவு பெற்ற ஒரு துறையாக இருக் கிறது, எந்த கட்டும் கிடையாது என்கிற ஒரு நல்ல பெயரை எடுக்கின்ற அளவிற்கு இந்தத் துறை அமைய வேண்டும் என்று வேண்டிக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.



1991 அக்டோபர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, அதன் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1.45

இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இந்த் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு தான், கிராமங்களிலே வீதி விளக்குகள் எரிகின்றன என்பதை நான் பணிவன்போடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இங்கே சில பேர்கள் எரியவில்லை என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதிக்கு, எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் வந்து பாருங்கள். அனைத்து விளக்குகளும்-வீதி-விளக்குகளும் நூற்றுக்கு நூறு சதவீதம் எரிகின்றன என்பதை நான் தெளி வாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு கான்ட்ராக்ட் பேசிஸ்லே, 1980-லிருந்து தற்காலிகமாக பணியாற்றியவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், வேறு தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு உத்தரவைப் பெற்று, அதன்மூலமாக இன்றைக்குப் பணியிலே அமர்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் எந்த இயக்கத்திலேயும் சேராமல், தொழிற்சங்கத்திலே சேராமல் இருந்த பல ஆயிரக் கணக்கான ஏழை தற்காலிகப் பணியாளர்கள், எப்படி அந்தப் பணியிலே சேருவது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக் கிறார்கள். அதற்குண்டான ஆதாரங்களை எல்லாம் அவர்கள் கையிலே வைத்திருக்கிறார்கள். எந்தெந்த ஆண்டு பணியாற்றி னோம் என்று. ஆக அப்படி பணியாற்றிய நிலையில் எந்தத் தொழிற்சங்கத்திலும் சேராமல் பணியாற்றியிருக்கின்ற அந்த

[திரு. வி. கே. சின்னசாமி] [1991 அக்டோபர் 1]

தற்காலிக ஊழியர்களையும் ஒயர்மென், லைன்மென்—பணியாற்றியவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய பட்டியலை எல்லாம் பெற்று மின் வாரியத்தில் மூலம் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான உத்தரவினை வழங்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஆழ்குழாய்க் கிணறுகளை போடுகின்றவர்களுக்கு சொந்தச் செலவிலே போட்டுக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட கேள்வி நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, இலட்சக்கணக்கான பேர் விண்ணப்பித்து, மின் இணைப்பு பெறாமல் இருக்கிறார்கள். குறிப்பாக பெரியார் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், சொந்தச் செலவிலே மின் இணைப்பு பெறுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இதனால் வசதி படைத்தவர்கள், ஏழை என்பது அல்ல. சீனியாரிட்டியிலே விண்ணப்பங்கள் குறைந்துவிடும். அப்போது ஏழைகளுக்கு மிகக் குறுகிய காலத்திலே கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். ஆக சொந்தச் செலவிலே செய்து, மின் வாரியத்திலே மின் இணைப்பு பெறுவதற்கு தயாராகின்றார்களானால் தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்து அவர்களை எல்லாம் அழைத்துகூட அந்தந்த கோட்டத்தில், எஸ்.ஈ. அளவிலே நீங்கள் அதைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கவேண்டும். சீனியாரிட்டியைத் தளர்த்தி, சொந்தச் செலவில் மின் இணைப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பெரியார் மின் சிஸ்டம்தான் தமிழ்நாட்டிலே பெரிய சர்க்கிள். அந்த சர்க்கிள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். பிரித்து உடனடியாக கோபியிலே ஒரு சர்க்கிளை, ஒரு எஸ்.ஈ. அலுவலகத்தை அமைக்கவேண்டும். அதே நேரத்திலே கோபியில் இன்னொரு டிவிஷனல் இன்ஜினியர், கோட்டப் பொறியாளரை அமர்த்துவதாக இருக்கிறார்கள். நான் பணிவோடு இங்கே தெரிவித்துக்கொள்வது, அதை நம்பியூர் அல்லது புளியம் பட்டியிலே நிறுவவேண்டும். புளியம்பட்டிப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் 30, 40 கிலோமீட்டர் தூரத்திற்கு சத்திய மங்கலத்திற்கு வர வேண்டியிருக்கிறது. நம்பியூரிலே இருக்கின்ற



1991 அக்டோபர் 1] [திரு. வி. கே. சின்னசாமி]

விவசாயப் பெருங்குடி மக்கள் 40 கிலோமீட்டருக்கு கோபிக்கு வரவேண்டியிருக்கிறது. கோபியில் வெஸ்ட், ஈஸ்ட் என்று போடுவதைத் தவிர்த்து, புதியதாக வர இருக்கின்ற மின் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை நம்பியூரில் அல்லது புளியம்பட்டியிலே அமைப்பதற்கான உத்தரவினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஷிப்டிங்கைப் பொறுத்தவரையில், ஒரு சர்க்கிளுக்குள் எங்கே வேண்டுமானாலும் விவசாயிகளுக்கு பூமி நிறைய இடங்களிலே இருக்கிறது. ஒரு இடத்திலே தண்ணீர் வறண்டுபோனால், வேறொரு இடத்திலே பூமி வாங்கி விவசாயம் செய்து, அதை விட்டு விட்டுச் செல்கிறார்கள். ஆகவே ஷிப்டிங் செய்வதற்கு மின் வாரியம் ஒரு பைசா கூட செலவை ஏற்றுக்கொள்வதில்லை. முழுச் செலவையும் அந்த விவசாயிகளே ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே ஷிப்டிங் செய்வதைப் பொறுத்தவரையில் மாவட்ட அளவிலேகூட எங்கே வேண்டுமானாலும் அவர்கள் ஷிப்டிங் செய்வதற்கு உதவவேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கீழ்பவானி அணையில் வலதுகரைக் கால்வாயிலே ரூ. 16 கோடி செலவில் 8 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற திட்டம் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே அறிவிக்கப்பட்ட திட்டம். கருணாநிதி ஆட்சிக் காலத்திலே அது கிடப்பிலே போடப்பட்டு விட்டது. அது 1994-95-ல் துவங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்பாக துவங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீதி விளக்குகளைப் பொறுத்தவரையில் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக புதியதாக எல்லாவற்றுக்கும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) பல அரிஜன காலனிகள் கிராமங்களில் தனித்தனியாக கட்டப்பட்ட நிலையில் பல இடங்களில் இருக்கின்றன. வீதி விளக்குகள் இதுவரையில் இரண்டு ஆண்டுக்காலமாக இல்லை. அதற்குப் பிறகு இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் அதற்கான வழிவகைகளை இங்கே தந்திருக்கிறார்கள். இப்போது நாங்கள் எல்லாம் ஆய்வு செய்

கின்ற நேரத்தில், தொகுதியைச் சுற்றிப் பார்க்கின்ற நேரத்தில் இருக்கின்ற கம்பங்களில் உடனடியாக விளக்குகளை மாட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, மிக விரைவாக இந்த வீதி விளக்குகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கின்ற சலுகைகளை திராவிட முன்னேற்றக் கழகம் ஓட்டு வாங்குவதற்காகவே கொடுத்தார்கள். ஆனால் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றதற்குக் காரணமே, பெரிய விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தந்ததே என்பதைத் தெரிவித்து, அதை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 100 ஹார்ஸ் பவர், 50 ஹார்ஸ் பவர் வைத்து அதன்மூலமாக தண்ணீரை எடுத்து விற்கிறார்கள். பல விவசாயிகள் அதை பம்ப் செய்து வேறு விவசாயிகளுக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள், இல இடங்களில், அதை ரத்து செய்யவேண்டும். மீட்டர்களை மாற்ற வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோ. காளன்.

பிற்பகல் 1.50

**திரு. கோ. காளன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் பேசுகிறபோது கம்யூனிஸ்ட் கட்சியின் சங்கத்தின் மூலமாக காண்டிராக்ட் தொழிலாளர்கள் வழக்கு தொடர்ந்து உள்ளே வந்திருக்கிறார்கள் என்று சொன்னார். அது தவறு. காண்டிராக்ட் லேபர்களுக்காக வழக்கு போட்டது, ஐ.என்.டி.யு.சி சங்கமும் அதனுடைய தலைவராக இருக்கக்கூடிய வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். டேனியல்ராஜ்.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகின்றேன். இதன் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு முதல்வர் புரட்சித்



தலைவி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடி, மேட்டூர், எண்ணூர் போன்ற அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி 2 நாள் கையிருப்போடுதான் இதுவரையில் இயங்கி வந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியின் காரணமாக, அனைத்து மின் நிலையங்களும் 20 நாட்களுக்குத் தேவையான நிலக்கரி கையிருப்போடு இயங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு மழைக் காலங்களிலும் தொடர்ந்து இந்த நிலை நீடிக்க வேண்டும் என்று கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தொழில் துறையிலே முதலிடத்திற்கு வரவேண்டும். விவசாயத் துறையிலே தன்னிறைவு பெறவேண்டும் என்ற லட்சியத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த அரசின் கனவுகள் நிறைவாக வேண்டும் என்றால் மின்சாரத் துறையிலே தன்னிறைவு பெறவேண்டும். தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே மின்சார வாரியத்திலே மின் உற்பத்தியினுடைய நிர்வாகமும், மின் வினியோகத்தினுடைய நிர்வாகமும் இன்றையதினம் ஒரே தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மின் உற்பத்தியிலே தேர்ச்சிபெற்றவர்களை மின் வினியோகத் துறையிலும் மின் வினியோகத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை மின் உற்பத்தித் துறையிலும் மாற்றுவதன் காரணமாக அவர்களெல்லாம் திறம்பட செயல்பட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அண்டை மாநிலத்தைப்போல மின் உற்பத்தித் துறைக்கு தனியாக ஒரு வாரியமும், மின் வினியோகத்திற்கென்று தனியாக ஒரு வாரியமும் உருவாக்கித் தரவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குகின்ற இந்த நேரத்தில் எந்தெந்த தொழிற்சாலைகள் மின்சார உற்பத்தியை செய்வதற்கு முன் வருகின்றனவோ அந்தந்த தொழிற்சாலைகளுக்கு முன் உரிமை வழங்க வேண்டும். அதோடுமட்டுமல்லாமல் அவர்களுக்கு அரசின் மூலமாக பல சலுகைகள் வழங்குவதற்கும் முன் வரவேண்டும். அதன் காரணமாக மின்சார வாரியத்திலே உற்பத்தி செய்கிற

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1991 அக்டோபர் 1

மின்சாரம் மிச்சப்படுத்தப்பட்டு விவசாயம் போன்ற முக்கியத் துறைகளுக்குப் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணம் ஆகும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய மின்சாரத் துறையைப் பொறுத்தமட்டில் அந்தத் துறை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுக்காலம் ஆகிறது. 25 ஆண்டுக் காலத்திலே டிரான்ஸ்பார்மர்களுடைய எண்ணிக்கை 20,000-லிருந்து 70,000 ஆக உயர்ந்திருக்கிறது. அதேபோன்று மின் கம்பிகளின் நீளமும் இரண்டு மடங்காகியிருக்கிறது. மின் உற்பத்தி யினுடைய அளவு 3 மடங்காக உயர்ந்திருக்கிறது இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1966 ஆம் ஆண்டு மின்சார வாரியத்திலே 65 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தார்கள். ஆனால் இன்றையதினத்திலே 95 ஆயிரம் தொழிலாளர்கள்தான் பணி புரிந்து வருகின்றார்கள். மின் உற்பத்தியிலே எவ்வளவு சாதனை களை நாம் புரிந்தாலும் கூட, மின் உற்பத்தியிலே தன்னிறைவு பெற்றாலும்கூட இந்த மின் உற்பத்தியை ஒழுங்காக வினியோகம் செய்ய வேண்டுமென்றால் மின்சார வாரியத்திலே இன்னும் அதிக மான தொழிலாளர்களை நியமிக்கவேண்டும். ஆகவே அரசைப் பொறுத்தமட்டிலே இந்த நேரத்திலே மின்சார வாரியத்திலே அதிகமான தொழிலாளர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார வாரியத்திலே காண்டிராக்ட் தொழிலா ளர்கள் தங்களுடைய பணிகளை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று வாரியத்திலே இருக்கிற சில சங்கங்கள், சேலம் மாவட்டத் திலே ஐ.என்.டி.யூ.சி. தொழிற்சங்கமும், சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யூ.சி. போன்ற தொழிற்சங்கங்களும் உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து உச்ச நீதிமன்றத்திலே காலித் என்ற நீதிபதியினுடைய தலைமையிலே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷ னிலே இந்தத் தொழிற்சங்கங்கள் கிட்டத்தட்ட காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் 18,006 பேர் பட்டியலைக் கொடுத்தார்கள். இப்பொழுது காலித் கமிஷன் பரிந்துரையின் மீது அந்த 18,006 தொழிலாளர்கள் பட்டியலை அரசு ஏற்று மின்சார வாரியத்திலே இன்றையதினம் 1,184 காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் பணியை நிரந்தரம் செய்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே தமி ழகத்திலே இன்னும் பல தொழிற்சங்கங்களில் சேர்ந்திருக்கின்ற காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் 10 வருட காலமாக பணியாற்றி வருகிறார்கள். அதேபோன்று தொழிற்சங்கங்களைச் சாராத



1991 அக்டோபர் 1] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

வர்கள் பல்லாயிரக்கணக்கான காண்ட்ராக்ட் தொழிலாளர்கள். மின்சார வாரியத்திலே பணிபுரிந்துகொண்டு வருகிறார்கள். இவர்களுடைய பெயர்கள் இன்றையதினத்திலே காலித் கமிஷ னிலே இணைக்கப்படவில்லை. ஆகவே, இவர்களுடைய பெயர் களையும் காலித் கமிஷனிலே இணைத்து, அவர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று எண்ணூர், தூத்துக்குடி, மேட்டூர் போன்ற அனல் மின் நிலையங்களில் இண்டஸ்ட்ரியல் கோ-ஆப்பரேட்டிவ் தொழிலாளர் களாக கடந்த 10 ஆண்டுக் காலமாக பணிபுரிந்து வந்தவர் களையும்—இந்த காலித் கமிஷனின்கீழ், அவர்களுடைய பெயர் களும் சேர்க்கப்படவில்லை. இவர்கள் கிட்டத்தட்ட 2,500 பேர், அனல் மின் நிலையங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.55

மின்சார வாரியத்திலே பணி புரிகின்றவர்கள் மாதம் 2,500 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கிக்கொண்டு இருந்தவர் களுக்குதான் இன்றையதினத்திலே போனஸ் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக மின்சார வாரியத்திலே பணிபுரிகின்ற 20 சதவிகிதம் தொழிலாளர்கள்தான் அந்தப் பலனைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே திறன் அடிப் படையிலே, உற்பத்தியின் அடிப்படையிலே அனல் மின் வாரியத் திலே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கும் போனஸ் வழங்கவேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகளில் இன்றையதினத்திலே அந்தந்த மாநகராட்சியின் கீழ்தான் மின் துறையினுடைய நிறுவனம் இயங்கி வருகிறது. அந்தந்த மாநக ராட்சிகள் மின் வாரியத்திலே குறைந்த செலவிலே அவர்கள் மின் சாரத்தை பெற்று அதை அதிக விலையிலே பொது மக்களுக்கு அவர்கள் விநியோகம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இதன் காரணமாக பொது மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கி றார்கள். ஆகவே மாநகராட்சிகளில் இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த மின் துறையினுடைய நிர்வாகத்தை மின்சார வாரியத் தோடு இணைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாற்றி அமைத்தார்கள். ஊராட்சி மன்றங்களுடைய நிதி நிலையைப் பற்றி இந்த அரசுக்கு நன்கு தெரியும். ஆகவே, ஒரு தெரு விளக்கு கூட போட ஊராட்சி மன்றங்களினால் முடிவது இல்லை. ஆகவே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே என்ன நிலை இருந்ததோ அந்த நிலையையே மறுபடியும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் 6 டிரான்ஸ்பார்மர்களுக்கு ஒரு ஒயர்மேன், ஒரு எல்ப்பர் என்று பராமரிப்பு செய்வதற்கு இன்றையதினம் பணி யாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். வேலைப் பளுவின் காரணமாக குறைந்த எண்ணிக்கையில் அவர்கள் நியமிக்கப் பட்டதன் காரணமாக இன்றையதினம் கிராமப்புறங்களில் அடிக் கடி மின் தடை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதை சரிசெய்வதற்கு கூடுதலாக மின் பணியாளர்களை நியமிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2.05

'பி' லைசன்ஸ் பெற்று இன்றையதினம் வேலை செய்கின்ற காண்டிராக்ட் தொழிலாளர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த காண்டிராக்ட் தொழிலாளர்கள் ஒயரில் வேலை செய்கின்ற நேரத்தில் விபத்து ஏற்படுகின்ற நேரத்தில் கட்டிடத் தொழிலாளர்களுக்கு எப்படி இந்த அரசு உதவித் தொகை வழங்குகிறதோ அதேபோல் இந்த காண்டிராக்ட் தொழிலாளர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்க இந்த அரசு உதவித் தொகை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று மின்சாரத் துறையைப் பொறுத்த மட்டிலே ஒரு தவறை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தொழிற்சாலைகளிலே 129 ஹார்ஸ் பவர் வரையிலும் எல்.டி. வழங்கப்படுகிறது. அதற்குமேல் தொழிற் சாலைகளை நடத்தவேண்டுமென்றால், அதாவது 129 ஹார்ஸ் பவருக்கு மேல் ஒரு தொழிற்சாலை நடத்தப்படவேண்டு மென்றால், எச்.டி. மின்சாரம் வழங்கப்படவேண்டும். ஒரு தொழிற் சாலைக்கு எச்.டி. மின்சாரம் வழங்கப்படவேண்டுமென்றால், அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளரே ஒரு டிரான்ஸ் பார்மரை அந்தத் தொழிற்சாலைக்குள் அமைத்துக்கொள்ள



வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், டிப்ளமா பொறியாளர் பயிற்சி பெற்று, படித்து முடித்துவிட்டு 'சி' லைசன்ஸ் பெற்ற ஒரு உரிமைதாரர் அங்கே பராமரிப்புக்காக நியமிக்கப்பட வேண்டும். ஆனால், அதே நேரத்திலே தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில், உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், 200 ஹார்ஸ் பவர் மோட்டார்களைக் கொண்ட ஒரு தொழிற்சாலை இயங்கி வருகிறது என்றால் இப்போது மின்சாரத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற அதிகாரிகளுடைய ஆலோசனை யின் பேரில் அந்த மோட்டார்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு இன்றைய தினத்திலே எல்.டி. மின்சாரம் வழங்குகின்ற திட்டத்தின்கீழ் அந்தத் தொழிற்சாலையைக் கொண்டு வந்து விடுகிறார்கள். இதன் காரணமாக, மின்சார வாரியமே தொழிற் சாலைக்கு வெளியே டிரான்ஸ்பார்மரை, அவர்களுடைய சொந்தச் செலவிலேயே நிறுவி விடுகிறார்கள். இதன் காரணமாக, மின்சாரத் துறைக்கு பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளினுடைய அதிபர் களோடு சேர்ந்து கொண்டு இப்படிப்பட்ட தவறுகளை அதிகாரிகள் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தமட்டிலே, இந்த அரசு நேர்மையான அரசாக, ஊழலற்ற அரசாக விளங்க வேண்டுமென்றால், இந்த அதிகாரிகள் செய்கின்ற தவறுகளை நீங்கள் களைந்து எடுப்பதற்கு வேண்டிய நட வடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய இருளை அகற்றி, இன்றைக்கு புதிய ஒளி மிகுந்த சமுதாயத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற தலைவியினுடைய, புரட்சித் தலைவியினுடைய பொற்கால, 100 நாள் ஆட்சியில் இன்றைக்கு இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய பதிலை நான் தருவதற்கு முன்னாலே என்னுடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் 100 ஆண்டுக் காலம் வாழவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி

றார்கள். அந்தத் திட்டங்களை என்னுடைய விளக்க உரையிலே நான் தந்திருக்கிறேன். ஆக, இந்த அரசு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை இந்த உரையிலே நான் தெளிவாகக் காட்டியிருக்கிறேன். அதற்குக் குறிப்பிட்டதுபோல, பெருகி வருகிற தேவைக்கேற்ப நாட்டிலே வருடத்திற்கு வருடம், ஆண்டுக்காண்டு 10 சதவிகிதம் மின்சாரத்தினுடைய உபயோகம் உயர்ந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக, இன்றைக்கு ஏறத்தாழ 3,000 மெகாவாட் மின்சாரம் உபயோகப்படுத்துகிறோம் என்றால், அடுத்த ஆண்டு 3,300 மெகாவாட் தேவைப்படுகிறது. ஆகவே, மின் பகிர்மானத்தை நாம் கூட்டிக் கொண்டே சென்று, மின் உற்பத்தியைப் பெருக்கா விட்டால், எதிர்காலத்திலே மிகப்பெரிய இருளை இந்த நாடு சந்திக்க நேரிடும் என்ற காரணத்திற்காக, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, தாம் பொறுப் பேற்ற உடனேயே, பல்வேறு திட்டங்களை இங்கே அறிவித்திருக் கிறார்கள். அந்த திட்டங்களின் அடிப்படையில்தான், நான் பின்னாலே சொல்லப்போகிற அந்தத் திட்டங்கள் எல்லாம் இருக் கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த வேண்டும்.

இன்றைக்கு மின் உற்பத்தியைப் பொறுத்த மட்டிலே, 2 விதங்களை எடுத்துக் கொள்ளலாம். ஒன்று 'ஹைடல்'; இரண்டாவது 'தெர்மல்'. அதாவது புனல் மின் நிலையம்; அனல் மின் நிலையம் என்று சொல்வார்கள். அதாவது, தண்ணீரை வைத்து மின்சாரம் தயாரிப்பது ஒரு பக்கம்; நிலக்கரியை வைத்து தயாரிக்கின்ற மின்சாரம் ஒரு பக்கம். இன்றைக்கு தண்ணீரை வைத்து தயாரிக்கிற மின்சாரம்—ஆரம்பத்திலே 80 சதவிகிதம் மின்சாரம், தண்ணீரை வைத்துத் தயாரித்தோம்.—ஆனால் இன்றைக்கு அது 20 சதவிகிதமாக குறைந்திருக்கிறது. அனல் மின் நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்கின்ற மின்சாரம் தான் இன்றைக்கு 80 சதவிகிதமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவ்வாறு, இந்த 80 சதவிகித மின்சாரத்தை இன்றைக்கு நாம் உற்பத்தி செய்கின்ற நேரத்திலே, அதற்கு அவசியமாகத் தேவைப் படுகிற நிலக்கரியை நாம் அண்டை மாநிலங்களிலே இருந்து பெற

வேண்டியிருக்கிறது. நம்மிடத்திலே அதிகமான நிலக்கரி இல்லை. சிங்கரேணியிலிருந்து நமக்கு நிலக்கரி வந்தால், ஏறத்தாழ 200 ரூபாய் ஒரு டன்னுக்குக் குறைவாக இருக்கும். ஆனால், ஆந்திர மாநிலத்திலே, சிங்கரேணியிலிருந்து வருகிற நிலக்கரி நமக்கு போதுமான அளவிலே கிடைக்காத காரணத்தினாலே, வெளி மாநிலத்திலே, ஒரிசா போன்ற இடங்களில், கல்கத்தா போன்ற இடங்களிலே, துறைமுகங்களான பாரதீப், ஹால்டியா மற்றும் விசாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களிலே இருந்து, கப்பல் மார்க்கமாக, அதற்குப் பின்னாலே, ரெயில் மார்க்கமாக, அதற்குப் பின்னாலே தரை மார்க்கமாக, இப்படி பல்வேறு வகைகளிலே நாம் கொண்டு வருகிற நேரத்திலே, 'டிரான்ஸ்போர்ட்டேஷன் சார்ஜஸ்' என்று சொல்வார்களே, கொண்டு செல்கிற செலவு அதிகமாக இருக்கிறது. ஏறத்தாழ அதற்கு ஆகிற செலவு 986 ரூபாய் ஒரு டன்னுக்கு வருகிறது. அன்றைக்கு 225 ரூபாய் ஒரு டன்னுக்கு வந்த செலவு; இன்றைக்கு 1000 ரூபாய்க்கு மேலே மேட்டூருக்கு செல்லவேண்டுமென்று சொன்னால், 1000 ரூபாய்க்கு மேலே வருகிறது. எண்ணூருக்கு என்றால், 926 ரூபாய் வருகிறது. ஆகவே, 4 மடங்கு கரியினுடைய விலை, போக்குவரத்துக்காக செலவிடுகிற தொகை, 4 மடங்கு உற்பத்திக்கான செலவு தெர்மல் பவர் ஸ்டேஷனிலே கூடிவிடுகிறது என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒரு முனைப்பான நடவடிக்கையை எடுத்து, நம்முடைய அண்டை மாநிலத்தினுடைய முதலமைச்சரான திரு. ஜனார்த்தன் ரெட்டி அவர்களிடத்தில் பேசி, சிங்கரேணி கோலியரிஸிலிருந்து ஏறத்தாழ ஒரு லட்சம் டன் நிலக்கரியைக் கொண்டு வரவேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் செய்து, இன்றைக்கு 33 ஆயிரம் டன்களை நாம் இங்கே கொண்டு வந்திருக்கிறோம். ஆக, இந்த அரசு முனைப்போடு இருக்கிறது என்பது இதிலிருந்து வெளிப்படையாகத் தெரியும். இன்றைக்கு நண்பர்கள் பலர் பாராட்டினார்கள். ஏறத்தாழ 6 லட்சம் டன் இன்றைக்கு நம் இடத்திலே கையிருப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆம். அன்று இருந்த அரசு, 3 நாட்களுக்குப் போதுமான நிலக்கரியைத் தான் கையிருப்பிலே வைத்திருந்தார்கள். ஆனால், நம்முடைய அரசு இன்றைக்கு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் முனைப்பான நடவடிக்கையினால்

[திரு. எஸ். கண்ணப்பன்] [1991 அக்டோபர் 1

பின்னாலே, ஏறத்தாழ 6 லட்சம் டன், ஏறத்தாழ 15-லிருந்து 20
நாட்களுக்குப் போதுமான நிலக்கரியை நாம் கையிருப்பிலே
வைத்திருக்கிறோம் என்றால், இன்றைக்கு இந்த மின்சார
வாரியத்தினுடைய நிலைமையை நம்முடைய அரசு எந்த
அளவுக்குக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது; நம்முடைய
புரட்சித் தலைவி அவர்கள் எவ்வளவு முறையான நடவடிக்
கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த
நேரத்திலே நீங்கள் எல்லாம் உணரக் கடமைப்பட்டிருக்கின்றீர்
கள். இன்றைக்கு நிலக்கரிப் பிரச்சினை இந்த நிலையில் இருக்
கின்றது.

பிற்பகல் 2-15

அதற்குப் பின்னாலே இன்றைக்கு Line Loss என்று
சொல்லுகிறார்கள். அதற்கு முன்னாலே நம்முடைய அனல் மின்
நிலையங்களைப் பற்றி அதனுடைய செயல்பாட்டைக் குறிப்பிட்டு
ஆகவேண்டும். இன்றைக்கு நாட்டிலே ஏறத்தாழ பல்வேறு
அனல்மின் நிலையங்கள் பல்வேறு மாநிலங்களிலே இருக்கின்றன.
ஆனால் நம்முடைய அனல் மின் நிலையங்களைப் பொறுத்த
மட்டிலே மிகவும் சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுகின்றன
என்பதை நான் சுட்டிக் காட்டியாகவேண்டும்.

இன்றைக்கு குற்றச்சாட்டுகளை நாம் கூறலாம். மின்சார
வாரியத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் நடைமுறையில்
இருக்கின்றன. ஆனால் அதனுடைய செயல்பாட்டை யாரும்
குறைத்து மதிப்பிட முடியாது. ஏனென்றால் அதற்குள்ளே
சென்று பார்க்கின்ற நேரத்திலே அதிலே இருக்கின்ற பிரச்சினை
களை, அதற்காக நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள், இனிமேல்
வருங்காலத்தில் நாம் திட்டமிட வேண்டிய சூழ்நிலைகளைப்
பார்க்கின்றபோது நம்முடைய மின்சார வாரியம் இந்தியத்
திருநாட்டிலே இருக்கின்ற அனைத்து மின்சார வாரியங்களிலும்
முதன்மையாகச் செயல்படுகிறது என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). நான் இதை
வாயளவிலே சொல்லவேண்டிய அவசியம் இல்லை. செயல்
பாட்டைக் குறித்து சில புள்ளிவிவரங்களைத் தரக் கடமைப்
பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற
அனல் மின் நிலையங்களை எடுத்துக் கொண்டீர்களானால்,



1991 அக்டோபர் 1] [திரு. எஸ். கண்ணப்பன்]

அவற்றினுடைய செயல்பாடு 53 சதவீதம் என்று வைத்துக்
கொண்டால், நம்முடைய செயல்பாடு 58 சதவீதம். ஆக நம்
முடைய சதவீதம் உயர்ந்து இருக்கிறது. அதற்காக நாம்
வாரியத்தின் மீது குற்றங்களைச் சொல்லிக் கொண்டே போனால்
அது சரியல்ல, அதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில்
ஈடுபடுகின்ற அந்தக் காலகட்டம் தடைப்பட்டுப் போகும் என்ற
காரணத்தாலே. நம்முடைய வாரியம் இன்றைக்கு 58 சதவீதம்
உயர்த்தப்பட்ட அளவுக்கு, இந்திய திருநாட்டினுடைய விகிதாச்
சாரத்தைவிட இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் சிறப்
பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்
திலே சொல்லியாக வேண்டும்.

நம்முடைய தூத்துக்குடி அனல் மின் நிலையம் பல்வேறு பரிசு
களைப் பெற்றிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து பல்வேறு
பரிசுகளைப் பெற்றிருக்கிறது. நம்முடைய தூத்துக்குடி அனல்
மின்நிலையம் அதன் மேம்பாடான செயல்பாட்டின் காரணமாக
அதைப் பெற்றிருக்கிறது. ஆனால் நம் தமிழகத்திலே இருக்கின்ற
அனல் மின் நிலையங்களில் எண்ணூர் அனல் மின் நிலையம்
மட்டும்தான் மோசமாக இருக்கும். நாம் உண்மையை ஒத்துக்
கொண்டு ஆகவேண்டும். அந்த திட்டம் ஆரம்பத்தில் துவங்கப்
பட்டபோது, விஞ்ஞான வளர்ச்சி வருவதற்கு முன்னாலே
Scientific Improvement என்று சொல்வதற்கு முன்னாலே,
எண்ணூர் அனல் மின் நிலையம் வந்ததன் காரணமாகத்தான்
அதனுடைய செயல்பாடு அடிக்கடி தடைப்பட்டுக் கொண்டிருக்
கிறது. நான் கூட சென்று நம்முடைய புரட்சித் தலைவி
அவர்களின் ஆணையின் பெயரிலே சோதனையிட்டு, 200 மெகாவாட்
என்றிருந்த மின்சார உற்பத்தியை நம்முடைய அதிகாரிகளை
யெல்லாம் அழைத்துப்பேசி, உடனடியாக, 300 மெகாவாட்டாக
அன்றைக்கு உயர்த்திக் காண்பித்தது புரட்சித் தலைவி அவர்க
ளுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).
ஆக, அனல் மின் நிலையங்கள் இன்றைக்குச் சிறப்பாகச் செயல்
படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லியாக
வேண்டும்.

அதற்கடுத்தார்போல், நண்பர்கள் சொன்னார்கள். வாரியம்
நஷ்டத்திலே இயங்குகிறது என்று சொன்னார்கள். உண்மை

[திரு. எஸ். கண்ணப்பன்] [1991 அக்டோபர் 1

தெருக்களில் போடுகிற விளக்குகள் பற்றிச் சொன்னார்கள். கிராமங்களில் பல்வேறு விளக்குகளுக்கு நாம் இணைப்புகளைக் கொடுந்தாகவேண்டும். வருடத்திற்கு 20 ஆயிரம் என்ற இலக்கிலே நாம் இன்றைக்கு தெருவிளக்கைப் போட்டுக்கொண்டிருக்கிறோம் கிராமங்களிலே. பல்வேறு மனுக்களை எல்லாம் கொடுத்து அவைகள் எல்லாம் நிறைவேறாமல் 5 லைட் கொடுக்க வேண்டுமென்று அனுமதி கேட்டால் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் எல்லாம் நம்முடைய நாட்டிலே இருக்கிறது. அப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் யோசித்துத்தான் இன்றைக்கு ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்றைக்கு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய்த் திட்டம். அதாவது இன்றைக்கு வழங்க இருக்கிறார்கள். அதிலே 30 கோடி ரூபாய் அதிலே யதார்த்தமாக வருஷத்திற்கு 20 ஆயிரம் என்று சொல்லி 1991-92, 1992-93-க்குள்ளாக 40 ஆயிரம் விளக்குகளை நாம் அதிகப்படுத்திக் கொடுக்க இருக்கிறோம், நம்முடைய புள்ளிவிவரக் கணக்குப்படி. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் அளித்த சிறப்புத் திட்டத்தின் காரணமாக இன்றைக்கு ஏறத்தாழ ஒரு இலட்சத்து அறுபதாயிரம், அதாவது இந்த நாற்பதாயிரத்தையும் சேர்த்து இரண்டு இலட்சம் விளக்குகள் புதிதாகக் கிராமங்களில் போட இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக 1992-93-க்குள்ளாக இந்த இரண்டு இலட்சம் விளக்குகளும் கிராமப்புறத்திலே பொருத்தப்படும். ஆகவே இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கெல்லாம் இது ஒரு மகிழ்ச்சியான செய்தி என்பதை புரட்சித் தலைவி அவர்களின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய எதிர்காலத்திட்டங்களை நான் சொல்லி ஆகவேண்டும். நரிமணத்திலே எரிவாயு மூலம் எடுத்துச் செயலாற்ற இருக்கிற திட்டம் இருக்கிறது. அதற்காக இன்றைக்கு 2216 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டு 1991-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னாலே அந்தத் திட்டப் பணிகள் எல்லாம் முடிக்கப்பட்டு அந்த மின் உற்பத்தி நிலையம் நவம்பருக்கு முன்னாலே தொடங்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1991 அக்டோபர் 1] [திரு. எஸ். கண்ணப்பன்]

அதற்கு முன்னாலே தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கம். இதில் ஏற்கெனவே இருப்பதுபோக அடிஷனலாக இரண்டு 210 மெகாவாட் திட்டத்தைப் புதிதாகக் கொண்டு வந்து அதிலே 1992 ஜனவரியில் அந்த இரண்டும் துவங்க இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒரு 210 மெகாவாட் யூனிட் துவங்கி இருக்கிறோம் 1992 ஜனவரியில் 210 மெகாவாட் யூனிட் அந்த தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத்திலே துவங்க இருக்கிறோம்.

அதைப்போல வடசென்னையில் ஒரு அனல் மின் நிலையத்தை நாம் உருவாக்கிக்கொண்டு இருக்கிறோம். ஏறத்தாழ 3X210 என்று சொல்லக்கூடிய 630 மெகாவாட் அளவுக்கு உள்ள அந்த மின் திட்டத்தினுடைய பணிகள் 844.51 கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டப்பணிகள் முனைப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அந்தப் பணிகள் முடிந்ததற்குப் பின்னாலே அதனுடைய விரிவாக்கமாக ஏறத்தாழ 2130 மெகாவாட் அளவுக்கு அந்தத் திட்டத்தை நீட்டித்து 1995-க்குள்ளாக 2130 மெகாவாட் ஆக்கக் கொண்டு வருவதற்கு திட்டத்தை வைத்திருக்கிறோம். சேட்டலைட் போர்ட் என்ற எண்ணூர் துணைத் துறைமுகம் பற்றி நான் சொல்லியாக வேண்டும். துறைமுகத்தில் இன்றைக்கு நிலக்கரிகளைக் கொண்டு வருகிற நேரத்தில் ஏற்படுகிற செலவு பற்றி நான் உங்களிடத்திலே ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன். அந்தச் செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். அந்தத் துறைமுகம் நமக்குத் தேவைப்படுகிறது. நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்திக்கிற நேரத்தில் இந்தப் பிரச்சினையை வலியுறுத்தி நிச்சயமாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் அன்றைக்கு திரு. ஜகதீஷ் டைட்லர் அவர்களை, புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையோடு சந்தித்துப் பேசுகிற நேரத்தில் அவர்களும் கொள்கை அளவில் ஒத்துக்கொண்டு, நீங்கள் நிலத்தைக் கையகப்படுத்துங்கள்; உடனடியாக ரூ. 350 கோடிக்கு அந்தத் துணைத் துறைமுகத்திற்கு அனுமதி தருவோம் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். அந்தத் துணைத் துறைமுகம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னால் பேசின் பால எரிவாயு மின் திட்டம். அதன் மூலம் ஏறத்தாழ 4 × 30 ஆக 120 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய இருக்கிறோம். அதற்குப் பின்னால் கீழ்பவானி வலதுகரைக் கால்வாய் மூலமாகத் திட்டம். அதற்குப் பின்னால் சாத்தனூர் அணை புனல் மின் திட்டம். அதற்குப் பின்னால் பைக்காரா இறுதி நிலை புனல் மின் உற்பத்தி நிலையம். அதன் மூலம் 150 மெகாவாட் உற்பத்தி செய்ய இருக்கிறோம். இப்படி பல்வேறு காலகட்டங்களிலே நம்முடைய திட்டங்களை எல்லாம் நாம் விரிவுபடுத்திக்கொண்டிருக்கிறோம்.

ஜெயங்கொண்டத்தில் கிடைக்க இருக்கின்ற அந்தப் பழுப்பு நிலக்கரியை வைத்து ஏறத்தாழ 1,500 மெகாவாட் உற்பத்தி செய்கிற 5000 கோடி ரூபாய்த் திட்டத்தை நமது புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். [illegible] மூலமாக இன்றைக்கு அதற்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான முனைப்பான வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக மத்திய அரசும் இன்றைக்கு உதவி செய்வதற்கு தன்னுடைய நேசக்கரத்தை நீட்டி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்

பிற்பகல் 2.25

கிறேன். ஆக இன்றைக்கு வருகின்ற கால கட்டத்திலே கி.பி. 2000 ஆண்டில் ஏறத்தாழ 4300 மெகாவாட் நமக்குப் பற்றாக்குறை இருக்கும் என்று நாம் கருதுகிறோம். ஆகவே, அதைக் கணக்கிட்டு இன்றைக்கு இந்தத் திட்டங்களை நாம் முனைப்போடு செயல்படுத்தினால்தான் வருகின்ற கால கட்டங்களிலே நம்முடைய மின்சாரத் துறை பற்றாக்குறை இல்லாத ஒரு துறையாக இயங்க முடியும் என்ற காரணத்திற்காக எதிர்காலத்திலே எண்ணற்ற தொழிற்சாலைகளையும், எண்ணற்ற மின் இணைப்புகளையும் இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய மின் இணைப்புகளையும் கொடுக்கவேண்டும் என்ற முனைப்போடு இன்றைக்கு அரசு பல்வேறு எதிர்காலத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு மின்சார இணைப்புகளை விவசாயத்திற்கு வழங்குவது பற்றி பல்வேறு நண்பர்கள் பல்வேறு கருத்துக்களை





எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை நாம் பார்க்கின்ற நேரத்திலே ஏறத்தாழ நாலேமுக்கால் லட்சத்திற்கு இன்றைக்கு பாக்கி இருக்கிறது என்று சொன்னால் இன்றைக்கு—அதற்காக நான் நேற்றுக்கூட கேள்வி கேட்டபோது பதில் சொல்லி இருக்கிறேன்—1660 கோடி ரூபாய் இருந்தால்தான் உடனடியாக மின் இணைப்பு வழங்கமுடியும். இருந்தாலும் அப்படி வழங்கவேண்டும் என்றால் அதிகமான மின்சாரம் வேண்டும். இணைப்புக்களைக் கொடுத்துவிட்டு மின்சாரம் நாம் கொடுக்கவில்லை என்றால் அதற்குரிய பிரச்சினைகள் வந்து சேரும். ஆகவே தான் இருக்கின்ற அளவினை வைத்து இருக்கின்ற மின்சாரத்தை, நாம் உற்பத்தி செய்த மின்சாரத்தை நாம் பகிர்மானம் செய்கின்ற நேரத்திலே நாம் எவ்வளவு தூரம் கொடுக்க முடியுமோ அந்த அளவு முன் உரிமை கொடுத்து இன்றைக்கு இங்கே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே சிறப்பு உணவு உற்பத்தி திட்டங்களுக்கான, தஞ்சை, திருச்சி மற்றும் பல்வேறு மாவட்டங்களிலே இருக்கின்றவர்களுக்கெல்லாம் முன் உரிமை கொடுத்து செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே இப்படிப் பல்வேறு திட்டங்களை விவசாயிகளுடைய நலன் கருதி இந்த அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படும் இலக்கீட்டிற்குள் விதவைகள், முன்னாள் ராணுவத்தினர், ஊனமுற்றோர் மற்றும் மலைவாழ் மக்களுக்குச் சொந்தமான மொத்த 100 பம்புசெட்டுகளுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு சிறப்பு முன்னுரிமை அளித்து, மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

அதே போல, 'ஒன் போல் சிஸ்டம்' என்று சொல்கின்ற அளவுக்கு ஒரு போல் நடக்கூடிய அளவுக்கு இருக்கின்ற அந்த இடைவெளி உள்ள இடங்களுக்கெல்லாம் இன்றைக்கு மின்சாரத்திலே முன் உரிமை கொடுத்து வழங்க இருக்கிறோம். ஏற்கெனவே நான் கூட நேற்று சொன்னேன். 20 ஆயிரம் ரூபாய் ஒரு இணைப்புக் கொடுப்பதற்குத் தேவையாக இருக்கிறது என்று. இன்றைக்கு 'ஒன் போல் சிஸ்ட'த்திலே நாம் 5 ஆயிரம் ரூபாய் செலவழிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இப்படிப் பல்வேறு காலகட்டங்களிலே செலவினங்களைப் பொறுத்து இன்றைக்கு மின் இணைப்புகளை வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1991 அக்டோபர் 1

அதற்குப் பின்னாலே நெய்வேலியினுடைய சுரங்கத்தை விரிவுபடுத்துவதற்காக இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் நம்முடைய மத்திய அரசு வழங்கியிருக்கிறது. அதற்காக நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தத் திட்டமும் துவங்க இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

இதுபோலவே, 'விண்ட் எனர்ஜி' என்று சொல்லப்படுகின்ற காற்றாலையின் மின் உற்பத்தியை இன்றைக்குப் பெருக்குகின்ற திட்டங்களையும் நாம் 15 மெகா வாட்டுக்கு இன்றைக்குப் புதிதாக உருவாக்க இருக்கிறோம். ஏற்கெனவே 14 மெகா வாட் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல இன்றைக்கு 'கன்சர்வேஷன் ஆப் எனர்ஜி' என்று சொல்கிறார்களே அதில் இன்றைக்குச் சர்க்கரை கழிவிலிருந்து அந்தந்தச் சர்க்கரை ஆலைகளில் இருந்து அந்த மின்சாரத்தை எடுக்கலாமா என்பதைப் பற்றி அதற்கான ஒரு திட்டத்தை இந்த அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான செமினார்களை எல்லாம் நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். இப்படிப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கின்றார் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லியாக வேண்டும். இன்றைக்கு நம்முடைய நண்பர்கள் சொன்னார்கள். மின்சாரத்தைச் செலுத்துகிற நேரத்திலே அதற்கெல்லாம் டிரான்ஸ்மிஷன் லாஸ் என்று சொன்னார்களே, அந்த செலுத்துகின்ற நேரத்திலே ஏற்படுகின்ற நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு இன்றைக்குப் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

1991-92 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 37 துணை மின் நிலையங்களை நாம் அமைக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக பல்வேறு முனைப்பான திட்டங்களை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த டிரான்ஸ்மிஷன் லாஸ்-ஐ போக்குவதற்காக மின் கண்காணிப்புப் பொறி ஒன்று வாங்கப்பட்டு அது ஆய்வு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கையை நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.



1991 அக்டோபர் 1] [திரு. எஸ். கண்ணப்பன்]

இன்றைக்கு அகில இந்திய அளவிலே டிரான்ஸ்மிஷன் லாஸ் என்று சொல்கின்ற நேரத்திலே 21 சதவிகிதம் என்ற அளவிலே நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய அளவு 18 சதவிகிதம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அகில இந்திய ரீதியிலே பார்க்கும்போது நம்முடைய மின்சார வாரியம் இன்றைக்குக் குறைவாக இருந்தாலும் கூட இதையும் எப்படிக் குறைக்க முடியும் என்று முனைப்போடு இன்றைக்கு உறுப்பினர்கள் சொன்ன மேலான ஆலோசனைகளை ஏற்று அதற்கான முனைப்பான நடவடிக்கைகளாக இந்த அரசு, இந்த வாரியம் மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே ஏறத்தாழ வீட்டு உபயோகத்திற்காக 61084 மின் இணைப்புகளையும், இன்று கமர்சியல் பர்பஸுக்காக 10310 மின் இணைப்புகளையும், இன்றைக்கு அக்ரிகல்சுரல் பர்பஸுக்காக 6714 மின் இணைப்புகளையும், குடிசைகளுக்காக 10827 மின் இணைப்புகளையும், இன்றைக்கு இன்டஸ்ட்ரியலுக்காக 3447 மின் இணைப்புகளையும், பப்ளிக் வாட்டர் சோர்ஸுக்காக என்று இன்றைக்கு 443 மின் இணைப்புகளையும், இதர வகைகளுக்காக 1487 மின் இணைப்புகளையும் ஏறத்தாழ 95 ஆயிரம் மின் இணைப்புகளை 3 மாத காலத்திலே நம்முடைய புரட்சித் தலைவி அரசு செய்திருக்கிறது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பணியாற்றுகின்றவர்களைப்பற்றி சொன்னார்கள். வாரியத்திலே பணியாற்றுகின்றவர்களில் அதிகாரிகள் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

பிற்பகல் 2.30

இன்றைக்கு பணியாளர்களை எடுத்துக்கொண்டால், கிளாஸ் 1, 2 என்று சொல்லக்கூடிய உயர்நிலை அதிகாரிகள் ஏறத்தாழ 8,383 பேர் பணியாற்றுகிறார்கள். அதுபோல கிரேட் 3 அண்ட் 4 என்று சொல்லக்கூடிய கடைநிலை ஊழியர்கள் ஏறத்தாழ 83,002 பேர்

[திரு. எஸ். கண்ணப்பன்] [1991 அக்டோபர் 1

பணியாற்றுகிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குப் பல்வேறு இடங்களில் மின்சார வாரியத்திலே ஆட்கள் இல்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதிலே இருக்கின்ற பிரச்சினைகளை எலலாம நமமுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் எந்தெந்தப் பகுதிகளிலே லைன்மேன், ஹெல்பர்கள் என்று சொல்லக்கூடிய பல்வேறு வேலை பணியாட்கள் இன்றைக்குக் குறைவாக இருக்கிறார்களோ அவைகளை எல்லாம் நாங்கள் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்டிருக்கிற குறிப்புகளை எடுத்துக் கொண்டு, அந்தந்தப் பகுதிக்குப் புதிதாக நியமிப்பதன் மூலமோ அல்லது இருக்கின்றவர்களை சரி செய்தோ எந்த அளவிலோ இனி மேல் அந்தத் தட்டுப்பாடு இல்லாமல், தேவையானால் மீண்டும் புதியவர்களை இந்த அரசு நியமித்து, அந்தப் பகுதிகள் பார்த்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் சார்பில் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 'லோ வோல்டேஜ்' என்று மின் சார துறையினுடைய உரையிலே நான் குறிப்பிட்டிருப்பதாக இங்கே சொன்னார்கள். இன்றைக்கு எதையுமே இருக்கின்றதை துணிச்சலோடு சொல்லக்கூடிய ஆற்றல் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். எங்களிடத்தில் இருக்கிற குறைகளையும் நாங்கள் சொல் கிறோம், நிறைகளையும் நாங்கள் சொல்கிறோம், அந்த அடிப் படையிலே குறைகள் இருக்கின்ற இடத்திலே குறைகள் இருக் கின்றன என்று சொல்கிறோம். அவைகளைப் போக்குவதற்கு நாங்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்பதையும் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் குறைந்த மின் அழுத்தத்தை சீர் செய்வதற்காகவும் மின் இணைப்புகளை வழங்குவதற்காகவும் ரூ. 8 கோடியே 39 லட்சம் செலவிலே ஒரு பெரிய திட்டத்தை தயாரித்திருக்கிறோம். ஏறத்தாழ ஒரு 6 சப் ஸ்டேஷன்களை இன்றைக்கு போடுவதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை



1991 அக்டோபர் 1] [திரு. எஸ். கண்ணப்பன்]

இந்த நேரத்திலே தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் அந்தக் குறைகள் எல்லாம் சரி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமர்ஜென்சி எக்ஸ்பென்டிச்சர் என்று சொன்னார்கள்; அவசரத் தேவைகளுக்காக ரூபாய் கொடுக்கின்றோம் என்று சொன்னார்கள். எந்த அதிகாரியும் அதிகமான ரூபாய் கொடுப்பதில்லை. அவர்களுடைய வாகன செலவு, அவர்களுடைய ஜீப், டிராக்டர்கள், லாரிகள் போன்றவைகளை எல்லாம் ரிப்பேர் செய்ய மட்டும் அந்தத் தொகையை கொடுக்கிறோம். அப்படி அதிகமான தொகை ஒதுக்கப்படுமேயானால் அவை எல்லாம் உடனடியாக களையப்பட்டு அந்த கணக்குகள் எல்லாம் சரி பார்க்கப்பட்டு இனிமேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். காலத்தின் அருமை கருதி, இன்னும் அரை மணி நேரம் கூட இந்தத் துறையைப்பற்றி பேசலாம் என்றாலும், இன்றைக்கு எதிர்கால திட்டங்களைப் பற்றியும், இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றியும் விரைவாக சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கருத்துக்களை ஏற்று, நீங்கள் சொல்லியிருக்கின்ற கருத்துக்கள் அத்தனையையும் இந்த அரசு பரிசீலனை செய்து, கருத்திலே கொண்டு சிறப்பான முறையில் பணியாற்றி, தமிழ்நாடு மின்சார வாரியம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் காலத்திலே மிகச் சிறந்த நிர்வாக சிறப்பினைப் பெற்று, மிகச் சிறந்த மின்சார வாரியமாக திகழும். கடந்த காலத்தைப் போல இருக்காது, எதிர்காலத்திலே மிகவும் சிறப்பான முறையில் வாரியம் செயல்படுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு, ஒன்றை சொல்ல மறந்துவிட்டேன்.

ஜெனரேஷன் என்று சொல்லப்படுவதைப் பொறுத்தவரையில், இந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அதற்காக கார்ப்பரேஷன் ஒன்றை கொண்டு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். பட்ஜெட்டிலே அதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். மின் உற்பத்திக் கழகம் என்ற ஒன்றை

கொண்டு வந்திருக்கிறார்கள். அதுபோல பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிதி நிறுவனத்தையும் நிறுவ இருக்கிறார்கள். இவை எல்லாம் புரட்சித் தலைவியினுடைய அடுக்கடுக்கான நடவடிக்கைகள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) மின்சார வாரியத்தை இன்றைக்கு சீர்படுத்த வேண்டும் என்ற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே, இதிலே உள்ள குறைகளைக் களைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், 40 ஆண்டுகளாக கிடப்பிலே போடப்பட்டிருந்த பிரச்சினைகளை எல்லாம் எடுத்து 4 ஆண்டுக் காலத்திலே நிறைவேற்ற வேண்டுமென்ற முனைப்பான நடவடிக்கை தான் இது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, புரட்சித் தலைவியின் காலம் மின்சாரத் துறையினுடைய பொற்காலம் ஆக இருக்கும் என்பதைச் சொல்லி, இங்கே நல்ல பல கருத்துக்களைச் சொன்ன அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லி, உங்களுடைய மேலான கருத்துக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 4 லட்சத்து 78 ஆயிரம் விவசாயிகள் இன்று தங்களுடைய பெயர்களை பதிவு செய்து மின் இணைப்புக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் இருந்து 'ஸ்பெஷல் பீஸ்' என்ற வகையில் தனியாக வசூலித்து, அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** ஏற்கெனவே பேசியிருக்கிறேன். 4 லட்சத்து 78 ஆயிரம் மின் இணைப்புகள் காத்துக் கொண்டிருக்கின்றன. வருடத்திற்கு 40 ஆயிரம் வீதம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இருக்கின்ற உற்பத்தி, நிதி ஆதாரங்கள் இவைகளை எல்லாம் வைத்து நாம் கொடுக்கிறோம். ஆனால் இந்த 40 ஆயிரத்தை குறைப்பதில்லை. எதிர்காலத்தில் நம்முடைய உற்பத்தி கூடுகிற நோக்கில், நாம் இன்றைக்கு போட்டிருக்கின்ற திட்டங்களைப் பார்க்கின்றபோது மாண்புமிகு



உறுப்பினர் சந்திக்கத் தேவையில்லை. நம்முடைய புரட்சித் தலைவியின் காலத்திலே அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய் கின்ற நேரத்தில் அவைகளை எல்லாம் நீடித்து. இன்னும் அதிக மான அளவில் முனைப்போடு மின்சார இணைப்புகள் வழங்கப் படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-35.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. தேவராஜ்.

**திரு. அ. தேவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பேசுகின்றபோது, ரீ-ஜெனரேஷன் என்ற முறையிலே சர்க்கரை ஆலைகளிலே மின்சாரம் உற்பத்தி செய்து, உபயோகப்படுத்தப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போன்று செய்யாறு தொகுதியிலே இருக்கிற சர்க்கரை ஆலைகளிலிருந்து மின்சாரம் எடுக்க உடனடியாக ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பகாஸ் என்று சொல்லப்படும் சர்க்கரைக் கழிவின் மூலம் மின்சாரத்தை எடுக்கும் திட்டம் ஏற்கெனவே சர்க்கரை ஆலைகளில் கொண்டுவந்து, அதற்காக செமினார் எல்லாம்கூட நடத்தி, நாம் ஆய்வு செய்தோம். அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அந்த சர்க்கரை ஆலைகளில் கழிவை வைத்து, சக்கை என்று சொல்வார்களே, அதை வைத்து மின் சாரம் தயாரிக்க முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அந்த முறை வெற்றி பெறுமானால் அந்த முறை எல்லா சர்க்கரை ஆலைகளுக்கும் விரிவு படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலில் இந்த ஆண்டு 6 உப மின் நிலையங்கள் அமைக்கப்படுமென்று

சொன்னார்கள். மின் அழுத்தம் கம்மியாக வருகின்ற காரணத்தாலேதான் மோட்டார் ஓடும்போதே பர்ன் ஆகிவிடுகிறது. மீண்டும் புதிதாக மோட்டார்கள் வாங்கக்கூடிய அளவுக்கு காயில் ரீவைன்டிங் செலவாகிறது என்பதை நான் ஒரு கேள்வியின் மூலம் கேட்டிருக்கிறேன். எனவே நடப்பு ஆண்டிலேயாவது நிலக்கோட்டை தொகுதியிலே சித்தாமூர் கிராமத்திலே உப மின் நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 6 என்று சொல்லவில்லை. இந்த ஆண்டு 37 உப மின் நிலையங்கள்—சப்-ஸ்டேஷன்ஸ்—துவங்க இருக்கிறோம். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். அந்த இடத்திலே, நீங்கள் குறிப்பிடும் அளவுக்கு மின் அழுத்தம் குறைவாக இருக்குமானால், அதைப் பற்றி இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. பி. சந்திரசேகர்.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500, 1,000 ஏக்கர்கள் இருக்கின்ற விவசாயிகள்கூட இலவச மின்சாரம் பெறுகின்றபோது, நகரப் பகுதியிலே இருக்கிற ஏழை விவசாயிகள் தங்களுடைய பம்பு செட்டுகளுக்குப் பயன்படுத்தும் மின்சாரத்தை இலவசமாக அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற விவசாயி கிராமப்புற விவசாயி என்றெல்லாம், இந்த அரசு பிரித்துப் பார்க்க முடியாது. விவசாயி என்றாலே, விவசாயி என்ற ஒரு கட்டத்தில்தான் பார்க்க முடியும். எனவே அப்படி திட்டம் எதும் இந்த அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ச. சுந்தரராஜ்.

**டாக்டர் ச. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் இல்லாமல், இராமேஸ்வரத்திலிருந்தும் பல





வேறு பகுதிகளிலிருந்தும் அலைய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தைத் தனியாக அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே மதுரையிலிருந்து இராமநாதபுரம், பசும்பொன் மாவட்டங்களுக்கு அலுவலகத்தைப் பிரித்துத் தர வேண்டுமென்று கோரிக்கை இருந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அது கிடப்பிலே போடப்பட்டது. புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்ற உடனே, ஏற்கெனவே புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டபடி, சிவகங்கையில் உடனடியாக அந்த அலுவலகம் மாற்றப்பட்டு, சிவகங்கையில் அந்த அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அலுவலகம் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு ஆவல் இருக்கிறது. அதை எல்லாம் உரிய அதிகாரிகளிடத்தில் சொல்லி, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அனுமதியோடு அது பற்றி உடனடியாகக் கவனித்து, உங்களுடைய கோரிக்கையின் நியாயத்தின் அடிப்படையிலே முடிவுகள் எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரமா அல்லது சம்சாரமா என்ற சொல்லுகின்ற அதே நேரத்தில் மின்சாரம்தான் மிக அவசரத் தேவை என்று சொல்லுகிற இந்த நாளில் சிங்கிள் போஸ்ட் கனெக்ஷன் எப்போது வரை கொடுக்கப்பட இருக்கிறது? 1986-க்குப் பிறகு 1991 வரை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது குடும்பப் பிரச்சினையை எல்லாம் கொண்டு வருகிறார்கள். இங்கே மின்சாரம் வேண்டுமென்பார், வீட்டுக்குப் போன பின்பு சம்சாரம் வேண்டுமென்று சொல்லுவார். (பலத்த மேசையைத்

தட்டும் ஒலி) ஆகவே அவர் தொகுதி மக்களுக்காகப் பேச வேண்டுமென்று பிரச்சினைகளை இங்கே கிளப்பி இருக்கிறார் என்று நினைக்கிறேன். ஒன் போல் சிஸ்டம் என்ற அளவுக்கு நான் இன்றைக்குச் சொல்லி இருக்கிறேன். ஒன் போல் சிஸ்டத்தில் பவர் கனெக்ஷன் கொடுக்க 5,000 ரூபாய் செலவாகுமென்று சொல்லியிருக்கிறேன். ஒன் போல் சிஸ்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இன்றைக்கு நிறைவேற்றச் சொல்லியிருக்கிறோம். அவற்றில் விடுபட்டுப் போயிருக்குமானால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக அந்தப் பகுதிக்குத் தர ஆவன செய்யப்படும். அத்துடன் இந்த மின்சாரத் துண்டிப்பு நடந்த பிறகு. . . .

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஈ) பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்ற/நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு.

பிற்பகல் 2-40.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.

விவாதம் முடிவுற்றது. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களுக்கான ஆட்சிமன்றக் குழுவிற்கு அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையான நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

| பல்கலைக் கழகம். | உறுப்பினர் பெயர். |
|---|---|
| தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம். | திரு. நா. சா. பழனிசாமி. |
| மனோன்மணீயம் சுந்தரனார் | திரு. இரா. புதுநயினார் ஆதித்தன். |
| திரு. பீட்டர் அல்போன்ஸ், | பல்கலைக் கழகம். |



| | |
|---|---|
| காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம். | திரு. மா. சா. மா. இராமச்சந்திரன். |
| பாரதியார் பல்கலைக் கழகம் | திருமதி க. பழனியம்மாள். |
| | திரு. எச். எம். ராஜு |
| சென்னைப் பல்கலைக் கழகம் | டாக்டர் எம். பி. சேகர். |
| | திரு. அ. தேவராஜ். |
| | திரு. ஏ. கே. சி. சுந்தரவேல். |
| | பேராசிரியர் (திருமதி) கவிநிலவு தர்மராஜ். |
| | திரு. எஸ். எம். கிருஷ்ணன். |
| | திருமதி ஜீனத் சர்புதீன் |
| மதுரை காமராஜர் பல்கலைக் கழகம். | திரு. எஸ். எம். துரை. |
| | திரு. தேனி பன்னீர் செல்வம் |
| | திரு. ஏ. தெய்வநாயகம் |
| | டாக்டர் தே. குமாரதாஸ் |
| அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | திரு. செ. கு. தமிழரசன். |
| | திரு. எஸ். சண்முகநாதன் |
| | திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ். |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம் | திரு. கு. தங்கமுத்து. |
| | திருமதி இலதா பிரியகுமார் |
| அண்ணா பல்கலைக் கழகம் | திரு. கா. ப. பட்டாபிராமன் |
| தமிழ்ப் பல்கலைக் கழகம் | திரு. வே. பெரியசாமி |
| | திரு. எஸ். ராஜாராமன். |

ஆதரவற்றோர், அநாதை இல்லங்களின் நிர்வாகக் குழுவிற்கு கீழ்க்கண்டவர்களிடமிருந்து நியமனத் தாள்கள் முறையாக வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய எண்ணிக்கையும்

[1991 அக்டோபர் 1

முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

திரு. சு. சே. இராஜமன்னார்.

திரு. கே. சிங்காரம்.

திரு. சா. பன்னீர்செல்வம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள் 3—10—1991 காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.42 மணிக்கு ஒத்திவைக்கப பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் :

124. 1978-79 முதல் 1985-86 முடிவுள்ள காலவரைக்காக தென் னாற்காடு மாவட்டம் குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தினால் செலுத்தப்பட வேண்டிய தண்டத் தொகை ரூ. 33,664-ஐ தள்ளு படி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 31—10—1990 ஆம் நாளிட்ட 632 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1|1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

125. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 8|1971) 49(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள் :

* 143. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1991-92 ஆம்



1991 அக்டோபர் 1]

ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1990-91 ஆம் ஆண்டிற் கான திருந்திய மதிப்பீடு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதத்தை தொடங்கி வைத்து ஆற்றும் உரை (தமிழ், ஆங்கிலம்).

144. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (இரண்டாம் பட்டியல்) (எண் 1 முதல் 50 வரை).

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,

அவையின் முன் வைக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத் தின் 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 1990-91 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு ஆகியவற்றை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென முன் மொழி கிறேன்.

2. தமிழ்நாடு மின் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 16 ஆம் பிரிவிற் கிணங்க, தமிழ்நாடு மின் வாரியம் இந்த நிதி நிலை அறிக்கை களைச் சமர்ப்பித்துள்ளது. வாரியத்தின் செயல்முறை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் மின் வாரியமும் கருத்தில் கொள்ளும்.

3. மின்சாரம் வசதி படைத்த ஒரு சாரார் மட்டும் பயன் படுத்தும் ஒரு ஆடம்பர பொருள் அல்ல. வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான அடிப்படைத் தேவையாகவும், பொருளா தார வளர்ச்சிக்குக் குறிப்பாக தொழில் மற்றும் விவசாயத்துறை களில் முக்கியமான இடுபொருளாக அது உள்ளது. மிகவும் சிக்கனமாகவும் சிறந்த முறையிலும் மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்வு ஆகிய ஒருங்கிணைந்த முன்னேற்றப் பணிகளை மாநிலத்தில் செய்யும் பொறுப்பு, 1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் கீழ் 1957-ல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் தரப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகளின் மீதான இந்த விவாதம், மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான கொள்கை களையும் விரிவாக விவாதிப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை வழங்கும் என நான் நம்புகிறேன். எதிர்நோக்கியுள்ள பணி களையும் வருங்கால திட்டங்களையும் விவரிப்பதற்கு முன்னர்

1991 அக்டோபர் 1]

மாநிலத்தில் தற்போதுள்ள மின் வழங்கல் நிலையினையும் மின் வாரியத்தின் செயல்பாட்டினையும் குறித்துச் சுருக்கமாக குறிப்பிட விரும்புகிறேன்.

மின் வழங்கல் நிலை.

4. 1990-91 ஆண்டுடன் ஒப்பிடும்போது, நடப்பாண்டில் மாநிலத்தின், மின்சார நிலைமை பெருமளவில் மேம்பட்டுள்ளது. இந்த அரசு பதவி ஏற்ற பொழுது உயர் அழுத்தத் தொழிற் சாலைகட்கு மின் விசையில் 25 சதவிகிதமும் தேவையில் 30 சத விகிதமும் மின்வெட்டு அமுலில் இருந்தது. தற்போது மின்விசை பயன்படுத்துவதில் வெட்டு ஏதும் இல்லை எனினும் 130 கே.வி. ஏக்கு அதிகமான பளு இணைப்பு பெற்ற உயர் அழுத்தத் தொழிற் சாலைகட்கு தேவையின் மீது 20 சதவிகிதம் மின்வெட்டு அமுலில் உள்ளது.

நிலக்கரி பெறுதலில் இடர்பாடுகள்.

5. இந்த நேரத்தில், நமது அனல் மின் நிலையங்கட்கு நிலக்கரி கிடைப்பதிலுள்ள இடர்பாடுகள் பற்றியும், இதனால் மின் வாரி யத்தின் நிதி நிலையில் ஏற்படும் பாதிப்பு பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். மாநிலத்தில் நிலக்கரி ஆதாரங்களில்லை. எனவே மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்கட்குத் தேவையான நிலக்கரி, ஆந்திரம், ஒரிஸ்ஸா, பீஹார் மற்றும் மேற்கு வங்காளத்திலிருந்து வர வேண்டும். எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டபோது ஆந்திர மாநிலத்திலுள்ள சிங்கரேணி சுரங் கத்திலிருந்து நிலக்கரி வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டி ருந்தபோதிலும் இச்சுரங்கத்தின் உற்பத்திக் குறைவினால் இவ் விரண்டு நிலையங்களுக்கும் சிங்கரேணியிலிருந்து நிலக்கரி கிடைக்கவில்லை. எனவே, மிகவும் கூடுதலான செலவில், ஒரிஸ்ஸா, பீஹார் மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களிலிருந்து இரயில்-கடல்-இரயில் மார்க்கமாக நிலக்கரி கொண்டு வரும் நிர்பந்தம் மாநிலத்துக்கு ஏற்பட்டு உள்ளது. தற்போது, இரயில்-கடல்-இரயில் மார்க்கமாக, எண்ணூரில் பெறப்படும் நிலக்கரியின் சராசரி விலை டன் ஒன்றுக்கு ரூ. 926 ஆகும். ஆனால், சிங்க ரேணிச் சுரங்கங்களிலிருந்து பெறப்பட்டிருந்தால் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 712 மட்டுமே இருந்திருக்கும். அதே



1991 அக்டோபர் 1]

போன்று, மேட்டூரைப் பொறுத்தவரை, இரயில்-கடல்-இரயில் மார்க்கமாகப் பெறப்படும் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 1,043 ஆகிறது. ஆனால் சிங்கரேணிச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 840 மட்டுமே. வடமாநிலங்களிலிருந்து பெறப்படும் நிலக்கரியின் விலையோ அதிகம், தரமோ குறைவு.

ஒரு யூனிட் மின் உற்பத்தி செய்ய, நிலக்கரிக்கான செலவு, எண்ணூரில் 87 பைசாகவும் மேட்டூரில் 79 பைசாவாகவும் அமை கின்றன. ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான செலவு, நமது நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் மிக அதிகம். நிலக் கரிக்கு அதிக விலை கொடுத்த போதிலும், உறுதி அளிக்கப்பட்ட அளவு நிலக்கரி மாநிலத்துக்குக் கிடைப்பதில்லை. சமீபத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் வேண்டு கோளுக்கிணங்க, சிங்கரேணிச் சுரங்கங்களிலிருந்து ஒரு இலட்சம் டன் நிலக்கரி வழங்க மாண்புமிகு ஆந்திர முதல்வர் இசைந் துள்ளார். ஆனால், இந்த நிலக்கரி சாலை மார்க்கமாக கிட்டத் தட்ட 818 கி.மீட்டர் தூரம் வர வேண்டும். இதுவரை இவ் வகையில் 23,000 டன் நிலக்கரி எண்ணூர் அனல் மின் நிலையம் வந்து சேர்ந்துள்ளது. நீர்த் தேக்கங்களில், கடந்த இரண்டு மாதங்களில் பெறப்பட்ட கூடுதலான நீர் வரத்தினைப் பயன் படுத்தி தமிழ்நாடு மின்சார வாரியம் நிலக்கரியை மிச்சப்படுத்தி உள்ளது. தற்போதுள்ள நிலக்கரி கையிருப்பு ஏறத்தாழ 6.5 இலட்சம் டன்களாகும். இதன் காரணமாகக் கோடை மாதங்களில் நிலக்கரி கையிருப்பு நிலைமை மேம்படும்.

அனல்மின் நிலையங்களின் செயல்பாடு.

6. நமது மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. இந்தியாவிலுள்ள அனல் மின் நிலையங்களின் சராசரி செயல்பாட்டுத் திறன் 1990-91 ஆம் ஆண்டில் 53.8 சத விகிதம் மட்டுமே. தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களின் சராசரி செயல்பாட்டுத் திறன் 53.8 சதவிகிதம் என்பது பெருமைப் படக் கூடியதாகும். நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படும் அனல் மின் நிலையங்களில் தூத்துக்குடி அனல் மின் நிலையம்

ஒன்றாகும். இந்நிலையம், 1989-ல் நான்காவது முறையாக மைய அரசின் சிறப்பு விருதினைப் பெற்றுள்ளது. 1990-ல் இந்த நிலையத்தின் செயல்பாட்டுத்திறன் குறியீடு 77.62 சதவிகிதத்தை எட்டியுள்ளது. எனவே, ஐந்தாவது முறையாக உற்பத்தித் திறனுக்கான சிறப்பு விருதினைப் பெறும் தகுதியைப் பெற்றுள்ளது.

7. தற்போது நிறைவேற்றப்படும் மின் உற்பத்தித் திட்டங்களின் இன்றைய நிலைகுறித்து இப்போது நான் எடுத்துரைக்க விழைகிறேன்.

### நரிமணம் எரிவாயு மின் திட்டம்.

8. எண்ணை மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் தஞ்சை மாவட்டம் நரிமணத்தில் மின் உற்பத்திக்காக நாள் ஒன்றுக்கு 70,000 கன மீட்டர் எரிவாயுவை ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ. 22.55 கோடி செலவிலான இத்திட்டத்துக்கு மத்திய திட்டக் குழு 30.8.90 அன்று ஒப்புதல் அளித்தது. எரிவாயு மின் உற்பத்தி இயந்திரங்கள் ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. பெரும்பகுதியான இயந்திரங்கள் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. எல்லா இயந்திரங்களும் பெறப்பட்டு நிறுவப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றும் ஐந்து மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளும் 1991 நவம்பருக்கு முன்னர் இயக்கத்திற்கு வரும்.

### தூத்துக்குடி அனல்மின் நிலைய விரிவாக்கம்.

9. ஏற்கனவே ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகள் செயலில் உள்ளன. இந்நிலையத்தில் ஒவ்வொன்றும் 210 மெ. வாட் மின் உற்பத்தித்திறன் கொண்ட மேலும் இரண்டு பிரிவுகள் நிறுவப்படும். 1985 ஜூன் மாதம் மத்திய திட்டக்குழு இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. இந்த அனல் மின் நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு 1.6 மில்லியன் டன் நிலக்கரி கூடுதலாகத் தேவைப்படும். இத்திட்டத்துக்கான செலவு





ரூ. 623.83 கோடி ஆகும். இரண்டில் ஒரு பிரிவு 30—3—1991 அன்று இயக்கப்பட்டது. இரண்டாவது பிரிவு 1992 ஜனவரியில் இயக்கத்திற்கு வரும்.

### வட சென்னை அனல் மின்திட்டம்.

10. இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் எண்ணூரில் ஒவ்வொன்றும் 210 மெ. வாட் மின் உற்பத்தித்திறன் கொண்ட மூன்று பிரிவுகளை அமைப்பதாகும். இத்திட்டத்துக்கு மத்திய திட்டக்குழு 1986-ல் ஒப்புதல் அளித்தது. முதல் மூன்று பிரிவுகளுக்கான நிலக்கரி ஒரிஸ்ஸா மாநிலம் கலிங்கா சுரங்கங்களிலிருந்து கிடைக்கும். தற்போது இத்திட்டத்துக்கான செலவு ரூ. 844 கோடி ஆகும் என மதிப்பிடப்படுகிறது. முதல் பிரிவு, 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும், இரண்டாவது பிரிவு அவ்வாண்டு டிசம்பர் திங்களிலும் மற்றும் மூன்றாம் பிரிவு, 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும் செயல்படத் துவங்கும். ஆசிய வளர்ச்சி வங்கி இந்தத் திட்டத்துக்கென சுமார் 250 மில்லியன் டாலர் கடன் வழங்கியிருக்கிறது. வெவ்வேறு கட்டங்களில் இந்த நிலையத்தின் மொத்த திறனை 2.30 மெகாவாட் வரை விரிவாக்கவேண்டுமென்பது மின் வாரியத்தின் குறிக்கோளாகும்.

### எண்ணூர் துணைத் துறைமுகம்.

11. வட சென்னை அனல் மின் நிலையத்துக்கான நிலக்கரி இறுதியாக தல்சேர் பகுதியிலிருந்து கப்பலில் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கான திட்டப்பகுதியில் ஒரு துணை துறைமுகம் அமைக்க மைய அரசு திட்டமிட்டுள்ளது. நிலக்கரியைக் கொண்டு வரும் திட்டத்துக்கென ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவி வழங்கக் கருதியுள்ளது. நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்துக்கு விரைவில் அனுமதி வழங்குமாறு மாண்புமிகு பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார்.

### பேசின்பாலம் எரிவாயு மின் திட்டம்.

12. ஒவ்வொன்றும் 30 மெ. வாட் திறன் கொண்ட 4 எரிவாயு மின் உற்பத்திப் பிரிவுகளை நிறுவும். இத்திட்டத்துக்கு ரூ. 123 கோடி செலவில் திட்டக்குழு 1989 செப்டம்பரில் ஒப்புதல்

அளித்தது. இத்திட்டத்துக்கென 11,450 மில்லியன் யென் கடன் வழங்க ஜப்பானிய அரசு இசைந்துள்ளது. இப்பிரிவுகள் 1993-94 ஆண்டில் செயல்படத் துவங்கும்.

### கீழ்பவானி வலது கரைக் கால்வாய்.

13. கீழ் பவானி அணையின் வலது புறத்தில் 5 மதகுகள் கொண்ட ஒரு உயர்மட்டக் கால்வாய் பாசனத்திற்கென உள்ளது. இதில் இரண்டு மதகுகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டம் 1988 எப்ரலில் அனுமதிக்கப்பட்டது. தற்போது இதற்கான செலவு ரூ. 16 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் நான்கு மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகள் 1994-95-ல் இயக்கத்திற்கு வரும்.

### சாத்தனூர் அணை புனல் மின் திட்டம்.

14. 1988 ஏப்ரலில் ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டம் 7.5 மெ. வாட் திறனுடன் சாத்தனூர் அணையிலிருந்து விவசாயத் துக்கென விடப்படும் நீரை மின் உற்பத்திக்கு பயன்படுத்துவ தாகும். இப் பிரிவு 1995-ம் ஆண்டில் மின் உற்பத்தி துவங்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

### பைக்கார இறுதி நிலை புனல் மின் உற்பத்தி நிலையம்.

15. பூமிக்கடியில் அமையப்பெறும் இம்மின் நிலையத்தில் ஒவ்வொன்றும் 50 மெ. வாட். திறன் கொண்ட மூன்று பிரிவுகள் இருக்கும். இத்திட்டத்திற்கு திட்டக்குழு 1988 ஆகஸ்ட் மாதம் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்துக்கான மதிப்பீடு ரூ. 114.87 கோடி. திட்டப்பணிகள் துவங்கி விட்டன. முதல் பிரிவு 9 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருடம் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

16. வருங்காலத் திட்டங்களை விவரிப்பதற்கு முன்னர், மின் உற்பத்திக்கென நம் மாநிலத்தில் உள்ள இயற்கை ஆதாரங்களைப் பற்றிச் சுருக்கமாக விளக்க விழைகிறேன். சாத்தியக்கூறுள்ள எல்லா புனல் மின் உற்பத்தி ஆதாரங்களையும் நம் மாநிலம் ஏற்





கனவே பயன்படுத்திவிட்டது என்பதையும், நிலுவையிலுள்ள மற்ற மாநிலங்களுக்குக் கிடையிலான தகராறுகளுடன் தொடர்புடையவை, அல்லது வனப்பகுதியில் அமைந்தவை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். தமிழ்நாட்டில் நிலக்கரி ஆதாரம் எதுமில்லை. மாநிலத்திலுள்ள படிவ எரி பொருள் பழுப்பு நிலக்கரியும் காவிரிப் படுகையில் கிடைக்கும் சிறிதளவு இயற்கை எரிவாயு மட்டுமே, பழுப்பு நிலக்கரி மைய அரசுக்குச் சொந்தமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத் தினால் பயன்படுத்தப்படுகிறது. எனவே இம்மாநிலத்தின் மின் உற்பத்திக்கான வருங்கால திட்டங்கள் மேற்கண்ட இடையூறுகளைக் கருத்தில் கொண்டு தீட்டப்படவேண்டும்.

17. மாநிலத்தில், கி.பி. 2000 ஆண்டில் 4300 மெகாவாட் அளவிற்கும் 1995-ல் 1700 மெகாவாட் அளவிற்கும் மின் பற்றாக்குறை இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இடைவெளியைச் சரிக்கட்டுவதற்கென புதிய திட்டங்களை விரைவாகச் செயலாக்குதல் அவசியம். நடைமுறையிலுள்ள திட்டங்கள் மூலம் 1995-ல் 119S மெ.வாட். மட்டுமே கூடுதலாகக் கிடைக்கும். மாநிலத்தில் மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் மைய அரசிடம் எடுத்துரைத்துள்ளார்கள்.

### பழுப்பு நிலக்கரி மற்றும் எரிவாயு சம்பந்தப்பட்ட மாநில அனல் மின் திட்டங்கள்

18. தற்பொழுது நெய்வேலியில் மைய அரசைச் சார்ந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் இரண்டு அனல் மின் நிலையங்களை நிறுவியுள்ளது. இவற்றில் 600 மெகாவாட் திறன் கொண்ட முதல் அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி முழுவதும் நம் மாநிலத்திற்கு தரப்படுகிறது. ஆனால் 840 மெ. வாட். திறன் கொண்ட இரண்டாவது அனல் மின் நிலையத்திலிருந்து இம் மாநிலத்தின் பங்காக மின் உற்பத்தியில் 30 சதவிகிதம் அளவே, மைய மின் உற்பத்தி நிலையங்களின் மின் பங்கீட்டு திட்டத்தின் படி, மின்சாரம் தரப்படுகிறது. இரண்டாவது அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி திறனை 1470 மெ. வா. அளவு அதிகரிப்ப

தற்கான வேலைகளை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் எடுத்துள்ளது. மற்றும் முதல் அனல் மின்நிலையத்தில் 210 மெ.வா. திறன் உள்ள இரு பிரிவுகளையும் இரண்டாவது அனல் மின் நிலையத்தில் மேலும் 210 மெ.வா. திறன் உள்ள ஒரு பிரிவினையும் நிறுவுவதற்குண்டான திட்டங்களை இந்நிறுவனம் தீட்டியுள்ளது. இத்திட்டங்கள் மூலம் மாநிலத்திற்குரிய பங்கு மட்டுமே கிடைக்கும்.

19. நெய்வேலி முதல் சுரங்கத்தின் விரிவாக்கத்திற்கும் மற்றும் 210 மெ.வா. திறன் கொண்ட இரு பிரிவுகளை நிறுவுவதற்கும் உண்டான திட்ட வேலைகளைத் துவங்க மைய அரசு உறுதியளித்துள்ளது என்பதை அறிவதில் அவையின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் மின்சாரம் முழுவதும் மாநிலத்திற்கே அளிக்கப்படவேண்டுமென மைய அரசினை இம்மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

20. திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் பகுதியில் ஏராளமான அளவு பழுப்பு நிலக்கரி கிடைக்குமென சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரிகிறது. இப்பகுதியில் கூட்டுத்துறை மூலம் பழுப்பு நிலக்கரி சுரங்கம் ஏற்படுத்தவும் மற்றும் மின் உற்பத்தி திட்டத்தினை மேற்கொள்ளவும் தேவையான அனுமதியினை வழங்குமாறு மைய அரசினை மாநில அரசு அணுகியுள்ளது. இத்திட்டம் 1500 மெ.வா. அளவு மின் உற்பத்தி செய்யும். மைய அரசினை கலந்து ஆலோசித்து இத்திட்டத்திற்கான இறுதி வடிவம் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

21. காவிரி வடிகால் பகுதியின் அருகில் கடலில் அமையும் எண்ணெய் கிணறுகள் மூலம் 20 இலட்சம் கன மீட்டர் அளவு இயற்கை எரிவாயு தினமும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி தஞ்சாவூர் மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்திலுள்ள பிள்ளைபெருமாள் நல்லூர் என்னுமிடத்தில், முதல் கட்டத்தில் 300 மெ.வா. திறனுள்ள இணைந்த எரிவாயு மின் நிலையம் நிறுவுவதற்கும் இரண்டாவது கட்டத்தில் மேலும் 300 மெ.வா. திறனுள்ள மின் நிலையம் நிறுவுவதற்குமான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.



22. வட சென்னை அனல் மின் திட்டத்தில் 500 மெ.வா. திறனுள்ள ஒரு பிரிவும் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 500 மெ.வா. திறனுள்ள ஒரு பிரிவும் கூடுதலாக நிறுவுவதற்கான திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

23. இப்புதிய மின் உற்பத்தி திட்டங்களை எடுத்து செயல்படுத்தும் பொருட்டு புதியதாக ஒரு மின் உற்பத்திக்கழகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் கூடங்குளத்தில் அமையும் அணு மின் நிலையத் திட்டத்தின் ஆக்க வேலைகளைத் துரிதப்படுத்தி பூர்த்தி செய்யுமாறு நாம் மைய அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளோம். இத்திட்டத்தின் மூலம் இந்நூற்றாண்டின் இறுதியில் மின் நிறுவுத் திறன் மேலும் 2000 மெ.வா. அளவு அதிகரிக்கும். பம்பாய் அருகில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவினை குழாய் மூலம் கொண்டு வந்து தென்னக எரிவாயு இணைப்புத்திட்டம் அமைக்க வேண்டுமென இவ்வரசு வலியுறுத்தி வருகிறது.

## காற்றிலிருந்து மின் உற்பத்தி.

24. நாட்டில் அதிகக் காற்று வீசும் மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும். தமிழ்நாடு மின்சார வாரியம் மைய அரசின் மாற்று சக்தித்துறை நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சக்தி விரிவாக்கத் துறை ஆகியவற்றுடன் இணைந்து 14 மெ.வா. மின் நிறுவுத்திறன் உள்ள காற்றாலைகளை மாநிலத்தில் ஏற்கனவே அமைத்துள்ளது. புளியங்குளத்தில் 1.5 மெ.வா. திறனுள்ள காற்றாலை அமைக்கவும் கயத்தாறில் 1.5 மெ.வா. திறனுள்ள காற்றாலை அமைக்கவும் மற்றும் 55 கிலோ வாட் திறன் கொண்ட நான்கு காற்றாலைகளை கயத்தாறு-நாலாட்டின்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையின் மருங்கில் அமைப்பதற்குமான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மின் செலுத்துதல் மற்றும் விநியோகம்.

25. உற்பத்தியாகும் மின்சாரத்தினை விநியோகம் செய்வதற்கு சிறந்த மின் செலுத்துதல் மற்றும் விநியோக கட்டமைப்பு தேவை என்பது வெளிப்படை, மின் உற்பத்தி நிலையங்கள் மாநிலத்தில்

பரவலாக அமைந்துள்ளன. இது இம்மாநிலத்திற்குச் சாதகமானதாகும். புனல் மின் நிலையங்கள் மாநிலத்தின் மேற்கு பகுதியிலும், அனல் மின் நிலையங்கள் மாநிலத்தின் வடக்கு, தெற்கு மற்றும் மையப்பகுதியிலும் அமைந்துள்ளன. மின் உற்பத்திக்கும் மற்றும் மின் செலுத்துதல், விநியோகம் மற்றும் கிராம மின்மயமாக்கல் ஆகியவற்றிற்குச் செய்யப்பட வேண்டிய முதலீடு விகிதம், ஒரு சிறந்த அமைப்பிற்கு 50.50 ஆக இருக்க வேண்டும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின் செலுத்துதல் மற்றும் விநியோகத்திற்குப் போதுமான முதலீட்டினை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளது. இதன் மூலம் தற்போதைய மின் இழப்பு அளவான 18.4 சதவிகிதத்திலிருந்து மேலும் குறைவதற்கு இது வழி வகுக்கும். எனினும் தற்போதைய மின் இழப்பின் அளவு அகில இந்திய சராசரி மின் இழப்பு அளவான 21 சதவிகிதத்தைக் காட்டிலும் குறைவானது என்பது ஈண்டு நோக்கற்பாலது.

சென்னை மின் விநியோக மேம்பாட்டுத் திட்டம்.

26. சென்னை பெருநகர் முழுவதுமுள்ள மின் செலுத்துதல் மற்றும் விநியோக மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு பத்தாண்டுக் கால தொலைநோக்குத் திட்டத்தினை தமிழ்நாடு மின்சார வாரியம் தயாரித்துள்ளது. இதன் அடிப்படையில் ரூ. 176.25 கோடி செலவில் ஒரு திட்டம் தீட்டி அதற்கு மைய மின் திட்டக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கி 30.6 மில்லியன் டாலர் கடன் தர ஒப்புதல் அளித்துள்ளது.

விவசாயத்திற்கு மின்சாரம்.

27. மாநிலத்தில் 31—8—1991 முடிய 13.3 இலட்சம் வேளாண்மை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு புதிய மின் இணைப்பு கோரி சுமார் 4.93 இலட்சம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. 1990-91 ஆம் ஆண்டில் திட்டமிட்ட 40,000 வேளாண்மை பம்பு செட்டுகளை விஞ்சி 41.170 மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.





1991-92 ஆம் ஆண்டில் 40,000 வேளாண்மை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் ஆகஸ்ட் '91 முடிய 11,853 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

குடிசைகளுக்கு மின்சாரம்.

28. சமுதாயத்தின் நலிந்த பிரிவுகளைச் சார்ந்துவரும் மின்சாரத்தின் பயனை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு கிராமப் பகுதிகளைச் சார்ந்த குடிசை வாசிகளுக்கு 40 வாட் கொண்ட ஒரு விளக்கிற்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 31—3—1991 முடிய 9,32,286 குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 45,000 குடிசைகளை விஞ்சி 45,086 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் 40,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள் 31—8—1991 முடிய, 15,806 குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

தெரு விளக்குகள்.

29. 31—8—1991 வரை 10.48 இலட்சம் தெரு விளக்குகள் இணைப்பில் உள்ளன. இவைகள் உள்ளாட்சி நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 1.6 இலட்சம் விளக்குகள் இணைக்கப்பட வேண்டியுள்ளன. அரசு "தன்னிறைவு திட்டத்தின் படி 31—3—1993-க்குள் எல்லா இடங்களிலும் மின் தெரு விளக்குகளை பொருத்திட ரூ. 30 கோடி ஒதுக்கியுள்ளது. இவை தவிர, 1991-92 மற்றும் 1992-93 ஆண்டுகளில், ஆண்டு தோறும் 20,000 தெரு விளக்குகளுக்கு வழக்கமான திட்டத்தின் படி மின் இணைப்பு வழங்கப்படும். ஆக மொத்தத்தில் 31—3—1993-க்குள், புதியதாக சுமார் 2 இலட்சம் தெரு விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

## கிராமங்களுக்கு மின்வசதி.

30. 1981 ஆம் ஆண்டின் மக்கட் தொகை கணக்கீட்டின்படி 15,831 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஏழு கிராமங்கள் நீங்கலாக ஏனையவை மின்வசதி பெற்றுள்ளன. இவ்வேழு கிராமங்களுக்கும் நடப்பாண்டில் மின் விசை வழங்கப்படும். இத்துடன் கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பது நூற்றுக்கு நூறு என நிறைவு பெறும்.

## 1990-91 ஆம் ஆண்டுத் திட்டம்.

31. திட்டக் குழுவினரால் 1990-91 ஆம் ஆண்டிற்கான திட்டத்திற்கு ரூ. 456.50 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டது. இதற்கெதிராக ரூ. 458.61 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. திட்ட ஒதுக்கீட்டின் கீழ் நிறைவேற்றப்படும் இவை தவிர, ரூரல் எலக்ட்ரிபிகேசன் கார்ப்பரேசன் எனப்படும் ஊரக மின் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின்விசை வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 38.79 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு பணி செய்யப்பட்டது. மைய அரசின் நிதி உதவியுடன் அனல் மின் நிலையங்களில் சீரமைப்பு மற்றும் நவீனமயப் பணிகளையும் மின்சார வாரியம் செய்து கொண்டிருக்கிறது. இது போல் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புனர்ச்சி நுண்புனல் மின் திட்டமும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மரவக் கண்டி நுண் புனல் மின் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து முதலீட்டுத் திட்டங்களுக்கும் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 498.80 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

## 1991-92 ஆம் ஆண்டுத் திட்டம்.

32. 1991-92 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 425 கோடி எனவும், மின் சக்தி முதலீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 100.29 கோடிக்கு உதவி பெறவும், திட்டத்தில் இடம் பெறாத ஊரக மின்மயமாக்கும் பணிகளுக்கு மைய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கும் ரூ. 52.50 கோடி ஒதுக்குவது என தீர்மானிக்கப்



பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது ரூ. 498.80 கோடியாகும். இதுவே 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 577.79 கோடியாக உயர்த்தப்படுவது குறிப்பிடத் தக்கது.

## வரவும்-செலவும்

33. இப்போது மின்சார வாரியத்தின் நிதி நிலைமை பற்றியும் சில வகை மின் நுகர்விற்கான கட்டணத்தை எந்த சூழ்நிலையில் அரசு உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதையும் கூற விழைகிறேன். 1989-90 ஆம் ஆண்டில் வரவு ரூ. 1,068.79 கோடியாகவும் வரவின்பாற்பட்ட செலவு ரூ. 1,549.21 கோடியாகவும் இருந்தன. 1990-91 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி வரவு ரூ. 1,362.53 கோடியாகவும் வரவின்பாற்பட்ட செலவு ரூ. 1,845.74 கோடியாகவும் உள்ளன. 1991-92 ஆம் ஆண்டு வரவு ரூ. 1,596.79 கோடியாகவும் வரவின்பாற்பட்ட செலவு ரூ. 2,270.06 கோடியாகவும் இருக்கும் எனத் தோற்றுகிறது. வரவிற்கும் வரவின்பாற்பட்ட செலவிற்கும் இடையே துண்டு விழும் அளவு ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. 1988-89 ஆம் ஆண்டில் இவ்விடைவெளி ரூ. 346.94 கோடியாக இருந்தது. 1989-90 ஆம் ஆண்டு இது ரூ. 480.42 கோடியாகவும், 1990-91 ஆம் ஆண்டு ரூ. 483.21 கோடியாகவும், 1991-92 ஆம் ஆண்டு ரூ. 673.36 கோடியாகவும் விரிந்து கொண்டே போகிறது. மின்சார வாரியத்தின் திறமைக் குறைவினால் ஏற்படுவதல்ல இந்த இடைவெளி. மின் உற்பத்தியில் புனல் மின் உற்பத்தியைவிட அனல் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாலும் நிலக்கரி, எண்ணெய் இவற்றின் கொள்முதல் விலை உயர்வாலும், மைய அரசின் மின் நிலையங்களிலிருந்து வாங்கப்படும் மின் விசையின் விலை அதிகரித்துள்ளதாலும், மின்சார வாரியம் பெறும் நிதிக்கடன்களின் வட்டி விகிதம் உயர்ந்துள்ளதாலும், விவசாயிகளுக்கும் குடிசைகளுக்கும் இலவசமாக மின் விசை வழங்குவதாலும், மற்ற பல வகையான மின் நுகர்விற்கு குறைவான கட்டணத்தில் மின் விசை வழங்குவதாலும் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. 1991-92 ஆண்டில் அனல் மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் [illegible] பொருளுக்கு ரூ. 958.07 கோடியும், மையத் தொகுப்பிலிருந்து [illegible]

[illegible] மின்சக்திக்கு ரூ. 472.23 கோடியும், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு ரூ. 56.75 கோடியும், நிர்வாகம் மற்றும் ஊழியர்கள் ஊதியத்திற்கு ரூ. 341.92 கோடியும், தேய்மானத்திற்கு ரூ. 103.61 கோடியும், அரசு மற்ற நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி ரூ. 337.48 கோடியாகவும் இருக்கும்.

## கட்டண உயர்வு

34. மின்சார வாரியத்தின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்தும் முகத்தான், 1-9-1991 முதல் மின்சாரக் கட்டணம் விவசாயம் மற்றும் குடிசை இணைப்புகள் நீங்கலாக மற்றவகைப் பயன்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் இதனால் ரூ. 134.67 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். ஒரு முழு ஆண்டில் இது ரூ. 269.34 கோடியாகும்.

35. விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின்விசை இலவசமாக வழங்கப்படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஒரு வருடத்தில் இதனால் ரூ. 550 கோடி அளவிற்கு வரவில் இழப்பு ஏற்படுகிறது. இவ்விழப்பினை ஈடு செய்வதற்காக அரசு மின்சார வாரியத்திற்கு மானியம் வழங்குகிறது. இவ்வாண்டு ரூ. 350 கோடி அளவிற்கு இம்மானியம் வழங்கப்பட உள்ளது. மின் வளர்ச்சி நிதிக் கழகம், ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் விவசாயிகளிடமிருந்து ஒரு சிறு தொகையாவது வசூலிக்க வேண்டும் என வற்புறுத்துகின்றன. விவசாய மின் இணைப்பில் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் எனவும் அவை வலியுறுத்துகின்றன. இப்பிரச்சினை விவசாயிகளின் குழுக்களுடன் கலந்தாலோசித்து இணக்கமான முடிவு எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

36. மின் திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதற்காக மின்சக்தி நிதி மற்றும் அடிப்படைத் தேவைகள் வளர்ச்சிக் கழகத்தினை அரசு நிறுவியுள்ளது.

37. வாரியத்துடன் தொடர்புள்ள மற்ற பொருள்கள் பற்றி இப்போது கூற விழைகிறேன். தொழிலாளர்களுடன் மிகச் சிறந்த இணக்கமான தொழிலுறவை மின்சார வாரியம் பெற்றுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.





1989-90 ஆம் ஆண்டிற்கு மின்சார வாரியம் ஊதியத்தில் 8.33 சதவீதம் அல்லது ரூ. 100 இவற்றில் எது அதிகமோ அதை போனசாகவும் ஊதியத்தில் 4.92 சதவீதம் அல்லது ரூ. 575 இவற்றில் எது அதிகமோ அதைக் கருணைக் கொடையாகவும் தன் ஊழியர்களுக்கு வழங்கியது.

38. 1990-91 ஆம் ஆண்டில் 200 மின்னியல் பொறியாளர்களும் 60 பொதுவியல் பொறியாளர்களும் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கப்பட்டனர். 453 பட்டயதாரர்கள் இரண்டாம் நிலை தொழில்நுட்ப உதவியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். வாரியத்தில் பணிபுரிந்து இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 756 பேர்களுக்கு பல நிலைகளில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

39. பலதிறப்பட்ட பிரச்சனைகளை எதிர்நோக்கும் நிறுவனமாக தமிழ்நாடு மின்சார வாரியம் இயங்குகிறது. எனவே பணித் திறமையை மேம்படுத்த வாய்ப்பு தொடர்ந்து இருக்கிறது. மின்சார வாரியத்தின் பணிகள் பற்றி குறிப்பாக மின் தேவையையும் மின் உற்பத்தியையும் ஈடு கட்டும் பிரச்னையையும், வருவாய்க்கும் செலவிற்குமான இடைவெளியைக் குறைப்பதற்கான பிரச்னையையும், மின்சார வாரியம் எதிர்நோக்கி இருப்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கி உள்ளேன். மின்சார வாரியத்தின் பணியினை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது கருத்தினைக் கூறிடுமாறு நான் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். கண்ணப்பன்,

பொதுப்பணித்துறை அமைச்சர்.

## இணைப்பு I.

### தமிழ்நாட்டில் திட்டவாரியான மின்வளர்ச்சி.

| தொடர் எண்ணும் விளக்கமும். (1) | திட்டத்துக்கு முன்பு 31-3-51. (2) | 1-ஆம் திட்டம் 1951—1956. (3) | 2-ஆம் திட்டம் 1956—1961. (0) | 3-ஆம் திட்டம் 1961—1966. (5) | ஆண்டுத் திட்டங்கள் 1966—1969. (6) |
|---|---|---|---|---|---|
| (அ) மின் உற்பத்தி— | | | | | |
| 1. நிறுவுத் திறன் (மெ.வா.) மின் வாரியம் .. .. | 156 | 256 | 571 | 1,070 | 1,070 |
| நெய்வேலி (பங்கு) .. .. .. .. .. | .. | .. | .. | 300 | 400 |
| கல்பாக்கம் (பங்கு) .. .. .. .. .. | .. | .. | .. | .. | .. |
| இராமகுண்டம் (பங்கு) .. .. .. .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. .. | 156 | 256 | 571 | 1,370 | 1,470 |
| 2. உச்சத் தேவை (மெ.வா.) .. .. .. .. | 110 | 172 | 381 | 717 | 997 |
| 3. மொத்தமின் உற்பத்தி மற்றும் கொள்முதல் (மி.யூ.) .. | 630 | 1,053 | 2,243 | 4,041 | 5,260 |

## இணைப்பு I—தொடர்ச்சி.

### தமிழ நாட்டில் திட்டவாரியான மின் வளர்ச்சி—தொடர்ச்சி.

| (1) | 4-ஆம் திட்டம் 1969—1974. (7) | 5-ஆம் திட்டம் 1970—1978. (8) | ஆண்டுத் திட்டங்கள் 1978—1980. (9) | 6-ஆம் திட்டம் 1980—1985. (10) | 7-ஆம் திட்டம் 1985—1990. (11) | ஆண்டுத் திட்டம் 1990—1991. (12) |
|---|---|---|---|---|---|---|
| (அ) மின் உற்பத்தி | | | | | | |
| 1. நிறுவுத் திறன் (மெ.வ.) மின் வாரியம் | 1,654 | 1,824 | 2,119 | 2,509 | 3,877 | 4,089 |
| நெய்வேலி (பங்கு) | 600 | 600 | 600 | 600 | 776 | 835 |
| கல்பாக்கம் (பங்கு) | .. | .. | .. | 235 | 350 | 350 |
| இராமகுண்டம் (பங்கு) .. .. .. | .. | .. | .. | .. | 470 | 470 |
| மொத்தம் .. | 2,254 | 2,424 | 2,719 | 3,344 | 5,473 | 5,744 |
| 2. உச்சத் தேவை (மெ.வா.) .. .. | 1,287 | 1,641 | 1,710 | 2,154 | 2,929 | 3,094 |
| 3. மொத்த மின் உற்பத்தி மற்றும் கொள்முதல் (மி.யூ.) .. .. .. .. | 6,948 | 9,453 | 10,414 | 13,731 | 18,672 | 20,793 |

இணைப்பு 1—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| ஆ) மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானம் | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்கள் (கி.மீ.) | 5,936 | 11,279 | 24,194 | 39 806 | 48'336 |
| 2. குறைவு அழுத்த மின் கம்பித் தொடர்கள் (கி.மீ.) .. | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1 04 977 |
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்களின் எண்ணிக்கை | 31 | 46 | 70 | 98 | 119 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்களின் எண்ணிக்கை .. | 25 | 41 | 73 | 108 | 114 |
| 5. மின் பகிர்மானத் துணை நிலையங்களின் எண்ணிக்கை .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 22,842 |
| 6. பயனீட்டாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. | 2.5 | 4.3 | 7.7 | 13.67 | 18.22 |
| 7. நபர் வாரியான பயன்பாடு (யூனிட்டுகள்) .. | 12 | 21 | 50 | 82 | 116 |
| இ) கிராம மின்வசதி | | | | | |
| 1. மின் இணைப்பு செய்யப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் (எண்ணிக்கை) .. .. .. .. .. .. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 317,27 |

இணைப்பு 1—தொடர்ச்சி.

| (1) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானம் | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்கள் (கி.மீ.) .. .. .. .. | 68,737 | 72,689 | 77,126 | 87,250 | 99,797 | 1 04 198 |
| 2. குறைவு அழுத்த மின் கம்பித் தொடர்கள் (கி.மீ.) .. .. .. .. .. | 1,97,017 | 2,22,659 | 2,49,226 | 2,78,515 | 3,21,673 | 3,39,454 |
| 3. கூடுதல் உயர் அழுத்த துணை நிலையங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 146 | 174 | 192 | 231 | 300 | 365 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 125 | 150 | 164 | 169 | 200 | 180 |
| 5. மின் பகிர்மானத் துணை நிலையங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 37,453 | 43 666 | 48 595 | 63,667 | 80,019 | 86 424 |
| 6. பயனீட்டாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. .. | 27.67 | 34 | 39.97 | 58.27 | 80.05 | 83.67 |
| 7. நபர் வாரியான பயன்பாடு (யூனிட்டுகள்) .. | 127 | 157 | 183 | 185 | 282 | 282 |
| இ) கிராம மின்வசதி— | | | | | | |
| 1. மின் இணைப்பு செய்யப்பட்ட கிராமங்கள் சிற்றூர்கள் (எண்ணிக்கை) .. .. | 61,672 | 63,338 | 63,428 | 63,648 | 63,956 | 63,979 |

இணைப்பு I - தொடர்ச்சி.

தமிழ்நாட்டில் திட்டவாரியான மின் வளர்ச்சி - தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| (இ) கிராம மின் வசதி - தொடர்ச்சி. | | | | | |
| 2. அரிஜன் காலனிகள் மின் இணைப்பு வழங்கப்பட்டவை .. | .. | .. | 939 | 3,548 | 7,282 |
| 3. மின் இணைப்பு வழங்கப்பட்ட வேளாண்மைப் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை .. | 14,373 | 33,440 | 1,17,695 | 2,56,594 | 4,18,11 |
| 4. மின் இணைப்பு வழங்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | .. | .. | .. | .. | .. |
| (ஈ) மூலதனச் செலவு/வருவாய் (ரூபாய் கோடியில்) | | | | | |
| 1. கால முடிவில் மூலதனச் செலவு .. .. | 23.82 | 54.01 | 133.21 | 253.28 | 356.07 |
| 2. மொத்த வருவாய் .. .. .. | 3.18 | 5.94 | 15.82 | 34.67 | 50.22 |



இணைப்பு I - தொடர்ச்சி.

தமிழ்நாட்டில் திட்ட வாரியான மின் வளர்ச்சி—தொடர்ச்சி

| (1) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|
| (இ) கிராம மின் வசதி—தொடர்ச்சி. | | | | | | |
| 2 அரிஜன் காலனிகள் மின் இணைப்பு வழங்கப்பட்டவை | 23,768 | 24,797 | 25,653 | 26,137 | 26,431 | 26,443 |
| 3. மின் இணைப்பு வழங்கப்பட்ட வேளாண்மைப் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை .. | 6,81,205 | 7,05,616 | 8,87,227 | 10,33,556 | 12,77,501 | 13,18,671 |
| 4. மின் இணைப்பு வழங்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | .. | .... | 1.67 | 6.36 | 8.87 | 9.32 |
| (ஈ) மூலதனச் செலவு/வருவாய் (ரூபாய் கோடியில்) | | | | | | |
| 1. கால முடிவில் மூலதனச் செலவு | 552.2 | 799.09 | 1,042.9 | 1,881.81 | 4,153.37 | 4,914.44 |
| 2. மொத்த வருவாய் .. | 114.28 | 223.14 | 284.19 | 705 | 1,561.98 | 1,854.94 |

## இணைப்பு II.

### 1990-91-ல் ஆன செலவு அறிக்கை.

| திட்டத்தின் பெயர். (1) | அங்கீகரிக்கப் பட்ட வருடாந்திர திட்டம். (2) | திருத்தியமைக்கப் பட்ட மதிப்பீடு. (3) | செலவு (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| I. உற்பத்தி | | | |
| அ. புனல். | | | |
| நிறைவேற்றப்பட்ட திட்டங்கள். | | | |
| 1. சேர்வலாறு பு.மி.தி (1×20 மெ.வா.) .. .. .. | 50.00 | 59.96 | 46.12 |
| 2. கீழ்மேட்டூர் பு.மி.தி. (4×2×15 மெ.வா.) .. .. .. | (—) 155.55 | 51 60 | 60.57 |
| 3. கீழ்பவானி அணை பு.மி.தி. (4×2 மெ.வா.) .. .. .. | 121.40 | 121.40 | 121.98 |
| 4. வைகை அணை நுண்ணிய பு.மி.தி. (2×3 மெ.வா.) .. .. | 90.21 | 90.21 | 87.98 |
| 5. காடம்பாறை மி.தி. (4×100 மெ.வா.) .. . . | .. | 183.65 | 80.47 |
| 6. குந்தா 5 கூடுதல் பிரிவு (1×20 மெ.வா.) . . . | .. | 20.90 | 22.35 |
| 7. பைக்காரா நுண்ணிய பு.மி.தி. (1×2 மெ.வா.) | .. | 14.34 | 9.22 |
| 8. சந்திநல்லா மேல்கொடுமுடு தடமாற்றம் | .. | 8.80 | 8.20 |
| நடைபெறும் திட்டங்கள். | | | |
| 9. பைக்காரா இறுதி கட்டம் பு.மி.தி. (3×50 மெ.வா.) | 410 00 | 360.00 | 345.32 |
| 10. சாத்தனூர் பு.மி.தி. (2×7.5மெ.வா.) .. .. .. | .. | 16.87 | 24.54 |
| 11. கீழ்பவானி அணை வ.க. கால்வாய் பு.மி.தி. (2×4 மெ.வா.) .. | .. | 10.73 | 10.57 |



### இணைப்பு II—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| ஆ. அனல். | | | |
| 1. மேட்டூர் அனல் கட்டம் 2 (2×210 மெ.வா.) .. .. .. | 1,500.00 | 1,800.00 | 1,811.13 |
| 2. தூத்துக்குடி கட்டம் 3 (2×210 மெ.வா.) .. .. .. | 13,500.00 | 13,500.00 | 14,076.47 |
| 3. வ.செ.அ.மி. திட்டம் கட்டம் 1 (3×210 மெ.வா.) .. .. | 10,000.00 | 10,000.00 | 10,481.27 |
| 4. பேசின் பிரிட்ஜ் எரிவாயு திட்டம் (4×30 மெ.வா.) .. .. | 1,050.19 | 9.00 | 6.30 |
| 5. நரிமணம் எரிவாயு திட்டம் (2×5 மெ.வா.) .. .. .. | 800,00 | 1,600.00 | 922.39 |
| 6. மேட்டூர் அனல் திட்டம் 1 (2×210 மெ.வா.) .. .. | .. | (—)18.80 | .. |
| இ. அனல் மின் நிலையங்களை புனரமைத்தலும் நவீனப்படுத்தலும். | | | |
| 1. எண்ணூர் மேம்பாடு கட்டம் 1 .. .. .. .. .. | .. | 13.50 | 7.68 |
| 2. எண்ணூர் மேம்பாடு கட்டம் 2 .. .. .. .. .. | 1,483.75 | 964.89 | 763.56 |
| 3. எண்ணூர் கூடுதல் பணிகள் .. .. .. .. .. | .. | 96.59 | 89.81 |
| 4. காடம்பாறை பு.மி.யில் மறுவாழ்வளிப்புப் பணிகள் .. .. | .. | 200.00 | 79.49 |
| மொத்தம் (உற்பத்தி) .. .. .. .. | 28,850.00 | 29,103.64 | 29,056.42 |

## இணைப்பு II—(தொடர்ச்சி).

### 1990-91-ல் ஆன செலவு அறிக்கை.—தொடர்ச்சி

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| II. அனுப்புகை மற்றும் பகிர்வு .. .. .. .. .. | 15,500.00 | 15,200.00 | 15,487.31 |
| III. ஊரக மின் இணைப்பு .. .. .. .. .. .. | 1,000.00 | 1,000.00 | 1,026.62 |
| IV. புலனாய்வு ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பிற .. .. .. | 150.00 | 236.01 | 241.17 |
| மொத்த திட்ட முதலீடு .. .. .. .. | 45,500.00 | 45,539.65 | 45,811.52 |
| V. காற்றாலைகள் .. .. .. .. .. .. | 150.00 | 110.35 | 50.05 |
| VI. திட்டத்துக்குப் புறம்பாக ஊரக மின் இணைப்பு .. .. .. | 5,760.00 | 5,650.00 | 3,879.28 |
| VII. மத்திய உதவி திட்டங்கள் பு/த பணிகள்—நடப்பவை | | | |
| 1. எண்ணூர் மேம்பாடு கட்டம் 1 .. .. .. .. | .. | 1.36 | 0.61 |
| 2. எண்ணூர் மேம்பாடு கட்டம் 2 .. .. .. .. .. | 77.91 | 93.49 | 49.37 |
| VIII. மரவண்டி (மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்) .. .. | 58.50 | 30.19 | 30.20 |
| புனர்ச்சி பு.மி.தி. (மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்) | 23.00 | 74.96 | 59.26 |
| மொத்த மூலதனச் செலவு .. .. .. | 51,669.41 | 51,500.00 | 48,880.29 |



## இணைப்பு III.

### அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு 1991-92.

| திட்டத்தின் பெயர். | அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு 1991-92 மின்சக்தி முதலீட்டுக் கழகம். திட்டம். (ரூபாய் | மொத்தம். லட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I. உற்பத்தி | | |
| அ. புனல் | | |
| 1. கீழ் பவானி நுண்ணிய பு.மி.தி. .. .. .. .. .. | 30.19 | 30.19 |
| 2. வைகை அணை நுண்ணிய பு.மி.தி. .. .. .. .. .. | 18.66 | 18.66 |
| 3. காடம்பாறை மி.தி. .. .. .. .. .. .. | 10.00 | 10.00 |
| 4. குந்தா 5 கூடுதல் பிரிவு .. .. .. .. .. .. | 2.90 | 2.90 |
| 5. பைக்காரா நுண்ணிய பு.மி.தி. .. .. .. .. .. | 12.63 | 12.63 |
| 6. சந்திநல்லா மேல் கொடுமுடி .. .. .. .. .. | 29.52 | 29.52 |
| 7. பைக்காரா இறுதி கட்டம் பு.மி.தி. .. .. .. .. | 1,000.00 | 1,000.00 |
| 8. சாத்தனூர் .. .. .. .. .. .. .. | 340.00 | 340.00 |
| 9. கீழ் பவானி அணை வ.க. கால்வாய் .. .. .. .. .. | 300.00 | 300.00 |
| 10. பார்ஸன் பள்ளத்தாக்கு .. .. .. .. .. .. | 10.00 | 10.00 |

இணைப்பு III—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| ஆ. அனல் | | | |
| 1. மேட்டூர் அனல் கட்டம்—2 .. .. .. .. .. | 1,000.00 | .. | 1,000.00 |
| 2. தூத்துக்குடி கட்டம்—3 .. .. .. .. .. | 5,000.00 | 3,000.00 | 8,000.00 |
| 3. வ. சே. அ. மி. நி. கட்டம்—1 .. .. .. .. | 10,000.00 | 4,000.00 | 14,000.00 |
| 4. பேசின் பிரிட்ஜ் எரிவாயு திட்டம் .. .. .. .. | 3,695.06 | .. | 3,695.06 |
| 5. நரிமணம் எரிவாயு திட்டம் .. .. .. .. .. | 392.00 | 300.00 | 692.00 |
| 6. காவேரி எரிவாயு திட்டம் (பிள்ளைப்பெருமாள் நல்லூர்) .. .. | 26.92 | .. | 26.92 |
| 7. காற்றாலைகள் .. .. .. .. .. | 150.00 | .. | 150.00 |
| மொத்தம் (உற்பத்தி) .. .. .. | 22,017.88 | 7,300.00 | 29,317.88 |
| II. அனுப்புகை மற்றும் பகிர்மானம் .. .. .. .. | 17,100.00 | 2,500.00 | 19,600.00 |
| III. புனரமைத்தலும் நவீனப்படுத்தலும் .. .. .. .. | | | |
| அ. புனல். | | | |
| 1. காடம்பாறை மி.நி. .. .. .. .. .. .. | 371.00 | .. | 371.00 |
| 2. குந்தா மி.நி.—3 .. .. .. .. .. .. | 200.00 | 200.00 | 400.00 |
| 3. சோலையாறு .. .. .. .. .. .. | 29.00 | 29.00 | 58.00 |
| ஆ. அனல். | | | |
| 1. எண்ணூர் மேம்பாடு கட்டம்—1 நிலை—2 .. .. .. | 845.12 | .. | 845.12 |



இணைப்பு III—(தொடர்ச்சி).

அங்கீகரிக்க பட்ட திட்ட மதிப்பீடு 1991-92—(தொடர்ச்சி).

| | | | |
|---|---|---|---|
| ஆ. அனல் (தொடர்ச்சி). | | | |
| [illegible]. எண்ணூர் [illegible] பணிகள் .. .. .. .. .. | 57.00 | | 57.00 |
| 3. எண்ணூர் மேம்பாடு/கட்டம்—2 .. .. .. .. .. | 180.00 | | 180.00 |
| பு/த (மொத்தம்) .. .. .. .. | 1,682.12 | 229.00 | 1,911.12 |
| IV. ஊரக மின் இணைப்பு .. .. .. .. .. | 1,500.00 | | 1,500.00 |
| V. [illegible], ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பிற .. .. | 200.00 | | 200.00 |
| மொத்த திட்ட முதலீடு .. .. .. | 42,500.00 | 10,029.00 | 52,529.00 |
| VI. திட்டத்துக்குப் புறம்பாக ஊரக மின் இணைப்புத் திட்டம் .. | ~~5,000.00~~ | | 5,000.00 |
| VII. மத்திய உதவியுடன் திட்டங்கள் பு/த நடப்பவை .. .. | | | |
| 1. எண்ணூர் மேம்பாடு கட்டம்—1 நிலை—2 .. .. .. | 63.18 | | 63.18 |
| VIII. மரவ கண்டி (மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்) நுண் புனல் திட்டம். | 70.81 | | 70.81 |
| IX. புனாச்சி (மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்) நுண் புனல் மின் திட்டம். | 116.04 | | 116.04 |
| திட்டத்திற்குப் புறம்பானவை உட்பட மொத்தம் .. .. | 47,750.03 | 10,029.00 | 57,779.03 |

## இணைப்பு IV.

### ஊரக மின் இணைப்பு திட்ட நிலை (31—3—1991).

| வரிசை எண்ணும் [illegible]யும். | மாநிலத்தில் மொத்தம் இருப்பவை. | 31—3—90 வரை மின் இணைப்பு கொடுக்கப் பட்டவை. | 1990-91 ஆம் ஆண்டு மின் இணைப்பு கொடுக்கப் பட்டவை. | 31—3—1991 வரை மின் இணைப்புகள் எண். | 31—3—1991 வரை மின் இணைப்புகள் விழுக்காடு. | 1—4—91ல் நிலுவையில் உள்ள எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. நகரங்கள் .. .. .. | 439 | 439 | .. | 439 | 100 | ஏதுமில்லை. |
| 2. கிராமங்கள் .. .. | 15,831* | 15,813 | 2 | 15,815* | 99.96 | 7 |
| 3. சிற்றூர்கள் .. .. | 47,845 | 47,704 | 21 | 47,725 | 99.75 | 120 |
| 4. நகரங்கள், கிராமங்கள் மற்றும் சிற்றூர்கள். | 64,115* | 63,956 | 23 | 63,979 | 99.8 | 127 |
| 5. ஆதிதிராவிடர் காலனிகள் .. | .. | 26,431 | 12 | 26,443 | .. | .. |
| 6. வேளாண்மை .. .. | .. | 12,77,501 | 41,170 | 13,18,,671 | .. | |
| 7. குடிசைகள் .. .. | .. | 8,87,200 | 45,086 | 9,32,286 | .. | .. |

* மக்கள் வசிக்காத 9 கிராமங்கள் உட்பட.